உ

கணபதி துணை.

ஸ்ரீமத் விராட் விஸ்வப்ரஹ்மணே நம:

# விசுவபிரமபுராணம்.

## பூர்வகாண்ட வசனச்சுருக்கம்.

இது

பிரமஸ்ரீ, சி. கி. சுந்தராசாரிய ரவர்களால்

எழுதப்பட்டு,

குளத்தூர் பிரமஸ்ரீ,

கன்னியப்பாசாரிய ரவர்களாற்

றமது

சென்னை: சிந்தாதிரிப்பேட்டை,

விஸ்வகுலோத்தாரண அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1910௵

*Registered Copy-right.*

இதன் விலை அணா-8.

# விசுவபிரம புராண அத்தியாய

## அட்டவணை.

பக்கம்.


1-வது...புராணவரலா றுரைத்த ... ... 1
2-வது...உலகிற்குமுதல்வனையுரைத்த ... 7
3-வது...மகதாதிசிருஷ்டியுரைத்த ... ... 10
4-வது...தேவநராதிசிருஷ்டியுரைத்த... ... 13
5-வது...பிரபஞ்சசிருஷ்டியுரைத்த ... ... 16
6-வது...அதிகாரமுறைமையுரைத்த ... ... 23
7-வது...காலப்பிரமாணமுரைத்த ... ... 26
8-வது...ஆயுணிர்ணயமுரைத்த ... ... 29
9-வது...பிராமணுதிவருணமுரைத்த ... ... 33
10-வது...பிரமவமிசமுரைத்த ... ... 47
11-வது...கோத்திராதிகளுரைத்த ... ... 61
12-வது...பஞ்சகிர்த்தியமுரைத்த ... ... 70
13-வது...நித்தியகருமமுரைத்த ... ... 75
14-வது...கர்ப்பாதானமுரைத்த ... ... 88
15-வது...பும்சவனமுரைத்த ... ... ... 93
16-வது...சீமந்தமுரைத்த ... ... ... 96
17-வது...சாதகன்மமுரைத்த ... ... ... 98
18-வது...நாமகரணமுரைத்த ... ... ... 108
19-வது...உபநிஷ்கிரமணமுரைத்த ... ... 111
20-வது...அன்னப்பிராசனமுரைத்த ... ... 114
21-வது...சவுளமுரைத்த ... ... ... 117
22-வது...உபநயனமுரைத்த ... ... ... 120
23-வது...உபாகருமமுரைத்த ... ... ... 127
24-வது...வேதாரம்பமுரைத்த ... ... 129
25-வது...பிரமசரியவிதியுரைத்த ... ... 133
26-வது...விரதசமாவர்தனமுரைத்த ... ... 138
27-வது...விவாகபேதங்களுரைத்த ... ... 139
28-வது...விவாகப்பொருத்தங்களுரைத்த ... 145

## வ்ருவபிரமபுராண அத்தியாய அட்டவணை.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| 29-வது...விவாகமுரைத்த | ... | ... 156 |
| 30-வது...[illegible]ரொழுக்கமுரைத்த | ... | ... 161 |
| 31-வது...கிரகாச்சிரமவிதியுரைத்த | ... | ... 168 |
| 32-வது...நல்லொழுக்கமுரைத்த | ... | ... 173 |
| 33-வது...பஞ்சமகாவெக்கியமுரைத்த... | | ... 180 |
| 34-வது...அமாமுதலியசிரார்த்தங்களுரைத்த | | ... 182 |
| 35-வது...சிரார்த்தபேதங்களுரைத்த | ... | ... 184 |
| 36-வது...சிரார்த்ததிரவியமுரைத்த | ... | ... 188 |
| 37-வது...சிரார்த்தத்தில்வரிக்கத்தக்கவரை | | ... 190 |
| 38-வது...பார்வணசிரார்த்தமுரைத்த | ... | ... 192 |
| 39-வது...மஹாளயவிதியுரைத்த | ... | ... 199 |
| 40-வது...உண்ணத்தகாதவையுரைத்த... | | ... 202 |
| 41-வது...திரவியசுத்தியுரைத்த | ... | ... 206 |
| 42-வது...சூதகாசௌசமுரைத்த | ... | ... 210 |
| 43-வது...வானப்பிரஸ்தவிதியுரைத்த ... | | ... 223 |
| 44-வது...சந்நியாசவிதியுரைத்த | ... | ... 230 |
| 45-வது...கருமபலமுரைத்த ... | ... | ... 237 |


## நித்தியகன்மச்சுருக்க அட்டவணை.


| | |
|---|---|
| ஸ்நானம் ... ... ... ... | 247 |
| ப்ராதக்கால சந்தியாவந்தனம் ... ... | 252 |
| மாத்யான்ஹிகசந்தியாவந்தனம் ... ... | 259 |
| சாயங்காலசந்தியாவந்தனம் ... ... ... | 261 |
| யக்ஞோபவீததாரணம் ... ... ... | 263 |
| அமாவாஸ்யைதர்ப்பணம் ... ... ... | 265 |
| போஜனம் ... ... ... ... ... | 267 |
| தினவோரை ... ... ... ... | 270 |
| கௌரிபஞ்சாங்கம் ... ... ... ... | 271 |

உ

# முகவுரை

விசுவபிரமபுராணமென்னு மிந்நூல், வடமொழிக்கணுளது. அதனை ஏறக்குறைய இருபதுவருடங்களுக்கு முன்பு விசுவபிரமகுலதிலகரான **வித்வான் திருவையாறு அ. முத்துச்சாமி பாரதியென்பார்**, தமிழ்மொழியில் செய்யுள்ரூபமாக மொழிபெயர்த்து, உலகிற்குதவி ஓவாப்புகழ் படைத்தனர். இச்செந்தமிழ்நூல் வெளிவந்த ஞான்றே ஓர் புலவரால் எழுதப்பட்ட வுரையுடன் வெளிவந்தது.

ஆயினும், விலை மிகுதிபற்றியும், செய்யுள்நடை நோக்கியும், பலரும் அந்நூலைப் பெற்றுவாசித்தல் அரிதாயிற்று. இதுகண்ட யான் **வித்வான் - ப்ரஹ்மஸ்ரீ, சி. கி. சுந்தராசாரியாரவர்**களைக்கொண்டு வசனநடையில் சங்கிரகமாக எழுதுவித்து இதனோடு நித்தியகன்மாநுஷ்டான சந்தியா வந்தனச்சுருக்கமும், கௌரி பஞ்சாங்கமும், தின ஓரையுஞ் சேர்த்து அச்சிற் பதிப்பித்தனன். இதுகற்றோரும், மற்றோரும் எளிதினுணரத்தக்கது. குறைந்தவிலைக்குங்கிடைப்பது. இதனை விஸ்வப்பிரமகுலோற்பவரான ஒவ்வொருவரும்பெற்று முழுவதும் கற்றுத் தங்களாசாரங்களில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அக்குறைவை நீக்கிக்கொண்டு இம்மை மறுமைப் பயன்களை யெய்தவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம் :

**கோ. கன்னியப்பாசாரி.**

உ

# அறிக்கை.

இந்த விஸ்வப்ரம்ஹ புராண உத்தரகாண்டமும் டி வம்சத்திற்குறிய வேதசாஸ்திர முதலிய கிரந்தங்களும் சம்ஸ்கிருதத்திலாகிலும் தெலுங்கிலாகிலும் வெளிவராதது ஏதேனும் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் எனக்கனுப்பில் வந்தனத்துடன் பெற்று தமிழில் அச்சிட்டு வெளிப்படுத்த முயலுவேன்.

இங்ஙனம்:

**கொ. கன்னியப்பாசாரி,**

நெ. 5/10, வேதகிரிமேஸ்திரி வீதி,

சிந்தாத்திரிப்பேட்டை,

சென்னை.

# சாத்துக் கவிகள்.

ஆயுர்வேத பூஷணரும் சமஸ்கிருத பண்டிதருமாகிய
**கோமாண்டூர் பிரமஸ்ரீ**
ஸுப்ரமண்ய சாஸ்திரியாரவர்க
ளியற்றியது

விஶ்வப்ரஹ்ம புராணஸம்ஸ்க்ருதமிதம் த்ராவிட்யகார்ஷீத்
ஶ்ரீமுத்து ஸ்வாமி பாரதீதி
ஶாஸ்த்ரஜ்ஞ: ... ப்ரஹ்மாந்வய சூடாமணி: ।
தத்த்வம் க்ருஹ்ய ஜநோபகாரகதியா ஶ்ரீஸுந்த
ராசார்ய: கவி:
ஸங்க்ஷேப்ய ப்ரகடீசகார ததிதம் கத்யப்ரபந்தாத்மநா
வநே ॥

**இதன் கருத்து** :—விஸ்வப்ரம்ஹ குலத்திற்குச் சூடாமணியைப்போல விளங்கிக்கொண்டிருந்த **முத்து ஸ்வாமிபாரதி** யென்பவர் சமஸ்கிருதத்தில்புராதனமாயும்விரிவாயுமுள்ள விஸ்வப்ரம்ஹ புராணத்தை திராவிடபாஷையில்பாடலாகமொழிபெயர்த்தனர் அந்தக் கிரந்தத்தைஜநோபகாரத்தைக் கருதி **கன்னியாபாசாரி**யென்பவர் **ஸ்ரீ சுந்தராசாரி** யென்னுங் கவிராஜரைக்கொண்டு வசன சங்கிரகமாக செய்வித்து அச்சியற்றி வெளியிட்டனர்.

இப்படிப்பட்ட இந்த கிரந்தமானது இப்பிரபஞ்சத்தில் ஆசார ஒழுக்கங்கள் முதலியவைகளைச்செலுத்தும் பெரியோர்களுக்கு முக்கிய சாதனமா யிருப்பதால் சந்திரர் சூரியர் உள்ளவரையிலும் உலகத்தில் சிறப்புற்று ஓங்குக.

சென்னை,
இந்து தியலாஜிகல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத்-கோ. வடிவேலு செட்டியாரவர்க
ளியற்றிய

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

---

முத்துநேர் முத்துச் சாமிபா ரதியார்
முன்னுள நூல்பல வாய்ந்து
வித்தக மாக விளம்பிய விசுவ
பிரமபு ராணத்தின் விரிவைப்
பத்தியான் மிக்க சுந்தரா சாரி
பளகறு வசனமாய்ச் சுருக்கி
யெத்தகை யோரு மெழினல மெய்த
வினிமையா வளித்தனன் மாதோ.

கல்வியி னுக்குங் கடவுள்பால் விருப்புங்
கண்ணிய சுந்தரா சாரி
நல்லியல் பமைய வமைத்தவவ் வசன
நானிலந் தனில்விளங் கிடுமா
சொல்லியல்[1] குளத்தூர்த் துன்னிய கன்னி
யப்பனென் சுந்தர குணத்தோன்
கல்விய லச்சு வாகன மேற்றிக்
கவின்பெறச் செய்தனன் காணீர்.

### வித்வான் ஸ்ரீமான்,
## ம. இராஜகோபால பிள்ளையவர்க ளியற்றிய
### அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

கவிக்கினிய னெனுமுத்துச் சாமிபா
    ரதிமுதியன் கனிந்து நல்கு
மவிக்கினமா மறைவிசுவ பிரமபுரா
    ணப்பொருளை யாழி சூழும்
புவிக்கினிய விதமாகச் சுந்தரா
    சாரியெனும் புலவன் செய்யச்
செவிக்கினிய வசனமதை யச்சிட்டான்
    கன்னியப்பச் செவ்வே ளம்மா.

சென்னைக் கிறித்தவக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

### ம-ள-ள-ஸ்ரீ,
## வா. மகாதேவ முதலியாரவர்க ளியற்றிய
### நேரிசை வெண்பா.

பேரார் விசுவ பிரம புராணத்தைச்
சீரார் வசனத்திற் சீர்பெறவே—பாராக்
கொடுத்தனனாற் சுந்தரமால் கோதிலா வச்சின்
விடுத்தனனாற் கன்னியப்ப வேள்.

வித்வான், ஸ்ரீமான்,

## ஆ. மே. சென்னகேசவலு நாயுடவர்க ளியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புலவர்கடாம் புகழ்முத்துச் சாமிபா ரதியென்னும்
புனிதன் சொன்ன
நலமலிவிச் சுவபிரம புராணப்பா வினைவசன
நடையிற் செய்தான்
பலருமறி யச்சுந்த ராசாரி யாம்புலவன்
பரிவி னஃது
நிலநிலவத் தருகுளத்தூர் கன்னியப்பா சாரியச்சி
னேர்வித் தானே.

ஆரணி, ஜாகீர் கோட்டம்

வித்வான் - பிரமஸ்ரீ

## செல்லகுட்டியாசாரியரவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா.

புகழார் விசுவ பிரம புராணம்
தகவார் வசனந் தனையே—திகழ்புலவன்
சுந்தரன்றான் செய்தளிக்கச் சுத்தகுண கன்னியப்ப
னந்தரமா யச்சிட்டா னுண்டு.

கும்பகோணம்கவர்ன்மெண்டு சித்திர வித்தியாசாலைச்
சிற்பவித்தியா போதகாசிரியரா யிருந்த
**வித்வான் - ப்ரஹ்மஸ்ரீ**

## தி. மு. முக்கண்ணுசாரிய ரவர்க
## ளியற்றிய

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

---

சீர்வளரை யாற்றுமுத்துச் சாமிபா ரதிவடசொற்
றெரித்த வாற்றல்
பார்வளர்விச் சுவபிரம புராணமுனஞ் செந்தமிழாற்
பகர்ந்தா னத்தை
ஏர்வளர்பைந் தமிழ்நடையிற் சுருக்கிமுறை பிறழாதிங்
கெவருந் தேர்வான்
தார்வளர்திண் புயன்சென்னைச் சுந்தராரியன்றிரட்டித்
தந்தான் மன்னோ.

இத்தகைய வருணூலைக் குஞ்சிதபா தம்பொலியு
மிதையன் கல்வி
வித்தகநல் லொழுக்கநிறை குலதீபன் சனுதனமாம்
விழுப்ப மியாவும்
பத்திமைகொண் டொளிர்குளத்தூர் கன்னியப்பாச்
சாரியச்சிற் பதிப்பித் தன்பா
லுத்தமர்கட் குதவுபெருந் தகையாளன் றணிபுடமைக்
குவப்பர் மாதோ.

கண்ணமங்கலத்தைச் சார்ந்த வல்லம்

ம-௱-௱-ஸ்ரீ, வித்வான்

## ப. வைத்தியலிங்கம் பிள்ளையவர்க ளியற்றிய

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

---

பொங்குகா ளத்திநா கரநகர சுவிரதப்
புரவலற் கன்று ரைத்த
புரையில்விசு வப்பிரம நற்புரா ணப்பனுவல்
பொலியும்வட மொழியிருப்பத்
தங்குமை யாற்றுமுத் துச்சாமி பாரதி
தமிழ்ப்பா வினப்பெ யர்ப்பாய்த்
தாணியி லுஞற்றிடச் சுந்தரக் கவிஞவே
டகுவசன சங்கிரகமா
யிங்கியற் றிடவச்சி னேற்றிவெளி யாக்கின
னியாவர்களு மெளிதினுணர
வெழிலிதவழ் சோலைசூழ் தென்குளத் தூரில்வரு
மிணையில்விஸ் வக்ஞனென
மங்களம் பெறுசெல்ல குட்டியாங் குரிசிலின்
மாதவச் சுபுத்ரனேனன்
மறையொழுங் கோர்ந்தொழுகு கன்னியப் பாசாரி
மகிழுடன் வாழ்கமாதோ.


ஓம்.
விஸ்வப் பிரம்மம்.
அபுவனஸரிஷி.
ஸநாதனரிஷி.
ஸாநகரிஷி.
பிரத்நஸரிஷி.
விஸ்வப்ரம்ம பஞ்சமுகோத்பவர்கள்.
Written by
P. V. Sabapathy

உ

கணபதி துணை.

# விசுவ பிரம புராணம்.

## பூர்வகாண்ட வசனச் சுருக்கம்.

### விஸ்வப்பிரம வணக்கம்.

நேரிசை வெண்பா.

சீர்மறையினுட்பொருளாய்ச் செய்மனவாக்குக்கரிதாய்
சேர்சமய மெல்லாமுந் தேடரிதாய்—நீர்மையுறு
நற்பிரம மாகியெங் நாலைந்திருவுருவோரா
டுற்றொளிரும் பூரணத்தை [illegible]யர்து

முதலாவது

### புராணவரலாற்றத்தியாயம்.

நீர்வளமுதலாகிய பலவளங்கள் மிகுந்த மகதநாட்டின் நடுவிலே நாகர மென்கின்ற ஒரு நகரமுண்டு அந்நகரத்தில் சந்திர குலத்தில் அவதாரஞ் செய்த சுவிரத மஹாராஜாவானவன் பதிவிரதாதருமத்தையுடைய மனைவியோடும் அழகிய புத்திரனோடும் பலபோக போக்கியங்களை அனுபவித்து வாழ்ந்துகொண்டிருக்குங்

காலத்தில் உண்மை ஞானமாகிய விபூதி உருத்தி ராக்கமாலையைத் தரித்த சுமந்து என்னும் பெயரை யுடைய ஒரு மகாரிஷியானவர் அச்சுவிரத மகாராஜா வினிடத்தில் வந்தார். வந்தவுடன் சுவிரத மகாராஜா வானவன் அவரை எதிர்கொண்டு சென்று தோத்திரஞ் செய்தழைத்துவந்து ரத்னாசனத்தி லிருக்கச் செய் து அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம், கொடுத்து அன்போடு நமஸ்காரஞ் செய்து ஓ பரிசுத்தமாகிய முனிசிரேஷ்டரே! தங்களுடைய கிருபையினால் யா தொரு குறைவில்லாமல் செங்கோல் செலுத்தித் தரு மங்களை அநுபவித்தேன்; அப்படி அனுபவிப்பதில் முதல்நாள் அனுபவித்த இன்பத்தையே மறுநாளும் அனுபவிப்பதல்லாமல் புதிதாக ஓரின்பத்தையும் அனு பவிக்கக்காண்கிலேன். ஆதலால், இன்னமும் ஜனனத் திற் கேதுவாகிய அநித்தியபோகத்தை அனுபவிக்க இஷ்டமில்லை. பேரின்பவாழ்வாகிய மோக்ஷலாபத்தை யடையும்படி அநுக்கிரகஞ்செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்த சுவிரத மகாராஜனைப்பார்த்து நீ கருதிய மோக்ஷலாபத்தைப் பெறுதற்கு ஒருபாயஞ் சொல்லு கிறோம் கேளும் அது என்னவென்றால், நைமிச வனமென்று ஒருவனமுண்டு! அந்த வனத்தில் மோக்ஷ ப்பொருளைக்கருதி நல்வினை தீவினை என்னும் வினை களை வேரறக்களைந்து ஆணவம் முதலாகிய மும்மலங் களையும் ஒழித்தும், அந்தக்கரணநான்கையும் ஒருவ ழிப்படுத்தியும், பஞ்சேந்திரியங்களை அடக்கியும், காம க்குரோத முதலான அறுவகைக்குற்றங்களையும் போ க்கி எழுவகைப்பிறப்பையும் ஒழித்தும், அஷ்டாங்க யோகங்களை நன்றாகச்செய்தும், மெய்ஞ்ஞானத்தை யடைந்து பேரானந்த வாழ்வுபெற்று விளங்காநின்ற பரிசுத்தமுள்ள காளத்திமுனிவரென்னும் பெயரை யுடைய ஓர் மகாரிஷி யிருக்கின்றார்.

அப்படிப்பட்ட காளத்திமகாரிஷியினிடத்தில் நீர் போய் ஞானோபதேசம் பெறுவீராகில் நித்தியானந்த மோக்ஷலாபத்தை யடையக்கடவீரென்று சொல்லிச் சுமந்துமுனிவரானவர் சுவிரத மகாராஜாவினிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தன்னுடைய ஆசிரமம் போய்ச் சேர்ந்தார். அப்பால் சுவிரதமகாராஜாவானவன் தருமராஜனென்னும் பெயரையுடைய தனது குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துமுடித்து அவ்விடத்திலிருந்து அரசு புரியும்படி வைத்துவிட்டு சந்தோஷத்துடனே இல்வாழ்க்கையை விட்டு ஞானோபதேசம் பெற்றுய்யும்படி நினைத்து நகரத்தைவிட்டுப் புறப்பட்டுக் காசி என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் வந்து ஸ்ரீ விஸ்வேஸ்வரரை விதிமுறையாக வந்தனைவழிபாடுகள் செய்து கங்காநதியின் கரையிலுள்ள நைமிசாரண்ணியத்தை யடைந்து மகாரிஷி கணங்களுடன் பல சீடர்களுடனே வியாக்ராசனத்தில் வீற்றிருந்த காளத்தி மகாமுனிவரைக்கண்டு தரிசித்து அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரஞ்செய்து எழுந்து நின்று எனது ஞானாசாரியரே! உலகத்தில் விளங்காநின்ற சராசர உயிர்களெல்லாம் உண்டாகின்றது இயற்கையோ? கருமசேஷச் செய்கையோ? மாயையின் வலிமையினாலோ? கடவுளாலோ? காலபரிபாகத்தினாலோ? திருவாய் மலர்ந்தருளவேண்டு மென்று சுவிரதமகாராஜன் கேட்க? காளத்திமகாமுனிவர் சொல்லுகின்றார்.

அஃதாவது சுவிரதமகாராஜனே அகிலசராசரங்களெல்லாம் உண்டாவது சுபாவிகமும் அல்ல; காலத்தினாலும், மாயையினாலும், தனித்தனி உண்டாவது மில்லை; அநாதியாயுள்ள வேதத்திற் கூறியபடியே உனக்குச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. உலகத்தில் பலவாகிய ஆன்மாக்களுக்கும் அநாதியாகப்பொருந்திய கரு

மத்தின் பரிபாககாலத்தையறிந்து மாயையானது முதற்காரணமாகவும், தன்னுடைய திருவருட்சத்தி துணைக்காரணமாகவும் கொண்டு, விஸ்வேஸ்வரன் நிமித்த காரணனாகி உயிர்களையெல்லாம் உற்பத்தி செய்வான் என்று சொன்னவுடன் சுவிரதமகாராஜா மகிழ்ச்சியடைந்து சற்குருவே! ஆன்மகோடிகளெல்லாம் மோக்ஷமடைதற்குக் காரணத்தையும் அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்டவுடன் சுவிரதமகாராஜனே கேளும் பலவாகிய ஆன்மகோடிகளெல்லாம் செய்கின்ற புண்ணிய மேலீட்டினாலே மானிடப்பிறவியை யடைந்து, தங்கள் தங்கள் வருணாச்சிரமமென்று சொல்லப்பட்ட நன்மார்க்கத்தில் நின்று வேதவிதி வழுவாமல் நடக்கின்ற முறைமையினாலே உண்மை ஞானந்தோன்றும், அது தோன்றவே அஞ்ஞானமானதுகெடும், அது கெடவே அடர்ந்த பாச பந்தங்கள் நீங்கும், அவைகள் நீங்கவே மோக்ஷத்தை அடைவார்கள். என்று கூறியவுடன் சுவிரதமகாராஜன் காளத்திமுனிவரை வணங்கி எல்லாஉலகங்களுக்கு முதற்கடவுளின் தன்மையையும் மகதத்துவ முதலாகிய தத்துவோற்பத்தியையும் தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவர முதலானவைகளுமாகிய சராசரங்களின் சிருஷ்டிக்கிரமத்தையும் பிரபஞ்சங்களை உற்பத்திசெய்யுங் கிரமத்தையும், பஞ்ச கர்த்தாக்கள் முதலாய யாவருக்கும் முதற்கடவுள் கொடுத்தருளிய அதிகாரக் கிரமங்களையும் காலத்தின்அளவுகளையும், ஆயுள்நிர்ணயத்தையும், பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திர சங்கர ஜாதிகளின் தருமங்களையும், பிராமண வமிசத்தையும், பிராமணர் கோத்திர சூத்திர பிரவர சாகைகளின் கிரமங்களையும், உலக விருத்திக்காக அயம்-தாரு-தாம்பிரம்-சிலை-சுவர்ணமாதிகளாற் செய்யப்படுகின்ற பஞ்சகிர்த்தியமுறை

மையும், நித்தியகருமவிதி நிஷேதங்களையும், 1. கருப்பாதானம், 2. பும்சவனம், 3. சீமந்தம், 4. ஜாதககன்மம், 5. நாமகரணம், 6. உபநிஷ்கிரமணம், 7. அன்னப்பிராசனம், 8. சவுளம், 9. உபநயனம், 10. உபாகர்மம், 11. வேதாரம்பம் முதலியவைகள் செய்யும் விதியையும், 12. பிரமசரிய ஆச்சிரம விதியையும், பிராஜாபத்தியம் - சவுமியம் - ஆக்னேயம்-வைஸ்வ தேவிகமென்றுசொல்லப்பட்ட வேதவிரத 13. சமாவர்த்தன விதியையும், அஷ்டவிதவிவாகபேதங்களையும், விவாகத்திற்குரியவதுவரர்களைக்குறித்துப்பார்க்கின்ற தினம் கணம்-மாகேந்திரம்-ஸ்ரீ தீர்க்கம்-யோனி-இராசி - இராசியாதிபதி - வசியம் - இரச்சு - வேதை யென்று சொல்லப்பட்ட பொருத்த விதிகளையும், விவாகஞ்செய்யுங் கிரமங்களையும், மாதரொழுக்கங்களையும், பிரமயக்ஞம்-பிதுர்யக்ஞம்-தெய்வயக்ஞம்-பூதயக்ஞம் - மானுஷயக்ஞம்-பஞ்சமகாயக்ஞங்களின் விதியையும், அமாவாசை

---

1. கருப்பாதானம் = கருப்போற்பத்தி யாகும்படி செய்யுங் கிரியை.

2. பும்ஸவனம்=ஆண்பிள்ளை பிறக்கு மருந்து பிழியுங் கிரியை.

3. சீமந்தம் = மூன்றிடத்து விளர்ப்புள்ள பன்றி முள்ளினால் தலைமயிரை வகிர்ந்துசெய்யுங் கிரியை.

4. ஜாதககருமம் = குழந்தை பிறந்தவுடன் செய்யுங் கிரியை.

5. நாமகரணம்=பெயரிடுதற்குச் செய்யுங் கிரியை.

6. உபநிஷ்கரமணம்=குழந்தையை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்குச் செல்லுங் கிரியை.

7. அன்னப்பிராசனம்=அன்னமூட்டுதற்குச் செய்யுங் கிரியை.

8. சவுளம்=மயிர்வினைக்குச் செய்யுங் கிரியை.

முதலாகச்சொல்லப்பட்ட 14ஷண்ணவதி சிரார்த்தகிரமங்களையும், சுப கன்மங்களிற் செய்யப்பட்ட சாந்தீமுக சிரார்த்தங்களையும், சிரார்த்தத்திற்குரிய திரவியங்களையும், சிரார்த்தத்தில் நியமிக்கத் தகுந்தவர்களையும், வைதிகாக்கினியில் ஓமஞ்செய்து செய்கின்ற பார்வண சிரார்த்த விதிகளையும், பிதிர் வருக்கமுதல் ஏழ் வருக்கங்களையும் தழுவிச்செய்யத்தக்க மஹாளய சிரார்த்த விதியையும், சாப்பிடத்தகாத பதார்த்தங்களையும், திரவிய சுத்திகளையும், ஜனன மரண அசூசங்களையும், வானப்பிரஸ்தன்-சந்நியாசி முதலிய ஆசிரம விதியையும், அடியேன் தெரிந்துகொள்ளக் கருணைகூர்ந்து சொல்லவேண்டுமென்று கேட்க காளத்தி முனிவரானவர் அவ்வரசனுக்கு அன்போடு சொல்லத்தொடங்கினார்.

**புராணவரலாற் றத்தியாயம்**

*முற்றுப்பெற்றது.*

---

9. **உபநயனம்** = சகலகருமங்களுக்கும் சமிதாதான முதலிய விரதானுஷ்டானங்களுஞ் செய்வதற்கு அதிகாரியாகச் செய்யுங் கிரியை.

10. **உபாகர்மம்** = வேதாரம்பஞ் செய்யுங் கிரியை.

11. **வேதாரம்பம்**=அத்தியயனஞ் செய்ய ஆரம்பிக்குங் கிரியை.

12. **பிரமசரியம்**=பிரமசரிய ஆச்சிரம விரதம்.

13. **சமாவர்த்தனம்**=பிரமசரிய விரதத்தை ஒழித்தற்குச் செய்யுங் கிரியை.

14. ஷண்ணவதி=அமாவாசை - 12, மன்வாதி - 14, யுகாதி - 4, சங்கிராந்தி - 12, வைதிருதி - 13, விதீபாதம் - 13, மஹாளயம் - 16, அஷ்டகை - 12, ஆக 96.

### இரண்டாவது

## உலகிற்கு முதல்வனையுரைத்த வத்தியாயம்.

முன் வேலாயுதத்தைப் பெறும்பொருட்டு சிவ பெருமானிடத்தில் கேட்டுணர்ந்த சுப்பிரமணியக் கடவுளானவர் உபசிருஷ்டித் தொழிலை விரும்பிய காசிப முனிவரனுக்குச் சொல்லக்கேட் டுணர்ந்த அக்காசிப முனிவரானவர் எனக்குபதேசித்தபடியே உலகத்திற்கு முழுமுதற்கடவுளின் தன்மையில் சிறிது நம்மாலியன்றமட்டும் சொல்லுவாம்.

கேளும் சுவிரத மஹாராஜனே? விஸ்வப் பிரமமானது அகண்டபரிபூரணமாகியும், சகலசிருஷ்டிக்கு நிமித்த காரணமாகியும், சுத்தாசுத்த மாயாகற்பனைகளைக்கடந்த பேரறிவாகியும் விளங்கும் ஆன்மாக்களுக்குப் பரவான்மாவாகியும், பிரமானந்த சதோதயமாகியும், களங்க மில்லாததாயும், பற்றுக்கோ டில்லாததாயும், ஒன்றாய் விளங்காநின்றது. இன்னும் பரசிவமாய்த் தானாகத்தோன்றியதாய் அனைத்தையு மறியுஞ் சுத்தசைதன்னியமாய் வினையில்லாததாய்ச் சிற்சொரூபமாய்ப் பேரின்பமாய் உண்மையறிவானந்தமாய்ப் பரஞானமாக விளங்குகின்றது. இன்னும் இரத்தினக் கல்லினிடத்துப் பிரகாசமும், அக்கினியினிடத்து அனலும், ஜெலத்தினிடத்து குளிர்ச்சியும், சூரியனிடத்து வெம்மையும், சந்திரனிடத்து சீதமும், பாலினிடத்து நெய்யும், தேனிடத்து சுவையும், புஷ்பத்தினிடத்து வாசனையும்போல அப்பிரமத்தினிடத்தில் (தாதான்மியமாக) ஓர் சத்தியானது விளங்கும்.

ஆனந்த சொரூபமாய்த் தங்கிய (தாதான்மிய) சத்தியானது சிருஷ்டி முதலாகிய ஐந்தொழிலுக்கும் தலைவியாய் ஆதிசத்தி, இச்சாசத்தி, பராசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியுமாய் அவ்விஸ்வப் பிரமமானது எப்படி விளங்குமோ அப்படி விளங்குவதாய் (ஆகமங்கள்) சொல்லும் பலவகைப்பட்ட சத்திகளுமாய் (ஆன்மகோடிகள்) உச்சீவித் தானந்திக்க விளங்கிக்கொண்டிருக்கும்.

பரசிவனது பராசத்தியின் கிருபையினாலே குடிலையினிடத்து உண்டாகிய பரநாதமாகி, அதனிடத்திலே சமவாயத்தாலுண்டாகி விளங்கிய பரவிந்துவாகி, அவ்விரண்டிலு முண்டாகிய ஞானமுங்கிரியையுமொத்த சதாசிவமாகி அதனால் விளங்கும் மகேசுரனாகி, சுத்த வித்தையாகி (இந்த தத்துவம் ஐந்தால்) கதியடையும்படி விளங்கியது விஸ்வப் பிரமம்.

அந்த விஸ்வப் பிரமமானது! ஞானமே திருவுருவாகியும், கருணைவடிவாகியும், பிரணவ சொரூபமாகியும், உலகத்திற்கு ஓர் விதையாகியும், சமஸ்த மந்திரங்களுக்கும் பீஜமாகியும், வேதங்களுக்கு முதலாகியும், உலக உற்பத்திக்குப் பிரதானமாகியும், திரிமூர்த்திகள் தோன்றி யொடுங்குதற்கு இடமாகிய பரமாத்ம சொரூபமாகியும், ஜீவாத்ம சொரூபமாகியும், ஓங்காரமாகியும், விராட் விஸ்வப் பிரமமாகியும் விளங்கும்.

அந்த விஸ்வப் பிரமமானது ! நிராகாரம், ஓங்காரம், சிதானந்தம், பரஞ்சோதி, பிரமானந்தம் என்று சொல்லப்பட்ட நிர்க்குண சொரூபம் ஐந்தாகியும், விராட்டு, விஸ்வம், ஏகம், பரசிவம், விஸ்வகன்மாவென சகுண சொரூபம் ஐந்தாகியும் விளங்கும்.

அந்த விசுவ பிரமமானது! பிரமா, விஷ்ணு, உருத்திரன், இந்திரன், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பிரகாசம், இருள், பகல், இராத்திரி மனமுதலிய கரணங்கள், ஞானேந்திரியங்கள், தன்மாத்திரைகள், ஐம்பூதங்கள், மற்றுமுள்ள பொருள்களும் தோன்றியபடியே ஒடுங்கிய மஹாப்பிரளய காலத்தில் தனக்குத்தானே காரணமாயும், எல்லாந்தானுயும் விளங்கும்.

அந்த விசுவ பிரமமானது! பஞ்சபூத தூலசொரூபத்துக்கு சுராட்டு என்றும், சூட்சும சொரூபத்துக்கு சம்ராட்டு என்றும், காரண சொரூபத்துக்கு விராட்டு என்றும், இந்த மூன்று சொரூபத்தையுடையதாய் விளங்கும்.

அந்த விசுவ பிரமமானது! தன் கருணையால் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் பெயர்பெற்றது. ஐந்து திருமுகங்களோடு சகளப்பிரமமாய்ப் பஞ்சகிர்த்தியத்திற்கு மூலகாரணமாய் விசுவகர்மாவென்னும் பெயரையுடையதாய்த் தனது அருட்சத்தியோடு விளங்கும்.

அந்த விசுவகர்மாவே! சிருஷ்டிப்பதற்கு பிரமாவாகவும், இரக்ஷிப்பதற்கு விஷ்ணுவாகவும், சங்காரஞ் செய்வதற்கு உருத்திரனுகவும், திரோதானஞ் செய்வதற்கு மகேசுவரனுகவும், அநுக்கிரகஞ் செய்வதற்கு சதாசிவமாகவும் விளங்குவார்.

வேதங்கள் சொல்லும் விசுவகர்மாவே எல்லாத் தேவர்களுடைய பதவிகளையும், நிலைத்திருக்கும்படி செய்தவர். எல்லாப்பொருள்களுக்கும் ஆதாரமா யிருப்பவர். இவ்விதமாகச் சொல்லப்பட்ட அந்த விசுவகர்மாவே உலகத்திற்கு முதற்கடவுள். இதுவே உண்

மையென்றறியக்கடவாய் என்று சொல்லி இதுவரை யும் உலகத்திற்கு முதற் கடவுளின் தன்மையில்சிறிது நம்மாலியன்றமட்டும் சொன்னேம். இனி மகத கங்கார முதலாகிய சிருஷ்டிக்கிரமத்தைச் சொல்லுகி ரும். நீ அன்புடன் கேட்பாயென்று காளத்தி முனி வர் கூறுகின்ருர்.

உலகிற்கு முதல்வனையுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

## மூன்றாவது

## மகதாதி சிருஷ்டி யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மஹாராஜனே? விசுவகர்மா வென்கிற சருவ பரிபூரணரானவர் தமக்கொரு துணை யுமில்லாதவராய்ப் பஞ்ச கிர்த்தியங்களைச் செய்பவராகி யும், பிரகிருதி மாயையைப் பிரயோகஞ் செய்பவரா கியு மிருக்கின்ருர். தமது இச்சாமாத்திரத்தில் ஒத்து நடக்கிற பிரகிருதி மாயையையும்,ஜீவர்களையும்,காலங் களையும், வேதங்களையும் தோன்றச் செய்தார். அது எப்படியென்ருல் பார்க்குந்தோறும் ஆச்சரியகரராயும், சர்வ வியாபகராயும், ஞான சொரூபராயும், அழிவில் லாதவராயும், இருக்கின்ற கடவுளாகிய விசுவகர்மாவி னுடைய இச்சையால் அனுதியாயுள்ள மகாமாயையி னிடத்திலிருந்து விளங்கச் சொல்லுங்கால் நானுவி தமாயதிகரிக்கின்ற மகதத்துவம் உண்டாயிற்று. அந்த

மகதத்துவமானது தன்னிடத்திலிருந்து சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களுந் தோன்றும்படி தன்னுள்ளே அடக்கிக்கொண்டு நன்றாக விளங்கும். இம் முக்குணங்களும் ஏற்றக் குறைவின்றி நின்றவிடம் சித்தமாகுமென்றும், இம்மூன்றி லொன்றுமுனைந்துநிற்பது புத்தியென்றும் சொல்லுவார்கள். அந்த புத்திதத்துவத்தினின்றும் விளங்கும் தைசத அகங்கார மென்றும், வைகரி அகங்கார மென்றும், பூதாதி அகங்கார மென்றும், இம்மூன்றுவகை அகங்காரங்களும் முறையே தோன்றின, சத்துவ குணம்சமாகிய தைசத அகங்காரத்தில் மனமும், ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றின. ராசத குணம்சமாகிய வைகரி அகங்காரத்தில் வாக்குமுதலாகிய கன்மேந்திரியம் ஐந்தும் தோன்றின. தாமச குணம்சமாகிய பூதாதி அகங்காரத்தில் இடங்கள்தோறு மிகுந்த தன்மாத்திரைகளாகிய சத்தமுதலாகச் சொல்லும் பஞ்ச தன்மாத்திரைகளும் தோன்றின. தன்மாத்திரை ஐந்தினுள் சத்தத்தில் ஆகாயமும், பரிசத்தில் வாயுவும், உருவத்தில் அக்கினியும், ரசத்தில் ஜலமும், கந்தத்தில் பிருதிவியும், உண்டாயின.

விசுவகர்மாவானவர்! இந்தப்பிரகாரம் சிருஷ்டி செய்த பஞ்ச பூதங்களையும், சிருஷ்டிக்குத் தக்கபடி பஞ்சகரணமாகத் தாரதம்மியப்படச் சேர்த்து சமஸ்த அண்டபுவன சராசரங்களையும் தம்முடைய அருளால் சிருஷ்டிசெய்தனர்.

இன்னும் கேட்பாயாக! பிருதிவிமுதலாகச்சொல்லப்பட்ட பஞ்சபூதங்களுக்கும் முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவர்களும் அதி தெய்வங்களாக இருப்பார்கள்.

அதி சூக்க அணுவானது பதினாறுகொண்டது இரதரேணு, அந்தரேணு எட்டுகொண்டது மயிர்நுனி, அம்மயிர்நுனி எட்டுகொண்டது ஈர், அவ்வீர் எட்டு கொண்டது பேன், பேன் எட்டு கொண்டது யவை, அந்த யவை எட்டுகொண்டது மானுங்குலம், அந்த மானுங்குலம் இருபத்துநான்கு கொண்டது விற்கிடை, அவ்விற்கிடை இரண்டுகொண்டது தண்டம், தண்டமானம். இரண்டாயிரங் கொண்டது குரோசம், அக்குரோசம் நான்கு கொண்டது ஒரு யோசனை, அந்த யோசனை ஒரு நூறு கோடி கொண்டது ஒரு அண்டத்திற்கு அளவாகும்.

ஓர் அண்டத்தின் மத்தியில்பொருந்தியிருக்கின்ற பூவுலகத்தின் கீழே உள்ள அளவானது அண்டப்பித்தியின் கனத்துடன் ஐம்பதுகோடி யோசனை யாகும். பூமியின்மேல் அண்டப் பித்தியின் கனத்துடன் சேர்ந்த அளவு ஐம்பதுகோடி யோசனை யாகும். பூவுலகத்தின் மத்தியில் பொன்னாகிய மகா மேருவுக்கு எட்டுத் திக்கிலும் சொல்லப்பட்டுள்ள அளவானது அண்டப் பித்தி கனஞ் சேர்ந்து ஐம்பதுகோடி யோசனை யாகும். ஓர் அண்டத்தினது அகலத்தளவையும், உயர்ச்சியளவையும், நெடுமை யளவையும், சொல்லு மிடத்து நூறுகோடி யோசனை யாகும். இவ்விதமான அளவிறந்த அண்டங்களுக் கெல்லாம் இவ்விதமாகிய அளவே யாகும். இத்தன்மையாய்ப் பலகோடி யண்டங்களைச் சிருஷ்டித்து அவ்வண்டங்களையெல்லாம் தன்னருள் வெளியிலே விளங்கும்படிக்குச் செய்து அவ்வண்டத்தில் பல வாகிய ஜீவகோடிகளை யெல்லாந் தழைக்கும் படி விசுவேசுவரர் திருவருள் செய்தார்.

இது வரையும் மகதகங்காராதி சிருஷ்டிக் கிரமத்தைச் சொன்னோம் இனி தேவர் மனிதர் சிருஷ்டியை

கிரமப்படி சொல்லுகின்றோம் நீ அன்புடன் கேட்பா யாக வென்று காளத்தி முனிவர் கூறுகின்றார்.

**மகதாதி சிருஷ்டி யுரைத்த வத்தியாயம்**

*முற்றுப்பெற்றது.*

**நான்காவது**

## தேவநராதி சிருஷ்டி யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே ? விசுவேசுவரரானவர், தம்முடைய நேத்திரம், சிரம், மார்பு, காது இந்நான் கவயவங்களி லிருந்தும்; பிராணன், அபானன், வியானன், உதானன் என்ற பஞ்சவாயுக்களி லிருந்தும்; முறையே மரீசி, அங்கிரசு, பிருகு, அத்திரி, காசிபர், கிரது, புலகர், தக்ஷர், புலஸ்தியர், என்னும் ஒன்பது பிரமர்களையும்! சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம் என்னும் ஐந்து திருமுகங்களி லிருந்தும் முறையே மனு,மயன், துவஷ்டர், சிற்பி, விசுவக்ஞன் என்னும் ஐவர்களை அவரவர்கள் சத்தியுடனே பஞ்ச பிரமாக்களாக உலகங்களை யெல்லாம் உண்டாக்கச் சிருஷ்டித்தருளினர்.

அந்த விசுவேசுவரரானவர் சனகர், சனந்தனர், சனுதனர் இருபு, சனற்குமாரர், என்கிற முனிசிரேஷ்டர்களையும், பலவாகிய ரிஷிகணங்களையும், தனது திருமேனியில் மேல்நோக்கிய பாகத்திலிருந்து, இந்

திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் திக்குப்பாலகர்களையும், இருபத்தேழு நட்சத்திரங்களையும், ஒன்பது கிரகங்களையும் சிருஷ்டித்தருளினார்.

பின்னும் திருமேனியின் பக்கத்திலிருந்து பிதுர் தேவதைகளையும், துவாதசாதித்தர்களாகிய பன்னிரண்டு சூரியர்களையும், மருத்துக்கள் பதின்மர்களையும், சிருஷ்டித்து தமது இடையின் கீழ்பாகத்தி லிருந்து பன்னிரு வகையாகிய கணங்களையும், அஷ்டகஜங்களையும், ஆதிசேடனையும், அஷ்டநாகங்களையும், காலங்களையும், பகலையும், இரவையும் இரண்டாகச் சொல்லும்படி பொருந்திய சந்திகளையும், நல்ல மாச முதலாகிய பிரிவுகளையும், ஆறு இருதுக்களையும், யுகாந்தமாயுள்ள சமஸ்த விஷயங்களையும் உண்டாகும்படி செய்து விளங்கிய அக்கினிஷ்டோம முதலாகிய இருபத்தொரு யாகங்களையும், உண்டாகச் செய்தார்.

பின்னும் மின்னல், இடி, மேகம், இந்திரதனுசு, வால் நட்சத்திரம், பூகம்பம், துர் நிமித்தம் இவை முதலாகிய பலவற்றையும், அஷ்டதிக்குப் பாலருக்கும், ஒன்பது கிரகங்களுக்கும், பதினெண் கணத்தர்களுக்கும் வாகனங்களையும் சிருஷ்டித்தருளினார்.

தமது பஞ்சமுகங்களுக்குள் கிழக்காகிய சத்தியோஜாதமுகத்தி லிருந்து இருக்குவேதமும், மேற்காகிய அகோர முகத்தில் சாமவேதமும், வடக்காகிய தற்புருஷ முகத்தில் அதர்வணவேதமும், மேலாகிய ஈசான முகத்தில் பிரணவமும்,அவைகளுக்குள்ள சாகைகளுடனே விளங்கும்படி தோன்றச் செய்து எல்லா உலகங்களும் உஜ்ஜீவிக்கும்படி கிருபை செய்தார்.

பின்னும் ஆயுள்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், மனுவேதம் என்று புகழத்தக்க உபவேதங்கள் ஐந்தையும், வேதாங்கங்களாறையும், சுபகர்மங்களையும், அசுபகர்மங்களையும், தர்மார்த்த காமமோக்ஷங்களை அடைவதற்கு விதிநிஷேதங்களை வகுப்பதாகிய ஆஸ்விலாயனாதி சூத்திரங்களையும், சமஸ்த விஷயங்களைத் தெரிவிக்கின்ற சிற்பசாஸ்திரங்களையும், நியமித்தருளினார்.

பின்னும் அந்த விசுவேசுவரர் ஐந்து திருமுகங்களில் முறையே சானகர், சனாதனர், அபுவனசர், பிரத்தனசர், சுபர்னசர், என்னும் ஐந்து பிராமணர்களையும், புஜத்தில் க்ஷத்திரியரையும், துடையில் வைசியரையும், திருவடியில் சூத்திரரையும், அவரவர்கட்குரிய மாதர்களுடனே சிருஷ்டித்து, நான்குவித ஆச்சிரமதருமங்களையும் செய்தருளினார்.

பின்னும் பசுக்கள் முதலாகிய இரண்டு குளம்புள்ள மிருகங்களையும், குதிரைகள் முதலாகிய ஒரு குளம்புள்ள மிருகங்களையும், ஐந்து நகமுள்ள விலங்குகளையும், இன்னுஞ் சொல்லப்பட்ட மிருகவர்க்கங்களையும், பறவை வர்க்கங்களையும், ஊர்வன ஜெந்து வர்க்கங்களையும், நீர் வாழ்கின்றன வாகிய உயிர்வர்க்கங்களையும், தாவர வர்க்கங்களையும், பற்பல தானியங்களையும், நவரத்தினங்களையும், மனிதர்களுக்குச் சித்தியையும், தேவர்களுக்குச் சந்தோஷத்தையும், மிருகங்களுக்கு அசத்தியையும், தாவரங்களுக்கு அவித்தையையும் நிருமித்து, அரிய தவத்தினையும், அருளையும், அன்பையும், இன்பத்தையும், தருமத்தையும், அதர்மத்தையும், துக்கத்தையும், சுகத்தையும், கோபத்தையும், கொலையையும், காமக்குரோத முதலாகச் சொல்லப்பட்டவைகளையும், உண்டாகும்படி செய்தருளினார்.

பின்னும் நால்வகை யோனிகளில் ஏழ் வகையாகக்கண்ட தோற்றங்களின் தொகை எண்பத்துநான்குலக்ஷம் ஜீவபேதங்களையும், சிருஷ்டித் தருளினார்.

இதுவரையும் தேவநராதி சிருட்டியைச் சொன்னோம் இனி பிரபஞ்ச சிருட்டியைச் சொல்லுகிறேன் நீ அன்போடு கேட்பாயாகவென்று காளத்தி முனிவர் கூறுகின்றார்.

தேவநராதி சிருஷ்டியுரைத்தவத்தியாயம்
முற்றுப்பெற்றது.

ஐந்தாவது

## பிரபஞ்ச சிருஷ்டி யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? விசுவேசுவரரானவர் சம்புத்தீவு, சாகத்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சான்மலித்தீவு, இறலித்தீவு, புஷ்கரத்தீவு என்று சொல்லப்பட்ட சத்ததீவுகளையும்; உவர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், சுத்தோதகக்கடல் என்று சொல்லப்பட்ட சத்த சமுத்திரங்களையும் சிருஷ்டித் தருளினார்.

மேற் சொல்லிய சத்ததீவுகளும் சத்தசமுத்திரங்களும் ஒன்றின்பின்ஒன்று சூழ்ந்துகொண்டிருக்கும். அது எப்படியெனில்?

பூமிநடுவிலிருப்பது ஜம்புத்தீவு, அதைச் சூழ்ந் திருப்பது உவர்க்கடல், அதைச் சூழ்ந்திருப்பது சாகத் தீவு, அதைச் சூழ்ந்திருப்பது பாற்கடல், அதைச் சூழ்ந் திருப்பது குசைத்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது தயிர்க் கடல், அதைச் சூழ்ந்திருப்பது கிரவுஞ்சத்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது நெய்க்கடல், அதைச் சூழ்ந்திருப்பது சான்மலித்தீவு, அதைச் சூழ்ந்திருப்பது கருப்பஞ் சாற் றுக்கடல்,அதைச் சூழ்ந்திருப்பது இறலித்தீவு,அதைச் சூழ்ந்திருப்பது தேன்கடல், அதைச் சூழ்ந்திருப்பது பு ஷ்கரத்தீவு, அதைச்சூழ்ந்திருப்பது சுத்தோதகக்கடல். அந்த சுத்தோதகக் கடலுக்குப்புறத்தில் சூழ்ந்திருக் கின்ற காஞ்சன பூமியையும், அதைச்சூழ்ந்திருக்கின்ற சக்ரவாள கிரியையும், அதைச் சூழ்ந்திருக்கின்ற பெ ரும்புறக் கடலையும், அதைச் சூழ்ந்திருக்கின்ற இருட் பூமியையும் சிருஷ்டித்தருளினார்.

மேலுரைத்த ஜம்புத்தீவின் விஸ்தாரமானது ஒரு லக்ஷம் யோசனை யாகும்; இதற்குப் புறத்திலுள்ள தீவு கள் ஒன்றுக் கொன்று இரட்டிப்பாகும். கடல்களும் அப்படியே யாகும். சத்ததீவுகளும், சத்த சமுத்திரங் களும் கூடிய யோசனை இரண்டு கோடி ஐம்பத்து நான்கு லக்ஷமாகும்.

மேற் சொல்லிய சத்ததீவு சத்த சாகரங்களுக் குப் புறத்திலே காஞ்சன பூமியானது, பத்துக்கோடி யோசனை; அதற்குப்புறத்தில் சக்கரவாளகிரி பதினுயி ரம்யோசனை; அதற்குப்புறத்தில் பெரும்புறக்கடல் ஒருகோடி யிருபத்தேழு லக்ஷம்யோசனை யாகும். இரு ட்பூமியானது முப்பத்தைந்து கோடியே பதினெட்டு லக்ஷத்துத் தொண்ணூறுயிரம் யோசனை, மகாமேரு முதலாக அண்டப் பித்திகை வரையில் நிலமானது ஐம்பதுகோடி யோசனை யாகும்.

அந்த விசுவேசுவரரானவர் சம்புத்தீவின் நடுவில் விளங்குகின்ற மகாமேரு கிரியைச் சிருஷ்டித்தருளினார். அந்த மகாமேரு கிரியானது பூமியிற் பதினாயிரம் யோசனை ஆழ்ந்திருக்கும், பூமியின்மேல் எண்பத்து நான்காயிரம் யோசனை உயர்ந்திருக்கும்.

இப்படிப்பட்ட மகாமேரு கிரியின் மேற்பரப்பு முப்பத்திராயிரம் யோசனை, அதன் அடிப்பரப்பு பதினாயிரம் யோசனை, அதில் மூன்று மேகலையுளவாகும் அவற்றுள் நடுமேகலையில் சிகரங்கள் விளங்கிக்கொண்டிருக்கும்.

அந்த மகாமேரு நடுவில் பிரமாவாசஞ் செய்வதற்கு மனோவதி நகரையும், அதன் மேல்பாகத்தில் விஷ்ணுவிற்கு வைகுந்த நகரையும், அதன் வட கீழ் பாகத்தில் சிவபெருமானுக்கு கைலாச நகரையும், அதன் எட்டுத் திசைகளில் திக்குப்பாலகர் வாசஞ் செய்வதற்கு ஆலயங்களையும் சிருஷ்டித்து அந்த மகாமேருவின் கீழ்த்திசையில் மந்தரகிரியையும், தென்திசையில் கந்தமாதன கிரியையும், மேல்திசையில் விபுலகிரியையும், வடதிசையில் சுபார்சுபகிரியையும், சிருஷ்டித்தருளினார்.

மேற் சொல்லிய நான்கு திக்குகளில் பிரகாசியாநின்ற மலைகளினது மேற் பரப்பும் கீழ்ப் பரப்பும் பூமியின்மேல் உயரமும் கீழ் அழுந்திய அளவும், மகாமேருவின் பிரமாணத்தின் அளவு எவ்வளவோ அதிற் பாதியாகும்.

மேற்சொல்லிய மந்தரகிரியி லிருக்கின்ற கடம்ப விருக்ஷம் ஆயிரம் யோசனை உயரமும், கந்தமாதன கிரியி லிருக்கிற நாவல் விருக்ஷம் இரண்டாயிரம் யோ

சனை உயரமும், விபுலகிரியி லிருக்கின்ற அரசவிரு க்ஷம் ஆயிரம் யோசனை உயரமும், சுபார்சுவகிரியி லிருக்கின்ற ஆலவிருக்ஷம் ஆயிரம் யோசனை உயரமு மாக விளங்கும்.

மேற்சொல்லிய ஜம்பு விருக்ஷமானது விளங்கிய காரணத்தால் ஜம்புத்தீவு என்றும், அந்த ஜம்புவிரு க்ஷத்திற் காய்த்துப் பழுத்து உதிர்ந்த மதுரமாகிய ரச மானது ஆறாகி மேருவைச் சூழ்ந்து வடக்கே செல்லுவ தாற் சாம்பூதனநதியென்று பெயர்பெற்று விளங்கும்.

அந்த விசுவேசுவரரானவர் மேற்சொல்லிய மலை களுக்குக் கீழ்பாகத்தில் மாலியவானென்னும் மலையை யும், மேல் பாகத்தில் கந்தமாதன மென்னும் மலையை யும், தென்பாகத்தில், நிஷதம், எமகூடம், இயமம் என்று சொல்லப்பட்ட மூன்று மலைகளையும், வடபா கத்தில், நீலம், சுவேதம், சிருங்கம் என்று சொல்லப் பட்ட மலைகளாகிய அஷ்டகுலபர்வதங்களையும் சிருஷ் டித்தருளினார்.

இவ்விதமாகிய அஷ்டகுல பர்வதங்களுக்குள் மா லியவான், கந்தமாதன மென்னும் இரண்டுமலைகளின் அகலம் தனித்தனி பதினாயிரம் யோசனையாகும். மற் றுள்ள ஆறு மலைகளின் அகலம் இரண்டாயிரம் யோ சனை யாகும்.

பூமியினிடத்தில் விளங்காநின்ற சோமகம், சும னம், துரோணம், தகம், சுரபி, கோமதகம், கிரவுஞ் சம், இந்திரம், குமுதம், வாமனம், வப்பிராசனம், இர மியம், மயிடம், உன்னதம், துந்துபி, அருணம், சந்தி ரம், மலயம், விந்தம், மகேந்திரம், சையம், வராகம், கயிலை, உதயம், அத்தம், மானசோத்தரம், என்னும்

பெயரையுடைய மலைகளையும், பலபல க்ஷேத்திரங்களையும், நதிகளையும், நதங்களையும், தீர்த்தங்களையும், புஷ்பகரத் தீவின் முடிவில் மானசோத்தரமென்று சொல்லப்பட்ட மலையின் அஷ்ட திக்குகளில் திக்குப்பாலகர்களுக்கு எட்டு நகரங்களையும், பைசாச கணங்கள் வசிக்கின்ற உலகையும், குய்யகருலகையும், வாயுக்கள் சஞ்சரிக்கின்ற உலகையும், சப்த மேகங்கள் வாசஞ்செய்யுமுலகையும், கந்தருவருலகையும், வித்தியாதர ருலகையும், சூரியனுலகையும், இந்திரனுலகையும், திக்குப்பாலகருலகையும், உலகங்களுக்குமேல் சந்திர மண்டிலம், நக்ஷத்திர மண்டிலம், புதமண்டிலம், சுக்ரமண்டிலம், அங்காரகமண்டிலம், குருமண்டிலம், சனிமண்டிலம், அதற்குமேல் சப்த ரிஷிகள் வசிக்கின்ற மண்டிலமும், தனித்தனி சிருஷ்டித்து புவருலகமும், புவருலகத்திற்குமேல் இந்திர லோகமும், மகலோகமும், ஜனலோகமும், தவலோகமும், சத்தியலோகமும், விஷ்ணுலோகமும், சிவலோகமும், விசுவலோகமும் சிருஷ்டித்தருளினார்.

பூமிக்குமேல் கணத்துலகம் அதற்குமேல் குய்யருலகம், அதற்குமேல் மேகவுலகம், அதற்குமேல் கந்தருவருலகம், அதற்குமேல் விஞ்சைய ருலகம், அதற்குமேல் ஆகாய கங்கை விளங்குமிடம். அதற்குமேல் சூரியமண்டிலம். அந்த சூரிய மண்டிலத்தினது உயர்ச்சி லக்ஷம் யோசனையாகும், அதற்குமேல் லக்ஷம்யோசனை சந்திர மண்டிலம், அதற்குமேல் லக்ஷம்யோசனை நட்சத்திர மண்டிலம், அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை புதன்மண்டிலம், அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை சுக்கிரன் மண்டிலம், அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை அங்காரகன் மண்டிலம், அதற்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை குருமண்

டிலம், அதற்குமேல் லக்ஷம் யோசனை சனி மண்டிலம் அதற்குமேல் லக்ஷம் யோசனை சப்தரிஷி மண்டிலம், அதற்குமேல் ஒரு லக்ஷம் யோசனையில் துருவ மண்டிலம், அதற்குமேல் புவர்லோகபரியந்தம், பதினைந்து லக்ஷம் யோசனை அதற்குமேல் சுவர்லோகம், எண்பத்தைந்து லக்ஷம் யோசனை, அதற்குமேல் மகலோகம் இரண்டு கோடி யோசனை, அதற்குமேல் சனலோகம் எட்டு கோடி யோசனை, அதற்குமேல் தவலோகம் பன்னிரண்டு கோடி யோசனை, சத்திய லோகம் பதினாறு கோடி யோசனை, அதற்குமேல் விஷ்ணு லோகம் மூன்று கோடி யோசனை, அதற்குமேல் சிவ லோகம் மூன்று கோடி யோசனை, அதற்குமேல் விசுவலோகம் நான்கு கோடி யோசனை, அதற்கு மேல் அண்டப்பத்தியின்கனம் ஒரு கோடி யோசனையாகும்.

அந்த விசுவேசுவரரானவர்! அதலம், விதலம், நிதலம், சுதலம், தராதலம், மகாதலம், பாதாளம், என்னும் ஏழுலகத்தையும் சிருஷ்டித்து, ரவுரம், சூகரம், அவீசி, அதச்சிரம், விஸசனம், லவணம், உரோதம் விலோகிதம், அப்பிரதிஷ்டம், மகாச்சுவாலமுமாகிய நகரங்களையும், பின்னும் ருதிராம்பம், வைதரணி, கிருமிசம், கிருமிபோஜனம், கிருஷ்ணசூத்திரம், தாலம், சுவபோஜனம், தமசு, அசிபத்ரவனத்தையும்; அக்கினி சுவாலம், சந்தமிசம், யூவகம் முதலிய நகரங்களையும் சிருஷ்டித்தருளினர்.

பூமியின்கனம்! எண்பது லக்ஷம் யோசனை, அதன் கீழ் ஆதிசேடனும் அஷ்டகஜங்களும் தாங்கிக் கொண்டிருக்கிற வெளியைச்சொல்லுமிடத்தில் ஒரு கோடி இருபது லக்ஷம் யோசனை.

மேற்சொல்லிய நாகலோகத்தின்கீழ் ஆடகேசுவரர் விளங்காநின்ற உலகம் ஒன்பது லக்ஷம்யோசனை

அதன்கீழ் அசுரர், நாகர், அவுணர் வாசஞ் செய்கின்ற கனிஷ்ட பாதலம் எட்டு லக்ஷம் யோசனை, அதன்கீழ் அதலமுதல் பாதாளமென்று சொல்லும் சப்தபாதலங் களும் அறுபத்துமூன்று லக்ஷம் யோசனை, அதன் கீழ் ஆகாயம் ஒன்பது லக்ஷம் யோசனை, கூர்மாண் டர்வாழ்கின்ற புவனம் தொண்ணூற்றொன்பது லக்ஷம் யோசனை, அதன்கீழ் அடுக்காக இருபத்தெட்டு கோடி நரகம் பரவியிருக்கும். அப்புவனத்தின் உயர்ச்சியும் பரப்பும் இருபத்தொன்பது கோடி பன்னிரண்டு லக்ஷம் யோசனையாகும், அதன்கீழ் ஆதிகூர்மம் புவ னத்தைத் தாங்கிக்கொண் டிருக்கும், அதன்கீழ்ப் புகைப்படலம் ஐந்துகோடி யோசனை யாகும். அத ன்கீழ் அக்கினி சுவாலை பத்துகோடி யோசனை. அதன்கீழ் காலாக்கினிருத்திரர் கோயில் கோடியோ சனை, அதன்கீழ் அண்டப்பித்தியின் கனம் ஒருகோடி யோசனை யாகும். பூமியின்கீழ் அண்டப்பித்திவரை யில் இருக்கின்ற உலகங்க ளெல்லாம் ஐம்பதுகோடி யோசனையாகும்.

இதுவரையும் பிரபஞ்சங்களின் சிருஷ்டிக்கிரமத் தைச் சொன்னோம். இனி தேவர்முதலானவர்களுக்கு அதிகாரக்கிரமங்களைச் சிறிது சொல்லுவோ மென்று காளத்திமுனிவர் கூறுகின்றார்.

**பிரபஞ்ச சிருஷ்டியுரைத்த வத்தியாயம்**

*முற்றுப்பெற்றது.*

ஆறவது

# அதிகார முறைமை யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மஹாராஜனே ? தேஜோமய மாகிய விராட் விசுவபிரமமே சகல வடிவங்கொண்டு விளங்கிக்கொண்டிருப்பது விசுவலோகம்.

உலகத்தில் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிர்த்தியங்களும், பிரகாசிக்கும்படி பஞ்சமுகத்தில் பிரமா முதலாகச் சொல்லப்பட்ட பஞ்ச கர்த்தாக்களையும் சிருஷ்டித்தருளிய முதற் கடவுளாகிய விசுவேசுவரானவர் ஆன்மகோடிகளெல்லாம் இன்பத்தை யடையும்படி பிரகாசித்துக்கொண்டிருப்பது விசுவலோகம்.

அந்த விசுவலோகத்தில் நவரத்தினங்கள் பதிக்கப்பெற்று பொன்னலமைந்த திருக்கோயிலின் நடுவில் விசுவேசுவரரானவர் தமது திருவருட்சத்தி சமேதராக சிங்காசனத்தின்மீது வேதங்கள் துதி செய்யவும், தேவர்கள் புஷ்பமாரி பொழியவும், சில தேவர்கள் அநுக்கிரகங்களைப் புகழ்ந்தோதவும்,சில தேவர்கள் பாடவும், சில தேவர்கள் பல்லாண்டு கூறவும், தோத்திரஞ் செய்யவும், பிரமா, விஷ்ணு, ருத்திரன் முதலாகிய பல தேவர்கூட்டங்கள் வணங்கித் துதித்து வாய் புதைத்து அஞ்சலியஸ்தர்களாகி நிற்கவும், மகரிஷிகளின் நேத்திரங்களில் ஆநந்த வெள்ளம் பெருகவும், பஞ்சப்பிரமர்கள், நவப்பிரமர்கள், சனகாதி முனிவர்கள், ருத்திரகணங்கள், அஷ்டதிக்குப்பாலகர்கள், நக்ஷத்திரகணங்கள், நவக்கிரகங்கள், முப்பத்து முக்கோடி

தேவர்கள், அறுபத்தாறு கோடி அசுரர்கள் முதலான வர்களெல்லாம் வணங்கித் துதிக்கவும், ஸ்ரீ விசுவேசு வரரானவர் வீற்றிருந்து பிரமாவைச் சிருஷ்டிக்கும்படி யாகவும், விஷ்ணுவை இரட்சிக்கும்படியாகவும், ருத்தி ரரைச் சங்கரிக்கும்படியாகவும், மகேசுவரரைத்திரோப விக்கும்படியாகவும், சதாசிவமூர்த்தியை அனுக்கிர கித்தருளும்படி யாகவும் திருவருள் செய்து அண்ட புவனங்களில் வசிக்கின்ற தேவர்கள், அசுரர்கள் முத லானவர்களுக்குத் தகுந்தபடி அதிகாரங்களைக் கொடுத் தருளினார்.

அந்த விசுவேசுவரரானவர், மனுப்பிரமா அய முதலியவற்றாலே சிருஷ்டித்தருளுவதும், மயப்பிர மாதருக்கள் முதலியவற்றாலே சிருஷ்டித்தருளுவதும், துவஷ்டப்பிரமா தாம்பிர முதலியவற்றால் சிஷ்டித் தருளுவதும், சிற்பிப்பிரமாசிலை முதலியவற்றால் சிரு ஷ்டித்தருளுவதும், விசுவக்ஞப்பிரமா சுவர்ண முத லியவற்றாலே சிருஷ்டித்தருளுவதுமாகிய இப்பஞ்ச கிர்த்தியங்களினாலே பிரபஞ்சங்களை நிர்மாணஞ் செ ய்து சமஸ்தபோக போக்கியங்களையும் அனுபவிப்ப தற்கு ஏதுவாகிய கருவிகளை யெல்லாம் செய்தருளி இரக்ஷிக்கும்படியான அதிகாரங்களை மேற்சொல்லிய பஞ்ச பிரமாக்களுக்குக் கொடுத்தருளினார்.

அந்த விசுவேசுவரரானவர், நவப்பிரமாக்கள், சன காதி முனிசிரேஷ்டர்கள், அஷ்டவசுக்கள், நவநாதசித் தர்கள், பதினொரு கோடி ருத்திரர்கள் பிதுர்த்தேவர் கள், துவாதசாதித்தர்கள், தசவாயுக்கள், யக்ஷர்கள், பூதர்கள், அசுரர்கள், வித்தியாதரர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள் முதலானவர்களுக்குத்தகுந்த அதிகாரங் கள் கொடுத்து, அவரவர்களுக்குத் தகுதியான இடங்

களிற் சேர்ந்து வாழும்படி அனுக்கிரகஞ் செய்து சூரியன் முதலாகிய கோள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் சிமுசுமார சக்கரத்துக்குந் துருவனை அதிபதியாகச் செய்து இந்திரன் முதலாகிய அஷ்டபாலகரை அஷ்டதிக்குகளிலும் அரசாட்சி செய்யும்படி ஆக்ஞாபித்து, அஷ்டவசுக்கள் முதலாகிய தேவர்களுக்குத் தேவேந்திரனை அதிபதியாகவும், ஜலத்துக்கு வருணனை அதிபதியாகவும், பிதுர்த் தேவர்களுக்கு இயமனை அதிபதியாகவும், தேவர், அசுரர், மனிதர் முதலாகிய பல ஜீவர்களுக்குச் சூரியனை அதிபதியாகவும், நட்சத்திரங்களுக்கும் தானியங்களுக்கும் சந்திரனை, அதிபதியாகவும் செய்தருளி, யானைகளுக்கு அயிராவதத்தை அதிபதியாகவும், மிருகங்களுக்குச் சிங்கத்தை அதிபதியாகவும், மலைகளுக்கு இமவானை அதிபதியாகவும், பாம்புகளுக்கு வாசுகியை அதிபதியாகவும், பறவைகளுக்குக் கருடனை அதிபதியாகவும் செய்து மற்றுமுள்ள ஒவ்வொன்றிற்கு ஒவ்வொன்றை அதிபதியாகச் செய்தருளினார்.

இதுவரையிலும் அதிகார முறைமை யுரைத்தவற்றைச் சொன்னோம். இனி காலத்தின் அளவுகளைக் கூறுவாமென்று காளத்தி முனிவர் சொல்லுகின்றார்.

அதிகார முறைமை யுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஏழாவது

# காலப் பிரமாண முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே ? கண்ணிமை பதினெட்டு கொண்டது ஒருகாஷ்டையாகும், அக்காஷ்டை முப்பது கொண்டது ஒருகலையாகும், அக்கலை பதினைந்து கொண்டது ஒரு நாழிகை, அந்நாழிகை இரண்டுகொண்டது ஒரு முகூர்த்தம், அம்முகூர்த்தம் முப்பதுகொண்டது பகலிரவு கூடிய ஒருதினம், அத்தினம் பதினைந்து கொண்டது ஒருபக்ஷம், அப்பக்ஷம் இரண்டுகொண்டது ஒருமாசம், அம்மாசம் ஆறு கொண்டது ஒரு அயனம், அவ்வயனம் இரண்டுகொண்டது ஒரு வருஷம்.

மனிதர்களுக்கு ஒரு மாசமானது பிதுர்களுக்கு ஒருதினம், அந்த ஒருதினத்தில் கிருஷ்ண பக்ஷம் பகலாகும், சுக்கில பக்ஷம் இராத்திரியாகும், தைமாத முதற்கொண்டு ஆனிமாதமுடிவுவரையில் உத்தராயண மாகும், ஆடிமாத முதற்கொண்டு மார்கழிமாத முடிவு வரையில் தக்ஷிணயனமாகும் மானிடர்க்குரிய ஒரு வருடமானது தேவர்களுக்கு ஒரு தினமாகும், இவ்வொரு தினத்தில் இராப்பொழுது தக்ஷிணயனமும், பகற்பொழுது உத்தராயணமாகும்.

இவ்வாறு சொல்லுந்தினம் முப்பதுகொண்டது ஒரு மாதமாகும், இந்த மாதம் பன்னிரண்டு கொண்டது ஒருவருட மாகும், அந்த வருடம் பன்னிரண்டாயிரங் கொண்டது ஒரு சதுர்யுகமாகும்.

மேற்சொல்லிய சதுர்யுகமானது கிருதயுகம் திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம், எனநான்கு வகைப்படும்.

அவற்றுள் கிருதயுகத்துக்குத் தேவமான வருடம் நாலாயிரமும் *சந்தி சந்தி யமிசங்களின் வருடம் எண்ணூறாகும், திரேதா யுகத்துக்கு வருடம் மூவாயிரமும் அதற்குச் சந்தி சந்தி யமிசங்களின் வருடம் அறுநூறாகும், துவாபரயுகத்துக்கு வருடம் இரண்டாயிரமும், அதற்குச் சந்தி சந்தி யமிசங்களின் வருடம் நானூறாகும், கலியுகத்துக்கு வருடம் ஆயிரமும் அதற்குச் சந்தி சந்தி யமிசங்களின் வருடம் இருநூறாகும் இந்த சதுர்யுகம் ஆயிரமானால் பிரமனுக்கு ஒரு பகலாகும்.

பிரம தேவனுடைய ஒரு பகற்பொழுதில் பதினான்கு மனுக்களுண்டாகி அதிகாரஞ் செய்வார்கள். ஒவ்வொரு மனுக்களின் அதிகார முடிவான மன்வந்தரங்களானவை, எழுபத்தொரு சதுர்யுகமாகும். தேவேந்திரன்முதலிய தேவர்களுக்கும் மேற்கூறிய மனுக்களுக்கும் இதுவே ஆயுட் பிரமாணமாகும்.

பதினான்கு மனுவந்தரங்களானால் பிரமாவினது ஒருபகற்பொழுது முடிவாகும். பிரம தேவனுடைய ஒரு பகற்காலமானது ஒரு கற்பமென்று சொல்லப்படும். அந்தகற்பமாவது சிருஷ்டிமுதல் பிரளயாந்தமாகிய காலமாம். அந்தப்பகற்காலமுடிவில் பூலோக புவர்லோக சுவர்லோக மென்னும் மூன்றுலகங்களும் அழியும்படியான தினப்பிரளய மொன்றுண்டாகும்.

---

* சந்தியாவது=யுகத்துக்கு முற்பட்ட காலம், சந்தி யமிசமாவது=யுகத்துக்குப் பிற்பட்ட காலம்.

அப்பகலளவாகிய இராப்பொழுதில் யோக நித்திரை செய்து அவ்விரவின் முடிவாகிய விடியற்காலத்தில் எழுந்து திரும்பவும் சராசரங்களெல்லாவற்றையும் சிருஷ்டித்தருளுவன். இப்படிச் சொல்லப்பட்ட பகலும் இரவுஞ் சேர்ந்து பிரமனுக்கு ஒருநாளாகும்; இவ்வாறு சொல்லப்பட்ட நாள் முப்பதுகொண்டது ஒரு மாதமாகும்; இம்மாதம் பன்னிரண்டு கொண்டது ஒரு வருடமாகும்; இவ்வருடம் ஐம்பது கொண்டது ஒரு பரார்த்தமாகும்; பரார்த்தம் இரண்டானால் பிரமனுக்கு ஆயுள் முடிவாகும்; அவ்வாயுள் முடிவுகாலத்தில் உலக சராசரமுதலிய எல்லாப் பொருள்களும் அழிவதற்கிடமாயுண்டாகும்; பிராகிருதப்பிரளயத்தில் தோன்றியபடியே ஒடுங்கும். விசுவேசுவரனது இச்சாமாத்திரத்திலே (பிருதிவி) தத்துவமுதல் (மகத்) தத்துவமீறாகிய எழுதத்துவங்களும், அவ்வவற்றின் காரணங்களினால் தோன்றியபடியே பிருதிவியானது அப்புவினிடத்தும் அப்பு தேயுவினிடத்தும், தேயு வாயுவினிடத்தும், வாயு ஆகாயத்தினிடத்தும், ஆகாயமானது அகங்காரனிடத்தும், அந்த அகங்காரமானது மகத்தினிடத்தும், அந்த மகத்தானது பிரகிருதியினிடத்தும் ஒடுங்கும்.

இதுவரையும் காலப்பிரமாணங்களை யுரைத்தோம் இனி ஆயுட்பிரமாணங்களைச் சொல்லுகிறோ மென்று காளத்தி முனிவர் சொல்லுகின்றார்.

**காலப் பிரமாண முரைத்த வத்தியாயம்**

முற்றுப்பெற்றது.

## எட்டாவது

# ஆயுணிண்ணய முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே ? கருப்பையிற் பிறக்கின்ற ஆன்மாக்களுக்கு வயது நூறு வருடமும், முட்டையிற் பிறக்கின்ற ஆன்மாக்களுக்கு வயது முப்பது வருடமும், வித்திற் பிறக்கின்ற ஆன்மாக்களுக்கு வயது ஐந்து மாதமும், வெயர்வையிற் பிறக்கின்ற ஆன்மாவுக்கு வயது ஒருமாதமுமாகும்.

மானிடர்களுக்கு வயது நூறு வருடமும், சிங்கங்களுக்கு வயது நூறு வருடமும், யாளிகளுக்கு வயது நூறு வருடமும், குரங்குகளுக்கு வயது முந்நூறு வருடமும், புலிகளுக்கு வயது அறுபத்திரண்டு வருடமும், ஒட்டகங்களுக்கு வயது எழுபத்திரண்டு வருடமும், நாய்களுக்கு வயது முப்பது வருடமும், யானைகளுக்கு வயது நூறு வருடமும், மீன்களுக்கு வயது ஆயிர வருடமும், மான்களுக்கு வயது இருபது வருடமும், எருமைகளுக்கு வயது நாற்பது வருடமும், பூனைகளுக்கு வயது முப்பது வருடங்களும், பசுக்களுக்கு வயது முப்பது வருடமும், கரடிகளுக்கு வயது முந்நூறு வருடமும், காட்டுப்பன்றிகளுக்கு வயது நூறு வருடமும், நாட்டுப்பன்றிகளுக்கு வயது முப்பது வருடமும், நரிகளுக்கு வயது முப்பது வருடமும், குதிரைகளுக்கு வயது முப்பத்திரண்டு வருடமும், ஆடுகளுக்கு வயது பதினெட்டு வருடமும், காட்டுப் பசுக்களுக்கு வயது நூறு வருடமும், சவரி மிருகங்களுக்கு வயது இருபத்துநான்கு வருடமும், முயல்களுக்கு வயது பன்னிரண்டு வருடமும், கழுதைகளு

க்கு வயது இருபத்தைந்து வருடமும், கருடனுக்கு வயது முப்பத்திரண்டு வருடமும், குயில்களுக்கு வயது எட்டு வருடமும், மயில்களுக்கு வயது பதினெட்டு வருடமும், அன்னப்பக்ஷிகளுக்கு வயது ஐந்நூறுவருடமும், கோட்டான்களுக்கு வயது முந்நூறு வருடமும், காக்கைகளுக்கு வயது ஆயிரம் வருடமும், ஆந்தைகளுக்கு வயது பன்னிரண்டு வருடமும், கிளிகளுக்கு வயது பதினைந்து வருடமும், நாரைப் பக்ஷிகளுக்கு வயது பன்னிரண்டு வருடமும், நாகணவாய்ப்பக்ஷிகளுக்கு வயது எட்டு வருடமும், கவுதாரிகளுக்கு வயது பத்து வருடமும், செம்போத்துப் பட்சிகளுக்கு வயது எட்டு வருடமும், கழுகுகளுக்கு வயது ஐந்நூறு வருடமும், பருந்துகளுக்கு வயது எட்டு வருடமும், வல்லூறுப் பட்சிகளுக்கு வயது பதினாறு வருடமும், கோழிகளுக்கு வயது பன்னிரண்டு வருடமும், புறக்களுக்கு வயது பத்து வருடமும், கொக்குகளுக்கு வயது எட்டு வருடமும், குருவிகளுக்கு வயது ஐந்து வருடமும், வண்டுகளுக்கு வயது ஒரு வருடமும், நீரிலே வசிக்குஞ் செந்துக்களுக்கு வயது முந்நூறு வருடமும், பாம்புகளுக்கு வயது ஆயிரம் வருடமும், தவளைகளுக்கு வயது முந்நூறு வருடமும், முதலைகளுக்கு வயது எண்பது வருடமும், ஆமைகளுக்கு வயது பத்து வருடமும், கீரிப்பிள்ளைகளுக்கு வயது இருபது வருடமும், உடும்புகளுக்கு வயது நூறு வருடமும், அணிற்பிள்ளைகளுக்கு வயது இருபது வருடமும், ஓணன்களுக்கு வயது ஆறு வருடமும், எலிகளுக்கு வயது ஐந்து வருடமும், தேள்களுக்கு வயது ஒரு வருடமும், பல்லிகளுக்கு வயது மூன்று வருடமும், எறும்புகளுக்கு வயது ஒரு வருடமும், கொசுக்களுக்கு வயது ஐந்து மாதமும், மோட்டுப் பூச்சிகளுக்கு வயது ஆறுமாதமும், ஈக்களுக்கு வயது மூன்று மாதமும், பேன்களு

க்கு வயது ஒரு மாதமும், புழுக்களுக்கு வயது ஐந்து நாளாகும்.

தேவதார விருட்சம், சந்தன விருட்சம், குங்கும விருட்சம், வேங்கை விருட்சம், அகில் விருட்சம், தென்னை விருட்சம், என்று சொல்லப்பட்டவைகளுக்கு வயது நூற்றிருபது வருடமாகும்.

அரசவிருட்சமும், ஆலவிருட்சமும், புளியவிருட்சமும், புன்னைவிருட்சமும், இத்திவிருட்சமும், கருங்காலி விருட்சமும், ஆகிய இவைகளுக்குப் பொருந்திய வயது நூறு வருடமாகும்.

கடு விருட்சமும், நாவல்விருட்சமும், கரிய பனை மரமும், ஒப்பற்ற வாகை விருட்சமும், அழகிய வேம்பு விருட்சமும், இலந்தை விருட்சமும், பாலை விருட்சமும், தேக்குவிருட்சமும், ஆகிய இவைகளுக்கு வயது நூறு வருடமாகும்.

குருந்த விருட்சமும், நெல்லி விருட்சமும், கடம்ப விருட்சமும், அசோக விருட்சமும், மருத விருட்சமும், மா விருட்சமும், இலுப்பை விருட்சமும், விளா விருட்சமும், ஆகிய இவைகளுக்கு வயது எண்பது வருடமாகும்.

வில்வ மரமும், புன்கு மரமும், பலா மரமும், கோங்கு மரமும், மகிழ மரமும், ஆத்திமரமும், கமுக மரமும், புகழ்கின்ற இருவாக்ஷி மரமும், ஆகிய இவைகளுக்கு வயது எழுபத்தைந்து வருடமாகும்.

அழிஞ்சில் மரம், இலவ மரம், ஈஞ்சு மரம், இவைகளுக்கு வயது நாற்பது வருடமும், மாதுளை மரம், கொய்யா மரம், நாரத்தை மரம், எலுமிச்சை மரம், இவைகளுக்கு வயது இருபது வருடமாகும்.

முருங்கை மரம், மூங்கில் மரம், இவைகளுக்கு வயது முப்பது வருடமும், தாழை மரம், சண்பக மரம், வெட்சி மரம், துதிக்கப்பட்ட மாந்தாரை மரம், ஆகிய இவைகளுக் கெல்லாம் வயது இருபத்தைந்து வருடமாகும்.

பன்னீர்மரம், கொன்றைமரம், இவைகளுக்குவயது முப்பது வருடமும், வாழை மரத்துக்கு வயது மூன்று வருடமும், கரும்புகளுக்கு வயது ஒரு வருடமுமாகும்.

தும்பைமுதலிய செடிகளுக்கு வயது ஏழு வருடமும், முல்லைமுதலிய கொடிகளுக்கு வயது ஐந்து வருடமும், அறுகுமுதலிய புல்லுகளுக்கு வயது மூன்றுவருடமும், நெருஞ்சிமுதலிய பூண்டுகளுக்கு வயது ஒரு வருடமாகும்.

உலகிற்குப் பொருந்திய பலவித வுயிர்களும் விரிவாகிய புண்ணியச் செய்கையினாலே ஆயுள் விருத்தியையும், கெடுதலாகிய பாவச்செய்கையினாலே ஆயுட்குறைவையும் அடையுமென்று அரிதாகிய பெருமையையுடைய வேதங்கள் அன்புடனே கூறுகின்றன.

இதுவரையில் இவ்வுலகத்தின்கண் புகழ்பெற்று விளங்காநின்ற பலவகைப்பட்ட சீவபேதங்களுக் கெல்லாம் விசுவேசுவரனா லமைத்த நன்மைபொருந்திய ஆயுட்பிரமாணங்களை யினிதாகச்சொன்னோம். இனி புகழினையுடைய பிராமணர் முதலாக விளங்காநின்ற நான்கு வருணத்தவர்களுக்கு முரிய சில தருமங்களை யெடுத்துச் சொல்லுவோம் நீ அன்புடன் கேட்பாயாக வென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

**ஆயுணிர்ணய முரைத்தவத்தியாயம்**
முற்றுப்பெற்றது.

ஒன்பதாவது

# பிராமணாதி வருணதரும முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மஹாராஜனே ? உயர்வாகிய வேதங்களுக்குத் தலைவனாக விளங்கும் விசுவேசுவரனது சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம் ஈசானமென்னு மைந்து திருமுகங்களினின்றும்; சத்துவ குணத்துடனே தோன்றிய முதல் வருணத்தாராகிய பிராமணர்கள், வேதங்கள், வேதாங்கங்கள் முதலிய பல நூல்களையும் தாங்களோதுதலும், ஓதுவித்தலும், அக்கினிஷ்டோம முதலாகிய யாகங்களை யெல்லாஞ் செய்தலும், அவற்றை விரும்பினவர்களுக்கு விதிப்படி செய்வித்தலும், தானங்களைச் செய்தலும், கொடுக்கப்பட்டவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுதலும் என்று சொல்லப்பட்ட சாஸ்திர சம்பந்தமாகிய இந்தஆறு தொழிலையும்எந்நாளுமுடையவராகி, யாவரும் புகழ்கின்ற ஸ்நானம்,தர்ப்பணம் ஸ்மிருதி சம்பந்தமாகவுஞ் செய்யப்பட்ட கருமங்கள், அக்கினி ஹோத்திரம் ஔபாசனங்கள் முதலிய தம் வருணத்திற்குரிய பலவித கருமங்க ளெல்லாம் செய்தலும், வைதிக கருமங்களைப் பிறருக்குச் செய்வித்தலும், யாக முதலிய கிரியைகளாலே தேவர்களையும், சிராத்தமுதலிய கிரியைகளாலே பிதுர்களையும், திருப்திசெய்வித்து உலகத்திலுள்ளவர்கள்அறிந்துநடக்கவேண்டிய நல்லதருமங்களை யெல்லாம்அவர்கள் மனத்தில்நன்றாய் விளங்கும்படி உபதேசித்து எந்நாளும் அவர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய வைதிக கருமங்களுக்கு

வேண்டும் பல உதவிகளையுஞ் செய்து நல்ல கிருபை யுடையவர்களாய் வாழ்வார்கள்.

தேவர்கள் முதலிய பலரும் துதிக்கின்ற விசு வேசுவரனது புயங்களினின்றும் இராஜதகுணத்தோ டுந் தோன்றிய, க்ஷத்திரியர்கள், வேதங்களாலெடுத்துச் சொல்லப்பட்ட யாகமுதலிய கருமங்களை நன்ருகச் செய்தலும்; சுவர்க்க முதலிய மறுமைப்பயனையடைய விரும்பித் தானதருமங்களைச் செய்தலும்; வேதங்க ளுடனே வேதாங்கங்களையும், அவற்றி னுட்கருத்தைக் கொண்டு விளாநின்ற ஸ்மிருதி புராணமுதலிய பல நூல்களையும் வாசித்தலும்; படைபொருள், குடிகள் தங்குவதற்கிடமாயுள்ள நாடு, உயர்வாகிய, அரண்நட்பு, அறிவிற் சிறந்த அமைச்சு என்று சொல்லப்பட்ட இந்த அங்கங்களையுமுடையவராகி உலகத்திலுள்ள வர்களைக் காத்தலான அரசியல் நடத்தலும்; தம தரசாட்சிக்கு விரோதமான குற்றங்களைச் செய்யும் பகைவர்கள் அஞ்சி வணங்கும்படி யுத்தஞ்செய்தலும்; யாவரும் புகழப்பட்ட 1-அஸ்திரம் 2-சஸ்திரமுதலிய நானுவித படைத் தொழிலிற் பழகுதலும் ஆகியதரும சாஸ்திர சம்மதமான இவ்வறுவகைத் தொழிலையு முடையவரா யிருப்பதுமன்றி, மனுமுதலிய நூல்க ளில் விதித்தபடி மனமகிழ்ச்சியோடு 3-நித்தியம் 4-நைமித்தியம் என்னும் இருவகைக் கருமங்களையும் செய்வதற்கும் உரியவராவர்.

---

1 அஸ்திரம்=வேல்முதலிய கைவிட்டுப்பெயரும்படை.

2 சஸ்திரம்=வாள்முதலிய கைவிடாப்படை.

3 நித்தியம்=தினந்தோறுஞ் செய்யுங்கிரியை

4 நைமித்தியம்=விசேட நிமித்தஞ் செய்யுங்கிரியை.

பேரழகினையுடைய ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு குணங்களையுமுடைய உலகமுதல்வனாகிய விசுவேசுவரனது துடைகளினின்றும் இரஜோகுண தமோகுணங்களுடனே தோன்றிய வைசியர்கள், உயர்ந்தோராற் புகழப்பட்ட வேதாகமமுதலிய பற்பல சாஸ்திரங்களை வாசித்தலும், மகத்தாகிய வேதங்களில் விதித்த முறைமைப்படி விளங்காநின்ற நெய், பொறி, சமிதை முதலியவற்றைச் சொரிந்து செய்கின்ற பலவகைப்பட்ட யாகங்களைச்செய்தலும், தான தருமங்களைச் செய்தலும், பூமியின்கண் பயிர்களானவை செழித்து வளரும்படி பொன்னேர் கட்டியுழுதலும், பசுக்கூட்டங்களை யிரக்ஷிப்பதும், பலவகைப்பட்ட தானியங்கள் நவரத்தினங்கள் பொன்முதலிய உலோகங்கள் முதலியவற்றால் செய்யப்பட்ட வியாபார முறைமையில் பழி பாவங்களுக்கிடமில்லாதபடி நல்ல பொருள்களைச்சேர்த்தலுமாகிய இவ்வாறு தொழிலினையுமுடையவராய்த் தமக்கு விதித்த பிரதிதினஞ் செய்யுங் கருமங்களையுஞ் செய்தற்குரியவராவர்.

விசுவேசுவரனது! திருவடிகளில் தமோகுணத்துடனே தோன்றிய சூத்திரர்கள் நல்லவழியிற்பொருளைச் சேகரித்தலும்; மேற்சொல்லிய பிராமணர் முதலிய மூன்று வருணத்தாராலுங் கட்டளை யிடப்பட்ட பணிவிடைகளைக் கிரமமாகச் செய்தலும், நிலங்களினது வேறுபாடுகளை யறிந்து அந்தந்த நிலத்திற்குரிய பயிர்களைச் செய்தலும், தோற்கருவி முதலிய வாத்தியத் தொழில்களை யாவரும் வியக்கும்படி செய்தலும்; நெய்தற்றொழிலைச் செய்தலும்; பசுக்கூட்டங்களைக் காத்தலும் என்று சொல்லப்பட்ட ஆறுதொழில்களையுமுடையவர்களாய், புராணங்களென்று சொல்லப்பட்ட

பல நூல்களையும், இனிமையாக வாசிக்கவும், தருமங்களைச்செய்யவும், *பிதுர்களுக்குரிய கருமங்களை விடாதுசெய்யவும் உரியவராவர்.

விசுவேசுவரனது! அழகுபொருந்திய முகம், தோள், துடை, பாதம் என்று சொல்லப்பட்ட உயர்வு பொருந்திய இந்நான்கிடத் துதித்த பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்தார்களும் கிரமமாகச் செய்யவேண்டிய தருமங்களுட் சிறந்த சிலவற்றை எடுத்துச் சொன்னோம். குலப்பழுதில்லாத அந்நான்கு சாதியிலுமுள்ள புருடர்களும், ஸ்திரீகளும் காமவிச்சையினாலே தங்கள் தங்குலாசார தருமங்களுக்கு விரோதமாக இதர ஜாதி ஸ்திரீகளுடனும் புருடருடனும் தேகசம்பந்தபட அதனாற்பிறந்த சங்கர சாதிகளின் பெயர்களையும் யாவருக்கும் பொதுவாகிய சில தருமங்களையும் மேலெடுத்துச் சொல்லுவோம்;

மேற்சொல்லிய நாற்குலத்தவர்களுள் உயர்ந்த குலத்திற் பிறந்த புருடரும், தாழ்ந்த குலத்திற் பிறந்த ஸ்திரீகளும் சேரப்பிறந்த புத்திரன்பெயர் அனுலோமன்; உயர்ந்தகுலத்துப்பெண்ணும் தாழ்ந்த குலத்துப் புருடனுஞ்சேரப்பிறந்த புத்திரன் பெயர் பிரதிலோமன்; அனுலோமனென்னும் பெயரையுடைய புருடனும், பிரதிலோம குலத்திற்பிறந்த பெண்ணுஞ் சேர்ந்துபெற்ற புத்திரன் பெயர் அந்தராளன்; பிரதிலோமப்பெண்ணும் அநுலோமப் புருடனுஞ் சேரப்பிறந்த புத்திரன் பெயர் விராத்தியன்.

---

* பிதுரர் என்றது=படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதியை.

பிராமணஜாதிக் கன்னிகையானவள் அப்பிரா மண குலத்திலேயே சோரநாயகனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் குண்டகன்; பிராமணகுலத்துக் கைம்பெண்ணானவள், வேறு பிராமணனுக்குப் பெற்ற புத்திரன் பெயர் கோளகன்; பிராமணன் க்ஷத்திரிய குலகன்னிகையைத் தழுவிப்பெற்ற புத்திரன் பெயர் சவன்னன்; பிராமணன் க்ஷத்திரிய குலப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் நக்ஷத்ர ஜீவகன்.

பிராமணன் வைசிய ஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அம்பட்டன்; பிராமணன் வைசிய ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேரப்பிறந்த புத்திரன் பெயர் கும்பகாரன்; பிராமணன் சூத்திரஜாதிப்பெண்ணைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் பாரசவன்; பிராமணன் சூத்திர ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேரப்பிறந்த புத்திரன் பெயர் நிடாதன்.

க்ஷத்திரியன் பிராமண ஜாதிப்பெண்ணைச் சேரப் பிறந்த புத்திரன்பெயர் சூதன்; க்ஷத்திரியன் பிராமண ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேரப்பிறந்த புத்திரன் பெயர் கூடவிரன்; க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணானவள் அந்த க்ஷத்திரிய ஜாதியிலேயே சோரநாயகனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் போஜன்; க்ஷத்திரிய ஜாதிக் கைம்பெண்ணானவள் வேறு க்ஷத்திரியனைச் சோரத்தாற் சேரப்பிறந்த புத்திரன் பெயர் நாவிதன்.

க்ஷத்திரியன் வைசிய ஜாதிப்பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மாகிட்டியன்; க்ஷத்திரியன் வைசிய ஜாதிப் பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் விசன்மா, க்ஷத்திரியன் சூத்திர ஜாதிப்பெண்ணைச் சேரப்பிறந்த புத்திரன் பெயர் உக்

திரன்; க்ஷத்திரியன் சூத்திர ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சூலிக்கியன்.

வைசியன் பிராமணஜாதிப் பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கத்தா; வைசியன் பிராமண ஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மிலேச்சன்; வைசியன் க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணை சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மாகதன்; வைசியன் க்ஷத்திரியகுலப் பெண்ணைச சோரத்தாற் சேர்ந்துபெற்ற புத்திரன் பெயர் அர்த்தகன்.

வைசியன் வைசியஜாதிப் பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மணிகாரன்; வைசியன் வைசியஜாதிக் கைம்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் புளிந்தன்; வைசியன் சூத்திர ஜாதிப் பெண்ணைத்தழுவிப் பெற்ற புத்திரன் பெயர் தௌஷியந்தன்; வைசியன் சூத்திரஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கடகாரன்.

சூத்திரன் பிராமணஜாதிப் பெண்ணைச்சேர அதனுற் பிறந்த புத்திரன் பெயர் சண்டாளன்; சூத்திரன் பிராமணஜாதிப் பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் பாகுதாயன்; சூத்திரன் க்ஷத்திரியர் குலத்திற்பிறந்த பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் வைதேகன்; சூத்திரன் க்ஷத்திரிய குலத்திற் பிறந்த பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் பலதன்.

சூத்திரனுனவன் வைசியகுலப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அயோகவன்; சூத்திரனுக்கு வைசியஜாதிப் பெண்ணுனவள் சோரத்தாற்

பெற்ற புத்திரன் பெயர் சத்திரி; சூத்திரனுக்கு அச் சூத்திர ஜாதிப்பெண் சோரத்தாற் பெற்ற புத்திரன் பெயர் மாலாசிதன்; சூத்திரனுக்குச் சூத்திரஜாதிக் கைம்பெண்ணானவள் பெற்ற புத்திரன் பெயர் உத்பலன்.

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்று சொல்லப்பட்ட இம்மூன்று வருணத்தாரும் மேன்மைபெற்று விளங்கானின்ற தங்கள் தங்கள் குல ஸ்திரீகளோடு சேர்ந்து பெற்ற புத்திரர்கள் விதிப்படிச் செய்துகொள்ளவேண்டிய குற்றமற்ற உபநயனமுதலிய கிரிகைகளை விதித்த காலங்களில் கிரமப்படி செய்துகொள்ளாமலிருப்பார்களாயின், காயத்திரிமுதலிய மந்திரங்களையும் அனுஷ்டிக்கும் யோக்கியமில்லாதவராய் வருந்துகின்ற விராத்தியராவார்கள்.

பிராமணகுலத்திற் பிறந்த விராத்தியனானவன் பிராமணஜாதிப்பெண்ணை தழுவிப்பெற்ற புத்திரன் பெயர் ஆவந்தியன்; க்ஷத்திரியகுலத்திற்பிறந்த விராத்தியனானவன் க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணை கலந்துபெற்ற புத்திரன் பெயர் மல்லன்.

வைசிய குலத்திற் பிறந்த விராத்தியனானவன், வைசியகுலப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சுதன்வனென்று சொல்லுவர்; வைசியகுலத்திற் பிறந்த விராத்தியன் வைசியஜாதிப்பெண்ணைச் சோரத்தாற் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மைத்திரன்.

பிராமணஜாதிப் பெண்ணானவள் தௌஷ்டியந்தனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் பலகண்டன்; பிராமணஜாதிப்பெண்ணானவள் வைதேக னென்பவனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் இரசகன்; பிரா

மணஜாதிப் பெண்ணானவள் நிடாதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் புட்பதனென்பர்; பிராமணஜாதிப் பெண்ணானவள் உக்கிரனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் தக்ஷகன்.

பிராமணஜாதிப்பெண் சண்டாளனைக் கூடிப்பெற்றபுத்திரன்பெயர் சுவபசன்; பிராமண ஜாதிப்பெண் அந்தச் சுவபசனென்பவனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் குகபன்; பிராமண ஜாதிப்பெண் அக்குகபனென்பவனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் காணன்; பிராமணஜாதிப்பெண் அயோகனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர். சருமகாரன்.

க்ஷத்திரியஜாதிப் பெண்ணானவள் நிடாதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் பாரகன்; க்ஷத்திரியஜாதிப் பெண்ணானவள் நாவிதனைக் கூடிப் பெற்றபுத்திரன் பெயர் வேணுகன்; க்ஷத்திரியஜாதிப் பெண் மாகதனென்பவனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் கனகன்; க்ஷத்திரியஜாதிப் பெண் விராத்தியனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அஸ்திகன்.

க்ஷத்திரியகுலப் பெண் வைதேகனோடு சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் வர்த்தனசாலிகன்; க்ஷத்திரிய குலப்பெண் காணனென்பவனைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் கருமகாரன்; க்ஷத்திரியகுலப் பெண் சண்டாளனுக்குப் பெற்ற புத்திரன் பெயர் தண்டகபோலன்; க்ஷத்திரியகுலப்பெண் கனகனென்பவனை மனமகிழ்ச்சியோடு கூடிப்பெற்ற புத்திரன் பெயர் மார்க்கவன்.

வைசியஜாதிப்பெண் பாரசவனென்பானைக்கூடிப் பெற்ற புத்திரன்பெயர் சல்லன்; வைசியஜாதிப்பெண்

மாகிட்டியனென்பவனைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் வந்திகன்; வைசிய ஜாதிப்பெண் நிடாதனென்பவனைச் சேர்ந்துபெற்ற புத்திரன் பெயர் வாடதானன்; வைசிய ஜாதிப்பெண் உக்கிரனென்பனைச் சேர்ந்துபெற்ற புத்திரன் பெயர் கண்டகன்; வைசியஜாதிப்பெண்ணுனவள் காணனென்பவனேடு சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சற்பன்; வைசியகுலப்பெண் சற்பனென்பவனேடு கூடிப்பெற்ற புத்திரன் பெயர் சவுண்டிகன்; வைசிய ஜாதிப்பெண் சவுண்டிகனென்பவனைச் சேர அதனுற் பிறந்த புத்திரன் பெயர் சாத்துவதன்; வைசிய ஜாதிப் பெண் சாத்துவ னென்பவனைச்சேர அதனுற் பிறந்த புத்திரன் பெயர் தசியு.

சூத்திரஜாதிப் பெண்ணுனவள் நிடாதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் பைரவன்; சூத்திர ஜாதிப்பெண் சண்டாளனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் ஆசிரயிகன்; சூத்திர ஜாதிப்பெண் மாகதனென்பவனைச் சேர அதனுற் பிறந்த புத்திரன் பெயர் காண்டன்; சூத்திரஜாதிப்பெண் பலதனென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சாமுத்திரன்; சூத்திர குலப்பெண் தசியுவென்பவனைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மாலாகாரன்; சூத்திர குலப்பெண் சாத்துவத னென்பவனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கைவர்த்தன்; சூத்திர குலப்பெண் சவுண்டிக னென்பவனைக் கூடிப் பெற்ற புத்திரன் பெயர் நீலகாரன்; சூத்திர குலப்பெண் தண்டகபோலனென்பவனுக்குப்பெற்ற புத்திரன் பெயர் வர்ணுகன்.

பிராமணன் அயோகவஜாதிப் பெண்ணைச்சேர அதனுற் பிறந்த புத்திரன் பெயர் பிங்களன்; முறைமையிற் பிறந்த சவனனென்பவன் அம்பட்டஜாதிப் பெண்ணைச்சேர அதனுற் பிறந்த புதல்வன் பெயர்

நர்த்தகன்; மேற் சொல்லிய மாகிட்டிய னென்பவன் கரணஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் மாதங்கன்; மல்லனென்பவன் விச்சிலைஜாதிப் பெண்ணைச்சேர அதனாற் பிறந்த புத்திரன் பெயர் நடன்.

சற்பனென்பவன் க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணைப் புணர்ந்து பெற்ற புதிரன் பெயர் திரமிளன்; நிடாதனென்பவன் காரோசரும ஜாதிப்பெண்ணைத் தழுவிப்பெற்ற புத்திரன்பெயர் சர்மசீவி; அயோகனென்பவனை நீலகார ஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் நீலாதிவன்ன உக்கிரேதா.

கத்தாவென்பவன் உக்கிரஜாதிப் பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சுவபாகன்; சூத்திரன் நிடாதஜாதிக் கன்னிகையைக் கூடிப்பெற்ற புத்திரன் பெயர் குக்குடன்; வைதேக னென்பவன் அம்பட்ட ஜாதிப்பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் வேணன்; அந்த வேணனென்பவன் சூத்திரஜாதிப் பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன்பெயர் புல்கசன்.

மேன்மையிற் சிறந்த பிராமணன் உக்கிரஜாதிப் பெண்ணுடனே சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் ஆவிரதன்; குற்றமற்ற பிராமணனைவன் அம்பட்ட ஜாதிக் கன்னிகையைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அபீரன்; பிராமணன் அயோகவஜாதிப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் திக்குவணன்; தண்டகபோல னென்பவன் பிராமணஜாதிப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் கசன்.

தசியுவென்பவன் அயோகவப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சைரந்திரியன்;வைதேக னென்பவன் அயோகவ ஜாதிப்பெண்ணைச் சேர்ந்து

பெற்ற புத்திரன் பெயர் மைத்திரேயன்; நிடாதனென்பவன் அயோகவ ஜாதிப்பெண்ணைச் சேர்ந்துபெற்ற புத்திரன் பெயர் பார்க்கவன்; காண்டனென்பவன் அழகிய விதேகஜாதிப் பெண்ணைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் காருவாரன்.

சண்டாளனென்பவன் வைதேகஜாதிப் பெண்ணுடனே சேரப்பிறந்த புத்திரன் பெயர் பாண்டுசோபாகன்; நிடாத னென்பவன் வைதேகஜாதிப் பெண்ணைச்சேர அதனால் உற்பவித்தவின் ஆகிண்டிகன்; சண்டாள னென்பவன் புல்கஜஜாதிப் பெண்ணைச்சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் சோபாகன்; மேற்சொல்லிய நிடாதஜாதிப் பெண்ணானவள் சண்டாளனைச் சேர்ந்து பெற்ற புத்திரன் பெயர் அந்தியாவசாயி.

மேற்சொல்லியபடி உயர்ந்த குலத்திற் பிறந்த ஆடவரும், தாழ்ந்த குலத்திற் பிறந்த மாதர்களும்,தாழ்ந்த குலத்துப் புருடரும் உயர்ந்த குலத்து மாதரும் காமாந்த காரத்தினாலே முறைபிறழ்ந்த தேகசம்பந்தப் பட்டதனாற் பிறந்த புத்திரர்களின் பெயர் பலவாகும். அப்பெயர்களை யெல்லாம் விரிவாக எடுத்துச் சொல்வதற்கு அவைகள் என்சொல்லளவில் அடங்காவாம். எவ்வுலகத்தி லுள்ளவர்களும் துதிக்கும்படி விளங்கா நின்ற விசுவேசுவரன் ஆன்மாக்கள் மலபரிபாக மடையவேண்டு மென்னுங் காருணியத்தா லருளிச்செய்த வேதங்களிற் கூறும் விதி விலக்குகளினின்றும் தவறாமல் நடக்கின்ற நல்லொழுக்கத்தினை யுடையவர்கள் எந்த குலத்திற் பிறந்தவரா யிருந்தாலும் பல நன்மைகளையும் பெற்று வாழ்வார்கள்.

கேளும் சுவிரதமகாராஜனே? இதுவரையில் பிராமணர் முதலிய நான்குவருணபேத வொழுக்கங்களை

யும் அனுலோமர் முதலிய சங்கரஜாதியர்களின் பெயர்களையும் ஒருவாறெடுத்துச் சொன்னோம்; இனி இப்பூமியிலுள்ள எல்லாஜாதியர்களுக்கும் பொதுவாயுள்ள தருமங்களென்னவெனில்:—

அருளே திருமேனியாகக் கொண்ட புகழினையுடைய விசுவேசுவரனை வழிபடுதலும், நல்லறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களை வணங்குதலும், இம்மை மறுமை வீடென்னு மூன்றனையும் தருவதற்கேதுவாகிய தருமங்களைச் செய்தலும், தென்புலத்தார் முதலியோர் மகிழும்படி இல்வாழ்க்கைத் தருமங்களிற்றவறாமல் நடத்தலும் கற்பிற் சிறந்த மனைவியுடனே மருவி மனமொத்து வாழ்தலும், பிறராற் பழிக்கப்படாத நல்ல புத்திரர்களைப் பெறுதலும், பிறவுயிர்களின்மே லருள்பிறத்தற்குக் காரணமாகிய அன்புடையவரா யிருத்தலும், தம்மையடைந்த விருந்தினர்களுக்கு உண்டிமுதலியவை யுதவி உபசரித்தலும், மனத்தின்கணிகழும் பேருவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதலும், பிறர் தமக்குச் செய்த உபகாரத்தை மறவாமலறிந்து நடத்தலும், பகைவரென்றும், சிநேகரென்றும், உறவினரென்றும் நினையாமல் யாவரிடத்தும் ஒரு தன்மையால் நடத்தும் நடுநிலைதவறாமையும், மனவாக்குக்காயங்களைத் தீயகருமங்களிற் செல்லவிடாமையும், தங்கள் வருணங்களுக்குரிய நல்லொழுக்கங்களைத் தவறாதபடி இனிதாகப் பாதுகாத்தலும், சொப்பனவஸ்தையிலும் காம மயக்கத்தாற் பிறன்மனையாளிடத்துப் போகநலத்தை விரும்பாமையும், ஒரு காரணத்தினாலாவது அறியாமையினாலாவது ஒருவன் தமக்குத்தீங்குசெய்தபோதிலும் அத்தீங்கை யாவரும் புகழும்படி பொறுத்துக் கொள்ளுதலும், பிறருடைய செல்வம் புகழ் முத

லியவற்றைக்கண்ட விடத்துண்டாகும் பொறாமையை யறவே யொழித்தலும், பிறர்பொருளை அபகரியா திருத்தலும், பிறரைக்காணாத விடத்தில் இகழ்ந்து பேசன் முதலிய சொற்குற்றங்களைச்செய்யாதிருத்தலும், தமக்கேனும் பிறருக்கேனும் அறமுதலிய புருஷார்த்தங்களிலொன்றினையுந்தாராத வீண்வார்த்தைகளைப் பேசாதிருத்தலும், தரும விரோதமான பாவகாரியங்களைச் செய்யாதிருத்தலும், மனமகிழ்ச்சியுடனே எப்போதும் பிறருக்குத் தங்களாலியன்ற வுபகாரங்களைச் செய்து வருதலும், யாசிப்பவர்களுக்கு இல்லை யென்னாமற் கொடுக்கக்கூடியவைகளைக்கொடுத்தலும், இல்லறம் துறவறம் என்னுமிரண்டுதருமங்களினின்றுந்தவறாதபெரியோர்களுங்கண்டு சந்தோஷிக்கும்படி இம்மைமறுமை யென்னு மிரண்டிடத்தும் உறுதியைத் தருவதான புகழைச் சம்பாதித்தலும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைக் காணுதற்குக் கருவியாயுள்ள நூல்களைக்கற்று அவற்றுள் விதித்தபடி நடத்தலும், வாசித்துணர்ந்த பெரியோர்களாற் சொல்லப்பட்ட வார்த்தைகளைக் கேட்டுத் தெளிவடைதலும், தாங்கற்ற கல்வி கேள்விகளாலுண்டாகியஅறிவோடு அவற்றின் பேதா பேதங்களைப் பகுத்தறியும் கூரிய புத்தியுடையவரா யிருத்தலும், காமமுதலிய பகைவர்க்கங்க ளாறினையும் தம்மிடத்துண்டாகாதபடி நீக்கி நடத்தலும், அறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதலும், அற்பர்களுடைய சினேகத்தை யறவே யொழித்தலும், தாஞ்செய்யத்தொடங்கிய காரியங்களை நன்காராய்ந்து செய்யுந் திறமுடையவரா யிருத்தலும், தமக்குரிய தொழிலாளர்களின் பிறப்பு, குணம், அறிவு முதலியவற்றைப் பலவகையிலு மாராய்ந்து எல்லாவற்றிலுஞ் சிறந்தவராயின், அவரிடத்து நம்பிக்கைவைத்து நடத்

தலும், தம்மைச்சார்ந்த வுறவினரைத் தாம் வறுமைப் பட்ட விடத்தும் பாதுகாத்தலும், நியாயவிரோதமான காரியங்களைச் செய்யா தொழித்தலும், எல்லாவுயிர்களிடத்தும் மிகுந்த கருணையுடையரா யிருத்தலும், சோம்பலில்லாதிருத்தலும், எப்போதும் தக்கமுயற்சியிலேயே மனம்வைத்து நடத்தலும், வறுமை முதலியவற்ருற்றமக்குத் துன்பம் வந்த விடத்தும் அதுகாரணமாக மனங்கலங்கா திருத்தலும், பிறருடைய மனக்கருத்தை குறிப்பினுலறிந்து அன்போடு நடத்தலும், சபைத்திறமறிந்து பேசத்தொடங்குமிடத்து அஞ்சாமற் பேசுந் திறமுடைமையும், பொருளைச் சம்பாதிக்கும் திறமுடையவராயிருத்தலும், மனதுக்கு இனிமையைத்தராநின்ற நற்குணமுடைய சிநேகரைப்பொருந்தியிருத்தலும், கோபமுதலிய காரணங்களாலுண்டாகும் உட்பகை புறப்பகையென்னு மிருவகைப் பகையுமில்லாதிருத்தலும், பெரியோர்களைப் பழித்து அவமதியாதிருத்தலும், காமங் காரணமாகப் பேதைமையுடையாராகிய பெண்களின் சொல்வழி நடவாதிருத்தலும், பரத்தையரிடத்துண்டாகும் போக நுகர்ச்சியை விரும்பாதிருத்தலும், மேலோர் இகழ்ந்து சொல்லும் கள்ளுண்ணுதிருத்தலும், சூதாடுதலை நினையாதிருத்தலும், ஆகாரம் தொழில் முதலிய பேதங்களாலுண்டாகும் கொடிய வியாதிகளுக்கிடங்கொடாதபடி அவைகளைச் சரிவர நடத்தலும், தங்கள் தங்கள்குலாசார தருமங்களிற் றவருதிருத்தலும், தங்கள் வருணச்சிரமநிலைகளிற்றவருது நடத்தலும், தாம் பிறந்த குடியைப் பலவாற்ருனுமுயர்வடையச் செய்யுந் திறமுடையராயிருத்தலும், தரித்திரத்திற் கிடங்கொடா திருத்தலும், எப்போதும் பிறர் தம்மைப்பழிக்கும்படி பிறருடைய தலைவாயிலிற்சென்று யாசியாதிருத்தலும், மற்றும்பல வகைப்பட்ட இவைபோல்வனவாகிய நல்லொழுக்கங்

களை யெல்லாம் தருமசாஸ்திரங்களில் விதித்த முறைமைப்படி அனுசரித்து நடத்தல் எல்லா வருணத்தார்க்குமுரிய பொதுவாகிய தருமங்களாகும்.

இதுவரையும் பெருமைபொருந்திய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், என்னும் நான்கு ஜாதியர்களின் றன்மையையும், இந்த நான்கு ஜாதிகளில் மாதரும், ஆடவரும் முறைபிறழ்ந்து கலத்தலினுலுண்டாகிய சங்கர ஜாதிகளின் றன்மையையுஞ் சொன்னேம்; இனி ஒப்பில்லாத முனிவர்களும்,தேவலோகத்தைக் காக்கின்ற இந்திரன் முதலாகிய தேவர்களும், வேண்டுதல் செய்ய அவர்களுக்கு அழகு மிகுந்த பிரமதேவன் திருவாய் மலர்ந்தருளிய உண்மையாகியபிரமவமிசத்தைச் சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

**பிராமணுதி வருணதரும முரைத்த வத்தியாயம்**
முற்றுப்பெற்றது.

**பத்தாவது**

# பிரமவமிச முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே ? காதிமகாராஜாவின் புத்திரனுகிய கவுசிகனென்னும் பெயரையுடைய விசுவாமித்திர மகாராஜாஞனவன் தருமநெறி வழுவாமல் தனதாணையைச் செலுத்தி உலகத்திலுள்ள ஜீவான்மகோடிகளை இரக்ஷித்து வரும்பொழுது ஒருநாள்

மந்திரிமுதலிய சகல சயின்னியங்களுடனே காட்டி னிடத்துச் சென்று வேட்டையாடிக்கொண்டிருக்கிற சமயத்தில் ஒரு மானைக்கண்டு அந்த மானைப்பிடிக்கும் பொருட்டு அதன் பின்னே தொடர்ந்து நெடுந்தூரஞ் சென்றும் அகப்படாமையினாலே சோர்வடைந்து பசி யினாலும், தாகத்தினாலும் மெலிந்து, ஒருவனத்தை யடைந்து அந்த வனத்திலுள்ள தடாகத்தின் ஜலத்தை யுண்டு சிறிது வருத்தம் நீங்கி யிருக்கின்றபொழுது, அவ்விடத்து வந்த சில முனிவர்களாலே வசிஷ்ட மகா ரிஷியினது அழகிய வனமென்று தெரிந்துகொண்டு வசிஷ்ட மகாரிஷியினிடம் போய் வணங்கி நிற்க தவத் தையுடைய வசிஷ்டமுனிவன் ஆசீர்வாதஞ் செய்து வீற்றிருந்து தயைசெய் என்று சொல்ல அவ்வாறே தகுதியானவிடத்தி லிருந்தபொழுதில் நீ இவ்விடத் திற்கு வந்தபடியால், உனக்கு விருந்து செய்வேன் உன்னுடன் கூடி வந்திருக்கின்ற சேனைகளுடனே இனிதாக உண்டுபோவென்றான்.

இவ்வாறு சொல்லிய வசிஷ்ட முனிவன் காமதே னுவை அழைத்து, நீயே இவர்களுக்கெல்லாம் அறுசு வை பொருந்திய பதார்த்தங்களுடனே உணவைச் சுர ந்தருள்வா யென்று நியமிக்க அப்பொழுது அந்த காம தேனுவானது, பற்பல பெண்களாகி விசுவாமித்திர னுக்கும், அவனது சேனைகளுக்கும், ஆகாரங்களைப் படைத்து அவர்களெல்லாம் திருப்தியாகப்போஜனஞ் செய்த பின்பு சந்தனம், தாம்பூல முதலியவை யெல் லாம் அன்புடனே கொடுத்து,தெய்வத்தன்மையுடைய காமதேனுவானது, தன்னுருவ மடைந்ததை யறிந்து விசுவாமித்திர மகாராஜன் விருப்பத்துடனே வசிஷ்ட முனிவனிடம்போய் வணங்கி அரிய தவத்தையுடைய வசிஷ்ட முனிவரே என்னுடனே வந்த பலவாகிய

சேனைகளுக்கெல்லாம் உணவு நல்கிய தெய்வத்தன்மை யுடைய பசுவை எனக்குக்கொடுத்தருள வேண்டுமென் று கேட்க வசிஷ்ட முனிவன் விசுவாமித்திரனைப் பார் த்து அரசனே! இந்தக் காமதேனுவானது பாற்கடலி னிடத் துண்டாகி இந்திரனுக்குரியதா யிருக்கின்றது. ஆதலால், அந்தக் காமதேனுவானது எனக்குச் சொ ந்தமல்லவென்று சொல்லி, அது வருவதானால் நீ உன் வலிமையினால் கொண்டுபோவென்ற மாத்திரத்தில், விசுவாமித்திரன் காமதேனுவை கட்டிக்கொண்டு புறப் படும்போது அந்தப் பசுவானது, அக்கட்டினை அறுத் துக்கொண்டு வசிஷ்டமுனிவரிடம் வந்து வணங்கி, ஓ முனிவர் பெருமானே அன்புடனே விசுவாமித்திரனு க்கோ என்னைக் கொடுக்கிறீரென்று கேட்டது.

இவ்வாறு கேட்ட காமதேனுவை நோக்கி வசிஷ் ட முனிவன் நான் கொடுத்தேனல்லேன், அரசன்று னே உன்னைப் பிடித்துக் கொண்டுபோகத் தொடங்கி னானென்று சொல்லக்கேட்ட காமதேனுவானது, பெருங்கோபமடைந்து தன்னுடம்பின் மயிரைச் சிலி ர்த்தது, அப்பொழுது அப்பசுவினிடத்து ஆயுதங்களு டனே பலவாகிய வீரர்களுண்டாகி விசுவாமித்திரன் சேனைகளெல்லாவற்றையுங் கொன்றார்கள்.

சேனைகளெல்லா மாய்ந்ததை நோக்கி விசுவாமித் திரன் குமாரர்கள் கோபமெய்தி, இப்படியாகச் செய் தது பசுவின்றிறமன்று, வசிஷ்டமுனிவனது வஞ்சக மேயென்று ஆயுதங்களுடனே ஆரவாரித்து, வசிஷ்ட முனிவன்மே லெதித்தார்கள்; அப்போது வசிஷ்ட முனிவன் கண்களிலே நெருப்பெழும்படி விழித்துப் பார்த்தவோடும் அரசன் குமாரர்களெல்லாம் மரண மடைந்து வெந்து சாம்பராயினார்கள்.

இவ்விதமாக நூறுபுத்திரரும் இறந்ததை விசுவாமித்திரன் கண்டு மிகுந்த கோபமுடையவனாகி, வில்லை வளைத்து அளவில்லாத பாணங்களைப் பிரயோகித்தான்; அதைக்கண்ட வசிஷ்ட முனிவனும் தமது கையிலிருந்த யோகதண்டத்தை நோக்கி, நீ எதிர்த்திடுகவென்று ஏவினான்.

விசுவாமித்திரன் பிரயோகித்த தேவதாஸ்திரமுதலிய படைக்கலங்களெல்லாவற்றையும் வசிஷ்டமுனிவனது தண்டமானது விழுங்கிப்பிரகாசித்தலை விசுவாமித்திரன் பார்த்து தவத்தையுடைய முனிவர்களது வல்லமையே சிறப்புடையதன்றி கடல்சூழ்ந்த உலக முழுவதையும் ஆளுகின்ற வல்லமையும் ஒரு வல்லமையாகுமோவென்று தீர்மானித்து, விசுவாமித்திரனானவன் வசிஷ்டமுனிவன் செய்த வெற்றிச்செயலையே மனத்தினால் நினைத்துக் கீழ்த்திசையையடைந்து சிறந்த தவவேடந்தரித்துத் தவஞ்செய்கின்றபோது இந்திரன்பார்த்து அந்தத்தவத்தால் தனக்குத் துன்பமுண்டாகுமென்று அந்தத்தவத்தைக் கெடுப்பதற்காகத் திலோர்த்தமையென்று சொல்லப்பட்டதெய்வப்பெண்ணை யேவினான்.

இந்திரன் ஏவலால் வந்த திலோர்த்தமையினது அழகைக்கண்டு மதிமயங்கித் தவத்தைவிட்டு அவளின்ப நுகர்ந்திருந்து,பின்பு தெளிந்து இந்திரன்பண்ணின கபடமிதுவென்று கோபித்து திலோர்த்தமையைப்பார்த்து நீ பூலோகத்துப் பெண்ணாவாயென்று அனுப்பிவிட்டுப் போனான்.

இவ்வாறு சென்ற விசுவாமித்திரன் தென்திசையை யடைந்து தவத்தைச் செய்யுஞ்சமயத்தில் வெற்றி பொருந்திய திரிசங்குவென்று சொல்லப்பட்ட அரச

ஞனவன் தன் குருவாகிய வசிஷ்ட முனிவனை யடுத் துச்சரீரத்துடன் சுவர்க்கத்தையடைய எனக்கு அருள் செய்க வென்று பிரார்த்தித்தான்; அதற்கு ஆசாரிய ஞகிய வசிஷ்ட முனிவன் ஆயுள்கழிந்த பின்பு அடை வாயென்று சொன்ஞன்.

அதைச்கேட்ட திரிசங்குராஜன் ஐயனே! உன க்கிஷ்டையாதாகில் வேறு எவரைக்கொண்டாவது நான் அதைக்குறித்து யாகஞ்செய்வேனென்று சொல்ல, அதைக்கேட்ட வசிஷ்ட முனிவன் கோபித்து அரச னே பூர்வாசாரியனைவிட்டு உனக்குத் தகுதியான காரி யங்களைச் செய்யப்பட்டவனைத் தேடினை அதனாலே நீ நீசனுவாயென்று சபித்தான்.

வசிஷ்ட முனிவனிட்ட சாபத்தால் திரிசங்குரா ஜன் அழகிழந்து வேற்றுருவடைந்து ஊருக்குவர எல் லோரு மிகழ்ந்து பேசுதலாலே காட்டினிடத்துச் செ ன்று சிலநாள் கழித்து வருகையில், ஒருநாள் கவு சிகனென்கிற பெயரையுடைய விசுவாமித்திர ராஜன் வசிக்கின்ற சோலையை அடைய, அந்த விசுவாமித்தி ரன், இவ்விடத்தில் வந்த நீயாரென்று கேட்டான்.

இவ்வாறு கேட்டவுடன் மேல் நடந்த செய்திக ளெல்லாவற்றையு மெடுத்துச்சொல்லி வணங்கி நின்ற திரிசங்கு ராஜனை விசுவாமித்திரன் பார்த்து பெரிய யாகத்தை விதிப்படி முடித்து சுவர்க்கலோகத்தைஉன க்குக் கொடுப்பேனென்று சொல்லி யாகஞ் செய்தற் பொருட்டு முனிவரை யழைக்க முனிவரெல்லாம் வந் து கூடினுர்கள்.

விசுவாமித்திரன் சலியாது நின்று யாகத்தை மு டித்து, தேவர்களை வரக்கடவீரென்று அழைத்தான். அவர்கள் வராமலிருந்தமையால், கோபித்து தவவலி

மையினால் நானே சொன்னேன் நீ சுவர்க்கலோகத்தை அடையக்கடவாயென்று ஆக்ஞாபித்தான்; அப்படி ஆக்ஞாபித்தவுடனே திரிசங்கு ராஜன் விமானத்தின்மேலேறி சுவர்க்கலோகத்தை யடையச் சென்றான்.

அந்த திரிசங்குராஜன் சுவர்க்கலோகத்தையடையச்செல்லத் தேவர்கள் கண்டு சண்டாளனாகிய நீ இவ்விடத்திற்கு வருவதற்குக் காரணம் யாது உலகத்திற்றானே பொருந்துகவென்று தள்ள, திரிசங்கு ராஜன் ஆதாரமில்லாமல் குப்புற்று விழும்போது பெருமை பொருந்திய விசுவாமித்திர முனிவனே, அடைக்கலமென்று சொல்ல, அதைக்கேட்ட விசுவாமித்திர முனிவன் உயர வெழும்பித் திரிசங்குராஜனே நில் நில்லென்று சொல்லி ஆரவாரஞ் செய்தான்.

அப்படி ஆரவாரஞ்செய்த விசுவாமித்திரன் பெருங் கோபத்துடன் எமது சொல்லை மதிக்காமல் அவமதித்த தேவர்கள் பதவிமுதலாக விளங்காநின்ற பதவிகளையும், நக்ஷத்திரங்களையும், கிரகங்களையும் இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களாகியஎல்லாவற்றையும் வேறாக வுண்டாக்குவேனென்று நினைக்குங்காலத்தில் தேவலோகத்திலுள்ள தேவர்களும், முனிவர்களும், ஒருங்கு சேர்ந்து, முனிவர் பெருமானே, க்ஷமித்தருள்வாயென்று சொல்லி உன்னிடத்தில் வந்து அடைக்கலம் புகுந்தவனைக் காப்பாற்றுதல் தருமமேயாகும்; ஆதலால் அந்த திரிசங்குவென்பவன் நக்ஷத்திரக்கூட்டங்களுடனே நீங்காது சேர்ந்திருக்கக்கடவனென்று சொல்லித் தேவர்களும்முனிவர்களும் போனபின்புமேற்றிசையை அடைந்து பெருமை பொருந்திய தவத்தை முயன்று செய்யுங்காலத்தில், உலகத்தைப்பரிபாலனஞ்செய்யும் அம்பரீஷமகா ராஜனென்பவன் புருஷமேதயாகஞ் செய்வதற்கு ஒரு சிறுவனைக் கொள்

ளும் பொருட்டு வேண்டிய பொருள்களைத் தேர்மேல் வைத்துக் காடுகளிற்போய்த் தேடிவருகையில் தவத் திரு னுயர்ந்த இரிசிக முனிவன் வசிக்கின்ற காட்டை யடைந்து, அம்பரீஷமகாராஜன் அவரைக்கேட்க அம் முனிவரும் முனிவர் பத்தினியும் உடன்பட்டார்கள்; ஆயினும், அவர்கள் புத்திரர் மூவருள் தாயானவள் இ ளைவனுகிய சுனகன் எனக்கே யுரியனென்ருள்; தந் தையானவன் மூத்தவனுகிய சுனப்புச்சன் எனக்கே யுரியவனென்ருன்; இருவருமிப்படிச் சொன்னவள வில் எஞ்சி நின்ற சுனச்சேபனென்கிற புத்திரன் அவ் விருவருடைய அறியாமைக்குச் சிரித்து, அந்த அரச னைப்பார்த்து என் பிதாவினது தரித்திரமானது, அற வொழியும்படி விரும்புவதாகிய திரவியத்தைக்கொடுத் தருள்வாயென்று சொன்னுன்.

இவ்விதமாகச்சொல்லித் தந்தையைத்தொழுது அர சனது தேர்மேலேறிச்செல்லும்போது சூரியபகவான் ஆகாயத்துச்சியிற் பிரவேசித்தான்; அவ்விடத்தில் அர சன்தேர்விட்டிறங்கி மாத்தியானிகத்திற்குரிய கரும மாகிய கடன்களைச் செய்யாநிற்க இறங்கிநின்ற சிறுவ னுகிய சுனச்சேபனும் நியமங்களைச் செய்யப்போ னுன்.

அச்சிறுவன் போயின அவ்விடத்தில் கவுசிகனெ ன்னும் பெயரையுடைய விசுவாமித்திரனைக்கண்டு மனக்கவலையுடனே வணங்கிநின்ற சிறுவனை அம்மு னிவன் பார்த்து மனவருத்தத்துக்குக் காரணமென்ன சொல்லுகவென்றுகேட்க, முனிவனைநோக்கி என் னைப்பெற்ற தாயாகிய உனக்கு மூத்தவள் என்பிதா வின் சம்மதப்படி திரவியத்தைப் பெற்றுக்கொண்டு என்னை அரசனுக்குக்கொடுத்தாளென்று சொன்னுன்.

விசுவாமித்திர முனிவன் தன் மைத்துனனுந் தமக்கையுங் கொடுத்த முறையைக்கேட்டு மருமகனே! நீ அஞ்சாதே, உனக்கு இரண்டு மந்திரங்களை உபதேசிக்கின்றேன்; நீ யாகத்தம்பத்தை யணைந்து ஜபித்துக் கொண்டிருப்பாயாகில், தேவர்களெல்லாம் வந்து சேருவார்கள், யாகமும் முடிவும், உன்னுயிருக்கு முடிவுண்டாகமாட்டாவென்று சொல்லி உபதேசித்தான்; அச்சிறுவனும் அரசனிடத்தில் வந்து சேர்ந்தான்.

அரசனாற் செய்யப்பட்ட யாகத்தம்பத்தை யணைந்து விசுவாமித்திரமுனிவன் சொன்னபிரகாரமே அந்த மந்திரங்களை ஜபிக்க அவ்விடத்தில் பிரமன்முதலிய தேவர்களெல்லாம் வந்து கூடி வேதவிதிப்படிச் செய்கிற யாகத்தையும், சிறுவனுயிரையுங்காத்தார்கள். விசுவாமித்திர முனிவன் வடதிசைக்கேகினான்.

விசுவாமித்திர முனிவன் வடதிசையிற் சென்று பொருந்திய பஞ்சேந்திரியங்களையு நிக்கிரகித்து யக்ஞத்தாலாகிய விபூதியைச் சரீரமுழுவதும் உத்தூளனஞ் செய்து ருத்திராக்ஷ மணிகளை யணிந்து மரவுரி தரித்துப் பஞ்சாக்கினி மத்தியில் சகல மந்திரங்களுக்கு மூலமாகிய பிரணவத்தை உள்ளத்தில் தியானித்து, அனேக வருஷகாலம் தவத்தைச் செய்தான்; அவ்வாறு செய்த தவத்தினாலுண்டாகிய அக்கினியின் புகையானது, எவ்விடத்திலுங் கலந்து இருள் நீங்காது போர்த்துக்கொண்டதனாலே எல்லாவுலகமு நடுங்கினது.

தேவர்களெல்லாம் பயமடைந்தார்கள்; எட்டுத்திசைகளிலுமுள்ள அஷ்டகஜங்களும் மயக்கமடைந்தன; இந்திரன் முதலிய அஷ்டதிக்குப்பாலர்களும் பிரமித்தார்கள்; நிலையியற்பொருள் இயங்கியற்பொருள்களாகிய எல்லாந் தளர்வடைந்தன; அக்காலத்தில் பிரமதே

வன் தேவர்களெல்லாந் தன்னைச் சூழ்ந்து வணங்கும் படி அவ்விடத்தில் வந்தான்.

விசுவாமித்திர முனிவனைச் சந்தித்து நீ செய்த தவத்தினாலே பிரமரிஷியானா யென்று திருவாய் மலர்ந்தருளக் கேட்ட விசுவாமித்திரமுனிவன் மகிழ்வடைந்து பிரமதேவனைத் தொழுது வசிஷ்ட முனிவன் வாக்கினாற் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ள பிரமதேவன் வசிஷ்ட முனிவன் முகத்தைப்பார்த்து ஞானத்துக் கிருப்பிடமானவனே; அழகிய உன் வாக்கினாலே விசுவாமித்திர முனிவனைப் பிரமரிஷியானா யென்று சொல்வாயெனத் திருவாய் மலர்ந்தருளலும், வசிஷ்ட முனிவன் ஆனாற் பிரமரிஷியென்று சொன்னான்; அப்படிச் சொல்லக்கேட்ட விசுவாமித்திரமுனிவன் ஒருவாறு மகிழ்ச்சியடைந்தவனாகினான்; ஒப்பில்லாத பிரமதேவனும், தேவர்களும், முனிவர்களும் அவரவர்கள் வாசஞ்செய்யு மிடங்களிற் சென்றார்கள்.

இந்தப் பிரகாரம் நடந்த காலத்தில் விசுவாமித்திர முனிவனானவன் தன்னை ஆனாற் பிரமரிஷி யென்று இரண்டு பொருள்பட வசிஷ்டமுனிவன் சொன்னவார்த்தையை நினைந்து நினைந்து மனத்துயருழந்து சிலகாலஞ் சென்ற பின்பு அச்சொல்லைத் தீர்ப்பதற்கான தன்மையைச் சுருதி முதலிய நூல்களாலுணர்ந்து தேவலோகத்தைப் புரக்கின்ற இந்திரனது சபையை அடைந்தான்.

தன்னுடைய சபையில் வந்த விசுவாமித்திரமுனிவனை இந்திரன் மனமகிழ்ச்சியுடனே சந்தித்து வணங்கி ஆசனத்திலிருக்கச்செய்து முனிவர் பெருமானே, இவ்விடத்திற்கு எழுந்தருளிய காரியத்தைத் திருவாய் மலர்ந்தருளி இரக்ஷித்தருளவேண்டுமென்று பிரார்த்

திக்க, தேவராஜனே, வேதங்களையுணர்ந்த வசிஷ்ட மகாமுனிவன் என்னை ஆறாற் பிரமரிஷிதானென்று சொன்ன சந்தேகந் தீரும்பொருட்டுத் தேவர்களும், சித்தர்களும், வித்தியாதரர்களும், அசுரர்களும், நாகர்களும் முனிவர்களும் கலந்து உன்னுடைய சபையினிடத்தில் தனக்குத்தானே சமானமாகிய சுருதிஸ்மிருதிகளின் சம்மதமாக விளங்காநின்ற அந்தவசிஷ்டமுனிவனும் யானும் நியாயமாகிய வழக்குப் பேசுதல் வேண்டுமென்று சொன்னவுடன் இந்திரன் முதலிய தேவர்கள் முனிவர்களெல்லாரும் மகாமேருகிரியில் வந்து மகிழ்ந்தார்கள்.

அவ்விடத்தில் யாவரும் வந்திருந்தவுடன் விசுவாமித்திர முனிவன் வசிஷ்ட முனிவனைப் பார்த்து மேன்மை பொருந்திய தவஞ்செய்த என்னை ஆறாற் பிரமரிஷியென்று இரண்டு பொருள்படச் சொன்னது யாதுகாரணஞ் சொல்லென்று கேட்க வசிஷ்டமுனிவன் நீ க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்ததனாலே எத்தன்மையாகிய தவஞ்செய்தாலும் இராஜரிஷியேயல்லது பிரமரிஷியாகமாட்டாய் அதனாலப்படிச் சொன்னேனென்றான்.

அவ்வாறு சொல்லக்கேட்ட விசுவாமித்திர முனிவன் வசிஷ்டமுனிவனைப்பார்த்து 'ஜென்மனாஜாயதே சூத்திர' என்னும் வாக்கியத்திற்குப் பிரயோஜனமாகிய அருத்தமென்னவென்று வினவிய விசுவாமித்திர முனிவனைப்பார்த்துப் பழமையாகிய முதல் வருணத்தாராகிய பிராமணர்களுக்கே அந்த வாக்கியமுரியது, மற்ற வருணத்தாருக்கு உரியதல்லவென்று சொன்னான்.

அப்படியானால் உன்னுடைய குலமென்னவென்று விசுவாமித்திர முனிவன்கேட்க வசிஷ்டமுனிவன்

நான் பிராமணகுலத்த னென்று சொல்ல, உன்தாயின் குலம் என்னவென்று விசுவாமித்திர முனிவன்கேட்க அதற்கு வசிஷ்டமுனிவன் பூமியில் ஒரு விதையைப் பதித்தால் அதுபொருந்திய மண் எதுவாயிருந்தபோதிலும் பதித்தவித்தே முளைக்குமல்லாமல் வேறுமுளையாதபடியால் தாயின் குலத்தை விசாரிப்பதிற் பயனில்லை யென்ருன். அதைக்கேட்ட விசுவாமித்திர முனிவன் வசிஷ்டமுனிவனே! உன் வார்த்தை நன்ருயிருக்கிறதென்று சிரித்துச் சொல்லுவான்.

மேகக்கூட்டங்கள் வருஷிக்கின்ற ஒரே தன்மையாகிய ஜலமானது பொருந்திய பூமிசார வியற்கையினுலே அந்த ஜலத்தின் குணம் அளவில்லாத வேறுபாடாகின்றதை நீயறிந்ததில்லையோ! ஆதலால், பூமியும் வித்தும் வேறுபாடில்லாமல் ஒத்திருந்தால் மேம்பாடு பொருந்திய பலனுண்டாகும். ஒன்றுக்கொன்று மாறுபடுமாஞல் பிரயோஜனமுண்டாகுவ தரிதாகுமென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லத்தொடங்கிஞன்.

வசிஷ்டமுனிவனே! பிரம,க்ஷத்திரிய,வைசியசூத்திரர்களென்னும் நான்கு வருணத்தார்களில் மாதரும் ஆடவரும் முறைபிறழ்ந்து சேரப்பிறந்தவர்களை சுருதி ஸ்மிருதி முதலாகிய பல நூல்களிலும் விருத்தியாகிய சங்கர ஜாதிகளென்று சொல்லப்படுகின்றதை நீ அறிந்ததில்லையோ? அல்லது மதிமயக்கத்தால் மறந்தனை. யோ? அல்லது மறைத்துச் சொல்லுகின்றனையோ?

அவ்வாறு விளங்குகின்ற சங்கரஜாதியர்களுக்கெல்லாம் கிரமமாகப்பெயர்களை சுருதிமுதலிய நூல்களிற் சொல்லப்படுகின்றன. வேசியுடன் றழுவத்தோன்றிய சந்ததிகளுக்குப் பெயர் சொல்லப்படவில்லை. ஆதலால் நீ விளங்காநின்ற சங்கரஜாதியார்களிலும்கீழ்மையான

ஜாதியாயிருக்கவும் பிராமண ஜாதியென்று சொன்னது நியாயமோ வென்றான்.

ஊர்வசி கருப்பத்தில் தோன்றிய வசிஷ்டமுனிவனே கேட்பாயாக, நான் க்ஷத்திரிய வமிசத்துக் காதிராஜாவின் புத்திரன்றான்; மான்வயிற்றிற் பிறந்தகலைக்கோட்டு மகாமுனிவரும், பசுவின் வயிற்றிற் பிறந்தருளிய கவுதமமுனிவரும், நரியின்வயிற்றிற்பிறந்தஜம்புகமுனிவரும், நாயின் வயிற்றிற்பிறந்த சவுனகமுனிவரும், கழுதைவயிற்றிற்பிறந்த கார்க்கேய முனிவரும், கிளியின் வயிற்றிற் பிறந்த சுகமுனிவரும், கரிக்குருவியின் வயிற்றிற்பிறந்த பரத்துவாச முனிவரும், தவளையின் வயிற்றிற்பிறந்தமாண்டவியமுனிவரும், குடத்தினிடத்திற்பிறந்த அகஸ்தியமுனிவரும், கைம்பெண்வயிற்றிற் பிறந்தகவுண்டன்னிய முனிவரும், சண்டாளப்பெண் பெற்றசத்திமுனிவரும், புலைப்பெண் வயிற்றிற்பிறந்த பராசரமுனிவரும், செம்படவப்பெண் வயிற்றிற் பிறந்தருளிய வியாசமுனிவரும், சக்கிலிப்பெண் பெற்ற மதங்கமுனிவரும், வண்ணாரப்பெண்பெற்ற நாரதமுனிவரும், வேடப்பெண் பெற்ற வான்மீகமுனிவரும், அம்பட்டப்பெண் பெற்றருளிய வபனமுனிவரும், ஆகிய இவர்களெல்லாரும் பரிசுத்தமாகிய பிராமணகுலத்திற் பிறந்தவர்களோ? அல்லது புகழ்ச்சி பொருந்திய தவத்தினாலுயர்ந்தவர்களோ?

சுருதிகளும், புகழையுடைய ஸ்மிருதிகளும், உலகத்தார் நன்மையடையும்படி சொல்லியவனைத்தையும் செவ்வையாக ஆலோசித் தறிந்து சொல்லக்கடவா யென்று விசுவாமித்திர முனிவன்சொன்னதற்கு, வசிஷ்டமுனிவன் எதிர்வார்த்தை யொன்றுஞ் சொல்லாமல் மனவருத்த மடைந்து வெட்கத்துடனே தலை குனிந்து ஊமையைப்போ லிருந்தான்.

அத்தன்மையாக இருந்த வசிஷ்ட மகாமுனிவனை இந்திரன் பார்த்து விசுவாமித்திர முனிவன் வினவிய வார்த்தைகளுக்குளதிர்வார்த்தைபேசாதிருப்பதென்ன காரணம்; நீங்களிருவரும் பேசிய வார்த்தைகளாலே நாங்களெப்படி உண்மையைத் தெரிந்துகொள்ளுதல் சொல்லுகவென்று கேட்க,வசிஷ்டமுனிவன் சொல்லுவான்.

யாகங்களுக்குத் தலைவனாகிய இந்திரனே கேட்பாயாக; பிரம தேவனிடஞ் சென்று விண்ணப்பஞ் செய்துகொண்டால் உண்மை விளங்குமென்று சொல்ல; உடனே தேவேந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும், வேதங்களுக்குரிய பிரம தேவனிடத்திற்குப்போய் நடந்த விவரங்களை யெல்லாஞ் சொல்லக்கேட்ட பிரமதேவன் அவர்களைப்பார்த்து நகைத்துச் சொல்லுவான்.

வேதமுதலாகிய பற்பல நூல்களையும் முறையாக ஓதி யுணர்ந்தும் உலகத்தியற்கை யெல்லாந் தெரிந்திருந்தும் நீங்கள் அன்புடனே உண்மையாகிய பிரமவமிசத்தினர் இன்னாரென்று அறியாமல் மதிமயக்கமடைந்தது அழகாயிருந்தது!

விரும்பிவந்த உங்கள் பொருட்டல்லாமலும் விரிந்தகடல் சூழ்ந்த பூமியினிடத்தி லிருக்கின்ற மனிதர்களும் இலேசாகத் தெரிந்து கொள்ளும்படியாகவும் சொல்லுவாம்.

பரிசுத்தமாகிய சிருஷ்டி கிர்த்தியமே பிரமவமிசத்தினருக்கு மேலான கிர்த்தியமென்று ஆராய்ந்தறியத்தக்க வேதமுதலாகிய பலநூல்களிலுஞ் சொல்லப்படுகின்றது.

ஆதிகாலத்தில் உலகிற்கு முதற் கடவுளாகிய விசுவேசுவரன் தேவர்முதல் தாவர மிறுதியாகிய பலவித ஜீவான்மகோடிகளை யெல்லாம் புகழ்ந்துரைக்கப்பட்ட வேதங்களிற் சொல்லிய வண்ணமே என்னைச் சிருஷ்டிசெய்யக் கடவாயென்று சங்கற்பித்தருளினன்.

அவ்வாறு சிருஷ்டிக்கப்படுவனவாகிய பல வகுப்பினையுடைய ஜீவான்ம கோடிகளெல்லாம் பலபலவிதமாகச் சிறப்புற்ற மிகுந்தபோகங்களைச் செவ்வையாக அநுபவித்து இன்பத்துடனே வாழ்வதற்குஜகத்தைச் சிருஷ்டி செய்யும்பொருட்டு மனுமுதலாகிய ஐந்து பிரமாக்களை நியமித்தருளினன்.

தேவர்களுக்கு முதல்வனாகிய விசுவேசுவரனது ஆக்ஞையை மனதிலே தியானித்துக்கொண்டு வேதங்களிற் சொல்லியபடியே பலபலவாகிய விடங்களிலும் அளவில்லாத ஜீவகோடிகளை யெல்லாம் நான் சிருஷ்டிக்கின்றேன்.

மனுமுதலாகிய ஐந்து பிரமர்களும் அவர்கள் அன்புள்ள வமிசத்தினர்களும் அரிய வேதங்களிற் சொல்லியபடியே அயம், தாரு, தாம்பிரம், சிலை, சுவர்ணமென்னும் இவைகளாலே பலநலங்களும் பொருந்தி கீர்த்திமிகுந்த பிரபஞ்சங்களைச் சிருஷ்டிக்கின்றார்கள்.

· இத்தன்மையாகிய ஜீவசிருட்டி, ஜகசிருட்டி யென்னும் இரண்டு சிருட்டிகளில் ஒரு சிருட்டியாகிலும் பெருமையுடனே செய்தற்குச் சுதந்தரமுள்ளவராகி சுருதிகளில் விதிக்கப்பட்ட நல்லொழுக்கந்தவறாத நன்மையுடையவர்களே பிரமவமிசத்தினராகுவர்.

மேற்சொல்லிய இருவிதசிருட்டிகளில் ஒரு சிருட்டியுஞ்செய்தற்குச் சுதந்தரமில்லாதவர் வேதங்களை

யுணர்ந்தாலும், யாகங்களையுந் தவங்களையுஞ் செய்தாலும், பிரமஞானமுடையவரென்று சொல்லப்படுவார்களே யன்றி அருமையாகிய பிரமவமிசத்தின ராகார்கள்.

பிரமவமிசத்தினர் இத்தன்மையரென்று பலபல சுருதிகளைச் சான்றாக வெடுத்துச் சொல்லியருளியதைக் கேட்ட இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும், சந்தேக முழுவதுந் தீர்ந்து தாமரைமலரிலிருக்கின்ற பிரமதேவன் திருவடிகளை வணங்கி அவரவர்கள் வாசஞ்செய்யுமிடங்களிற் சேர்ந்து மிகுந்த சந்தோஷமடைந்திருந்தார்கள்.

இதுவரையும் கீர்த்திமிகுந்த அறிவுடையோராற் புகழத்தக்க பிரம வமிசஸ்தர்களைச்சொன்னோம். இனி அந்த விசுவ பிரம வமிசஸ்தர்களின் கோத்திரங்களையும், சூத்திரங்களையும், சாகைகளையும், பிரவரங்களையும் வரிசையாகச் சொல்லுவோ மென்று காளத்தி மகா முனிவர் கூறுகின்றார்,

**பிரமவமிச முரைத்த வத்தியாயம்**
*முற்றுப்பெற்றது.*

பதினொன்றாவது

# கோத்திராதிக ளுரைத்த வத்தியாயம்.

உலகத்தில்யாவரும் சந்தோஷிக்கின்ற நற்குணமும் பேரன்புமுடைய சுவிரத மகாராஜனே கேட்பாயாக?

## கோத்திரங்களாவன.

ஒவ்வொரு வமிசத்தின் மூலபுருஷர்களின் பெயர்கள் அவற்றுள்:—

அயகாரராகிய மனுப்பிரம வமிசஸ்தர்களின் கோத்திரம்-உ௫, தாருகாரராகிய மயப்பிரம வமிசஸ்தர்களின் கோத்திரம்-உ௫, தாம்பிரகாரராகிய துவஷ்டப்பிரம வமிசஸ்தர்களின் கோத்திரம்-உ௫, சிலாகாரராகிய சிற்பிப்பிரம வமிசஸ்தர்களின் கோத்திரம்-உ௫, சுவர்ணகாரராகிய விஸ்வக்ஞப்பிரம வமிசஸ்தர்களின் கோத்திரம்-உ௫. ஆக கோத்திரங்கள் ௱உ௫.

## சூத்திரங்களாவன.

கருப்பாதான முதலிய சோடசக்கிரியைகளையும், யாகங்களையும் வருணாச்சிரம தருமங்களையும், அபரக்கிரியைகளையும் சொல்லுகின்ற நூல்கள் அவற்றுள்:—

ஆஸ்விலாயன சூத்திரம் மனுப்பிரம வமிசஸ்தருக்கும், ஆபஸ்தம்ப சூத்திரம் மயப்பிரமவமிசஸ்தருக்கும், போதாயனசூத்திரம் துவஷ்டப்பிரமவமிசஸ்தருக்கும், கார்த்தியாயனசூத்திரம் சிற்பிப்பிரமவமிசஸ்தருக்கும், ரௌப்பியாயன சூத்திரம் விஸ்வக்ஞப்பிரம வமிசஸ்தருக்கும், உரியனவாகும். ஆக சூத்திரங்கள் ௫.

## சாகைகளாவன.

வேதங்கள் அவற்றுள்:—

இருக்குசாகை மனுப்பிரமவமிசஸ்தருக்கும், யஜுர்சாகை மயப்பிரம வமிசஸ்தருக்கும், சாமசாகை துவஷ்டப்பிரம வமிசஸ்தருக்கும், அதர்வணசாகை சிற்பிப்பிரமவமிசஸ்தருக்கும், பிரணவசாகைவிஸ்வக்ஞப்பிரம வமிசஸ்தருக்கும், உரியனவாகும். ஆக சாகைகள்-௫.

## பிரவரங்களாவன.

*உற்பத்தி ஸ்தானங்கள் அவற்றுள்:—*

*சத்தியோஜாதப்பிரவரம் மனுப்பிரமவமிசம், வாமதேவப் பிரவரம் மயப்பிரம வமிசம், அகோரப் பிரவரம் துவஷ்டப்பிரம வமிசம், தற்புருஷப் பிரவரம் சிற்பிப் பிரம யமிசம், ஈசானப்பிரவரம் விஸ்வக்ஞப்பிரம வமிசம். ௵ பொதுப்பிரவரங்கள்-ரு.*

## சிறப்புப்பிரவரங்களாவன.

*ஒருகோத்திர ரிஷியுடன் மூன்றுரிஷிகள் சேர்ந்திருப்பது திரியாரிஷேயப் பிரவரமாகும்; ஒருகோத்திர ரிஷியுடன் ஐந்துரிஷிகள் சேர்ந்திருப்பது பஞ்சாரிஷேயப் பிரவரமாகும்; ஒருகோத்திர ரிஷியுடன் சேர்ந்த ரிஷிகள் மற்றொரு கோத்திர ரிஷியுடன் சேராதிருந்தால்,கொள்வன கொடுப்பனசெய்யலாம்; ஒரு ரிஷி இரண்டு கோத்திரத்தில் சேர்ந்திருந்தால் சமானப்பிரவர மாதலால் கொள்வன கொடுப்பன செய்யலாகாது.*

*சிறப்புப்பொருந்திய மனு மய துவஷ்ட சிற்பி விஸ்வக்ஞ ரென்று சொல்லப்பட்ட ஐந்து பிரமர்களையும் முறையே சானகரிஷி சனாதனரிஷி அபுவனசரிஷி பிரத்தனசரிஷி சுபர்னசரிஷியுமாகிய ஐந்துரிஷிகளென்று வேதங்கள் சொல்லும்.*

*அயகாரராகிய மனுப்பிரமாவை உருத்திரனென்றும், தாருகாரராகிய மயப்பிரமாவை விஷ்ணுவென்றும், தாம்பிரகாரராகிய துவஷ்டப்பிரமாவை பிரமாவென்றும், சிலாகாரராகிய சிற்பிப்பிரமாவை இந்திரனென்றும், சுவர்ணகாரராகிய விஸ்வக்ஞப்பிரமாவைச் சூரியனென்றும், வேதங்கள் சொல்லும்.*

திதிகளின்உருவம் மனுப்பிரமாவென்றும், வாரங்களின் உருவம் மயப்பிரமாவென்றும், நக்ஷத்திரங்களின் உருவம் துவஷ்டப் பிரமாவென்றும், யோகங்களின் உருவம் சிற்பிப் பிரமாவென்றும் கரணங்களின் உருவம் விஸ்வக்ஞப் பிரமாவென்றும் வேதமுதலிய பல நூல்களுஞ் சொல்லும்.

விளங்காநின்ற மனுப்பிரமாவுக்குப் பராசத்தியும், இருக்குவேதமும், ரீம் பீஜாக்ஷரமும், மூலாதாரச் சக்கரமும்,வசந்தரிதுவும், திரிகோண குண்டமும், நாககுண்டலமும், வெள்ளைக் குடையும், இரஜிதயக்ஞோபவீதமும், திரிபுண்டரகந்தமும், ஆலின் தண்டமும், வெள்ளித்தண்டமும் உரிமையாகும்.

மயப்பிரமாவுக்கு ஆதிசத்தியும், யஜுர்வேதமும் ஸ்ரீம்பீஜாக்ஷரமும், சுவாதிஷ்டான சக்கரமும், கிரீஷ்மரிதுவும், சதுஷ் கோணகுண்டமும் மகரகுண்டலமும், நீலக்குடையும்,தாமரை நூலால் ஆகிய யக்ஞோபவீதமும், ஊர்த்துவகந்தமும், அரசின் தண்டமும்,இரும்பினாலாகிய தண்டமும் உரிமையாகும்.

துவஷ்டப்பிரமாவுக்கு இச்சாசத்தியும், சாமவேதமும்,ஐயும் பீஜாக்ஷரமும், மணிபூரகசக்கரமும் வருஷரிதுவும்,வர்த்துலாகாரகுண்டமும்,அரதனகுண்டலமும், சிவப்புக்குடையும், சுவர்ணயக்ஞோபவீதமும், வர்த்துலாகாரகந்தமும்,புரசின் தண்டமும்,தாம்பிரத்தாலாகிய தண்டமும் உரிமையாகும்.

சிற்பிப்பிரமாவுக்கு ஞானசத்தியும், அதர்வணவேதமும், கிலியும் பீஜாக்ஷரமும், அநாகத சக்கரமும்,சரரிதுவும், சஷ்கோணகுண்டமும், மாணிக்கக்குண்டலமும், பச்சைக்குடையும், செம்பருத்திநூலால் ஆகிய

யக்ஞோப வீதமும், படாகாரகந்தமும், கருங்காலித்த ண்டமும்,இரும்பினுலாகிய தண்டமும் உரிமையாகும்.

விசுவக்ஞப் பிரமாவுக்குக் கிரியாசத்தியும், பிரண வமும் சவ்வும் பீஜாக்ஷரமும் ஆக்கினைச் சக்கரமும் ஹேமந்தரிதுவும், சிசிரரிதுவும், அஷ்டகோணகுண்ட மும், சுவர்ணகுண்டலமும், மஞ்சட்குடையும், சுவர்ண யக்ஞோபவீதமும், மகிழ்ச்சியைத் தருகின்ற திரிபுண் டரகந்தாக்ஷதையும் உரிமையாகும்.

விசுவேசுவரனது சத்யோஜாத முகத்திற்றோன் றிய மனுப்பிரமாவும், பராசத்தியும், மானசீய சங்கற்ப த்தினுலே உண்டாக்கியருளிய அயலோககாரரென்று சொல்லப்பட்ட மனுப்பிரம சந்ததிகளுக்கு ஆதியாகிய சானகரிஷியும், விப்பிராஜரிஷியும், காசிபரிஷியும், மனுவிஸ்வகர்ம ரிஷியும், விளங்காநின்ற விசுவாத்ம ரிஷியும், மன்யுபதரிஷியும், மாமன்யுரிஷியும், பூபல ரிஷியும், சுவர்த்தரிஷியும், விசுவவேத்தரிஷியும், சமந் தரிஷியும், சுவேதாங்கதரிஷியும், புரஞ்சயரிஷியும், பா னுமதிரிஷியும், ஜயத்குமாரரிஷியும், வனஜரிஷியும், பாஸ்வந்தரிஷியும், மதுரிஷியும், சித்திரவசுரிஷியும், தாபசரிஷியும், சுயக்ஷரிஷியும், மகிழ்ச்சியுடைய சுதப ரிஷியும், பிரபோதகரிஷியும், வசுலோசனரிஷியும், சித்திரதருமரிஷியும், ஆகிய இந்த இருபத்தைந்து ரிஷிகளின் கோத்திரங்களும், ஆஸ்விலாயன சூத்திர மும், இருக்குசாகையும், சத்யோஜாதப் பிரவரமும், உரியனவாகும்.

மேற்சொல்லிய சித்திரதருமரிஷியும், பாஸ்வந்த ரிஷியும், மாமன்யுரிஷியும், ஜயத்குமாரரிஷியும், சுவே தாங்கதரிஷியும், புரஞ்சயரிஷியும், விப்பிராஜரிஷியும், சுயக்ஷரிஷியும், விசுவாத்மகரிஷியும், வனஜரிஷியும்,

பிரபோதகரிஷியும், என்றுசொல்லப்பட்ட பதினொரு ரிஷிகளும், பஞ்சாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் சொல்லாதொழிந்த பதினான்குரிஷிகளும் திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

விசுவேசுவரனது வாமதேவத்திருமுகத்திற்றேன்றிய மயப்பிரமாவும் ஆதிசத்தியும் மகிழ்ச்சியுடனே மானசீய சங்கற்பத்தினாலே உண்டாக்கியருளிய தாருகாரரென்று சொல்லப்பட்ட மயப்பிரம சந்ததிகளுக்கு ஆதியாகிய சனாதனரிஷியும், வாமதேவரிஷியும், விசுவசக்ஷுரிஷியும், பிரதிதக்ஷரிஷியும், சுனந்தரிஷியும், மானுஷமனுரிஷியும், சனத்குமாரரிஷியும், தார்மிணிரிஷியும்,விதாத்துருரிஷியும், துவிஜதருமரிஷியும்,வர்த்தகிரிஷியும், பாவபோதமனுரிஷியும், தக்ஷுரிஷியும், சாந்தமதிரிஷியும், யாக்யசேனரிஷியும், சக்ஷுஷரிஷியும்‘ விஸ்வதக்ஷரிஷியும், விஸ்வதரிஷியும், சுமேதரிஷியும், பன்னரிஷியும், ரைவதமனுரிஷியும், பிரவரரிஷியும், ஜயதரிஷியும், பரிஷங்கரிஷியும், வித்யாந்தரிஷியும், என்று சொல்லப்பட்டஇந்த இருபத்தைந்துரிஷிகளின் கோத்திரங்களும், ஆபஸ்தம்பசூத்திரமும்,யஜுர்சாகையும், வாமதேவப்பிரவரமும் உரியனவாகும்.

மேற்சொல்லப்பட்ட இந்தரிஷிகளிலே அழகுவாய்ந்த மானுஷமனுரிஷியும், பரிஷங்கரிஷியும், பிரதிதக்ஷரிஷியும், ரைவதமனுரிஷியும், சுமேதரிஷியும், வித்தியாந்தரிஷியும், சக்ஷுஷரிஷியும், விதாத்துருரிஷியும், விஸ்வசக்ஷுரிஷியும், சாந்தமதிரிஷியும், தக்ஷரிஷியும், என்று சொல்லப்பட்ட பதினொரு ரிஷிகளும், பஞ்சாரிஷேயப்பிரவர்ரிஷிகளென்றும், எஞ்சியிருக்கின்ற பதினான்கு ரிஷிகளும், திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும், சொல்லுவார்கள்.

விசுவேசுவரனது அகோரத் திருமுகத்திற்றோன்றிய துவஷ்டப்பிரமாவும், இச்சாசத்தியும், மானசீய சங்கற்பத்திறைலே உண்டாக்கியருளியகஞ்காரரென்று சொல்லப்பட்ட துவஷ்டப்பிரம சந்ததிகளுக்கு அபுவனசரிஷியும், பத்ரதத்தரிஷியும், காண்டவரிஷியும், எக்காலமும் விசுவரூபரிஷியும், ஸ்ரீமுகரிஷியும், வர்த்தரிஷியும், எக்ஞபாலரிஷியும், புகழையுடைய குசதருமரிஷியும்,தாம்பிரகர்ப்பரிஷியும், அதிதாத்துருரிஷியும், லோகேசமனுரிஷியும், பத்மதக்ஷரிஷியும், விதக்ஷமனுரிஷியும், மேதமதியுஷியும், விஸ்வமயரிஷியும், போதாயனரிஷியும், ஜாதரூபரிஷியும், சித்திரசேனரிஷியும், ஜயசேனரிஷியும், விகனசரிஷியும், பிரபோன்னதரிஷியும், தேவலரிஷியும், வினயரிஷியும், பிரமதீக்ஷிதரிஷியும், ஹரிதருமரிஷியும், ஆகிய இந்த இருபத்தைந்து ரிஷிகள் கோத்திரங்களும், போதாயனசூத்திரமும், சாமசாகையும், அகோரப்பிரவரமும் உரியனவாகும்.

மேற்சொல்லிய ரிஷிகளிலே பத்ரதத்தரிஷியும் எக்ஞபாலரிஷியும், நியமமுடைய ஜயசேனரிஷியும், மேதமதிரிஷியும், சித்திரசேனரிஷியும், பிரம தீக்ஷிதரிஷியும் பத்மதக்ஷரிஷியுமென்று சொல்லப்பட்ட ஏழு ரிஷிகளையும், பஞ்சாரிஷேயப்பிரவரரிஷிகளென்றும் இவர்களன்றி பதினெட்டு ரிஷிகளையும், திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

விசுவேசுவரனது தற்புருடத் திருமுகத்திற்றோன்றிய சிற்பிப்பிரமாவும் ஞானசத்தியும் மானசீய சங்கற்பத்தினைலே உண்டாக்கி யருளிய பாஷாணகாரரென்று சொல்லப்பட்ட சிற்பிப்பிரம சந்ததிகளுக்கு பிரத்தனசரிஷியும், ருசிதத்தரிஷியும், வாஸ்துபதிரிஷி

யும், கௌசலரிஷியும், சனுபசரிஷியும், பிரஹர்ஷண ரிஷியும், லோகவேத்தரிஷியும், சித்திரகமனுரிஷியும், சஹஸ்ரபாகுரிஷியும், தேசிகமனுரிஷியும், இந்திரசேனரிஷியும், கிரிதருமரிஷியும், வசுதருமரிஷியும், வஜ்ரிசேதரிஷியும், விசுவபத்ரரிஷியும், பத்ரரிஷியும், தேவபத்ரரிஷியும், வியஞ்சிகரிஷியும், பிரபோதமனுரிஷியும், சக்குவரரிஷியும், வேதபாலரிஷியும், இராஜதர்மரிஷியும்,போக்தவயமனுரிஷியும், பிரக்யாமதிரிஷியும் என்று சொல்லப்பட்டவர்களாகிய இந்த இருபத்தைந்து ரிஷிகளின் கோத்திரங்களும் கார்த்தியாயன சூத்திரமும், அதர்வண சாகையும், தற்புருஷப்பிரவாரமும், உரியனவாகும்.

மேற்சொல்லப்பட்டவர்களில் சித்திரகமனு ரிஷியும், பிரத்தனசரிஷியும், தேவபத்ரரிஷியும், ராஜதர்மரிஷியும், கௌசலரிஷியும், தேசிகமனுரிஷியும், வஜ்ரிசேதரிஷியும், வசுதருமரிஷியும், பத்ரரிஷியும், சக்குவரரிஷியுமென்று சொல்லப்படுகின்ற இந்தப் பத்து ரிஷிகளும், பஞ்சாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும், சொல்லாதொழிந்த பதினைந்து ரிஷிகளும், திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

விசுவேசுவரனது ஈசானத் திருமுகத்திற் றோன்றிய விசுவக்ஞப்பிரமாவும், கிரியாசத்தியும், மானசீய சங்கற்பத்தினுலே உண்டாக்கியருளிய சுவர்ணகாரரென்று சொல்லப்பட்ட விசுவக்ஞப்பிரம சந்ததிகளுக்கு ஆதியாகிய சுபர்னசரிஷியும், விசுவக்ஞரிஷியும், பரிதரிஷியும், பெருமைபொருந்திய சௌரசேனரிஷியும், சாங்கியாயனரிஷியும், மணிபத்ரரிஷியும், முனிஸ்வரதரிஷியும், சுருதிவர்த்தனரிஷியும், யாக்ஞகரிஷியும், சௌக்ஞகரிஷியும், ஆதித்தசேனரிஷியும், ஆர்வந்தரி

ஷியும், அர்ச்சிதரிஷியும், கர்த்தமரிஷியும், பரார்ச்சித ரிஷியும், தேஜோதருமரிஷியும், சுதர்சனரிஷியும்,உப கோபரிஷியும், எக்ஞரிஷியும், சாந்துரிஷியும், உபகல் பரிஷியும், தேவசேனரிஷியும், ஆதித்தரிஷியும், நிகம ரிஷியும், உபயக்ஞரிஷியும் என்று சொல்லப்பட்ட இந்த இருபத்தைந்து ரிஷிகளின் கோத்திரங்களும், ரௌப்பியாயன சூத்திரமும், பிரணவசாகையும், ஈசா னப்பிரவரமும், உரியனவாகும்.

மேற்சொல்லியவர்களில் பரிதரிஷியும், ஆதித்த ரிஷியும், எக்ஞரிஷியும், பரார்ச்சிதரிஷியும், மணிபத் திரரிஷியும், சுதரிசனரிஷியும், ஆர்வந்தரிஷியும், உப யக்ஞரிஷியும், சாந்துரிஷியும், சாங்கியாயனரிஷியும், இவ்வாறு சொல்லப்பட்ட பத்துரிஷிகளையும், பஞ்சாரி ஷேயப் பிரவரரிஷிகளென்றும் எஞ்சிநின்ற பதினைந் துரிஷிகளையும், திரியாரிஷேயப் பிரவரரிஷிகளென் றும் சொல்லுவார்கள். முன்பு தனித்தனி ஐந்தாகச் சொன்னது பொதுப் பிரவரமாகும்; பின்புசொல்லிய பஞ்சாரிஷேயந் திரியாரிஷேயமென்னும் இரண்டை யும் சிறப்புப் பிரவரமென்று பெரியோர்கள் சொல்லு வார்கள்.

இதுவரையும் விசுவப்பிராமணர்களுடைய கோத் திரசூத்திரசாகை பிரவரங்களையுஞ்சொன்னோம்; இனி யவர்கள் உலகம் பலவித சுகங்களையும் பெறும்பொரு ட்டுச் சொல்லுகின்ற அயம், தாரு, தாம்பிரம், சிலை, சுவர்ணமுதலியவற்றால் நடாத்துகின்ற பஞ்சகிர்த்திய ங்களை மகிழ்ச்சியுடனே சொல்லுவோமென்று காளத் திமகாமுனிவர் கூறுகின்றார்.

**கோத்திராதிக ளுரைத்த வத்தியாயம்**

முற்றுப்பெற்றது.

## பன்னிரண்டாவது

# பஞ்சகிர்த்திய முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? சானகரிஷிமுத லாகிய இருபத்தைந்துரிஷி கோத்திரங்களிலே பிறந் தவர்கள் (காறுமுனே, தராசுமுனே, கதிர்முனே, எழுத் தாணிமுனே, கத்திமுனே, என்னு மைந்திறல் உலகம் சம்ரக்ஷணையாகுநிமித்தம்) நிலங்களையுழுது பயிர்செய் தற்குக் கொழுக்களையும், பண்டங்களை நிறுத்தற்குத் தராசுகளையும், ஆடைமுதலியவற்றிற்குஉபயோகமான நூல்களை நூற்றற்குக் கதிர்களையும், சகலவிஷயங்களை யும் எழுதற்கு எழுத்தாணிகளையும், உந்திக்கொடியை அறுத்தன்முதலாகியதொழில்கட்குக்கத்தியையும்,மற் றும் வேண்டுவனவாகிய வாட்படைகளையும், உடைவா ள்களையும், கைவாள்களையும், சமுதாடுகளையும், கதாயு தங்களையும், இருப்புலக்கைகளையும், மழுவாயுதங்களை யும், சக்ராயுதங்களையும், வச்ராயுதங்களையும்,சூலாயுதங் களையும், வேலாயுதங்களையும், அஸ்திரங்கள் தங்கப்பெ ற்ற அம்புக்கூடுகளையும், கையாயுதங்களையும், போர் செய்தற்குரிய பலவித பாணங்களையும், எறியாயுதங்க ளையும், கைவிடாப் படைகளையும், இன்னுமுள்ள பல வித ஆயுதங்களையும், தலைச்சீராக்களையும், அரிவாள்க ளையும், ஊசிகளையும், இருப்பு முட்களையும், சிறுசவள ங்களையும், குதிரைச் சம்மட்டிகளையும், அங்குசங்களை யும், கடிவாளங்களையும், இருப்புக்சவசங்களையும், கோ டாரிகளையும், விலங்குகளையும், பலவிதமாகிய பூண்க ளையும், குதிரை அங்கவடிகளையும், உளிகளையும், அரச

ராயுதங்களையும், மண்வெட்டிகளையும், சங்கிலிகளையும், குறடுகளையும், துலாக்கோல்களையும், பட்டடைகளையும், கட்டப்பாரைகளையும், சுத்தியல்களையும், பூட்டுகளையும் பொருந்திய திறவுகோல்களையும், பண்டியச்சுகளையும், கதவின்கீல்ககளம், முளையாணிகளையும், கதவின் தாள்களையும், அளத்தற்குரிய மரக்கால்களையும், படிகளையும், பலபல உபகரணங்களையும், இப்படிப்பட்ட உபகரணங்கள் முதலாகிய சிருஷ்டிகளை யெல்லாஞ்செய்து தருமார்த்தகாமிய மோக்ஷமென்னும் சித்திகளைப்பெற்று விளங்கும்படியாகக் கருணையுடனே பரிபாலனஞ் செய்வார்கள்.

சனுதனரிஷிமுதலாகப் பொருந்திய இருபத்தைந்து ரிஷிகோத்திரங்களிற் பிறந்தவர்கள் சிற்ப சாஸ்திரங்களிற் சொல்லியபடி நிலங்களை யுழுதற்குக் கலப்பைகளையும், யாகாக்கினியில் அவிசொரிதற்குப் பிரதானமாகிய ஸுர்க்கு என்னும் நெய்த்துடுப்புகளையும், ஸுருவமென்னும் நெய்த்துடுப்புகளையும், வில்லுகளையும், ரதங்களையும், பலவித பண்டிகளையும், பலவித வாகனங்களையும், பெட்டகங்களையும், இரணபேரி ஜெயபேரிமுதலிய பேரிகைகளையும்,துந்துபிகளையும், சப்திக்கின்ற ஒருகட்பறைகளையும், பரிசைகளையும், முல்லை,நெய்தல்,மருதம், பாலை, குறிஞ்சியெனும் ஐந்நிலப் பறைகளையும்,மத்தளங்களையும், கடவாத்தியங்களையும், உவகைப்பறைகளையும், வீணைகளையும் முழங்குகின்ற ஐந்துமுக வாத்தியங்களையும், வாயன்கறபறைகளையும், இடக்கைவாத்தியங்களையும், உடுக்கைகளையும், பலவித வாத்தியங்களையும், சுருட்டிகளையும், குடைகளையும்,சிற்றாலவட்டம் பேராலவட்டமுதலாகிய விருதுகளையும், சாமரங்களையும், முனிவர்கமண்டலங்களையும்,கதவுகளையும் கதவின்றாள்களையும், நிலைகளையும், மரக்கலங்களை

யும், ஓடங்களையும், குறுந்தறிகளையும்,விட்டங்களையும், ஸ்தம்பங்களையும், உலக்கைகளையும்,யானைமுதலியவை கட்டுந் தூண்களையும், பலகணிகளையும், யாகஸ்தம்பங் களையும், யாகபாத்திரமுதலிய பலபல பாத்திரங்களை யும், அளக்கப்படுகின்ற நாழிகளையும், கட்டில்களையும், பீடங்களையும், ஊஞ்சல்களையும், விமானங்களையும், ஏ ணிகளையும், பலவித மரத்தட்டுகளையும், சீப்புகளையும், இந்தப்பிரகாரம் பலபலவிதச் சிருஷ்டிகளெல்லாஞ்செ ய்து, பூமியிலுள்ளஆன்மகோடிக ளனைத்தும், மனம கிழ்ச்சியுடனே வாழும்பொருட்டு, பேரருள் சுரந்து அன்புடனே பரிபாலனஞ் செய்வார்கள்.

அபுவனசரிஷி முதலாகிய இருபத்தைந்து ரிஷி கோத்திரங்களில் பிறந்தவர்கள் அருமையும் பெருமை யுமுடைய வேதாகமங்களிற்கூறியபலபலவிதங்களான விக்கிரகங்களையும், வாசனைத் தூபங்கள் விளங்குதற் குச் செய்யப்படும் கருவிகளையும், அலங்கார தீபமுத லிய பலவித தீபங்கள் விளங்குதற்குச் செய்யப்படுங் கருவிகளையும், ஓசைபொருந்திய பலவித மணிகளை யும், திருச்சின்னங்கள் முதலாகிய பல வாச்சியங்களை யும், தாம்பிரம், பித்தளை, வெண்கல முதலியவற்றாலா கிய மிடாக்களையும், கொப்பரைகளையும், சேமக்கலங் களையும், படிக்கங்களையும், கலசங்களையும், செம்புகளை யும், குடங்களையும்,கைத்தாளங்கள் சாலரிமுதலியவை களையும், கொம்புகளையும், கிண்ணங்களையும், பல பாத் திரங்களையும், தகழிகளையும், அகப்பைகளையும், உண் கலமுதலாகிய கருவிகளையும், இத்தன்மையாகிய பல வித சிருஷ்டிகளெல்லாவற்றையுஞ் செய்து பூமியிலு ள்ளவர்கள் விரும்புகின்ற பலபலவாகிய சுகங்களைப் பொருந்தி வாழும்பொருட்டு அன்புடனே பரிபால னஞ் செய்வார்கள்.

பிரத்னசரிஷி முதலாகிய இருபத்தைந்து ரிஷி கோத்திரங்களிற் பிறந்தவர்கள், சிற்பசாஸ்திரங்களிற் சொல்லாநின்ற கர்ப்பக்கிருஹங்களையும், அர்த்தமண்டப மஹாமண்டப சபாமண்டபங்கள் முதலிய மண்டபங்களையும் தெய்வநிர்மாணங்களையும், பிரதிஷ்டைகளையும், நாடுகளையும், தேசங்களையும், நகரங்களையும், கிராமங்களையும், மலைசூழ்ந்த கிராமங்களையும், மலையும் நதியுஞ்சூழ்ந்த கிராமங்களையும், முல்லைநிலஞ்சூழ்ந்த கிராமங்களையும், ஐந்நூறு கிராமங்களுக்குத் தலைக் கிராமங்களையும், குறிஞ்சிநிலஞ்சூழ்ந்த கிராமங்களையும், பாலைநிலஞ்சூழ்ந்த கிராமங்களையும், மலையின் மேல் விளங்குங் கிராமங்களையும், மருதநிலஞ்சூழ்ந்த கிராமங்களையும், நெய்தனிலஞ்சூழ்ந்த கிராமங்களையும், கோபுரங்களையும், ஸ்தூபிகளையும் சந்திரகாந்தக் கற்ளாலாகிய மேடைகளையும், சுற்றுமதில்களையும்,அகழிகளையும், மதிளுறுப்புக்களையும், மதிலுண்மேடைகளையும், கோபுரவாயில்களையும், இராஜதானிகளையும், இராஜகிருகங்களையும், மாளிகைகளையும், தேவாலயங்களையும், பண்டசாலைகளையும், அழகுதங்கிய சபைகளையும், ஆஸ்தானமண்டபங்களையும், தருமசத்திரங்களையும், புகழ்மிகுந்தநாடகசாலைகளையும், பிராகாரங்களையும், பாகசாலைகளையும், எக்ஞசாலைகளையும், வித்தியாசாலைகளையும் வேதிகைகளையும், அந்தப்புரங்களையும், படித்துறைகளையும், பலபலவீதிகளையும், திருக்குளங்களையும், தடாகங்களையும் அளவில்லாத வீடுகளையும், கடைவீதிகள் முதலானவைகளையும், உலகத்திலுள்ளவர்கள் இன்பங்களை அனுபவிக்கும்பொருட்டு நிர்மாணஞ்செய்து மகிழ்ச்சியுடனே பரிபாலனஞ்செய்வார்கள்.

சுபர்ணரிஷி முதலாகப் பொருந்திய இருபத்தைந்துரிஷிகோத்திரங்களிற் பிறந்தவர்கள், கிரீடங்களை

யும், மார்பணிகளையும், பதக்கங்களையும், மாத ரணிவடங்களையும், குண்டலமுதலாயுள்ள பலபல காதணிகளையும், தலையாபரணங்களையும், வாகுச்சுட்டிகளையும், நெற்றியிலணியப்பட்ட ஆபரணங்களையும்,கைகளில்அணியப்பட்ட கங்கணங்கள், கடகங்கள், வளையல்கள், கொலுசுகள் முதலிய ஆபரணங்களையும்,மோதிரங்களையும், சந்திரஹாரங்களையும், திருமாங்கிலியமுதலிய ஆபரணங்களையும், மாதர்கள் இடையிலணியப்பட்ட முப்பத்திரண்டு கோவைமணியாபரணங்களையும், எழுகோவைமணி முதலாபரணங்களையும், பதினென்கோவைமணியாபரணங்களையும், அரைவடங்களையும், தண்டைகளையும், காற்சிலம்புகளையும், சதங்கைகளையும், பாதகிண்கிணி முதலாகிய அணியத்தக்க பலபல ஆபரணங்களையும், நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற, பலபலவிதமாகிய ஆபரணங்களெல்லாம், அன்புடனே சிருஷ்டிசெய்து பூமியினிடத்துள்ளயாவரும், இன்பத்தையடையும்பொருட்டு பெருங்கருணை சுரந்தருளிப் பரிபாலனஞ்செய்து வாழ்வார்கள்.

இதுவரையும் பஞ்சகிர்த்தியங்களின் பெருமைகளிற் சிறிதுசொன்னோம். இனி பெருமை பொருந்திய நித்தியகன்ம நெறிகளிற் சிலசில வெடுத்துச்சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

**பஞ்சகிர்த்திய முரைத்த வத்தியாயம்**

**முற்றுப்பெற்றது.**

பதின்மூன்றாவது

# நித்தியகரும முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? சூரியன் கிழக்குத் திசையிலுதிப்பதற்கு ஐந்துநாழிகை உண்டென்னுங்காலமாகிய பிராமீமுகூர்த்தத்திலே, நித்திரைவிட்டெழுந்து முதற்கடவுளாகிய விசுவேசுவரனைத்தியானித்து, பூமிதேவியை வணங்கி விநாயகக்கடவுளையும், சிவபெருமானையும், உமாதேவியாரையும், திருமாலையும், இலக்குமியையும், பிரமாவையும், சரஸ்வதியையும், இந்திரனையும், சூரியனையும், சத்குருவையும்,பிதாவையும், மாதாவையும், மனதிலே தியானித்து தேவாலயத்துக்கும், ஊருக்கும், ஈசானதிக்கொழிந்த வேறுள்ள திக்குகளிலே நூறுதண்டப்பிரமாணத்தின் அளவுக்கப்புறம்போய் உபவீதத்தை வலக்காதிலேசேர்த்து மேல் உத்தரீயத்தைத் தலைமறையச்சுற்றி மௌனம்பொருந்தி, வழியும், வீதியும், பசுமந்தைநிற்குமிடமும், மலையும், விளைநிலமும், உவர்நிலமும், குளமும், மயானமும், நதியும், மேடும், புற்றும், நந்தனவனமும், நீர்க்கரையுமாகிய இவைகளல்லாத பூமியில் தேவர்முதலானவர்கள் விலகும்பொருட்டு மூன்றுதரங் கைதட்டி, ஒரு துரும்பைச்சேர்த்து, பகலிலும் இரண்டு சந்தியாகாலங்களிலும் வடக்குமுகமாகவும், இரவில் தெற்குமுகமாகவும், நோக்கியிருந்து பசுவையும்,சந்திரனையும், சூரியனையும், அக்கினியையும் பெரியோர்களையும், பாராமல், நாசிநுனியைப்பார்த்துக்கொண்டு, மலசலவிசர்க்கஞ்செய்து பின்பு இடக்கையாற் குறியைப்பிடித்துக்கொண்டெழுந்து புண்ணியதீர்த்தமல்லாத நீர்க்க

ரையின் பக்கத்தையடைந்துஜலபாத்திரமில்லாதாயின் நீர்நிலைக்கு ஒரு சாணளவுக்கிப்பால் இருந்துகொண்டு சுத்தநிலத்துள்ள மிருதுவாகிய மண்கொணர்ந்து வலப்புறத்திலே வைத்துக்கொண்டு முந்தி அசுத்தத்தினற் றமும் பற்றுமறும்படியான சவுசஞ்செய்து பின்பு சுத்திக்காக அந்த மண்ணில் நெல்லிக்காய் பிரமாணம் எடுத்து அதனோடு ஜலத்தையுஞ் சேர்த்துக்கொண்டு குறியை ஒருதரமும், குதத்தை ஐந்துதரமும், சௌசஞ்செய்த இடக்கையைப் பத்துதரமும், இரண்டு கைகளையுஞ்சேர்த்து எழுதரமும் பூசி ஜலத்தினற் சுத்திசெய்தெழுந்து, கைகளுக்கும், கால்களுக்கும் ஒவ்வோர்தரம் பூசிச் சுத்திசெய்து சௌசஞ்செய்த இடத்தை ஜலத்திஞலே அலம்பவேண்டும்.

இவ்வாறு செய்தல் கிருகஸ்தருக்கும் இதினிரண்டு மடங்குசெய்தல் மேன்மைபொருந்திய பிரமசாரிகளுக்கும் உரியனவென்று தருமநூல்களிற் சொல்லப்படும்.

மேற்சொல்லப்பட்ட பிரமசாரிகளுக்குரிய விதியின் இருமடங்கு வானப்பிரஸ்தருக்கும், அதினிருமடங்கு சந்நியாசிகளுக்கும் உரியனவாகும். இந்தப்பிரகாரம் பொருந்திய கிரகஸ்தர், பிரமசாரி,வானப்பிரஸ்தர், சந்நியாசி என்னு நால்வரும் பகற்காலத்தில்செய்யவேண்டுமென்றும், இராக்காலத்தில் இவைகளிற் பாதிசெய்தல் வேண்டுமென்றும், ஒரு காரியார்த்தமாக வழிநடப்பவரும், நோயாளரும், மாதர்களும், இவைகளில் நான்கிலொன்று செய்தல்வேண்டுமென்றும் தருமநூல்களிற் சொல்லப்படும்.

ஜலபாத்திரத்தை கையில்வைத்துக்கொண்டு சலமலவிசர்க்கஞ்செய்யில் அந்தச் சலம் மூத்திரத்துக்குச்

சமானமாகும். அதனாற் சௌசஞ்செய்யலாகாதென்றும் உபவீதத்தைக் காதில்வைத்துக்கொள்ளாது விசர்க்கஞ்செய்யில் சௌசாசமனஞ்செய்து பின்பு ஸ்நானஞ்செய்து முன்புதரித்தவுபவீதத்தைக்களைந்துவிட்டுப் புதிய வுபவீதந் தரிக்கவேண்டுமென்றும், ஈர வஸ்திரத்தோடு விசர்க்கஞ்செய்யில் புனர்ஸ்நானஞ்செய்து மூன்றுபிராணாயாமம் பண்ணல்வேண்டுமென்றும் உத்தரீயத்தைத் தலையிற் கட்டிக்கொள்ளாது விசர்க்கஞ்செய்யில் அவனைத் தேவர்கள் சபிப்பார்களென்றும், தருமநூலுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

இவ்விதமாகச் சௌசஞ்செய்தபின் அவ்விடம்நீங்கி வேறு துறையிற்போய் வாயையும், கண்களையும், காதுகளையும், நாசியையும், கால்களின் நகங்களையுஞ் சுத்தி செய்து ஜலத்தை எட்டுதரம் வாயிற்கொண்டு இடப்புறத்திலேகொப்புளித்துத் தலையிற் சுற்றிய உத்தரீயத்தை அவிழ்த்து இடையிலே தரித்து உபவீதத்தைக் கிரமமாகத் தரித்து சிகையைமுடித்து அசுத்தங்களில்லாத தகுதியான விடத்தில் கிழக்குமுகமேனும், வடக்குமுகமேனும், பார்த்திருந்து மதுரமாகிய சுத்தநீர்கொண்டு அவரவர்களுக்குரித்தாகிய ஆசமனஞ் செய்தல்வேண்டும்.

வலதுள்ளங்கையை பசுவின் காதுபோல வைத்துக்கொண்டு ஆசமனஞ்செய்கின்ற ஜலமானது பிராமணர்களுக்கு இருதயம் வரையிலும், க்ஷத்திரியர்களுக்குக் கண்டம்வரையிலும், வைசியர்களுக்கு அண்ணாவின் வரையிலும், சூத்திரர்களுக்கும் மாதர்களுக்கும் வாய்வரையிலும், செல்லும்படி பானம் பண்ணுதல் முறைமையாகும்.

இந்தப்படி ஜலத்தை மந்திரத்துடனே மூன்று முறை பானம்பண்ணிக் கைகழுவி ஆகாயத்தைப் பார்

த்து அங்குஷ்ட விரலடியால் அதரங்களை வலப்புறந் தொடங்கி இரண்டுதரந் துடைத்து கையையலம்பி கையிலுள்ள தர்ச்சனி மத்யமை அனுமிகை என்னும் மூன்று விரல்களாலே வாயுதடுகளைத்தொட்டு அங்குஷ்ட விரல்நுனியால் வலக்கன்னத்தையும், இடக்கன்னத்தையு முறையாகத்தொட்டு அஙகுஷ்ட விரல்சேர்ந்த அனுமிகைவிரல்நுனியால்வலக்கண்ணையும், இடக்கண்ணையுந் தொட்டு அங்குஷ்டவிரல் பொருந்திய தர்ச்சனி விரல்நுனியால் வலமூக்கடியையும், இடமூக்கடியையுந்தொட்டு அங்குஷ்டவிரல்சேர்ந்த கனிஷ்டைவிரல்நுனியால் வலச்செவியையும், இடச்செவியையுந் தொட்டு அங்குஷ்டவிரல்சேர்ந்த மத்யமைவிரல்நுனியால் வலத்தோளடியையும் இடத்தோளடியையுந் தொட்டு கைவிரல்களைக்குவித்து மார்பினைத்தொட்டு விரல்களைவிரித்துச் சிரசினையும் மந்திரங்களுடனே தொடல்வேண்டும்.

**தந்தசுத்தி செய்வதற்கு!** வேம்பு, புளி, இலவு, அரசு, பேயத்தி, ஆமணக்கு, மூங்கில், நல்லபலா, முருங்கை, பட்டமரங்கள், நெல்லி, இவற்றின் கொம்புகள், சாம்பல், கைவிரல், செங்கல், கரி, மணல், பாளை, வைக்கோல் இவைகளினாலே பல்விளக்கினால் செய்த தவங்கள் நீங்கும். தீங்குண்டாகும்.

பனை, கருதாளம், பாக்கு, தாழை, ஆல், பேரீஞ்சு, தெங்கு இவை எழும் துரும்புகளுக்கு அரசாதலால் இவற்றால் மறந்தும் பல்விளக்கலாகாது.

நாயுருவி, மா, ஈஞ்சு, மகிழ், மருது, குருக்கத்தி, நாவல், ஆத்தி, குமிழ், தேக்கு, அழிஞ்சில், கடம்பு, இத்தி, சண்பகம், பூல், வேல், இலுப்பை, கொன்றை, கடு, வன்னி, விளா, நறுவிலி, இவற்றின் கொம்புகள் இல்லறத்தார்களுக் குரியனவாகும்.

சுத்தமாகிய பெருங்குமிழ், வாகை, புன்கு, நொச்சி, கருங்காலி இவற்றின் கொம்புகள் துறவறத்தார்களுக் குரியனவாகும்.

மேற்சொல்லப்பட்டகொம்புகள், கணு,கோணல், துளை, வடு இவைகளில்லாததாயும்; பசுமையுள்ள தோலொடு பொருந்தியதாயும், சிறுவிரற் பருமையுடையதாயும், இருத்தல்வேண்டும்.

மேற்சொல்லிய கொம்பினளவானது பிராமணர்கள் பன்னிரண்டங்குலநீளமும், க்ஷத்திரியர்கள் பதினோரங்குல நீளமும், வைசியர்கள் பத்தங்குலநீளமும், சூத்திரர்கள் ஒன்பதங்குலநீளமும், மாதர்கள் நாலங்குலநீளமும், துறவிகள் எட்டங்குலநீளமுங் கொள்ளல்வேண்டும்.

அவரவர்களுக் குரியதாக மேற்சொல்லப்பட்ட கொம்பைக் கழுவிக் கிழக்குமுக நோக்கியேனும் வடக்குமுக நோக்கியேனும் குக்குடாசனமாக இருந்துகொண்டு மௌனம்பொருந்தி பற்களின் வெளிப்புறத்தையும், உட்புறத்தையும், மாசறத்தேய்த்து நாவைவழித்து இடப்புறத்திலே எறிந்துவிட்டு ஜலத்தைவாயிற்கொண்டு பன்னிரண்டுதரம் இடப்புறத்திலே கொப்புளித்து பின்பு முகத்தையும், கைகால்களையும், சுத்திசெய்து ஆசமனஞ் செய்தல்வேண்டும்.

நின்றுகொண்டும் நடந்துகொண்டும் போர்த்துக்கொண்டும் தந்தசுத்தி செய்யலாகாது.

பிராமணனுக்கெதிரில் தேவதைகளும், வலதுபக்கத்தில் பிதுர்களும், பின்பக்கத்திலிருஷிகளும், வசிக்கிறபடியால் இடப்புறத்திலே உமிழவேண்டும்.

இல்லறத்தோர்கள் விஷுவத் புண்ணியகாலம், தக்ஷிணாயண புண்ணியகாலம், உத்தராயண புண்ணிய

காலம், விஷ்ணுபதி புண்ணியகாலம், ஷடசீதிபுண்ணியகாலம், பிரதமை, சஷ்டி, ஏகாதசி என்று சொல்லுகின்ற நந்தை திதிகள், அமாவாசை, பௌர்ணமி, வ்யதீபாத நாமயோகம் நவமிதிதி, சூரிய சந்திர கிரகணங்கள் என்று சொல்லப்பட்ட காலங்களிலே தந்தசுத்திசெய்தால் குலம் நசித்துப்போகும்.

மாம்பழுப்பிலைகளினாலே தந்தசுத்திசெய்யில்நன்மையுண்டாகும். அப்பழுப்பு மில்லையாகில் தருமநூல்களிற் சொல்லியபடி சுத்தஜலம் வாயிற்கொண்டு பன்னிரண்டுதரங் கொப்புளிக்கில் பரிசுத்தமாகும்.

சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் நின்றுகொண்டும், குனிந்துகொண்டும், படுத்துக்கொண்டும், காலைநீட்டிக்கொண்டும் குடுமியை அவிழ்த்துக்கொண்டும், தலையில் வேஷ்டியைக்கட்டிக்கொண்டும், காதில் உபவீதத்தை வைத்துக்கொண்டும் காலில் பாதுகையிட்டுக்கொண்டும், மேற்குத்திக்கையேனும் தெற்குத்திக்கையேனும் பார்த்துக்கொண்டும் ஆசமனஞ்செய்யலாகாது.

தடாகமுதலியவற்றில் ஆசமனஞ்செய்யில் முழங்காலளவினதாகிய ஜலத்தில் நின்று இடக்கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு வலக்கையால்ஆசமனம் பண்ணல்வேண்டும்.

துறவறத்தோர்கள் எந்நாளும் தந்தசுத்திசெய்தல் வேண்டும்.

ஸ்நானஞ் செய்வதற்கு! நதிமுதலிய ஸ்நானகட்டத்தையடைந்து உத்தரீயத்தை இடையிற்றரித்து சிகையைமுடித்து ஜலத்திலிறங்கி (நதியிலேயாயின் அதற்கெதிர்முகமாக நின்றும் தடாகமுதலியவைகளிலேயாயின் கிழக்குமுகமாக வேனும் வடக்குமுகமாக

வேனும் நின்றும்) ஆசமனம்,பிராணயாமம்,சங்கற்பம், மார்ஜனம் இவைகளை முறையே செய்து மண்ணை ஜலத்துடனே எடுத்துச் சிரசின்மேல் ஒருதரமும் உந்திக்கு மேல் இரண்டுதரமும் உந்திக்குக்கீழ் மூன்றுதரமும் ஒவ்வொருகாலுக்கு மும்மூன்றுதரமும்பூசி ஜலத்தில் மூழ்கியெழுந்து சரீரமுழுவதுங் கோசலந்தடவி இரண்டுகைஅங்குஷ்ட விரல்களால்இரண்டுகாதுகளையும், இரண்டு தர்சனி விரல்களால் இரண்டு கண்களையும், இரண்டு மத்யமை விரல்களால் இரண்டு நாசிகளையும், மூடி வேதமந்திரங்களைச் சொல்லிக்கொண்டு *ஸ்நானஞ்செய்து சூரியனுக்கெதிரில் இரண்டுகையினாலு நிரம்ப ஜலத்தையள்ளி மந்திரத்துடனே மூன்றுதரம் அர்க்கியங்கொடுத்துப் பின்பு

தேவதர்ப்பணஞ் செய்யும்போது கிழக்குமுகநோக்கி உபவீதத்தை இரண்டுகை அங்குஷ்ட விரல்களில் மாட்டிக்கொண்டு முனைபொருந்திய தருப்பையுடன் இருகையும்அஞ்சலியாகக் கீழ்நோக்கியவிரல்நுனியால் விடுநீராகிய தேவதீர்த்தத்தினாலே தேவர்களுக்குக்குச் செய்து அதன்பின்பு

உபவீதத்தை மாலையாகத்தரித்து முன்போல் அங்குஷ்டவிரல்களில் மாட்டிக்கொண்டு குடங்கைக்கும்

---

*மேற்சொல்லிய ஸ்நானஞ் செய்யும்போது இரண்டு வஸ்திரந்தரித்துக் கொண்டே ஸ்நானஞ் செய்ய வேண்டும். ஒரு வஸ்திரந் தரித்துக்கொண்டேனும், கௌபீன மாத்திரந் தரித்துக்கொண்டேனும் யாதொரு கருமமுஞ் செய்யலாகாது.

வியாதியாளர் கண்ட ஸ்நானம்,கடிஸ்நானம்,ஜங்கஸ்நானம், பாதஸ்நானம் என்னும் இவற்றுளொன்றை இயன்றபடி ஜலத்தினாலே கழுவி எஞ்சிய உடம்பை ஈரவஸ்திரத்தினாலே துடைத்துக்கொள்ளல்வேண்டும்.

கனிஷ்டைவிரலுக்கு நடுவாக விடுநீராகிய பிராஜாபத்திய தீர்த்தத்தினலே ரிஷிதர்ப்பணஞ்செய்து பின்பு,

உபவீதத்தை இடமாகத்தரித்து முன்போல்அங்குஷ்ட விரல்களில் மாட்டிக்கொண்டு அங்குஷ்டவிரலுக்கும், தர்ச்சனிவிரலுக்கு நடுவிலுள்ளசந்தில் விடுநீராகிய பிதுர்தீர்த்தத்தினலே பிதுர்தர்ப்பணஞ்செய்து நன்மைபொருந்த ஆசமனஞ்செய்து கரையில்வந்து தெற்குநோக்கி அரையிற்றரித்த உத்தரீயத்தைப்பிழிந்துசிகையின்ஜலத்தை முகத்துக்கு நேராகவிடுத்து உலர்ந்தவஸ்திரத்தால் ஈரத்தைத்துவட்டிவேறுஉலர்ந்தவஸ்திரத்தை இடையிற் புனைந்துகொள்ளல் வேண்டும்.

உலர்ந்த வஸ்திரமில்லையாயின் ஈரவஸ்திரத்தைப் பிழிந்துவிரித்துச் சூரியனுக்கெதிரில் எழுதரமுதறித் துவட்டிக்கொண்டு உத்தரீயமுமணிந்து கிழக்குத் திக்கை நோக்கி மந்திரத்துடனே விபூதியணிந்து பவித்திரந்தரித்து பிராதக்கால சந்தியாவந்தனத்தை நியதியாகச் செய்யவேண்டும்.

மேற்சொல்லிய சந்தியாவந்தனஞ் செய்யும்போது சுத்திசெய்யப்பட்ட ஸ்தலத்தில் தர்ப்பாசனம், வியாக்ரசர்மம், சித்திராசனம், பீடப்பலகை இவற்றுள் ஒன்றில் ஸ்வஸ்திகாசனமாக யிருந்துகொண்டு *சந்தியாவந்தனஞ் செய்து

*பிராதக்கால சந்தியை நக்ஷத்திரங்கள் மறையாமலிருக்கையிலும், மத்தியான சந்தியைப் பதினைந்து நாழிகையாகிய மத்தியானத்திலும், சாயங்கால சந்தியைச் சூரியன் பாதிமறைந்து கொண்டிருக்கையிலும் செய்யவேண்டும். பிராதக்கால சந்தியை கிழக்குமுகமாகவும், மத்தியான சந்தியையும் சாயங்கால சந்தியையும் வடக்குமுகமாகவும் இருந்து செய்யவேண்டும். அதன்பின்பு,

பெண்வடிவமாகச் சிறந்துவிளங்காநின்ற *காயத்திரியாகிய சந்தியா தேவதையை எட்டு வயது பொருந்தி விளங்கும் சிவந்த திருவுருவமாகத் தியானித்துச் சூரியன் உதிக்குமளவும் ஜபிக்கவேண்டும், இந்தப்பிரகாரம் ஆயிரத்தெட்டுதரம்ஜபித்து சூரியோபஸ்நானஞ் செய்து, இஷ்ட தெய்வத்தியானமும் நமஸ்காரங்களுஞ்செய்து விதிப்படி அபிவாதனமுஞ் செய்தல்வேண்டும். பின்பு சூரியன் மத்தியில் வந்த சமயத்தில் எழுந்து ஸ்நானஞ்செய்து மாத்தியான்னிக சந்தியா வந்தனமும் விதிதவறாமல்செய்து பெண்வடிவமாக விளங்காநின்ற சாவித்திரியாகிய சந்தியா தேவதையை வெண்ணிறத்திரு வுருவாகத்தியானித்துஅன்புடனே ஜபிக்கவேண்டும். விருப்பத்துடனே கொண்டாடப்பட்ட வைசுவதேவ ஹோமமும் பலிகாணமுஞ் செதுபின்பு துன்பமிருந்த வியாதியாளருக்கும் பதிதருக்கும் சண்டாளருக்கும் சுவானத்துக்கும் வாயசத்துக்கும் பலிவைத்து அதன்பின்பு வீட்டிற்கு வருகின்ற. வேதமோதுவோர் துறந்தோர் பிரமசாரி சீலமுடைய

---

*காயத்திரி மந்திரங்களை யொவ்வொரு சந்தியா காலத்திலும் தவறாமல் ஜபிக்கவேண்டும். ஆயிரமுறை ஜபித்தல் உத்தமம், நூறுமுறை ஜபித்தல் மத்திமம், பத்துமுறை ஜபித்தல் அதமம்.

மேற்சொல்லிய காயத்திரிமந்திரம் பத்துவிசை ஜபிக்கப்பட்டால் மூன்றுதினத்திற் செய்த சிறுபாவங்களெல்லா மொழியும், நூறுதரம் ஜபிக்கப்பட்டால் பாவராசிகளைச் சாந்திசெய்யும், ஆயிரமுறை ஜபிக்கப்பட்டால் உபபாதகங்களை யெல்லா நாசஞ்செய்யும், நூறாயிரமுறை ஜபிக்கப்பட்டால் மஹாபாதங்களை யெல்லாமொழிக்கும், கோடிதரம்நியமமாகஜபிக்கப்பட்டால் இஷ்டசித்திகளெல்லாம் அடையக்கூடும்.

வயோதிகர் சிறுவர் வறுமையாளர் கருப்பிணி என்னு மிவர்கள் முன்பு புசிக்கும்படி இயன்ற ஆகாரங்களைக் கொடுத்தல் வேண்டும்.

பின்பு வீதியிற் சென்று ஒரு பசுக்கறக்குநேரம் வரையில் அதிதிகளுக்காக எதிர்பார்த்திருந்துவந்தஅதிதிகளுடனே வீட்டில்வந்து பவித்திரந்தரித்து சுற்றத்தார்கள் அதிதிகள் புதல்வர்களுடன் கிழக்குமுகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் நோக்கிச் சந்தோஷமாக இருத்தல்வேண்டும். வாழை*யிலை, சண்பகவிலை, கடம்பிலை, மாவிலை, வெட்பாலையிலை, இருப்பையிலை இவைகள் போசனபாத்திரத்துக்கு உபயோகமாகும். வாழையிலையாகில் தண்டுரியாது அதனடி வலப்பக்கத்திலே பொருந்தப் போடல்வேண்டும்.

மேற்சொல்லிய போஜன பாத்திரங்களிலே தகுதியானதை ஜலத்தினாலே கழுவிப்போட்டு அதில் நெய்யினாற் புரோக்ஷித்து இரும்பல்லாத அகப்பையினால் லவணம் கறிகள், அன்னம், இவைகளை ஒன்றோடொன்று கலவாமற்படைத்த பின்பு இடக்கை அனுமிகை விரலால் போஜனபாத்திரத்தைத் தொட்டுக்கொண்டு வலக்கரத்தில் ஜலத்தைவிட்டுப் புரோக்ஷணமந்திரஞ் சொல்லி அன்னமுதலியவற்றிற் புரோக்ஷணஞ் செய்து ஜலத்தை முன்போல விட்டுக்கொண்டு பரிஷேசன மந்திரஞ்சொல்லி வலமாகப் பரிஷேசனஞ்செய்து கலத்தின் அடிப்பக்கத்தில் சிறிதுசிறிது அன்னம் ஐந்திடத்தில்வைத்து சித்திரான்ன மந்திரஞ்சொல்லி வலக்கைச் சிறுவிரலால் ஜலத்தை விடுத்து

---

*இலைதைக்குமிடத்துக் கலப்பின்றி ஒரு மரத்தினிலைகொண்டே ஒரு இலை முழுதுந் தைத்தல் வேண்டும்.

பின்பு அவ்வன்னத்தில் நல்ல நெய்யைப்படைத்து முன்போல் வலக்கையில் ஜலத்தைவிட்டுக்கொண்டு பரிஷேசனமந்திரஞ்சொல்லி வலமாகப் பரிஷேசனஞ்செய்து முன்போல ஜலத்தைக் கையில் விட்டுக்கொண்டு ஆபோஜனமந்திரஞ்சொல்லி ஆபோஜனஞ்செய்து வலக்கை அனுமிகை மத்யமை அங்குஷ்டமென்னும் மூன்று விரல்களாலும் அன்னத்தைநெய்யுடன் பிசைந்து சிறிதுசிறிதாகவெடுத்து பிராணுகுதிமந்திரஞ்சொல்லிப் பல்லிற்படாமல் அன்புடனே பிராணுகுதிசெய்து வலக்கையால் அன்னத்தைத் தொட்டுக்கொண்டு இடக்கைவிரலையெடுத்து ஜலத்திஞலேஅலம்பி ஆத்மமந்திரஞ்சொல்லி இருதயத்தைத்தொட்டு எடுத்துவிட்டுப் பின்பு மனமகிழ்ச்சியோடு விரும்பி வரன்முறையாகப் *புசிக்கவேண்டும்.

புசிக்குங்காலத்தில் விளக்கவியில்அவ்வன்னத்தை வலக்கையிஞலே மூடி விளக்கேற்றி வருமளவும் காயு

*புசிக்கும்போது அன்னத்தில் மயிர். ஈ, எறும்பு, கொசுகு, முதலியன காணப்படின் அவைகளைச் சிறிதன்னத்தோடு புறத்தே நீக்கிவிட்டுச் சுத்திசெய்து புசித்தல் வேண்டும்.

புசிப்பதற் கிடையிலே உப்பையும் நெய்யையும் படைத்துக்கொள்ளல் போஜனத்துக்குபயோகமாகாத வார்த்தைபேசல், சிரித்தல், நாய், பன்றி,கோழி, காகம், பருந்து, கழுகு, என்பவைகளையும்; புலையர், ஈனர், பூப்புடையவள் என்பவர்களையும் பார்த்தல் முதலியன ஆகாவாம்.

புசிக்கும்போது இரண்டு வஸ்திரந் தரித்துக்கொண்டே புசித்தல்வேண்டும்.

த்திரியை ஜபித்துக்கொண்டிருந்து வேறு *அன்னத்தைப் படைத்துக்கொள்ளாமல் அவ்வன்னத்தையே புசித்துக் கைழுவல்வேண்டும்.

பின்பு முன்போல ஜலத்தைக்கையில் விட்டுக்கொண்டு உத்தராபோஜனமந்திரஞ்சொல்லி உத்தராபோஜனஞ்செய்து மிகுந்த ஜலத்தை அங்குஷ்டவிரல் நுனியால் இலையில்விடுத்து எழுந்து வெளியில் வந்து கைகழுவி ஜலம் வாயிற்கொண்டு எட்டுதரம் இடப்புறத்திலே கொப்புளித்து வாயையும் கைகளையும் கால்களையும் சுத்திசெய்து பின்பு ஆசமனஞ்செய்துபுசித்தவையெல்லாம் ஜீரணமாகி இன்பத்தை தரக்கடவதென்று மந்திரஞ்செபித்து பாக்கு வெற்றிலை முதலியவைகளெல்லாம் புசித்து அதன்பின்

புகழ்பொருந்திய நூல்களை ஓதியும் அவற்றின் பொருள்களை யுணர்ந்தும் பகற்பொழுதைக் கழித்து சூரியன் அஸ்தமனகிரியை அடையப்படுங்காலத்தில் செய்யவேண்டிய சாயங்கால சந்தியாவந்தன கருமங்களைத்தன்னுடையகிருகத்தில் செய்யவேண்டும். அப்படிச்செய்வதிலும் பசுக்கள் தங்குவதாகிய கொட்டிலில் செய்வதனால் விசேஷபலனுண்டாகும். அதிலும் நந்தவனத்திற் செய்வது விசேஷம், அதிலும் நதியிற் செய்வது விசேஷம், அதிலும் நதிசங்கமத்திற் செய்வதுவிசேஷம், அதிலும் குற்றமில்லாத தேவாலயத்திற்செய்வது விசேஷம்.

பெண்வடிவாய் விளங்காநின்ற சரஸ்வதியாகிய சந்தியாதேவதையை ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் உதிக்குமளவும் தியானித்து ஜபிக்கவேண்டும்.

---

*அன்னமல்லாத பண்டங்கள் புசிக்கில்நான்குதரம் வாய்கொப்புளித்து ஆசமனஞ் செய்தல்வேண்டும்.

ஜபகாலத்தில் பெரியோர்கள் வந்தால் அவர்களை நமஸ்கரித்து உபசரித்து க்ஷேமங்களைவிசாரித்து அவர்கள் அனுமதிபெற்றுப் பின்பு ஜபத்தை மௌனமாகச் செய்யவேண்டும் காயத்திரிமுதலிய மந்திர ஜபத்தை வாயாற்சொல்லி ஜபிப்பதாகிய வாசிகமாகச் செய்தால் ஒருபங்குபலனையும் மந்திரங்கள் அந்நியருக்குக்கேளாமல் மெதுவாக உச்சரிப்பதாகிய உபாம்சுவாக ஜபித்தால் ஒன்றுநூறுபலனையும் மந்திரத்தின் எழுத்துக்களை வரிசையாகத் தியானிப்பதாகிய மானசிகமாக ஜபித்தால் ஒன்று ஆயிரம் பலனையுந் தரும்.

சகலபாபங்களையும் ஒழிக்கத்தக்கதாகிய காயத்திரியை உத்தமபக்ஷம் ஆயிரந்தரமும் மத்தியமபக்ஷம் நூறுதரமும் அதமபக்ஷம் பத்துதரமும் பிரதிசந்தியைகளிலும் தப்பாமல் ஜபிக்கவேண்டும்.

விரலால் எண்ணிஜபிப்பதினால், ஒருபங்கும் விரலின் ரேகைகளால் எண்ணுவதினால் எண்மடங்கும், ஜீவரத்தினங்களால் எண்ணுவதினால் பத்துப்பங்கும், சங்கமணியினால் நூறுபங்கும், பவளத்தால் ஆயிரம்பங்கும், ஸ்படிகத்தால் பதினாயிரம்பங்கும், முத்துக்களால் நூறாயிரம்பங்கும், தாமரைமணிகளால் பத்துலக்ஷம்பங்கும், பொன்மணிகளால் கோடிபங்கும், தர்ப்பத்தால் செய்த பவித்திரமுடியாலும், ருத்திராக்ஷங்களாலும், எண்ணிஜபித்தால் கணக்கல்லாத பங்குமானபலனைத் தரும்.

ஜபமாலையில்மணிகள் ௱அ-உத்தமம், ருச-மத்திமம் உஎ-அதமம், நடுவில்சம்பாஷித்துக்கொண்டும் நடந்துகொண்டும் செய்த ஜபம் நிஷ்பலம்.

அதன்பின்பு அக்கினிகாரியங்களையும் வைசுவதேவமுதலிய நியதிகளையுஞ் செய்து அதிதிகளை உப

சரித்து போஜனம் படுக்கை முதலானவைகளை இய ன்றவரையில் கொடுத்து தானும்போஜனஞ்செய்து ஆசமனம்பண்ணி விஷ்ணுவின் திருவடிகளைத்தொ ழுது கருடமந்திரத்தை ஜபித்து பரமபதியை வணங் கித்துதித்து தலைப்பக்கத்தில் தீபமும் நிறைந்த நீர்க் குடமும் வைத்து படுக்கையின்மேல் எக்காலமும் வட க்குத்திக்கை ஒழித்து கிழக்குத்திக்கிலேனும் தெற் குத்திக்கிலேனும் மேற்குத்திக்கிலேனும் சிரசைவை த்து முறைமையாக கற்புடைய மனைவியைத் தழுவிக் கொண்டு நித்திரைசெய்தல் கிருகஸ்தருக்குரிய ஒழு க்கமாகும்.

தன் வீட்டிற் கீழ்த்திசையினும், தன்மாதுலன், வீட்டிற்றென்றிசையினும், வேற்றூரில் வதியின் மேற் றிசையினுந் தலைவைத்துறங்கவேண்டு மென்பார்.

இதுவரையும் நித்தியகரும விதிகளைச்சொன்னோ ம். இனிகர்ப்பாதான முறையைச் சொல்லுவோமென் று காளத்திமுனிவர் சொல்லுகின்றார்.

நித்தியகரும முரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

பதினான்காவது

## கர்ப்பாதான முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? ஒப்பில்லாத அழ கினையுடைய மாதர்கள் வீட்டுக்கு விலக்கான அன்றை

யத்தினத்தில் புலைச்சிக்குச்சமானமும் இரண்டாந்தினத்தில் பிரமஹத்தி செய்தவளுக்குச்சமானமும் மூன்றாந்தினத்தில் வண்ணாத்திக்குச் சமானமும் என்று சொல்லப்பட்டதனாலே அம்மூன்றிராத்திரியும் வீட்டிற்குவெளிப்புறத்திற்பொருந்தி யிருத்தல் நீதியாகும்.

* வீட்டுக்கு விலக்காகிய மாதர்கள் பகலிலே ஒருதரம் புசித்தலன்றி இரண்டாந்தரம் புசித்தலும், இரவிற்புசித்தலும், வேறுவிலக்காயுள்ள மாதர்களைத்தொடுதலும், பகலிலே நித்திரை செய்தலும், கணவனுடனேபேசுதலும், கணவனெதிரே நிற்றலும், வீட்டுக்குளிருத்தலும், நெற்குத்தலும், பாக்கு வெற்றிலை தின்றலுமாகிய இவைகளெல்லாம் தீங்கைவிளைவிக்கும்.

மாதர்கள் இராத்திரி பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள் வீட்டுக்குவிலக்கானால் முதனாள்முதற்கொண்டு மூன்றுதினமும், மேற்சொல்லிய பதினெட்டேமுக்கால் நாழிகைக்கு மேற்பட்டு வைகறைப்பொழுதிலேனும்,அதற்குப்பின்பேனும்,விலக்கானால்அன்றையதினமுதற்கொண்டுமூன்றுதினமும்மேற்கூறியவிதிப்படியிருந்து,நாலாந்தினத்தில் சூரியோதயமாகி ஆறுநாழிகைக்குமேல் ஸ்நானஞ்செய்துதன்கணவனைமனதில்

---

*வீட்டுக்கு விலக்காயுள்ள மூன்றுதினமும் சரீரசுத்திக்கு வேறு ஒருவரைத்தண்ணீர்தரச்சொல்லி,சரீரசுத்தி செய்தல்வேண்டும்தான்புண்ணியநதிகளைத்தொடுதலும் கிணற்றிலேதண்ணீர் இறைத்தலும் சமையல் செய்தலும் ஆகாது. தானிருக்கும் இடமுதல்பதினாறு அடிவரையில் தீட்டாகுமாதலால் தனக்குச்சமீபத்தில், விறகினாலேனும், புல்முதலியவற்றாலேனும் மறைத்துக்கொண்டிருத்தல் வேண்டும். அப்பாலுள்ள நிலத்திற்குத் தீட்டில்லை.

நினைத்துச் சூரியனைத் தரிசித்து, வீட்டிற்குவந்து அன்று முழுவதும் வீட்டிலிருக்கின்ற பாத்திரங்களைத் தொடாமல், ஐந்தாந்தினத்தில் ஸ்நானஞ்செய்து கணவனுக்குவேண்டிய பணிவிடைகளைச் செய்தற்குச் சுதந்தரமுடையவராவார்கள்.

மேற்சொல்லிய நாலாந்தினத்தில் தானிருந்தவிடத்தைப் பசுவின் சாணத்தினாலே மெழுகிப் பாத்திரங்களை நன்றாகத்தேய்த்துப் புண்ணியநதிகளல்லாத குளம், ஏரி, வாய்க்கால் முதலிய இடங்களிலே புடவைகளைத் துவைத்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும். ஸ்நானஞ்செய்தவுடன் சிறிது உப்பும், அரிசியும், புசித்துக் கணவன் முகத்திலே விழித்தல் வேண்டும். வேறு புருஷர் முகத்தில் விழித்தலாகாது,

மாதர்கள் வீட்டுக்கு விலக்காகி ஸ்நானஞ் செய்த தினமுதல் பன்னிரண்டுதினமும் கருப்பமுண்டாகின்றகாலமாகும். அத்தினங்களில் இரட்டைநாட்களிற் கருத்தரிக்கில் ஆண்குழந்தையும் ஒற்றைநாட்களிற் கருத்தரிக்கில் பெண்குழந்தையு முண்டாகும். ஆதலால் ஆண்குழந்தையை விரும்பிவிதிக்கப்பட்டகாலங்களைத் தெரிந்து கொண்டு நிஷேகமுகூர்த்த தினத்தில், நாயகியும் நாயகனும் ஸ்நானஞ்செய்து, புதிய வஸ்திரங்கள் தரித்து, மலர்மாலைகள், சந்தனம் ஆபரணங்கள்முதலியவைகளை அணிந்து, நாயகியை நாயகன் இடதுபக்கத்தில் இருக்கும்படிசெய்து, அவவாறு அவவிருவரும் கிழக்குமுகமாக இருந்த பின்பு, புரோஹிதர் புண்யாஹவாசனம், கலசபூசை, ஓமம்வளர்த்தல், உதகசாந்திமுதலிய கிரியைகளையெல்லாஞ் செய்து ஆசீர்வாதம் பண்ணியபின்பு, அன்றிரவில் அவ்விருவரும் பாலும் அன்னமும் இன்பத்துடனே புசித்தல்வேண்டும்.

அதன்பின்பு கேளிக்கிருகத்தில் பலதானமுதலிய வெல்லாஞ் செய்து நாயகியினது நாபிஸ்தானத்தில் நாயகனது வலதுகையை வைத்து,சவுதரிசனமென்று சொல்லப்பட்ட மகாமந்திரத்தைச் சொல்லியபின் மன்மதனூலின்படி, நாயகி, நாயகனிருவர்களும் இன்பம் பெருகும்படியான புணர்ச்சிமுதலியபோகங்களை அனுபவிப்பது முறையாகும்.

இவ்வாறு நாயகிநாயகனிருவரும் இராக்காலத்தில் புணர்ச்சி செய்யும்போது சுக்கிலமானது சுரோணிதத்துடனே சேர்ந்து ஜலமயமாகிப்பின்புஏழாந்தினத்தில் குமிழியாகி, முப்பதாந்தினத்தில் பிண்டமாகி, இரண்டாமாதத்தில் அப்பிண்டத்திற்குச் சிரசுண்டாகி, மூன்றுமாதத்தில் கால்களுங்கைகளுமுண்டாகி,நாலாமாதத்தில் கைகால்களில் விரல்களுண்டாகி, ஐந்தாமாதத்தில் பின்பாகங்களுண்டாகி ஆறுமாதத்தில் கண்களுங்காதுகளுமுண்டாகி,ஏழாமாதத்தில் பிராணனுண்டாகி,எட்டாமாதத்தில் அவயவங்களெல்லாமுண்டாகி, ஒன்பதாமாதத்தில் அறிவுண்டாகி, பத்தாமாதத்தில் பூஸ்பரிசமாகப்பிறந்த குழந்தைக்குத் தர்மார்த்த காம மோக்ஷமென்று புகழப்பட்ட புருஷார்த்தமாகிய நான்கு பிரயோஜனத்தையும் அடையும்படி சொல்லப்பட்ட கர்ப்பாதானமுதலாகிய புகழ்மிகுந்த சமஸ்காரங்களை யெல்லாம் அவரவர்களுக்கு விதித்த சூத்திரப்பிரகாரமேசெய்யவேண்டுமென்று மேலோர்கள் சொல்லுவார்கள்.

இவ்விதமாகிய ஒழுக்கத்தோடு நடக்கும் பெண்களுக்கும் அறிவுடைய புருடர்களுக்கும் நிஷேகமுகூர்த்தம் செய்வதற்கு நல்லமாதத்தில் உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், ரோகணி, சதயம், ரேவதி, அஸ்தம், மூலம், சுவாதி, அனுஷமுமாகிய இந்த நக்ஷத்திரங்கள் உத்தமமாகும்.

சித்திரை, புனர்பூசம், பூசம், அசுவனி, மிருகசீரிடம், அவிட்டம், இந்த நக்ஷத்திரங்கள் மத்திமமாகும். மற்று முள்ள நக்ஷத்திரங்களும், ஜன்ம நக்ஷத்திரமும், அனு ஜன்மநக்ஷத்திரமும், திரிஜன்மநக்ஷத்திரமும் தீதாகும்.

நிஷேகமுகூர்த்தத்திற்கு அஷ்டமி,பௌர்ணமி, அமாவாசை *ரித்தைதுவாதசி இந்தத்திதிகள் தீதாகும். சஷ்டி, மத்திமமாகும். இவைகளன்றி யுள்ளனவாகிய திதிகள் உத்தமமாகும். சுக்கிரவாரம்,புதவாரம், சோம வாரம், குருவாரம் இவைகள் நன்றாகும் பானுவாரம் அங்காரகவாரம், சனிவாரம் இவைகள் தீதாகும்.

நிஷேகமுகூர்த்தத்திற்குக்கடகம்,மிதுனம், சிங்க ம், கன்னி, மீனம், தனுசு, துலாம், விருஷபம், இந்த லக்கினங்கள் உத்தமமாகும்.சுபக்கிரகங்கள்பலமுண்டா கப்பார்க்கில் மற்றுள்ளனவாகிய இலக்கினங்களும் உத் தமமாகும். லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் எந்தக்கிர கமிருந்தாலும் தீதாகும் லக்கினத்தில் சூரியன் சனி அங்காரகன் புதன் என்று சொல்லப்பட்ட கிரகங்களி ருந்தாலும் தீதாகும்.

நிஷேகமுகூர்த்தத்திற்கு சந்திரனானவன் லக்கி னம் நாலாமிடம், ஏழாமிடம், பத்தாமிடம்இவைகளில் இருக்கினும்,புதன் ஒன்பதாமிடம் ஏழாமிடம் இவை களில் இருக்கினும், சுக்கிரன் குரு இவர்கள் லக்கினம் ஐந்தாமிடம் ஒன்பதாமிடம் இவைகளில் இருக்கினும், பாவக்கிரகங்களெல்லாம் மூன்றாமிடம் பதினோராமி டம்,ஆறாமிடம் இவைகளில் இருக்கினும் நன்மையுண் டாகும்.

சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஏழாமிடத்தில் அங் காரகனும் சனியுமிருக்கில், பெண்ணுக்கும் பிள்ளைக்

* ரித்தைதிதிகளாவன-சதுர்த்தி நவமி சதுர்த்தசி.

கும் வியாதியுண்டாகும் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இருபக்கத்திலும் அங்காரகன், சனி இருக்கில் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் அழிவுண்டாகும். சந்திரனுக்குப் பன்னிரண்டாமிடத்திலும் நாலாமிடத்திலும் அங்காரகன் சூரியனிருக்கிலும் சந்திரனுக்கு இருபக்கத்திலும் பாவர்கள் இருக்கிலும் பெண்ணுக்கு மரணமுண்டாகும்.

இதுவரையும் விளங்காநின்ற வேதவிதிப்படி செய்தற்குரிய கர்ப்பாதானவிதியை இனிமையாகச் சொன்னோம்; இனி அந்தக்கர்ப்பாதானக்கிரியையினால் மாதாவினது கர்ப்பாசயத்துள் தங்கிவளர்கின்ற சிசுவானது தீர்க்காயுளைப்பெறும்பொருட்டுச்செய்யும் பும்ஸவனக்கிரமங்களைச்சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் சொல்லுகின்றார்.

கர்ப்பாதான முறைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

பத்தொந்தாவது

## பும்சவன முறைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? விதிப்படி செய்தற்குரிய பும்ஸவனமென்னுங் கிரியையானது கருத்தரித்து மூன்று, நான்கு, ஆறு, எட்டு என்றுசொல்லப்படுகின்ற மாதங்களில், ஒன்றில் பூருவபக்ஷத்தில் சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பௌர்ணமி அமாவாசை நீங்கிய மற்றையதிதிகளில் திங்கள், புதன், வியாழம், வெள்ளி

என்றுசொல்லப்பட்ட சுபவாரங்களில் பூசம் திருவோணமுதலிய சுபநக்ஷத்திரங்களில் மிதுனம் கன்னி கடகம் இவைகளொழிந்த மற்றையசுபலக்கினங்களில்,சந்திரனானவன் உச்சஸ்தானத்தை யாவது ஆக்ஷிஸ்தானத்தையாவது நவாமிசமுதலிய சுபவருக்கங்களிலே யாவது பலத்திருக்கவும்சுபக்கிரகங்கள் தங்கள் தங்கள்கேந்திரகோணஸ்தானங்களிலே பொருந்தியிருக்கவும் பாவக்கிரகங்கள் மூன்றாமிடம் பதினோராமிடம் எட்டாமிடம் இவைகளில் இருக்கவும் எட்டாமிடஞ் சுத்தமாயிருக்கவும் புகழ்ந்துரைக்கப்பட்ட பும்ஸவனம் என்னுஞ்சடங்கினை ஆரம்பித்துச் செய்துமுடித்தல் உத்தமமாகும்.

ஆயிரமாகுதியினாலாவது, நூற்றெட்டாகுதியினாலாவது, அக்கினியில் ஒமஞ்செய்து ஆலமரத்திலுள்ள மொக்குளையும், உழுந்தையும்,அம்மியில் வைத்துப்பால் விட்டு அரைத்து வெண்மையாகிய வஸ்திரத்தில் வைத்து முடிந்து கருப்பவதியைக் கிரமப்படி கிழக்குமுகமாக நிமிர்த்திருக்கச்செய்து அதற்குரிய மந்திரங்களைச்சொல்லி ஆண் குழந்தையை விரும்பினால் வலது நாசியிலும், பெண்குழந்தையை விரும்பினால் இடது நாசியிலும், பிழிந்து அதை இரேசகபூர்வகமாகவாங்கி வாயினாலுண்ணச்செய்தல் வேண்டும்.

கருப்பாதான முதலிய சோடசக் கிரியைகளைச் செய்யத்தொடங்குவதன் முன் அக்கருமங்கள் இடையூறின்றி முடிதற்பொருட்டு விளங்காநின்ற விக்நேஸ்வரபூஜை செய்து அதற்குமேல் புண்யாஹவாசனமும் பிதுர்க்களுக்கு மகிழ்ச்சியைத்தருவதான * நாந்தீமுக

* நாந்தீமுகமாவது-சுபகருமங்கள் செய்யத்தொடங்குவதன்முன் பிதுர்க்களைக் குறித்துச் செய்யுமொருவகைச்சிராத்தம்.

மென்னுங் கிரியையுஞ்செய்து மேற்சொல்லிய கிரி யைகளைச்செய்தல் முறைமையாகும்.

செய்தற்குரிய பும்ஸவனம், சீமந்தம், சவுளம்,உப நயனம் மனேப்பீஷ்டங்களெல்லாம் நிறைவேறுநிமித் தம் அனுஷ்டிக்கும் விரதங்கள், விவாகமென்று சொ ல்லப்பட்ட இந்தக்கருமங்களுக்கெல்லாம் இரக்ஷாபந்த னஞ்செய்து கொள்ளல்வேண்டும்.இன்றி யமையாமற் செய்யவேண்டுவனவாகிய நாமகரணம் அன்னப்பிரசா னம் என்னுமிவ்விரண்டு கிரியைகளுக்குநீக்கி மற்றை யகிரியைகளுக்கெல்லாம் விதிவழுவாமல் அக்கினிவள ர்த்து ஓமஞ்செய்யவேண்டுவது முறைமையாகும்.

மனைவியானவள் கர்ப்பவதியா யிருக்குங் காலத் தில் அக்கர்ப்பவதியின் கணவன் நல்லபயனை அடைய வேண்டுமென்னும் விருப்பத்துடனேஒருவர்செய்கின் றதானங்களைப் பெறுதலும், இஷ்டதேவதைகளை வழி படுவதற்குரிய தேவாலயங்களையும், வீடுமுதலியவை களை நூதனமாகச்செய்தலும், திருவிழாமுதலிய கரு மங்களைச்செய்தலும், தன்னைப்பெற்ற தாய்தந்தை யர்களுக்கல்லாமல் மற்றையோர்களுக்குஉத்தரகிரியை முதலிய கருமங்களைச் செய்தலும், புண்ணியகாலங்க ளில் சமுத்திர ஸ்நானஞ்செய்தலும், தீர்த்தயாத்திரை செய்தலும், பந்துக்களாயுள்ளவர்கள் வீட்டிலும் விருந் தினராகச்சென்று புசித்தலும் க்ஷவரஞ்செய்து கொள் ளலுமாகிய இக்கருமங்களெல்லாந் துன்பத்தைத்தரு மென்று மேலோர் சொல்லுவார்கள்.

இதுவரையும் பும்ஸவனக்கிரமத்தைச் சொன்னே ம்; இனிப்புகழ்பெற்ற சீமந்தகிரியைநடத்தவேண்டிய விதியையுஞ் சொல்லுவோமென்று காளத்திமாகமுனி வர் கூறுகின்றார்.

**பும்ஸவன முறைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.**

## பதினாறாவது
# சீமந்த முறைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? மேன்மை பொருந்திய சீமந்தமென்னுங்கிரியையானது,கருப்பமடைந்த நான்காமாதம் ஆறுமாதம் எட்டாமாதம் என்னுமிவற்றுள் யாதாமொருமாதத்தில் உரோகணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி,மிருகசீரிடம்,அஸ்தம்புனர்பூசம், இரேவதி, திருவோணம்,பூசமுதலிய நல்லநக்ஷத்திரத்தில் குற்றமற்ற சுபவாரங்களில்பூருவபக்ஷத்திற் பொருந்திய சதுர்த்தி சஷ்டி நவமி பௌர்ணமி அமாவாசை துவாதசியென்னுந் திதிகளை நீக்கி மற்றைய திதிகளில் சோதிடநூல்களின் விதிப்படிசிங்கலக்கினமும் விருச்சிகலக்கினமும் தீதாகும், சுபக்கிரகங்கள் இருப்பதும் பார்ப்பதுமான மற்றையலக்கினங்கள்நன்மையாகும். கருப்பவதியின் ஜன்மநக்ஷத்திரமும் அனுஜன்மநக்ஷத்திரமும், திரிஜன்ம நக்ஷத்திரமும், மூன்று நக்ஷத்திரமும், ஐந்தாநக்ஷத்திரமும், ஏழாநக்ஷத்திரமும், வயினுகத்தாரையாகிய இருபத்திரண்டாநக்ஷத்திரமும் சந்திராஷ்டகமும் தீதாகும்; முகூர்த்தலக்கினத்துக்கு எட்டாமிடஞ் சுத்தமாகவு மிருக்கவேண்டும்.

கருப்பவதியான சீமந்தப்பெண்ணை நூதன வஸ்திராபரணங்களாலே அலங்கரித்து விதிப்படி யலங்கரித்தவிடத்தி லிருக்கச்செய்து நூற்றெட்டாகுதியால் அக்கினியில் ஓமஞ்செய்து அத்திக்கொம்பு, பச்சைத் தருப்பை, பன்றியின்முள் இவைகளைக் கற்றையாகச்

சேர்த்து கணவன் கையால் அப்பெண்ணினுடைய நாபிஸ்தானத்தில் வைத்து அதனின்றும் வேதமந்திரங் களை யுச்சரித்துக்கொண்டு நேரே உச்சிவரையிலிழுத் து வகிர்தல் விதியாகும்.

கருப்பமடைந்த ஏழாவது மாதத்தில்துன்பமுண் டாகா திருக்கும்படி இராகு கேது நீங்கலாகிய சப்த கிரகங்களையும், முறைமையாகப்பூசித்து எட்டாவது மாதத்தில் திருவோணம் உரோகணி யென்றுசொல் லப்பட்ட சுபநக்ஷத்திரத்தில்,திங்கள், புதன், வியாழம், வெள்ளியென்றுசொல்லப்படும். சுபவாரங்களில் பூரு வபக்ஷத்தில்,சத்தமி, துவாதசி யென்னுந்திதியில் காலை யிலாவது, உச்சிக்காலத்திலாவது, விஷ்ணுவைக்கிரமப் படி ஆவாகனஞ்செய்து அருக்கியமுதலியசோடசோ பசாரங்களாலும் பூசித்து நூற்றெட்டாகுதி மந்திரத் துடன் ஓமஞ்செய்து பிரமதேஜசுடன் விளங்கும் பிரம சாரிகளெண்மர்களை யழைத்து அவர்களுள்ளமகிழும் படி அன்னம்படைத் துண்ணச்செய்வதுவிஷ்ணுபலி யென்னுங் கிரியையாமென்று மேலோர்கள் சொல் லுவர். இவ்விதமாகச்செய்து

கருப்பவதியை பிரசவஸ்தானத்தில் சேர்ப்பதற்கு அஸ்தம்,சுவாதி,உரோகணி,உத்திரம்,உத்திராடம், உத் திரட்டாதி,சித்திரை,திருவோணம்,அசுவதி, புனர்பூச ம், மிருகசீரிஷம்என்னுநக்ஷத்திரங்களில் ஞாயிறு, செ வ்வாயொழிந்துள்ள மற்றையவாரங்களில்; சதுர்த்தி நவமி, சதுர்த்தசி திதிகளுமல்லாமல் மற்றையதிதிகளி ல்; சகுனி,சதுஷ்பாதம்,நாகவம், கிமிஸ்துக்கினம் என் னும் விஷ்டிகரணங்கள் நீங்கிய மற்றைக்கரணங்களில் கும்பம், விருச்சிகமென்னு மிலக்கினங்களையுநீக்கி,நன் மைகளைத் தருவதான மற்றச்சுபலக்கினங்களில் கருப் பவதியினது ஜன்மராசிக்குப்பொருத்தமில்லாத ஆறு, எட்டு, பன்னிரண்டாம் ராசிகளல்லாத மற்ற இராசிஸ்

தானங்களிலொன்றைக்கோமயாதிகளால்மெழுகி அவ்விடத்தில் கடுகு,எள், இவ்விரண்டினையும் நெருப்பின் மேலிட்டுப் புகையச்செய்து பின்பு வயதின்முதிர்ந்த சுமங்கலிகளுடனே கருப்பவதியை அவ்விடத்திலிருக்கச்செய்யவேண்டும்.

இதுவரையில் பரிசுத்தமாகிய சீமந்த விதியைச் சொன்னோம். இனி சாதகன்மக்கிரியையின் றன்மையைச்சொல்லுவோமென்று காளத்திமுனிவர் கூறுகின்றார்.

**சீமந்த முறைத்த வத்தியாயம்**
முற்றுப்பெற்றது.

**பதினேழாவது**

## சாதகன்ம முறைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? கருப்பவதி குழந்தையைப் பெற்றகாலத்தில் பிதாவானவன் பகற்காலமாயிருந்தாலும் இராக்காலமாயிருந்தாலும்நதிமுதலிய நீர்நிலைகளில் * திடீரெனக்குதித்து ஸ்நானஞ்செய்து கோதானம்,சுவர்னதானம்,பூதானம்,வஸ்திரதானம்,நெல்விரைதானமுதலிய பலவாகியதானங்களையுஞ் செய்

* திடீரெனக்குதித்தற்குக் காரணம்-அக்காலத்து மேலே யெழுநீர்த்திவலைகளுக்குப் பிதுர்க்கள் கையேற்று நிற்பாராதலின் நீர்த்திவலைகள்மேலே செல்லுதற்கென்க.

து மற்றுஞ்செய்யவேண்டிய கிரியைகளையும் விதிப்படி செய்யக்கடவன்.

புத்திரோற்சவமானகாலத்திலும், யாகங்களைச்செய்கின்ற காலத்திலும், சந்திர சூரிய கிரகணங்களிலும் பன்னிரண்டுமாதப் பிரவேசபுண்ணிய காலங்களிலும், இக்காலத்தில் நீரிலிறங்கி ஸ்நானஞ்செய்வது விதியென்று தருமசாஸ்திரங்க ளெடுத்துச்சொல்லும்.

குழந்தைக்கு முலைப்பால் அருத்துவதற்கு முன்னும் நாபிக்கொடியைச் சேதிப்பதற்கு முன்னும், அந்தக்குழந்தையின் சர்வாங்கமும் நனையும்படி வெந்நீரினால் ஸ்நானஞ்செய்வித்துப் பின்பு அக்குழந்தையின் முகத்தைப் பிதாவானவன் பார்த்து மனமகிழ்ச்சியுடையவனாகி வெல்லம், நெய், தேன், இம்மூன்றையுமொன்றாகக் கலந்துமத்தித்து அதனை அக்குழந்தையின் நாவிற்படும்படி தடவிப் பின்பு தாயினது அழகு பொருந்திய வலது ஸ்தனத்தைச் சுத்தமாகிய நீரினாலலம்பி அந்தக்குழந்தைக்கு வயிறுறவுண்பித்து அதன் நாபிக்கொடியைத் துண்டித்து அதன்பின்பு தாளிப்பனையோலையில் ஜாதகமெழுதுவித்தல் விதியாகும்.

மேற்சொல்லிய அக்குழந்தை பிறந்த மூன்றுநாள், ஐந்தாநாள், ஏழாநாள் என்றுசொல்லப்பட்டதினங்களில் அக்குழந்தையைக் கிடத்தியிருந்தபடுக்கையை நன்றாகவுதறி வேறேபடுக்கையிட்டு அப்படுக்கையிற் கிடத்தல்வேண்டும். பத்தாநாளில் பிதாவானவன்செவ்வையாக க்ஷவரஞ் செய்துகொண்டு பரிசுத்தமாகிய நீரில் ஸ்நானஞ்செய்து பதினோராவதுதினத்தில் சாஸ்திரங்களிற் சொல்லியபடி வெண்கலப்பாத்திரங்களைச் சாம்பலினாலும்,பித்தளைப்பாத்திரங்களை நெய்யினாலும், தாம்பிரப்பாத்திரங்களைப்புளியினாலும், ஈயப்பாத்திரங்

களையும்,இருப்புப்பாத்திரங்களையும், சாணத்தினுலும், சுத்திசெய்து வஸ்திரங்களை வண்ணான்வெள்ளாவியில் வைத்துத் தோய்த்துத் தரச்செய்து மண்பாத்திரங்களையும், பாய்முதலிய பல பொருள்களையும், வீட்டுக்கு வெளிப்புறத்திலே யெறிந்துவிட்டு வீடுமுழுமையும் மண்ணினுலும் பசுவின்சாணத்தினுலும், நன்ராய்மெழுகச்செய்து அக்குழந்தையை ஸ்நானஞ்செய்வித்து வேறிடத்தில் பரிசுத்தமானவர்களா லெடுத்துச் சேர்க்கச்செய்து பின்புதாய்தந்தையரிருவரும்ஸ்நானஞ்செய்து புண்ணியாவாசனத்தை விதிப்படிசெய்வித்து ஆசாரிமந்திரபூர்வகமாக அமைத்துக் கொடுக்கும் பஞ்சகௌவியத்தை வாங்கி யருந்துதல் சிறப்பாகும்.

## பாலாரிஷ்டம்.

பிள்ளைபிறந்த லக்கினமுதலாகப் பன்னிரண்டு ஸ்தானங்களிலும் நவக்கிரகங்களிருந்து கொடுக்கும் பூர்வகன்மபலாபலங்களைக் கிரமமாகத்தெரிந்து கொள்ளல்வேண்டும். குழந்தை பிறந்த லக்கினமானது உயிரென்றும்,சந்திரலக்கினமானது உடலென்றும்,கணிதநூல்வல்லோர்களும் மேலோர்களும் சொல்லுவர்.

சன்மலக்கினுதிபதியும், குருவும், சுக்கிரனும்,சாதகனுக்கு நன்மையைத்தரும்படி கேந்திரகோணங்களிருந்தால்பூரணுயுசுடையதாயிருக்கும்; ஜனனகாலத்தியதிதியினுலும், வாரத்தினுலும், நக்ஷத்திரத்தினுலும், இலக்கினத்தினுலும், குழந்தைக்கு நேரிடும் துன்பமானது குருவானவர் கேந்திரம் பெற்றிருந்தால் நிவர்த்தியாகும்.

சூரியன் பரணியிலும், சந்திரன் சித்திரையிலும், அங்காரகன் உத்திரட்டாதியிலும், புதன் அவிட்டத்திலும், குரு கேட்டையிலும், சுக்கிரன் பூராடத்திலும்,

சனி இரேவதியிலும், தங்கியிருக்குங்காலத்தில் குழந்தைபிறக்குமாயின் பிறந்த சிசுவுக்கே துன்பத்திற்கிடமாகும்.

உத்திரம், பூராடம், பூச மிவற்றின் முதற்பாதத்திலும், சித்திரையின் முதலிரண்டு பாதத்திலும், அஸ்தம், பரணி, இவற்றின் மூன்றாம்பாதத்திலும், குழந்தைபிறக்குமாயின் பிதாவினுக்குடனே துன்பமுண்டாகுமென்று கணிதநூல் வல்லோர் சொல்லுவர்.

பூசம், சித்திரை, பூராடம் என்னு மிந்த மூன்று நக்ஷத்திரங்களில் வரும் இரண்டாம்பாதத்தில்குழந்தை பிறந்தால் தாய்க்கும், மூன்றாம் பாதத்தில் குழந்தைபிறந்தால் பிறந்த குழந்தைக்கும், நான்காம் பாதத்தில் குழந்தைபிறந்தால் அம்மானுக்கும், பூசம் பூராடமென்னு நக்ஷத்திரங்களின் மூன்றாம்பாதத்தில் குழந்தைபிறந்தால் சகோதரர்களுக்கும், அரிஷ்டமுண்டாகுமென்று கணிதநூலோர் சொல்லுவர்.

அஸ்வதி, மகம், மூலம், இந்த நக்ஷத்திரங்களின் முதற்பாதத்திலும், ஆயிலியம் கேட்டை இரேவதி இம் மூன்றுநக்ஷத்திரங்களிலும், நான்காம்பாதத்திலும்,வரும். நாழிகையில் முதல்நாழிகையில்பிதாவுக்கும், இரண்டாம் நாழிகையில் தாய்க்கும், மூன்றாவது நாழிகையில் சகோதரர்களுக்கும், நான்காவது நாழிகையில் பிறந்த சிசுவுக்குந் துன்பமுண்டாகும்.

ஜன்மலக்கினத்திற்கு மகிழ்ச்சியைத்தருகின்ற ஐந்து,ஒன்பது என்னும்கோணங்களில் சூரியன்நீசமடைந்திருப்பின் பிதாவுக்கும், சந்திரன் நீசமடைந்திருப்பின் மாதாவுக்கும், செவ்வாய் நீசமடைந்திருக்கில் சகோதரர்களுக்கும், புதன் நீசமடைந்திருப்பின் மாம

னுக்கும், குருநீசமடைந்திருப்பின் தாயைப்பெற்றபாட்டனுக்கும், சுக்கிரன் நீசமடைந்திருப்பின் தாயைப்பெற்றபாட்டிக்கும்,சநிநீசமடைந்திருப்பின்பிறந்த சிசுவுக்கும் கண்டமென்று சொல்லுவர்.

சன்மநக்ஷத்திரம் திதி லக்கினம் இவைகளின் ஞன் காம்பாதத்திற் பிறந்தால் பிறந்த குழந்தைக்குத்துன்பமுண்டாகும். சந்திரலக்கினத்திற் கேழாமிடத்தில்அங்காரகனும், சநியுமிருந்தால், தாய்க்குத் துன்பமுண்டாகும். சூரியனின்ற லக்கினத்திற் கேழாமிடத்தில் அங்காரகன் சநிஎன்கிற பாபக்கிரகங்களிருக்குமாகில்பிதாவுக்கரிஷ்டமுண்டாகுமென்று கணிதநூலோர் சொல்லுவர்.

சனனராசியிலும், சந்திரனிருந்தராசியிலும், பாபக்கிரகங்களிருந்தாலும், சந்திரலக்கினாதிபதியும், சன்மாதிபதியும், தம்மிற் பகையுடையவராயிருந்தாலும், பிறந்த சிசுவுக்குத் துன்பமுண்டாகும்.

சன்மலக்கினத்திற் சூரியனுஞ் சந்திரனும், எட்டாமிடத்திற் பாபக்கிரகங்களும், சன்மலக்கினத்தில் அங்காரகனும், கேதுவும், ஏழாமிடத்திற் சூரியனும், நான்காமிடத்தில் அங்காரகனும், சன்மலக்கினத்திற் சனியும், சுபக்கிரகங்கள் பார்வையைப் பெறாமல் இருந்தாலும், பார்த்தாலும், பிறந்த குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

சன்மலக்கினத்திலும், அதற் கேழாமிடத்திலும், பாபக்கிரகங்களோடு க்ஷீணசந்திரன் கூடியிருந்தாலும் சன்மலக்கினத்திற் சூரியனும், சந்திரனும், இருக்க அங்காரகனாற் பார்க்கப்பட்டாலும், சன்மலக்கினத்தில் சந்திரனும், பன்னிரண்டாமிடத்தில் சூரியனும், ஐந்

தாமிடத்திற் சநியும், எட்டாமிடத்தில் அங்காரகனும், இருப்பார்களாயின் பிறந்த குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

சன்மலக்கினத்திற் சந்திரனிருக்க அதற்குமுன்னும் பின்னும் பாபக்கிரகங்களிருந்தாலும், நான்கு, ஏழு, எட்டென்னு மிடங்களிற் பாபக்கிரகங்களிருந்தாலும், சன்மலக்கினத்திற் சூரியனிருந்தாலும், அவனோடு பாபக்கிரகங்கள் சேர்ந்திருந்தாலும், பத்தாமிடத்தில் அங்காரகனும், சநியும், சேர்ந்திருந்தாலும், அல்லது தனித்தனி யிருந்தாலும், பிறந்த குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

சன்மலக்கினத்தில் இராகுவும், ஏழாமிடத்திற் சூரியனும், நான்காமிடத்தில் அங்காரகனும், வலியுற்றிருந்தாலும், ஒன்று, ஏழு, எட்டு, பன்னிரண்டாமிடத்தில் சந்திரன்பாபக்கிரகங்களோடுசேர்ந்திருந்தாலும், அவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்காவிட்டாலும், குழந்தைக்குத் தோஷமுண்டாகும்.

சன்மலக்கினத்தில் க்ஷீணசந்திரனும், இரண்டெட்டு பன்னிரண்டென்று சொல்லப்பட்டஸ்தானங்களில் பாபக்கிரகங்களுமிருக்க ஒன்று, நான்கு, ஏழு, பத்தென்னும் கேந்திரஸ்தானங்களைச் சுபக்கிரகங்கள் பார்க்காவிடினும், சன்மலக்கினத்தில் க்ஷீணசந்திரனிருக்க எட்டாமிடத்தில் அங்காரகன் பாபக்கிரகங்களோடுசம்பந்தப்பட்டிருந்தாலும், குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

சன்மலக்கினத்திற் சூரியனைவன்சுபக்கிரகங்களின் பார்வையைப்பெறுமற் றனித்திருக்க மற்றெந்த லக்கினங்களிலாவது சுபக்கிரங்களுடனே சந்திரன் கூடியிருந்தாலும், சன்மலக்கினத்திலும்ஏழாமிடத்திலு

ம் பாபக்கிரகங்கள்வலியுற்றிருக்க பாபக்கிரகங்களோடு சந்திரனுஞ் சேர்ந்திருந்தாலும் குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்களான சூரியன், செவ்வாய்,சநி,இவர்களிருந்தால் தாய்க்குத்துன்பமுண்டாகும். மூன்றாமிடத்தில் சூரியன், அங்காரகன், சநி, இவர்கள் வலியுற்றிருந்தால் சகோதரர்களுக்குக் கண்டமும், நான்காமிடத்தில் அங்காரகனும், எட்டாமிடத்திலிராகுவும், பன்னிரண்டாமிடத்திற் சநியும், இருப்பார்களாகில் பிறந்த குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

ஐந்தாமிடத்திலேனும், பத்தாமிடத்திலேனும்,அங்காரகனிருந்தால் அம்மானுக்குத் துன்பமுண்டாகும். சநியிருந்தால் குழந்தைக்குத் துன்பமுண்டாகும். சந்திரனிருந்தால் தாய்க்குத் துன்பமுண்டாகும். சூரியனிருந்தாற் பிதாவுக்குத் துன்பமுண்டாகும். நான்காமிடத்திலு, மெட்டாமிடத்திலும், பாபக்கிரகங்கள் இருப்பார்களாயின் குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

ஆறாமிடத்திற் சூரியனிருந்து ஏழாமிடத்தில் அங்காரகனுஞ் சநியுமிருந்தால் பிதாவுக்கும் குழந்தைக்கும் மரணமுண்டாகும். மேலெடுத்துச் சொல்லிய ஆறாவது வீட்டில் சந்திரனும், சந்திரலக்கினத்திற் கேழாமிடத்தி லங்காரகனும், சநியும், மாறாம லிருப்பார்களாயின் தாய்க்கும் குழந்தைக்குந் துன்பமுண்டாகும்.

ஏழாமிடத்திலும், எட்டாமிடத்திலும், சநி யிருந்தால் குழந்தைக்குத் துன்பமுண்டாகும். ஏழாமிடத்தில் மண்டலவரிசையாக பாவக்கிரகங்களிருந்தால்தாய்க்குத் துன்பமுண்டாகும். ஏழாமிடத்தில் சூரியனிருந்துபாபக்கிரகங்களாற் பார்க்கப்பட்டாலும், குற்றமற்ற பிதாவிற்குத் துன்பமுண்டாகும்.

எட்டாமிடத்திற் பாபக்கிரகங்களிருந்து க்ஷீண சந்திரன் கிரமமாகக்கேந்திரம் பெற்றிருந்தாலும், குழந்தைக்குத் துன்பமுண்டாகும். ஆறாமிடத்தில் சந்திரனானவன் பாபக்கிரகங்களோடு சம்பந்தப்பட்டு இருப்பானாகில் மாதாவுக்குத் துன்பமுண்டாகும்.

ஒன்பதாமிடத்தில் இராகுவிருந்தால் பிதாவுக்குத் துன்பமுண்டாகும். பன்னிரண்டா மிடத்திலேனும், பத்தாமிடத்திலேனும், ஐந்தாமிடத்திலேனும், மகிழ்ச்சிபொருந்திய சூரியனும், அங்காரகனும், சநியுமிருப்பார்களாயின் பிதாவுக்குத் துன்பமுண்டாகும். பதினொன்று ஒன்பது இந்தஸ்தானங்களில் சநியும், அங்காரகனுமிருந்தாற் சிசுவுக்குத் துன்பமுண்டாகும்.

பன்னிரண்டு, ஒன்பது, எட்டு, இந்த ஸ்தானங்களில் சூரியனும், கிருஷ்ணபக்ஷ சந்திரனும், அங்காரகனும், சநியும், இருப்பார்களாயின் பிறந்த சிசுவுக்குத் துன்பமுண்டாகும். பன்னிரண்டாமிடத்திற் சூரியனும், அங்காரகனு மிருப்பார்களாயின் மாதாவுக்கும், சிசுவுக்கும் துன்பமுண்டாகும்.

ஐந்து, ஒன்பது, எட்டு, பன்னிரண்டு, என்னுமிந்தஸ்தானங்களில் க்ஷீணசந்திரனும், சூரியனும்,சநியும், அங்காரகனுமிருந்தால், குழந்தைக்குத் துன்பமுண்டாகும். ஐந்தாமிடத்தில் வெற்றிபொருந்திய சூரியனும் சந்திரனும், சநியும், அங்காரகனும், இருப்பாராயின் பிதாவுக்கும், சிசுவுக்குந் துன்பமுண்டாகும்.

எட்டாமிடத்தில் பாபக்கிரங்களிருக்குமாயின்பிறந்த எழாவது நாளுக்குள் சிசுவுக்குத் துன்பமுண்டாகும். சன்மலக்கினத்தில் ராகுவும், சநியும், சம்பந்தப்பட்டிருக்கவும், எழாமிடத்தில் சந்திரனிருக்கவும், சூரியனாவது, அங்காரகனாவது, சம்பந்தப்பட்டிருந்தா

ல் ஜனித்த பத்துநாளைக்குள் குழந்தைக்குத் துன்ப முண்டாகும். சன்மலக்கினத்தில் சநியோடு மற்றைப் பாவக்கிரகங்கள் சம்பந்தப்பட்டிருந்தால் பதினாறுநா ளைக்குள் குழந்தைக்குத் துன்பமுண்டாகும்.

நான்காமிடத்தில் வளர்பிறைச் சந்திரனும், ஆறா மிடத்தில் சூரியனும், தங்கியிருப்பார்களாயின் பதி னெட்டுநாளையில் குழந்தைக்குத் துன்பமுண்டாகும். எட்டாமிடத்திற் சூரியனும், சந்திரனும், வலியுற்றிரு க்க அவர்களோடு சநியும், அங்காரகனுஞ் சம்பந்தப்ப ட்டிருந்தாலும், பார்த்தாலும், இருபத்தைந்து நாளுக் குள் குழந்தைக்குத் துன்பமுண்டாகுமென்று சொல் லுவர். எட்டாமிடத்திற் சுக்கிரனும், சூரியனும், அங் காரகனும், சநியும், சம்பந்தப்பட் டிருப்பார்களாயின் முப்பது தினத்துக்குள் குழந்தைக்குத் துன்பமுண் டாகும்.

எட்டாமிடத்திற் சூரியனும், சந்திரனும், இருந் தால் பிறந்தகுழந்தைக்குக் கண் குருடாகுமென்றுசொ ல்லுவர். மேற்சொல்லிய எட்டாமிடத்திலும், ஆறா மிடத்திலும், சந்திரன் பாபக்கிரகங்களுடன் சம்பந்தப் பட்டிருந்தால், நேத்திரபங்க முண்டாகும். பன்னிர ண்டாமிடத்திற் சூரியனும், சந்திரனும், பொருந்தி யிருக்க அவர்களை அங்காரகனும், சநியும், பார்த்தால் ஒளிபொருந்திய இடது நேத்திரத்துக்குப் பங்கமுண் டாகுமென்று சொல்லுவர்.

பன்னிரண்டாமிடத்திற் சநியிருந்தால் வலதுநே த்திரமும், அங்காரகனிருந்தா லிடது நேத்திர பங்க மாகும். மேற்சொல்லிய பன்னிரண்டாமிடத்தில் சந் திரனுஞ் சூரியனுமாகிய விருவருஞ் சம்பந்தப்பட்டிரு ந்தால் நேத்திரபங்க முண்டாகும். பன்னிரண்டாமி

டத்தி லிருக்குங் கிரகங்களை அங்காரகனும், சநியும், பார்ப்பாராகில் நேத்திரபங்கமுண்டாகும். அப்பன்னி ரண்டாமிடத்திற் சுபக்கிரகங்கள் இருந்தாலும், பார்த் தாலும், மேலெடுத்துச்சொல்லிய சகலதோஷங்களும் நிவிர்த்தியாகும்.

சன்மலக்கினத்தி லிராகுவும், குளிகனும் ஜன்ம லக்கினாதிபதியும், எட்டாமிடத்திற் சூரியனும், ஒன் றாகச்சேர்ந்து பாவக்கிரகராசித் திரேகாணத்தி லிரு ந்தால் குழந்தையானது கொடிசுற்றிக்கொண்டு பிறக் குமென்று சொல்லுவர்.

சன்மலக்கினத்தில் பாபக்கிரகங்களுக்குரிய ஆட் சி ஸ்தானமே உதயலக்கினமாகி அவ்விலக்கினத்தில் இராகுகேதுக்க ளிருந்தால் மாலைதரித்தும், கொடி சுற்றிக்கொண்டும், குழந்தை பிறக்கும்.

சன்மலக்கினத்திற்கும் பாவக்கிரகங்களிருக்கும், லக்கினத்திற்கும் மத்தியில் இராகுகேதுக்களிருக்கசன் மலக்கினத்தைச் சூரியன், அங்காரகன் பார்த்தாலும், மேஷம், ரிஷபம், சிங்கம், இந்த ஸ்தானங்கள் சன்ம லக்கினமாக அதில் சநியும், புதனும், கூடியிருந்தாலும் குழந்தையானது தேகத்திற் கொடிசுற்றிக்கொண்டு பிறக்கும்.

சன்மலக்கினத்தையாவது, சந்திரலக்கினத்தை யாவது, சுபக்கிரகங்களின் பார்வையைப்பெறாத இரா குகேதுக்கள் பார்த்தாலும், சுபக்கிரகங்களாற் பார்க்கப் படாத இராகுகேதுக்கள் கேந்திரஸ்தானங்களி லிருந் தாலும், கீர்த்திபொருந்திய குழந்தையானது இப்பூமி யினிடத்துக் கொடிசுற்றிக்கொண்டு பிறக்கும்.

இதுவரையில் குற்றமில்லாத அந்தக் குழந்தையி னுடைய பலாபலங்களை யெடுத்துச்சொல்லும் சாதக

ன்மக்கிரியா விதிகளிற் சிலவற்றைச் சொன்னோம்; இனி நாமகரணஞ்செய்யவேண்டிய விதிகளை யெடுத்தொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர்கூறுகின்றார்.

சாதகன்ம முரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

## பதினெட்டாவது

## நாமகரண முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? மேற்சொல்லிய நாமகரணஞ் செய்வதற்குக் குழந்தைபிறந்த தினமுதலாகக்கொண்டு பதினொன்றுபன்னிரண்டு என்றுசொல்லப்பட்ட தினங்களின் முற்பகற்காலத்தில் அஸ்வதி, அவிட்டம், மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், உத்திரம், உத்திராடம், ரேவதி, சதயம், அஸ்தம், மூலம், அனுஷம், உரோகணி, மகம், சுவாதி, திருவோணம் என்று சொல்லப்பட்ட நக்ஷத்திரங்களும், சுபக்கிரக வாரங்களும், பௌர்ணமி, அமாவாசை அஷ்டமி, இருத்தையாகிய சதுர்த்தி, நவமி, சதுர்த்தசியுமல்லாத திதிகளும், எட்டாமிடஞ் சுத்தமடைந்த ஸ்திரலக்கினத்திலும், சுபக்கிரகங்கள் பலமடைந்து நிற்பார்களாயின் உபய லக்கினங்களும், நாமகரணக்கிரியை நடத்துவதற்கு நன்மையாகும்.

உச்சக்கிரகங்களாவது, நட்புக்கிரகங்களாவது பார்த்தாலும், சேர்ந்திருந்தாலும் சுபக்கிரகங்களுடைய

காலவோரையும், உதைய லக்கினத்துக்கு நன்ருகவமைந்த சுபக்கிரகத் திரேகாண லக்கினங்களும், நன்மையாகும். நீசக்கிரகங்கள், பார்வையுள்ள லக்கினங்கள், நாமகரணக் கிரியை செய்வதற்குத் தீதாகும்.

உலகத்திலுள்ளவர்களெல்லாஞ் சந்தோஷமடையும்படி நூற்றெட்டாகுதி அக்கினியில் ஓமஞ்செய்து அக்குழந்தையின் சிரசின்மேல் அட்சதைகளா லாசீர்வதித்துத் தங்கள் குலதேவதைகளின் பெயர் தத்தம் குடிகளிற் பிறந்த பெரியோர்களின் பெயர், அல்லது மற்றுமுள்ள பெயர்களில் ஜன்மநக்ஷத்திரங்களுக்குப் பொருந்த மங்களகரமாயும், அர்த்தபுஷ்டியுள்ளதாயும், கேட்பவர்க்கினிமையுண்டாகத் தக்கதுமான பெயர்களில் ஒன்றை தந்தையானவன் குழந்தைக்குத் தரித்தல் கிரமமாகும். இவ்வாறு தரிக்கும் பெயர்களின் அந்தியத்தில் பிராமண வருணத்தார் சர்மாவென்பதையும், க்ஷத்திரிய வருணத்தார் வர்மாவென்பதையும், வைசிய வருணத்தார் பூதியென்பதையும், சூத்திரவருணத்தார் தாசனென்பதையு முரிய பட்டப்பெயர்களாக வழங்கி வரும்படி தரிக்கவேண்டும்.

பிறந்த குழந்தைக்கு நாமகரணஞ் செய்யுமிடத்து ஆண்குழந்தையாஞல் இரட்டைப்பட்ட வெழுத்துக்களாலும், பெண் குழந்தையாஞல் ஒற்றைப்பட்ட வெழுத்துக்களாலும், பெயரிட்டழைத்த பின்பு இரண்டுகைகளாலும், அக்குழந்தையினுடைய பாதங்களிலும், புயங்களிலும், சிரத்திலு மக்ஷதையிட்டாசீர்வதிக்கவேண்டும்.

குழந்தைக்கு பால்புகட்டுவதற்குக் குழந்தை பிறந்த பத்து, பதினறு, முப்பத்தொன்று, முப்பத்திரண்டென்று சொல்லப்பட்ட ஒரு நல்லதினத்தில், நாமகரணக் கிரியையினுக் கெடுத்துச்சொல்லப்பட்ட நட்சத்திர

முதலியவைக ளமைந்த சுபலக்கினத்தில் அமிர்தசஞ் ஜீவியென்னு மந்திரத்தை, ஜெபித்துக் குழந்தையின து சிரசில் அக்ஷதையிட்டு, அதற்குமேல் பாலடையினு லக்குழந்தைக்குப் பாலருத்துதல் விதியாகும். மேல்நா மகரணக்கிரியைகளுக்குச் சொல்லிய சுபதினங்களில் குழந்தையையன்புடனே அழகிய தொட்டிலிலே ஏற் றுதல் கிரமமாகும்.

குழந்தைக்கு மங்களகரமுண்டாகவும், பேரழகுமி குந்து விளங்கவும், விதிப்படி செய்யவேண்டிய காது குத்தலென்னுங் கிரியையைச் செய்வதற்குக் குழந்தை பிறந்த தினமுதலாகப் பன்னிரண்டாவது, பதினுருவ து, தினங்களிலாவது, ஆறு, ஏழு, எட்டு, பத்தென்னு மாதங்களிலாவது, உச்சிப்பொழுதுக்கு முற்பட்டபகற் காலத்தில்,சுபகருமங்களுக்குரியதான மிருகசீரிஷம், திருவாதிரை,புனர்பூசம்,பூசம், இரேவதி, சித்திரை, திருவோணம், அஸ்தம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அவிட்டமென்னு நட்சத்திரங்களும், சுபக்கிரக வாரங்களில் பூர்வபட்சத்துதியை, திரிதியை, பஞ்சமி, சஷ்டி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரையோதசி, என்று சொல்லப்பட்ட திதிகளில் மீனம், மிதுனம், ரிஷபம், கடகம், துலாம், கன்னியென்னும் லக்கினங்களுங் காதுகுத்தலென்னுங் கிரியையைச் செய்வதற்கு உத்தமமாகும். மேஷம் மகரமென்று சொல்லப்பட்ட இவ்விரண்டு லக்கினங்களு மத்திமமாகும்.

பெரியோர்களால் விலக்கிச் சொல்லப்பட்ட கும்பம்,விருச்சிகம் சிங்கமென்னு மிலக்கினங்களும்,காலை மாலையென்னு மிரண்டு சந்தியாகாலங்களும், அபரான்ன சாயான்ன காலங்களாகிய உச்சிப்பொழுதுக்குப் பிற்பட்ட காலங்களும், இராக்காலங்களும், இரண்டு திதிகளாவது,இரண்டு நக்ஷத்திரங்களாவது,ஒரு தினத்

தில் பகற்காலத்திலேயே வரப்பட்ட வாரங்களும்,காது குத்தலென்னுங் கிரியையை நடத்துவதற்காகாதென்று சொல்லுவர். எட்டாமிடஞ் சுத்தமாக விளங்காநின்ற லக்கினங்களும் நடுப்பகலாகிய வுச்சிக்காலமும் ஒருதினத்தின் பகற்பொழுதெல்லாம் பூர்ணமாயிருக்கின்ற திதிகளும்,நட்சத்திரங்களும், பொருந்துமாயின் அதையன்புடனே யாவரும் நல்லதென்று சொல்லுவர்.

ஐந்து, இரண்டு, ஏழு, ஒன்பது,மூன்று, பதினொன்று, இந்த ஸ்தானங்களிற் சந்திரனிருந்தாலும் மூன்று, ஆறு, பதினொன்று, இந்த ஸ்தானங்களிற் பாபக்கிரகங்களிருந்தாலும் நல்லதாகும். எட்டாமிடத்திற்புதனும், ஆறு, ஏழு, எட்டென்னுமிந்தவிடங்களில் மதிக்கத்தக்க சுக்கிரனும் பத்து, ஆறு, எட்டென்னுமிடங்களில் குருவுமிருந்தால் காதுகுத்துவதற்குத் தீதாகும்.

இதுவரையும் நாமகரணக்கிரியா விதியைக் கிரமமாகச் சொன்னோம். இனி மேற்சொல்லிய குழந்தைக்கு எல்லா நன்மைகளுமுண்டாகும்படி செய்யப்படுவதான பெருமை பொருந்திய வுபநிஷ்கிரமண விதியையுங் கிரமமாகச் சொல்லுவோமென்று காளத்தி மகா முனிவர் சொல்லுகின்றார்.

**நாமகரண முரைத்த வத்தியாயம்**
முற்றுப்பெற்றது.

## பத்தொன்பதாவது
# உபநிஷ்கிரமண முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரதமகாராஜனே? சிறப்பினையுடைய உபநிஷ்கிரமணமென்னுங் கிரியைக் கிரமமாகச் செய்

வதற்குக் குழந்தைபிறந்த மூன்ருவது மாதத்தில், அக் குழந்தைக்கு சுபகாரியங்களுக்குரியதாகியதிதிவாரநட் சத்திர லக்கினங்களில், சூரியதரிசனஞ் செய்வித்து, குழந்தை பிறந்த நான்காவது மாதத்தில் சுபவார திதி நட்சத்திரலக்கினங்களில் அக்குழந்தைக்கு பசுவினை யும்,சந்திரனையும்தரிசனஞ்செய்வித்து, நான்காவதுமா தத்தில், சந்திமிதித்தலென்னுங் கிரியையைச் செய்வ தற்குப் புனர்பூசம், பூசம், அஸ்தம், மிருகசீரிஷம், சித் திரை, சதையம், உரோகணி, அனுஷம், திருவோண ம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி அவிட்டம், ரேவதி, என்று சொல்லப்பட்ட நல்லநக்ஷத்திரங்களும், சுபக்கிரகவாரங்களும் நன்ருகும். பௌர்ணமி, அஷ்ட மி, இருத்தை முதலிய திதிகளையும், பாவக்கிரகங்களி ன் பார்வையைப்பெற்ற லக்கினங்களையும் நீக்கி, பத்தா மிடஞ் சுத்தமாயிருக்கப்பெற்ற மற்றைய சுபலக்கினங் களில், குழந்தையை யழகுபொருந்தச் சிங்காரித்து நூ ருகுதிமேலோங்கி வளராநின்ற வக்கினியில் ஓமஞ்செ ய்து அதற்குப்பின்பு அக்குழந்தையைப்பெற்ற பிதா வானவன் குழந்தையினது உச்சியை மோந்து நான்கு பெரியோர்களா லாசீர்வதிக்கச் செய்து பலவிதமங்கள வாத்தியங்களொலிக்கவும், மாமனானவன் அந்தக்குழந் தையை யெடுத்துக்கொண்டு நாற்சந்தி முச்சந்தி முத லிய சந்திகளை மிதிக்கச்செய்து சிவாலய முதலிய தங் கள் தங்களிஷ்ட தேவதைகளின் கோயிலுக்குட் சென் று அன்புடனேகாத்துரட்சிக்கவேண்டுமென்னும் பிரா ர்த்தனையோடு கடவுளை வணங்கச்செய்து ஆலயத்தை விட்டுத் திரும்பி வீட்டுக்குவருதல் கிரமமாகும்.

மேற்சொல்லிய குழந்தைக்குத் திருவாபரணந்தரி ப்பதற்குத் திங்கள், புதன், வெள்ளி, வியாழம், சனி யென்று சொல்லப்பட்ட வாரங்களும், பிரதமை, சஷ்

டி, ஏகாதசி, பௌர்ணமி, யென்னுந் திதிகளும், மிருகசீரிடம், திருவோணம், பூசம், உரோகணி, சதயம், அனுஷம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சித்திரை, இரேவதி, விசாகம், அஸ்வதி, அஸ்தம் என்று சொல்லப்பட்ட நக்ஷத்திரங்களும் நல்லதாகும்.

கேந்திர ஸ்தானங்களிலும், கோணஸ்தானங்களிலும், சுபக்கிரகங்களிருக்க மூன்று, ஆறு, பதினொன்றென்னும் ஸ்தானங்களிற் பாவக்கிரகங்கள் பொருந்தியிருக்கக் கடகலக்கினத்திற் சுக்கிரன், புதன், குரு, இவர்கள் கூடியிருக்க எட்டாமிடஞ் சுத்தமாகப்பெற்ற தனுசு, மீனம், கன்னி, மிதுனம், ரிஷபம், என்றுசொல்லப்பட்ட லக்கினங்களுளொன்றில் குருவானவர் தன்னங்கிசமடைந்திருக்குங்காலத்தில் குழந்தைக்குத் திருவாபரணஞ் சூட்டுவது நன்மையாகும்.

மேஷம், சிங்கம், என்னுமிலக்கினங்களே யுதைய லக்கினமாயிருந்தாலும் அல்லது அவ்விலக்கினங்களில் சூரியனிருந்தாலும், குரு, மீனம், தனுசு, கடக லக்கினங்களிலிருக்க இவைகளே யுதைய லக்கினமாயிருந்தாலும் உதைய லக்கினத்திலும் ஒன்பதாமிடத்திலும் சந்திரனுனவன் வுச்சம்பெற்றிருந்தாலும், ஏழாமிடத்தில் குருவானவரிருந்தாலும், குழந்தைக்கு ஆபரணந் தரிக்க நன்றாகும்.

மேற்சொல்லிய குழந்தைக்குக் கோடிவஸ்திரம் தரிப்பதற்கு, புதன், வியாழம், வெள்ளி, என்னு மூன்றுவாரங்களும் உத்தமமாகும். ஞாயிறு திங்களென்னுமிவ்விரண்டு வாரங்களும் மத்திமமாகும். செவ்வாய், சநி, யிவ்விரண்டு வாரங்களும் அதமமாகும். சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அமாவாசியை அஷ்டமி, யித்திதிகளாகாவாம். அஸ்தம், உத்திரம், உத்திராடம், உத்தி

ரட்டாதி, புனர்பூசம், பூசம், அஸ்வதி, சதயம், அனுஷம், விசாகம், உரோகணி, சுவாதி, சித்திரை, அவிட்டம், இரேவதி, ஆகிய இந்த நக்ஷத்திரங்கள் நல்லதென்று சொல்லுவர்.

சிங்கம்,மகரம்,மேஷம்,விருச்சிகம்,கும்பம், தனுசு இவையொழிந்த மற்றைய லக்கினங்கள் நன்மையாகும். உதயலக்கினத்திற் சுபக்கிரகங்களும், ஏழாமிடத்திற் புதனும், எட்டாமிடஞ் சுத்தமும், மூன்று, ஆறு, பதினொன்றென்னு மிடங்களிற் பாவக்கிரகங்களும், பொருந்தி யிருந்தால் நன்மையாகும். நான்கு, பன்னிரண்டென்னுமிடங்களிற் சுக்கிரனிருந்தால் கோடிவஸ்திரந் தரிப்பதற்கு ஆகாவாம்.

உபநிஷ்கிரமணமென்னும் கிரியையின் முறைமையை இதுவரையி லெடுத்துச்சொன்னேம். இனி செய்யப்படுவதான அன்னப்பிராசனமென்னுங் கிரியையினைச் செய்யவேண்டிய விதியையும், கிரமமாகச்சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

**உபநிஷ்கிரமண முரைத்த வத்தியாயம்**
*முற்றுப்பெற்றது.*

இருபதாவது

# அன்னப்பிராசன முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? அன்னப்பிராசனமென்னுங்கிரியையைச் செய்வதற்குக் குழந்தைபிறந்த

ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டென்னு மாதங்களில் சுபக்கிரக வாரங்களில், அஸ்தம், சித்திரை, சுவாதி, அஸ்வதி, மிருகசீரிடம், அனுஷம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, திருவோணம், உரோகணி, புனர்பூசம், பூசமென்னு நக்ஷத்திரங்களில், ஜன்மநக்ஷத்திரமும், அதற்கு மூன்று, ஐந்து, ஏழென்னும் நக்ஷத்திரங்களையும் நீக்கி மற்றைய நக்ஷத்திரங்களில், அஷ்டமி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பௌர்ணமி அமாவாசியை, என்றுசொல்லப்பட்ட திதிகளைநீக்கி சுக்கிலபக்ஷத்து மற்றையதிதிகளில், சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிமிஸ்துக்கினம் என்னுங் கரணங்களையும், சுக்கிராஸ்தமன காலங்களையு நீக்கி, ஆகாயம் நிருமலமாகவும் விரும்பப்பட்ட பத்தாமிடஞ் சுத்தமாகவு முச்சிப்பொழுதுக்கு முற்பட்ட காலத்தில், மீனம், விருச்சிகம், மேஷம், ஆகிய இலக்கினங்களை நீக்கி மற்றைய இலக்கினங்களில் அன்னப்பிராசனமென்னுங் கிரியை செய்வதற்கு நலமாகும்.

ஒன்பது, பன்னிரண்டென்னுமிடங்களிற் புதனும் ஆறு, ஏழு, பன்னிரண்டென்னு மிடங்களிற் சுக்கிரனும், நான்கு, ஆறு, எட்டென்னுமிடங்களில் குருவும் எட்டாமிடத்திலங்காரகனுந் தங்கியிருப்பதும் உதயலக்கினத்திற் சந்திரனிருப்பதும் சந்திரனைவனுதயலக்கினத்தி லக்கிசங்களைப் பெற்றிருப்பதுமாகிய இவை ஆகாதென் றிருப்பதா லக்காலங்கள் தீதாகும். மேற்சொல்லிய கிரியையைச் செய்வதற்கு, மூன்று, ஆறு, பதினொன்றென்னுமிடங்களிற் பாவக்கிரகங்களிருந்தால் நன்மையாகும்.

மேற்சொல்லிய சுபலக்கினத்தில் விநாயக பூஜை முதலிய கிரியைகளைச் செய்து மதுரமாகிய பாயசத்தினாலே அக்கினியில் ஓமஞ்செய்து மிகுதியான பாய

சத்தை அந்தக்குழந்தைக்கூண்பித்துத் தேனும், நெய்யு மொன்றாகக்கலந்து மத்தித்து வழித்து அக்கிரியைக் குரிய வேதமந்திரங்களைச் சொல்லி அக்குழந்தையை யுண்ணச்செய்வது கிரமமாகும். அக்காலத்திலேயே யந்தக் குழந்தைக்குச் சொற்களைக் கற்பித்தலும் நன் மையாகும்.

மகிழ்ச்சிபொருந்திய குழந்தைபிறந்து ஒருவருஷ நிறைந்த பின்பு அக்குழந்தைபிறந்தமாதம், பிறந்தநக்ஷத் திரதினத்தில், உதகசாந்தி செய்து அந்தசாந்தி கும்ப ஜலத்தினற் குழந்தைக்கபிஷேகஞ் செய்வித்து நவக் கிரகசாந்தி, ஜன்மநக்ஷத்திர சாந்தி, ஆயுஷ்கர்ம ஹோ மம் என்னுமிவைகளெல்லாம் கிரமமாகச் செய்து, வே தப்பிராமணர்களா லக்குழந்தையின் சிரசிலக்ஷதையிட் டாசீர்வதிக்கச்செய்து, குழந்தைக்குப் புதுவஸ்திரமும் அரைநாண்முதலிய வாபரணங்களுந்தரித்தலங்கரித்து சிவிகைமுதலிய வாகனங்களிலேத்தி அந்தக் கிராமப் பிரதட்சணஞ் செய்வித்து, பின்பு நதிகளையும், தான் வழிபடுகடவுளையும், தரிசனஞ் செய்வித்தல் விதியா கும். இவ்வாறு செவ்விப்பதனல் ஆயுள்விருத்தியும் அஷ்டஐஸ்வரியமும் மற்றும் பலநன்மைகளு முண்டா கும்.

இதுவரையும் அன்னப்பிராசன மென்னுங் கிரி யை யித்தன்மையவாகும். இனி குற்றமற்றவேதவிதிப் படி மனமகிழ்ந்து செய்யப்படுவதான செளளமென் னுங் கிரியையைக் கிரமமாகச் சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் சொல்லுகின்றார்.

**அன்னப்பிராசன முரைத்த வத்தியாயம்**
முற்றுப்பெற்றது.

## இருபத்தோன்றாவது

# சவுள முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரதமகாராஜனே? சௌளமென்னுங் கிரியையினை நன்றாகச் செய்வதற்குக் கருவிற்றங்கிய வருடமுதற்கொண்டாவது கருப்பம் நீங்கிப் பிறந்த வருடமுதற்கொண்டாவது, மூன்று, ஐந்து, ஏழு, என்னும் வருடங்களில் ஒன்றில் உத்தராயண மாதங்களில் சுக்கிரன், குரு, பிவர்கள் மூடத்திலிருக்குங்காலமும், ஒரு மாதத்தில் இரண்டு அமாவாசை வருவதாகிய அதிமாத மும் ஒருமாதத்தில் இரண்டுபௌர்ணமி வருவதாகிய மலமாதமும் மாசிமாதமும் நீக்கி, மற்றையமாதங்களில் வரும், சித்திரை, அவிட்டம், அஸ்தம், பூசம், புனர்பூசம், இரேவதி, மகம், மிருகசீரிடம், திருவோணம், அஸ்வதி, இந்த நக்ஷத்திரங்கள் உத்தமமாகும். சதயம், சுவாதி, உரோகணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இவைகள் மத்திமமாகும். அனுஷம், மூலம், என்னு நட்சத்திரங்கள் மரணத்தைத் தருவனவாகும். மற்றைய நட்சத்திரங்களும், சந்திராஷ்டகமும், வபனத்திற்குத் தீதாகும்.

ஜன்மநக்ஷத்திரமும், அதற்குப் பத்தாவதாகிய அனுஜன்ம நக்ஷத்திரமும், அதற்குப் பத்தாவதாகிய திரிஜன்ம நக்ஷத்திரமும், மூன்றாவதாகிய விபத்தாரையும், ஐந்தாவதாகிய பிரத்தியத்தாரையும், ஏழாவதாகிய வதைத்தாரையும், ஜன்மநக்ஷத்திர பாதமுதல் எண்பத்தெட்டாம் பாதமுள்ள நக்ஷத்திரமாகிய வைஞசிகத்தாரையும் தீதாகும். சனிவாரமாகில் மரணமுண்டாகும்.

ஞாயிறு, செவ்வா யென்னும் வாரங்கள் தீதாகும். மற்றைய சுபவாரங்கள் நன்மையாகும். அஷ்டமி, சஷ்டி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, துவாதசி யென்னுந் திதிகளை நீக்கி பூருவபக்ஷத்து மற்றைய திதிகளும், அமரபக்ஷத்துத் திரிதியை, பஞ்சமி யென்னுந் திதிகளும், க்ஷவரஞ்செய்வதற்கு நன்மையைத் தருவனவாகும்.

சௌளக்கிரியை செய்வதற்குக் கடகம்,மிதுனம், துலாம், மீனம், விருஷபம், மகரம், கன்னி யென்னுமிலக்கினங்கள் நன்மையாகும். கும்பம், மரணமுண்டாகும். மற்றுள்ள விடங்களில் சுபக்கிரகங்களிருப்பதும், பார்ப்பதும், எட்டாமிடஞ்சுத்தமுள்ளதும், சுபக்கிரகங்கள் ஒன்று, நான்கு, ஏழு, பத்தென்னுங் கேந்திரஸ்தானங்களிலாவது ஐந்தொன்பதென்னுந் திரிகோண ஸ்தானங்களிலாவது கூடியிருப்பதும் பாவக்கிரகங்கள் மூன்று, ஆறு, பதினொன்றென்னு மிடங்களில் அமைந்ததுமாகிய இலக்கினங்கள் சுகங்களைத் தருவனவாகும்.

மிகுந்த புகையையுடைய முற்பக லுத்தமமாகும். பிற்பகலும்,இராக்காலமும், துன்பத்தையுண்டாக்கும். சூரியன், அங்காரகன், இராகு, சனி, சுக்கிரன், என்னுமிவர்கள் ஏழாமிடத்திலிருந்தாலும், உதயம் ஆறு,பன்னிரண்டு என்னு மிடங்களில் சந்திரனிருந்தாலும், பன்னிரண்டாமிடத்தில் குருவிருந்தாலும், தீதாகும். எட்டாமிடத்தில் சுக்கிரனிருக்க நன்மையாகும். இந்த விதி தந்தசுத்தி செய்வதற்கும் உரியதாகும்.

மேற்சொல்லிய சௌளத்திற்கு விநாயக பூசை முதலியவைகளைச் செய்து அக்கினியில் நூற்றெட்டாகுதி ஓமஞ் செய்தபின்பு குழந்தையின் தாயானவ

ளிடப்பக்கத்தில் அறுகுடனே பசுவின் சாணத்தினுற் செய்த பிண்டத்தை மாவிலையில் வைத்துக் கையிலேந் தவும், தந்தையானவன் வலப்பக்கத்தில் வெந்நீருந்தண் ணீரும் ஒன்ருகக் கலந்து குழந்தையினது சிரசிலே பு ரோக்ஷணஞ்செய்து நாவிதனிடத்துள்ள கத்தியை வா ங்கி, மூன்று பசுந்தருப்பைகளை அக்குழந்தையினது சிரசில் நான்கிடத்தில் மந்திரத்துடன் வைத்துத் துண் டித்துத் தாயினது கையில்வைத்தேந்திக் கொண்டிருக் கின்ற பசுவின்சாணத்தாலாகிய பிண்டத்தில் வைத்து அதனை யெடுத்துக்கொண்டுபோய் அரசமரத்தினடியி லேவைத்துவிட்டுப் பின்பு வைதீகச் சிறுவர்களுடனே குமாரபோசனஞ் செய்வித்து அதன்பின்பு குழந்தை யின் சிரசில் குடுமியை விடுத்து மற்றிடங்களிலே வுரோமங்களைக் களையச்செய்து ஸ்நானஞ் செய்வித் து ஆடையாபரணங்களினுலே அலங்காரஞ் செய்வித் தல் முறைமையாகும்.

பிறந்த குழந்தைக்குச் செய்ய வேண்டுவனவாகிய சௌளம்,உபநயனம்,விரதங்கள், விவாகம் என்று சொ ல்லப்பட்ட சமஸ்காரங்களைச் செய்வதற்குக் குறித்த தினத்திற்கு முதனுளில் அங்குரார்ப்பணமென்னுங் கிரியையினைச்செய்தல்வேண்டும். நோயாளி, விதவை, மலடி, கிழவி, கன்னிப்பருவப்பெண்கள்,இவர்களை நீக் கிச்சொல்லப்பட்ட நல்ல சுமங்கலிகளாலேயே முளைப் பாலிகை தெளித்தல் நன்மையாகும்.

## அக்ஷராப்பியாசம்.

குழந்தை பிறந்த ஐந்தாம் வயதில் உத்தராயணத் தில் மாசிமாத நீக்கிச் சொல்லப்பட்ட மற்றையமாதங் களில் அஸ்வதி, இரேவதி, திருவாதிரை, திருவோணம், புனர்பூசம், சித்திரை, சுவாதி, அனுஷம், அஸ்தமென்

று சொல்லப்பட்ட நக்ஷத்திரங்களில் செவ்வாய் சனி யென்னும் வாரங்களை நீக்கி, வியாழம், புதன், வெள்ளி, யென்று சொல்லப்பட்ட சுப வாரங்களில் பிரதமை, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி, திரயோதசி யென்னுந் திதிகளை நீக்கி பூருவபக்ஷத்து மற்றைய திதிகளில் உச்சிப்பொழுதிற்கு முற்பட்டகாலத்தில் எட்டாமிடஞ் சுத்தமாகவும், ஐந்தாமிடத்தில் குரு சுக்கிரனிருக்கவும், ஸ்திரலக்கினங்களை நீக்கி உபயலக்கினங்களில் விநாயகக் கடவுளையும், சரஸ்வதி தேவியையும், விதிப்படி பூசித்து உபாத்தியாயராலேஅக்குழந்தைக்கு அக்ஷராப்பியாசஞ் செய்விப்பதற்கு நலமாகும்.

சௌளமென்னுங் கருமத்தைச்செய்யவேண்டிய விதிகளை யிதுவரையிற் சொன்னோம். இனி உபநயனமென்னுங் கருமத்திற்குரிய விதிகளை மனமகிழும்படி சொல்லுவோமென்று காளத்தி மாகாமுனிவர் சொல்லுகின்றார்.

சௌள முரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

## இருபத்திரண்டாவது
## உபநயன முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? உபநயனமென்னுங் கிரியையானது தாயின் கருப்பத்திற் புத்திரன் றங்கிய நாள் தொடங்கியாவது பூமியிற்பிறந்த நாள்

தொடங்கியாவது சொல்லப்பட்ட பிராமண குலத்த வர்க்கு ஏழாவது. எட்டாவது வயதிலும், க்ஷத்திரிய குலத்தவர்க்குப் பதினோராவது வயதிலும் வைசியகுல த்தவர்க்குப் பன்னிரண்டாவது வயதிலும்செய்தற்குரி யதாகும். மேற்சொல்லிய வருடங்களிற்செய்யத்தவறி னல், பிராமணருக்குப் பதினாறுவது வயதளவும், க்ஷத் திரியருக்கு இருபது வயதளவும், வைசியருக்கு இரு பத்தினன்காவது வயதளவு முபநயனஞ் செய்வது கிர மமாகும். மேல்விதித்த இரண்டு காலங்களிலுஞ் செய் யத் தவறினல் அப்படித் தவறினவர்கள் வேதங்களோ டு காயத்திரி முதலிய மஹாமந்திரங்களை அத்தியயன ஞ்செய்வதற்கு யோக்கியதையில்லாதவிராத்தியரென் னும் வகுப்பிற்சேர்ந்தவர்களாகிப் பின்னரும் பலவித துன்பங்களி லுழன்றுகொண்டிருப்பர்.

இருக்குசாகையுடையவருக்குக் குருவும், யஜுர் சாகை யுடையவருக்குச்சுக்கிரனும், சாமசாகையுடைய வருக்கு அங்காரகனும், அதர்வணசாகை யுடையவரு க்குப் புதனும், பிரணவசாகை யுடையவருக்குச் சூரிய னும், அதிபதிகளாகும்.

உபநயனஞ்செய்து கொள்பவர்களுக்கு அவரவர்கள் சாகாதிபதிகள் பலம்பொருந்தியிருக்க நன்மையாகும்.

இளவேனிற்காலம் பிராமணருக்கும், முதுவேனி ற்காலம் க்ஷத்திரியருக்கும், கூதிர்க்காலம் வைசியருக் கும் விசேஷமாகும். யாவருக்கும் குருஅஸ்தமனம் சுக்கிராஸ்தமனம் தீதாகும்.

திதிகளின் அந்தமும், மாதங்களின் அந்தமும், நக்ஷத்திரங்களின் அந்தமும், சந்திராஷ்டகமும் ஜன்ம அனுஜன்ம திரிஜன்ம நக்ஷத்திரங்களும், எண்பத்தெட் டாம் பாதம்பொருந்திய வைனசிகநக்ஷத்திரமும், மூன்

று, ஐந்து, ஏழு, இருபத்தேழு என்னுநக்ஷத்திரங்களும் பரிகம், கம்பம், விதிபாதம், வைதிருதி, வச்சிரம், கண்டம் அதிகண்டம், வியாகாதம், என்னும் யோகங்களும் விஷ்டியென்று சொல்லப்பட்ட நாகவும், கிமிஸ்துக்கினம், சகுனி, சதுஷ்பாதம், என்னுங்கரணங்களும் இரண்டு அமாவாசை வருகின்ற மாதமும், சூரியன், உபயராசிமாதங்களிற் பிரவேசிக்கின்ற ஷடசீதி புண்ணியகாலங்களும், அபரான்னகாலமும், காலைமாலைகளில்நேரிடும் இரண்டு சந்தியாகாலங்களும், அந்தகநக்ஷத்திரங்களும் தீதாகும்,

உத்தராயணத்தில் சுக்கிலபக்ஷத்தில் வரும் துதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, திரயோதசி, யென்னு மிந்தத்திதிகளுத்தமமாகும். ஏகாதசி துவாதசியென்னு மிரண்டுதிதிகளும் மத்திமமாகும். கிருஷ்ணபக்ஷத்தில் பிரதமை,திரயோதசியென்னு மிரண்டு திதிகளும் நன்றாகும். அஷ்டமி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பௌர்ணமி அமாவாசை இவைகள் தீமையைத்தருவனவாகும்.

உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சுவாதி, உரோகணி, அஸ்தம், புனர்பூசம், பூசம், அஸ்வதி,மிருகசீரிஷம், அனுஷம், மூலம், இரேவதி, சித்திரை,திருவோணம், சதயம், அவிட்டம், என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்கள்உபநயனத்திற்கு நல்லதாகும். வியாழம், புதன் என்னும் வாரங்க ளுத்தமமாகும். ஞாயிறு, திங்கள், வெள்ளி இந்தவாரங்கள் மத்திமமாகும். சநி,செவ்வாய், கிருஷ்ணபக்ஷத்தில் வரும் திங்கள் என்றுசொல்லாநின்ற வாரங்கள் அதமமாகும்.

சிங்கம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், மீனம், விருஷபம், தனுசு என்னும் இந்தலக்கினங்களுத்த

மமாகும். மேஷம், விருச்சிகம், கும்பம், மகரம், இந்த லக்கினங்கள் தீமையைத் தருவனவாகும். சந்திரலக்கினத்திற்கு எழு, எட்டென்னு மிடங்களில் சுபக்கிரகங்களிருந்தாலும், மீனலக்கினத்திற் சுக்கிரனிருந்தாலும், தனுசு, மீனம், கடகம், இந்தலக்கினங்களிற்குருவிருந்தாலும் க்ஷேமமுண்டாகும்.

உதயலக்கினத்தில் குரு, புதன், சுக்கிரனும், இரண்டா மிடத்திற் சுக்கிரனும், குருவும், மூன்றாமிடத்தில் எந்தக்கிரகங்களும், நான்காமிடத்திற் குருவும், புதனும், ஐந்தாமிடத்தில் சூரியன், சுக்கிரன், சந்திரன், குரு, புதன் என்னும் கிரகங்களும்,ஆறாமிடத்திற் பாவக்கிரகங்களும், ஏழாமிடத்திற் சந்திரன், புதன், குரு என்னுங்கிரகங்களும், எட்டாமிடஞ்சுத்தமாகவும் ஒன்பதாமிடத்தில் சுக்கிரன், குரு, சந்திரன், புதன், என்னுங்கிரகங்களும், பத்தாமிடத்திற் சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரனென்றுசொல்லப்பட்ட கிரகங்களும் பதினோராமிடத்தில் எந்தக்கிரகங்களும், பன்னிரண்டாமிடத்திற் சூரியன், அங்காரகன், புதன், குரு, என்னுங்கிரகங்களு மிருப்பார்களாயின்க்ஷேமகரமுண்டாகும், மேற்சொல்லிய முறை பிறழ்ந்து நவக்கிரகங்களிருக்குமாயின் கெடுதிசம்பவிக்கும்,

உபநயனத்திற்குரிய அங்கங்களாகிய முப்புரிநூலும், கிருஷ்ணாசனமும், உத்தரீயமும், மேகலையாகிய முஞ்சிப்புற்கயிறும், ஆகிய இவற்றுள் உபவீதமானது, நல்லபருத்திப்பஞ்சினை விதிப்படி கொண்டுவந்து, சரியாக நூற்றுநூலாக்கி யந்நூலை நான்கு விரல்களில் முறைப்படி தொண்ணூற்றாறுசுற்றாகச் சுற்றி அதன் நீளத்துக்குத் தக்கபடி யிரண்டிழைகளை யதனோடு சேர்த்து நன்றாகவலம்பிச் சுத்தஞ்செய்து கிழக்குமுகமாக ஒருவரும் நின்றுகொண்டு யிடதுகை கீழாகவும்

வலதுகை மேலாகவுங்கொண்டு நன்றாக முறுக்கிப் பின்பு வலதுகை கீழாகவு மிடதுகை மேலாகவுங்கொண்டு மூன்றாக மடித்துத் திரித்து அவ்வாறு திரித்த கயிற்றை, மலர், இலை, தருப்பை யிவற்றுளொன்றின் மேலன்புடன் வைத்து அக்கயிற்றுக்கு நல்ல சலந்தெளித்து, கயிற்றைக்கையிலெடுத்து மூன்று சுற்றாகச் சுற்றிப் பிடித்துக்கொண்டு அங்குஷ்டம், தர்ச்சனி யென்னும் இரண்டு விரல்களாலு முடியத்தொடங்கு கையில் சரஸ்வதியையும், சாவித்திரியையும், காயத்திரியையும் அதிலாவாகனஞ்செய்துபின்பு நன்றாக்கயிறு கும்படி முடிபோடுவது உபவீதமாகும். அவ்வாறமைந்துவிளங்கும் உபவீதத்தின் மூன்று புரிகளிடத்தும் பிரமன், விஷ்ணு, உருத்திர னென்று சொல்லப்பட்ட மும்மூர்த்திகளும் பொருந்துவார்கள்.

பிரணவமும், அக்கினியும், சந்திரனும், சூரியனும், வாயுவும், பிதுர்க்களும், பிரமனும், விஷ்ணுவும், உருத்திரனுமாகிய இவ்வொன்பதின்மரும், அவ்வுபவீதத்திலடங்கிய வொன்பதிழைகளுக்கும், அதிதேவதைகளாகும். பிருகு, அத்திரி, காசிபர், புலகர், புலஸ்தியர், தக்ஷர், மரீசி, கிருது, அங்கிரா-என்று சொல்லப்பட்ட இவ்வொன்பதின்மரு மவ்வொன்பதிழைகளுக்குமுரிய ரிஷிகளாகும்.

புண்ணிய பூமியில் வசிக்கும், கலைமான் அல்லது புள்ளிமான் என்னுமிவற்றுள் ஒன்றினது மயிர்களோடுங்கூடிய சருமத்தில் பிராமணன், மூன்றங்குல அகலமும், க்ஷத்திரியனிரண்டங்குல வகலமும், வைசியன் ஓர் அங்குல அகலமும், ஆகிய அளவினையுடையதாக எடுத்து அதனிருபக்கங்களையும், முன்னுபவீதத்தை முடிந்ததுபோல் முடிந்து தரித்துக்கொள்ளல்வேண்டும். வஸ்திரத்தி னிருபக்கங்களையும் முன்னும்பின்

னுந் தங்கும்படி வுபவீதம்போல் தரிப்பதுவே உத்த ரியமாகும்.

முஞ்சியென்னு மொருவகைப்புல்லினால் மூன்று புரியாகத் திரித்தகயிற்றை யிடுப்பில் மூன்று சுற்றாகப் பொருந்த கடிசூத்திரம்போலணிவது மேகலையென்று சொல்லப்படும். அவ்வாறான மேகலையையணியுமிடத்து பிராமணன், முஞ்சிப்புல்லினாலும், க்ஷத்திரியன் நீண் டநாணற்புல்லினாலும், வைசியன் சணற்புல்லினாலு மணியவேண்டுமென்பது விதியாகும், மேற்சொல்லிய வைகள் கிடைக்காவிடின் மூன்றுவருணத்தாருந்தருப் பைப்புல்லினா லமைத்துத் தரித்துக்கொள்ளுவது கிர மமாகும்.

மேற்சொல்லிய தண்டமாவது, வேதத்திற்குரிய பிராமணர்களுக்குவில்வமரமும், பூவரசமரமுமுரியதா கும், க்ஷத்திரியர்களுக்கு ஆலமரமும், கருங்காலிமரமு முரியதாகும், வைசியர்களுக்கு அத்திமரமும், இச்சி மரமுமுரியதாகும், அவ்வாறுகொள்ளுமிடத்துப் பிரா மணர்கள் சிரத்தளவினதாகிய வுயரமும், க்ஷத்திரியர் கள் நெற்றியளவினதாகிய வுயரமும், வைசியர்கள் நா சியளவினதாகிய வுயரமுமுள்ளதாகவும், வடுக்களும், கோணல்களும்,சூடும், இல்லாததாகவும் மேற்றோலோ டேபொருந்தி ஒரு தண்டத்தைக் கொள்வது முறையா கும்.

விக்கினேஸ்வரபூசை புண்ணியாவாசனம், அனு ஞை, சங்கற்பம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், நாந்திமுகசிரார்த்தம், உதககும்பசாந்தி, அக்கினியிற் செய்வதாகிய ஓமம் இவைகளை முதலில் கிரமமாகந டத்திப்பின்பு தம்மாலியன்ற வரையில் பிரமசரியச் சிறு வர்வளுக்குப் போஜனஞ் செய்வித்து, அதற்குமேல்

சவுளவினைமுடித்து ஸ்நானஞ் செய்திருக்கிற உபநய னகருமத்திற்குரிய சிறுவனை அக்கினி குண்டத்தின் தென்திசையில் வடக்குமுகமாக விருக்கச்செய்து, ஓம குண்டத்தின் வடதிசையி லுபவீதத்தையும் அதற்கங் கமாகிய கிருஷ்ணாசனம், மேகலைதண்டம், உத்தரீய முதலியவைகளை வைத்து வேதமந்திரங்களைச்சொல்லி ஜலம்புரோக்ஷித்துச் சுத்தப்படுத்திப் பின்பு உபவீத முதலியவைகளைக் கிரமப்படி தரித்துக்கொண்டு சுத்த மாகக் காலலம்பி ஆசமனஞ்செய்து பஞ்சகௌவிய மருந்தி மறுபடியும் ஆசமனஞ்செய்து விதிப்படி ஆசா ரியராற் பிரமோபதேசஞ்செய்யப்பெற்று, அவசியம் செய்யவேண்டிய ஆகுதிகளைநடத்திச் சூரியநமஸ்கார ஞ்செய்து அக்கினிகுண்டத்தைக்கிரமப்படி பிரதக்ஷ ணஞ்செய்து, தாய்,தாயோடு கூடப்பிறந்தசிறியதாய், பெரியதாய், தன்னோடுதித்த சகோதரி, தன்னிடத்து அன்புள்ளவர்களென்று சொல்லப்பட்ட இவர்களுள் ளொருவரிடத்திற்சென்று பிராமணர்கள்,பவதி,பிக்ஷா ந்தேகி என்றும், க்ஷத்திரியர்கள் பிக்ஷாம்பவதிதேகி யென்றும், வைசியர்கள் தேகிபிக்ஷாம்பவதி யென்றுஞ் சொல்லி யிவ்விதமாகச்சொல்லுதற்கரிய மூன்றுநாள் பிட்சையெடுத்துப் புசித்து ஒவ்வொருநாளிலும் காலை மாலையென்னு மிருசந்தியாகாலங்களிலும் அக்கினி யில் ஓமஞ்செய்து, நான்காவது நாளில் பலாசஓமமும் விதிப்படி செய்வது முறைமையாகும்.

மேற்சொல்லிய வுபநயனக் கிரியைகளையெல்லா ம், அருளேவடிவாய் வந்த ஆசாரியனாவது, தந்தையா வது செய்வித்து வேதங்கள்முதலிய பலதரும சாஸ்தி ரங்களையெல்லாம் ஆராய்ந்து அவற்றில்விதிப்படி தரு மமுதலிய நல்லொழுக்கங்களிற்றவறாமலனுசரித்துவர வும் ஆசாரம், சவுசம், அக்கினி காரியங்கள், சந்தியா

வந்தனமுதலியவைகளையும் சீடனுக்குபதேசஞ்செய்ய வேண்டும்.

இதுவரையும் மேன்மையாக விளங்காநின்ற உபநயனக்கிரியையை நடத்தவேண்டிய கிரமங்களைச்சொன்னோம்; இனி, அருமையாகிய வேதவிதிப்படி செய்யப்படுகின்ற உபாகருமக்கிரியையின் முறைமையையும் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் சொல்லுகின்றார்.

உபநயன முறைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

## இருபத்துமூன்றவது
# உபாகரும முறைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? இவ்வுலகத்தில் நிலைபெற்று விளங்காநின்ற வுபாகருமக்கிரியைகளை இருக்குவேதிகள், ஆவணிமாதத்தில் வரும் திருவோணநக்ஷத்திர வியாப்தியிலும், யஜுர்வேதிகள், பௌர்ணமிவியாப்தியிலும், சாமவேதிகளென்று சொல்லப்பட்டவர்கள், பூர்வபக்ஷ சதுர்த்தியோடுவரும் அஸ்தநக்ஷத்திரவியாப்தியிலும் பிரணவவேதிகள்பௌர்ணமிவியாப்தியிலும் செய்வது கிரமமாகும்.

மேற்சொல்லிய ஆவணிமாசத்தில் சூரியகிரகணம் சந்திரகிரகணம் மாதப்பிறப்புகள் இரண்டு அமாவாசைகள் இரண்டு பௌர்ணமிகள் முதலாகிய தோஷங்

கள் நேரிடுமாகில் ஆடிமாதத்திலே செய்யவேண்டும். அந்த ஆடிமாசத்திலும் அவ்வகைத் தோஷங்களுண் டாகுமாயின் புரட்டாசி மாசத்திலே செய்யவேண்டும். இந்த மூன்று மாசங்களிலும், மேற்சொல்லிய தோஷ ங்கள்நேரிடுமாகில் முதலிலே எடுத்துச்சொல்லிய ஆவ ணிமாசத்திலேயே செய்து முடிப்பது முறையாகும்.

சொல்லப்படுகின்ற சுக்கிரன் மூடமெய்திய கா லம் யஜுர் வேதிகளுக்கும், குருமூடமெய்திய காலம் ருக்குவேதிகளுக்கும் ஆகாது. நடத்தவேண்டிய உபா கருமக்கிரியையானது நித்தியமாதலினாலும் விளங்கா நின்ற வேதாத்தியய னாரம்பம் புகழ்ச்சி பொருந்தச் செய்யவேண்டுவது முக்கியமென்று சொல்லப்படுவதி னாலும் உண்டாகிய மாதசங்கிரமதோஷத்திற்கு பிரா யச்சித்தவோமம் விதிப்படிசெய்து பின்பு உபாகருமக் கிரியை நடத்துவது தருமசாஸ்திர சம்மதமாகும்.

சூரியோதயகாலத்தில், ஸ்நானங்களையும்,சந்தியா வந்தனங்களையுஞ் செய்து,சமிதாதானங்களை ம் நடத்தி, க்ஷவரஞ் செய்துக்கொண்டு சர்வாங்க ஸ்நானஞ்செய்து நூதன எக்ஞோபவீதந்தரித்து நூற்றெட்டுத்தரம் கா மோகாரிஷீ ஜெபஞ்செய்து, மத்தியான்னிக கருமங் களையுஞ்செய்து மகாசங்கற்பமுஞ் செய்துகொண்டு ஸ்நானஞ்செய்து உபவீதம் மௌஞ்சி கிருஷ்ணஜின முதலியவைகளை யணிந்து காண்ட ரிஷிதர்ப்பணஞ் செய்து எல்லாநலங்களையுமனுக்கிரகிக்கும்படி விநாய கபூஜை புண்ணியாவாசனமும் வருணபூஜையுஞ்செய் துகாண்டரிஷியோமம் நூற்றெட்டுத்தரமுறைமையா கச்செய்து மறுநாள் சூரியோதயகாலத்திற் சுத்தஜலத் தில் ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமுஞ்செய்து கிர மப்படி சமிதாதான ஓமமுஞ்செய்து முடித்தபின்பு புரசினது சமித்தினால் அக்கினியில் அதற்குரிய மந்தி

ரங்களைச்சொல்லி ஆயிரத்தெட்டாகுதிசெய்து காயத்திரி மகாமந்திரத்தை ஜெபித்து முடிப்பது உபாகன்ம விதியாகும்.

சொல்லுதற்குரிய வுபாகர்மவிதிகளுட் சிலவற்றை யெடுத்துச்சொன்னோம். இனி மேன்மையை யுடைய வேதாரம்பஞ்செய்தற்குரிய விதிகளையுங்கிரமமாகச் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் சொல்லுகின்றார்.

உபாகரும முரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

## இருபத்துநான்காவது

# வேதாரம்ப முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? வேதாரம்பஞ் செய்வதற்குச் சித்திரை, அவிட்டம், மிருகசீரிடம், பூசம், புனர்பூசம், திருவாதிரை, திருவோணம், சதயம், அனுஷம், அஸ்தம், சுவாதி, என்னும் நட்சத்திரங்களுத்தமமாகும். உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, இரேவதி, அஸ்வதி யென்னும் நட்சத்திரங்கள் மத்திமமாகும். மற்றையநட்சத்திரங்கள் தீமையைத்தருவனவாகும். புதன், வியாழம், வெள்ளி என்று சொல்லப்பட்ட வாரங்களுத்தமமாகும்.

ஞாயிறு, திங்க ளிந்தவாரங்கள் மத்திமமாகும், செவ்வாய், சனி, என்னும் வாரங்கள் தீமையைத் தரு

வனவாம். துதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, தசமி, ஏகாதசி யென்று சொல்லப்பட்ட திதிகளுத்தமமாகும். திரையோதசி, சப்தமி, என்னுமிவ்விரண்டு திதிகளுமத்திமமாகும். விளங்காநின்ற அஷ்டமி, துவாதசி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பிரதமை இந்தத்திதிகள் தீமையைத் தருவனவாகும்.

சயன ஏகாதசி, உத்தாயன ஏகாதசி, மன்வாதிகள், யுகாதிகள் சங்கிரமங்கள், சப்தமி, ஏகாதசியென்னுந் திதிகளின் இராத்திரிகள் பிரதோஷகாலங்கள் இவைகளில் வேதாத்தியயனஞ்செய்யலாகாது. இடிவிழுதல் பூகம்பிதமாதல் கிரகணகாலம் இவைகளுக்கு மூன்று தினம்வரையில் வேதாத்தியயனஞ்செய்வது கூடாது.

ஆசாரியன், மாணாக்கனென்னு மிவ்விருவர்களுக்கு நடுவில், கோழி, கருங்காக்கை, தவளை, ஒப்பற்ற பசு, பெருச்சாளி, பாம்பு கீரிப்பிள்ளை, பூனைகளென்னுமிவைகள் குறுக்கே செல்லுமாயின், மூன்றுநாளும் அவ்விருவருக்கு மத்தியில், முயல், நாய், இவைகள் வந்தால் ஆறுமாதமும், வேதாத்தியயனத்தைச் செய்யக் கூடாது. இதைக்கடந்து செய்வார்களாயின் பலவித துன்பங்களுண்டாகும்.

வேதாத்தியயனஞ் செய்வதற்குத் தனுசு, மீனம், மிதுனம், கன்னி, என்னு முபயலக்கினங்க ளுத்தமமாகும். மேஷம், கர்க்கடகம், துலாம், மகரமென்னுஞ் சரலக்கினங்கள் மத்திமமென்று சொல்லுவர். விருஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம், என்னும் ஸ்திரலக்கினங்க ளதமமாகும். உதையலக்கினத்திற்கு நான்காமிடமும் எட்டாமிடமுமாகிய இவைகள் சுத்தமாயிருக்

கவும், சுபக்கிரகங்கள் பலமடைந்திருக்கவும் நன்மை யாகும். இவ்வேதாத்தியயனத்திற்குச் சொல்லப்பட்ட காலங்கள் வித்தியாரம்பஞ்செய்வதற்கு உத்தமமாகும்.

புதன்கிழமையில் கன்னியராசியில்,சந்திரன்,சூரியன், புதன், இவர்களிருந்தாலும், சந்திரனுஞ்சூரியனும் அதியுச்சமடைந்திருக்க உதயலக்கினத்தில் சுபக்கிரகங்களிருந்தாலும், சூரியனதியுச்சமடைந்திருந்து விருஷபலக்கினத்திற் புதனிருந்து மீனலக்கினத்திற் சுக்கிரனிருந்தாலும், வித்தியாரம்பஞ் செய்வதற்கு சாஸ்வதியோகமென்று சொல்லுவர்.

குருவாரத்திற் குருவோரையில் குருவினுச்சஸ்தானமாகிய கடகலக்கினத்தில் ஐந்தாம்பாகத்திற் குருவிருந்து அவ்விலக்கினமே யுதயலக்கினமாயிருந்தால் வித்தியாயோகமென்றும், சுக்கிரவாரத்தில்சுக்கிரவோரையில் மீனலக்கினத்தில் இருபத்தேழாவதுபாகத்திற் சுக்கிரனிருந்து சுக்கிரனுக்கு உச்சஸ்தானமாகிய மீனலக்கினமே யுதயலக்கினமா யிருந்தால் மேற்சொல்லிய வித்தியாயோகமென்றும் சொல்லுவர்.

வியாகரணசாஸ்திரங்களை ஆரம்பிப்பதற்குப் பூசம், புனர்பூசம், இரேவதி, அஸ்தம், உரோகணி, கேட்டை, அனுஷம், என்னுமிந்த நக்ஷத்திரங்களுத்தமமாகும். தருக்கசாஸ்திரங்களை ஆரம்பிப்பதற்குத் திருவாதிரை, திருவோணம், சுவாதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்தம், பூசம், சதயம், உரோகணி, அஸ்வதி, இந்த நக்ஷத்திரங்களுத்தமமாகும்.

சோதிட சாஸ்திரங்களை அப்பியாசஞ் செய்யத் தொடங்குவதற்குச் சுவாதி, புனர்பூசம், பூசம், சதயம், அஸ்தம், இரேவதி, அசுவதி, மூலம், இந்தநக்ஷத்திரங்க

ளுத்தமமாகும். தனுர்வேதங்களை வாசிப்பதற்கும், வைத்திய சாஸ்திரங்களைக் கற்பதற்கும், அவிட்ட நக்ஷத்திரமுத்தமமாகும். நீதி சாஸ்திரங்கள் சாமுத்திரிகா சாஸ்திரங்கள், காந்தருவசாஸ்திரங்களென்று சொல்லப்பட்டவைகளை யாரம்பிப்பதற்குப் புனர்பூசநக்ஷத்திரமுத்தமமாகும்.

அஸ்வசாஸ்திரங் கற்பதற்கு அஸ்வதி நக்ஷத்திரமுத்தமமாகும். சிற்பசாஸ்திரங்களைத் தொடங்குவதற்கு, திருவாதிரை, சித்திரை, அவிட்டம், புனர்பூசம், பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, மிருகசீரிடம், திருவோணம், சுவாதி, சதயம், இந்த நக்ஷத்திரங்க ளுத்தமமாகும். யோகசாஸ்திராப்பியாசஞ் செய்வதற்கு, சதயம், சுவாதி, இந்தநக்ஷத்திரங்களுத்தமமாகும்.

மந்திரசாஸ்திரங்களைக் கற்கத்தொடங்குவதற்கு வைகாசி, ஆவணி, கார்த்திகை, மார்கழி, ஐப்பசி, மாசி, பங்குனி என்று சொல்லப்பட்ட மாதங்கள் நன்மையாகும். ஆடி, தை, ஆனி, புரட்டாசி, சித்திரையென்னுமிம்மாதங்கள் தீமையைத் தருவனவாகும். செவ்வாய்க்கிழமையும், பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமியென்னுந்திதிகளுந் தீமையைத்தருவனவாம்.

மந்திரசாஸ்திரங்களைத் தொடங்குவதற்குப் பூசம், புனர்பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அனுஷம், உரோகணி, மகம், கேட்டை, சுவாதி, திருவாதிரை, திருவோணம், சித்திரை, அஸ்தமென்று சொல்லப்பட்ட நக்ஷத்திரங்கள் நல்லனவாகும். மேஷம், கடகம், துலாம், மகரமென்னுஞ் சரலக்கினங்களுத்தமமாகும். மிதுனம் கன்னி, தனுசு, மீனமென்னுமுபயலக்கினங்கள் மத்திமமாகும், விருஷபம், சிங்கம்

விருச்சிகம், கும்பம், என்னும் ஸ்திரலக்கினங்க ளதம மாகும். எட்டாமிடஞ் சுத்தமாக விருக்கவேண்டும்.

இதுவரையும் வேதாரம்ப விதியினைக் கிரமமாகச் சொன்னோம் இனி பிரமசரிய விதிகளுட் சிலவற்றை வேதங்களின் விதிப்படியெடுத்துச் சொல்லுவோமெ ன்று காளத்தி மகாமுனிவர் உரைசெய்கின்றார்.

**வேதாரம்ப முரைத்த வத்தியாயம்**
*முற்றுப்பெற்றது.*

## இருபத்தைந்தாவது
## *பிரமசரிய விதியுரைத்த வத்தியாயம்.*

கேளும்சுவிரத மகாராஜனே? மேன்மைபொருந் திய அழகிய உபநயனமென்னுங் கிரியைசெய்துகொ ண்ட மாணுக்கனானவன், விதிப்படி யளவமைந்த யக் ஞோபவீதம், தண்டம், மௌஞ்சி, கிருஷ்ணாஜனமுத லிய பிரமசரியத்திற்குரிய அங்கங்கள் தன்னிடத்தில் விளங்கத்தரித்து, பிரதிதினமும் கங்கைமுதலிய புண் ணியநதிகளிலேனும், நீர்நிலைகளிலேனும் ஸ்நானவிதி யுட் கூறியவொழுங்கின்படி ஸ்நானஞ்செய்து பரி சுத்தமுடையவனாய்த் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும், பிதுரர்களுக்கும், விடாது செய்யவேண்டிய தர்ப்ப ணங்களையும், காலை மாலை யிரண்டு சந்தியாகாலங்க ளிலும்,அக்கினிமுகத்திற்செய்யப்படுவதான * சமிதா தானமென்று சொல்லப்பெற்ற அக்கினிகாரியங்களை யும் திரிகாலங்களிலுஞ் சந்தியாவந்தனங்களையும் காய

த்திரிஜெபமுஞ்செய்து அதற்குமேல் உபஸ்தானங்களையும் விடாது செய்யக்கடவன்.

தன்னைப்பெற்றதாய், தன்வயிற்றிற் பிறந்தாலன்ன புத்திரிமுறையை யுடையவள், தன்னுடன்பிறந்த சகோதரிகளென்று சொல்லப்பட்டவர்களா யிருந்தாலும் அவர்களோடு தனித்தோர் டத்திலிருத்தலும், கிருஷ்ணஜனம்,மௌஞ்சி,தண்டு, இவைகளை நிஷ்காரணமாய்க் கைவிட்டிருத்தலும், உறவினர்நட்பினரென்னுமிவர்களோடிருந்து உண்டிமுதலியனபுசித்தலும், அப்போதைக்கப்போதுண்டாகும் ஐம்புலவிஷயவாசனைகளில் மனதைச் சுழலவிடுத்தலும், ஜீவஇம்சை செய்தலும், பதிதர்களோடு கூட்டுறவா யிருத்தலும், தாம் பூலதாரணஞ் செய்து கொள்ளுதலும் குற்றமாகும்.

பிரமசரியவிரதத்தைப்பூண்ட மாணுக்கனானவன் சந்தனம், அத்தர், புனுகுமுதலிய வாசனைத்திரவியங்களையும், மல்லிகை,முல்லைமுதலிய சுகந்தபுஷ்பங்களையும் தேன்முதலிய லாகிரிவஸ்துக்களையும், அறுவகைருசிபாகங்களின் விருப்பத்தினையும், தயிரையும், பாலையும், மாமிசங்களையும், பெண்களிடத்துண்டாகும்விருப்பத்தையும் காமங், குரோதமுதலிய அறுவகைப்பட்டவுட்பகையினையும் எண்ணெயிட்டுக்கொண்டு தலைமுழுகுதலையும்,கஸ்தூரி, சிந்தூர முதலிய திலதங்களையும், குடைகளையும், பாதுகையையும், சூதாடலையும், நாடகமாடுதலையும், சங்கீதம் பாடுதலையும், விகடவார்த்தை

---

* சமிதாதானமாவது சேய்மைக்கணிருந்து சமித்துக்களைக் கொண்டு வந்து நிலத்தின்மேல்வையாமலுன்னத ஸ்தானத்தில் வைத்திருந்து காலை, மாலை, யென்னுமிரு சந்தியா காலங்களிலு மந்தச் சமித்துக்களா லக்கினியினிடத் தோமஞ் செய்வது.

கள் பேசுதலையும் ஒருவனுடைய பழிப்பாயிருக்கின்ற வசனங்களைச் சொல்லுதலையும், பொய்பேசன்முதலிய குற்றங்களைச் செய்யாதிருத்தலுங் கிரமமாகும்.

பிரமசரியவிரதத்தை அனுஷ்டிப்பவன் ஆசாரியனுக்குவேண்டிய பத்திரபுஷ்பங்கள், தருப்பைகள், மிருத்திகைகள், சமித்துக்கள், முதலியவைகளைச் சேகரித்துக்கொடுத்து, மற்றுமவருக்குச்செய்யவேண்டிய பணிவிடைகளையும், திருப்தியாகச்செய்து ஆசாரியனது வலதுபாதத்திற்றன்னுடைய வலதுகையும், இடதுபாதத்திற் றன்னுடைய யிடதுகையும் பொருந்தும்படி மாறிவைத்து, விதிப்படி நன்றாக வணங்கி, எதிரிலிருந்து நமஸ்காரஞ்செய்து, ஆசாரியனிட்ட கட்டளைப்படி, வடக்குமுகமாயாவது கிழக்குமுகமாயாவது சித்திரப்பாவையைப்போலசைவின்றி யிருந்து, பரமாசாரியனால் கற்பித்தபடி வேதாத்தியயனங்களைச் செய்துவரவேண்டும். அவ்வாறு செய்துவருகையில், ஆரம்பகாலத்திலும், முடிக்குங்காலத்திலும் பிரணவமந்திரத்தை யுச்சரித்தல் விதியாகும்.

மேற்சொல்லியபடி, உபநயனக்கிரியைப் பெற்றுக்கொண்டு, வேதமுதலிய சாஸ்திரங்களை அத்தியயனஞ்செய்து,தேர்ச்சியடையாத பிரமசரியனைவன் எவ்வித வைதிக கருமங்களையுஞ் செய்வதற்குதவானாதலினால், ஆசாரியனனுக்கிரகத்தால், பிரமசரியவிரதத்தைக் கைக்கொண்டவனதற்குரிய உபவீதம், மௌஞ்சி. அரைஞாண்,தண்டமுதலிய அங்கங்களைவிடாது தடுத்துக்கொண்டு, விரதங்களைத்தவறாமலனுஷ்டித்து எப்பொழுதும் வேதமுதலிய சாஸ்திரங்களை முறைமையாக வத்தியயனஞ்செய்வது முறைமையாகும்.

வேதாத்தியயனஞ் செயவதுடன், மூன்றக்கினிகளால், யாகங்களையும், நித்தியகருமங்களையும், நைமித்

தியகருமங்களையும், விதிப்படி செய்பவர்களின் வீடுக ளில், மூன்றுவீட்டுக்குக் குறையாமற்போய், தருமசா ஸ்திரங்களிற் சொல்லியபடி தனக்கு வேண்டியவளவு அன்னபிட்சை யெடுத்து, அந்தப்பிக்ஷான்னத்தைஆசா ரியருக்கு நிவேதனஞ்செய்து, ஆசமனஞ்செய்து, அவ் வன்னத்தை விதிப்படி பூசித்து, பரிஷேசனஞ்செய் து கிழக்குமுகமாகயிருந்து சந்தோஷமுடையவனுகப் புசித்து கைகால்களைச் சுத்திசெய்து, கண்கள்நாசிகள் காதுகளாகிய இவைகளைநன்ருகத்துடைத்து ஆசமன ஞ்செய்தல் வேண்டும்.

மேற்சொல்லிய பிரமசாரியானவன் பிக்ஷான்னத் னத்தைப் புசிக்குங்காலத்தில் ஆயுளை விரும்பினவன் கிழக்குமுகமாகவும், கீர்த்தியை விரும்பினவன் தெற் குமுகமாகவும், சம்பத்தை விரும்பினவன் மேற்குமுக மாகவும், சத்தியநெறியை விரும்பினவன் வடக்குமு கமாகவு மிருந்து புசிக்கவேண்டும்.

தன்னிடத்திற் பொருந்திய வுபவீதம் கிஷ்ருஜு ஜனம், மௌஞ்சி, தண்டமுதலியவைகள் நிஷேதிக் கத்தக்கவசுத்தத்தையடைந்தாலும், பின்னங்களையடை ந்தாலு மவைகளைத் தடாகமுதலிய தீர்த்தங்களி லமிழ் ந்தும்படி யெறிந்துவிட்டு மேற்சொல்லிய ஒவ்வொன் றும் வேறு புதிதாகச் சேகரித்து அதற்குரிய மந்திர பூர்வகமாகத் தரித்தல் வேண்டும்.

வேதாத்யயனஞ்செய்வித்த வாசிரியன்பிதாக்கள் துறவறம்பூண்ட பெரியோர்கள், தமையன் முதலான பெரியோர்கள், அம்மான், மாமன், முதலானவர்கள் வயோதிகமுள்ளபெரியோர்கள் தனது குடும்ப புரோ கிதர்க ளென்று சொல்லப்பட்டவர்களைப் பிரமசாரிய னுவன் கண்டால் தக்ஷணமே திடீரென் றெழுந்து

அவர்களுக்கபிவாதனஞ்செய்து வணங்குவது கிரமமாகும். அவ்வாறு செய்யக்கண்ட அப்பெரியோர்களு மவனுக்குப் பிரதியபிவாதனஞ் செய்தல் வேண்டும்.

தன்னைப்பெற்ற தாய். தந்தை, ஆசாரியன், என்னு மிம்மூவருமே சொர்க்கம், மத்தியம், பாதலமென்னு மூன்றுலகங்களென்றும், பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசமென்னு மூன்ருச்சிரமங்களென்றும், இருக்கு, யசுர் சாமமென்னு மூன்று வேதங்களென்றும் ஆகவனீயம். தக்ஷணுக்கினி, காருகபத்தியமென்னும் மூன்றக்கினிகளென்றும், அகரம், உகரம், மகரம் என்றுசொல்லப்பட்ட மூன்றெழுத்துக்களென்றும், பெரியோர்கள்சொல்வார்களாதலிஞ லம்மூன்று பேர்களுடைய மனேபீஷ்டப்படி நடந்து அம்மூன்று பேர்களுடைய திருவடிகளைக் காலை யுச்சி மாலை, என்னுந் திரிசந்தியாகாலங்களிலுந் ஸ்தோத்திரஞ்செய்து வணங்குதல் வேண்டும்.

இதுவரையும் பிரமசரிய ஆச்சிரமவிதியினுட் சிலவற்றைச்சொன்னேம். இனி அப்பிரமசரியர்கள் செய்யவேண்டிய பிராஜாபத்திய முதலிய விரதங்களென்கினையும் வேதவிதிப்படி யனுஷ்டித்து அதற்குமேல் செய்யவேண்டிய சமாவர்த்தனமென்னும் கருமத்தின்விதிகளையும் நன்ருகச் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்ருர்.

**பிரமசரியவிதியுரைத்த வத்தியாயம்**

முற்றுப்பெற்றது.

## இருபத்தாறவது
# விரதசமாவர்த்தன முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? குற்றமற்ற நல்ல சுபமுகூர்த்த காலத்தில் வேதங்களிற்கூறும், பிராஜா பத்தியம், சௌமியம், ஆக்கினேயம் வைசுதேவமென் றுசொல்லப்பட்ட இந்நான்கு விரதங்களையு மிருந்த உள்ளன்புடனாரம்பித்துக் கிரமப்படி அனுஷ்டித்து வரல்வேண்டும.

அன்புடனே மேற்சொல்லிய நான்குவிரதங்களை யுங் கிரமப்படியனுஷ்டித்து வந்ததற்குமேல்,உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, மிருகசீரிடம், அனுஷ ம், அஸ்தம், திருவோணம், புனர்பூசம், பூசம், இரே வதி, உரோகணி யென்னு மிந்த நக்ஷத்திரங்களில் ஞா யிறு, திங்கள், புதன், வியாழம், வெள்ளியென் றுசொ ல்லப்பட்ட சுபவாரங்களில், துதியை, திருதியை,பஞ் சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, என்னுமிச்சுபதிதிகளில், ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம், என்றுசொல்லப்பட்ட விலக்கினத்தில் ஏழாமிடஞ் சுத்தமாகவும், சுக்கிரனுங் குருவும் மூகித்தையடையாத வுத்தராயண மாதங்களி ல் சமாவர்த்தனமென்னுங் கிரியை ஆரம்பித்துச் செ ய்யவேண்டும்.

குடுமி, நீண்டவிரண்டு புருவங்கள், இரண்டுமுன் கைமுதல் முழங்கைவரையிலுள்ள விடங்கள் இவை களிற்பொருந்தி யடர்ந்திருக்கின்ற பஞ்சசிகைகள்தவி ர மற்றையவிடங்களை நன்றாக க்ஷவரஞ்செய்துகொ

ண்டு ஸ்நானஞ் செய்து நூறுகுதிசெய்து பிரமசரிய ஆச்சிரமத்தைப் பெற்றுக்கொண்ட காலத்திற் றரித்த மௌஞ்சி,யரைஞாண், கிருஷ்ணஜனம், முதலியவைகளை யொழித்து இரண்டியக்ஞோபவீதத்தை முறைப்படி தரித்து, விளங்காநின்ற புஷ்பங்கள் சந்தனமுதலிய கலவைச்சாந்துகளை இனிதாகத் தரித்து சுகாசனத்திலிருநது பூமியிலுள்ளவர்கள் கொண்டாடும்படி அன்புடனே கோதானமுதலிய விரதங்களை நன்றாகச் செய்து பஞ்சாமிர்தத்தை விருப்பத்துடன் புசித்து மந்திர பூர்வமாய் விளஙகும் அக்கினியைப் பிரதக்ஷணஞ்செய்து எதிர்முகமாக வணங்குவதுசாமவர்த்தனமென்னுங் கிரியையாகும்.

இதுவரையும், மங்களகரத்தைத் தருவதான சமாவர்த்தனமென்னுங் கிரியையினை எடுத்துச்சொன்னோம். இனி யிவ்வுலகத்தின்கண் ணுயர்வாகச்சொல்லப்பட்ட விவாகபேதங்களை ஒருவாறெடுத்துச் சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

விரதசமாவர்த்தன முரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

# இருபத்தேழாவது விவாகபேதங்களுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? தனது கோத்திரத்திற் பிறந்தவர்களென்று சொல்லப்பட்டவர்களும், வேதாத்தியயனஞ் செய்யத்தவறினவர்களும், நல்லொழுக்க மில்லாதவர்களும், ஆண் குழந்தையே யில்லாமல்

பெண்குழந்தைகளையேவரிசையாகப்பெறுபவர்களும், துன்பத்தைத் தருவதான வியாதிகளை யுடையவர்களும், உலகத்தவரால் பழிக்கப்பட்ட மரபிற்பிறந்தவர்களும், ஆகிய வித்தன்மைகளை யுடையவர்களது குடும்பத்திற் பிறந்த பெண்களை விவாகஞ்செய்யில் அதனாற்றுன்பமே யுண்டாகும்.

முக்கியமா யிருக்கவேண்டியவிடங்களில் நீண்ட மயிர்களில்லாதவளும், தேகமெங்கு நிறைந்த மயிர்களையுடையவளும், செம்பட்டமயிர்களுடையவளும், மிகவு முயரமுமாக வளர்ந்திருப்பவளும், கடினமாகிய வார்த்தைகளுள்ளவளும், ஆண்பிள்ளைகளுக்குரிய வடிவங்களுள்ளவளும், நக்ஷத்திரம், விருக்ஷம், நதி, பாம்பு, பக்ஷி, மலை, இவைகளின் பெயர்களை யுடையவளும், கேட்பவருக்கு அச்சத்தை விளைவிக்கும்படியான பெயருடையவளும், முறைப்படி விவாகஞ் செய்துகொள்ளத் தகாதவளாவள்.

சிவந்த கண்களையுடையவளும், விகாரமான ரூபமுள்ளவளும், சகோதரர்களில்லாதவளும், தேகத்தில் அதிகமான உறுப்புக்களை யுடையவளும், குறைவான உறுப்புக்களை யுடையவளும், தன்வயதிற்கு மேற்பட்டவயதினையுடையளுவம்,மிகுந்தகோபமுடையவளும், மிகவுங் கறுத்தநிறமுள்ளவளும், பெருத்தகுரலுள்ளவளும், தாழ்வடைந்த ஜாதியர்களால் எடுத்து வளர்க்கப்பட்டவளுமாகிய மேற்சொல்லிய பெண்கள் விதிப்படி விவாகஞ்செய்து கொள்ளுதற்குரிய ராகார்கள்.

மாதர்களுக் கின்றியமையாததாகிய கற்பிலக்கணங்கள் முழுதும்பொருந்தியவளும், விவாகஞ்செய்துகொள்ளும்படி விரும்புவோனுக்கு முறைப்படி சின்னவயதுள்ளவளும், இல்லத்திற்குரிய நற்குணநற்

செய்கைகளை யுடையவளும், கேட்பவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரத்தக்க குளிர்ந்த சொற்களையுடையவளும், சாமுத்திரிகா சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட பேரழகுடையவளும், உலகத்திலுள்ளவர்களெல்லாம் புகழத்தக்க பேரன்புடையவளும், ஆகியவிவ்வகையான பெண்களை விவாகஞ்செய்துக்கொள்ளுதல் வேதமுதலிய சாஸ்திரங்களிற் சொல்லிய விதியாகும்.

எட்டுவயதினையுடையவள் கௌரியென்னும்பருவமுடையவளென்றும், ஒன்பதுவயதினை யுடையவள் உரோகணியென்னும் பருவமுடையவளென்றும், பத்துவயதினையுடையவள் கன்னியென்னும்பருவமுடையவளென்றும், பன்னிரண்டுவயதினையுடையவள் விடளிப்பருவமுடையவளென்றும், மேலோர்சொல்லுவர்.

அப்பருவப் பெண்களுள் கௌரிப்பருவப்பெண்ணைத் தக்கவரனுக்கு அன்புடனே தானமாகக்கொடுத்தவர்கள் சுவர்க்கலோகத்தில் வாழ்வார்கள்.

உரோகணிப் பருவப்பெண்ணைத் தானமாகக்கொடுத்தவர்கள் வைகுண்டமென்னும் விஷ்ணுபதவியில் வாழ்வார்கள்.

கன்னிப்பருவப் பெண்ணை விவாகஞ் செய்துகொடுத்தவர்கள் பிரமதேவனுடைய சத்திய லோகத்தை யடைவார்கள். விடளிப்பருவப்பெண்ணைத் தானமாகக் கொடுத்தவர்கள் பழிக்கத்தக்க நரகலோகத்தை யடைவார்கள். இப்பருவங்களுக்குமேற்பட்ட வயதினையுடைய பெண்களை மனதறிந்து தானமாகக் கொடுப்பவர்களெவ்விதபலனையடைவார்களோயானறிகிலேன்.

பெண்கள் பூப்படைந்த பிறகும், தக்கவரனுக்கு விவாகஞ்செய்துகொடாதவர்களும் பொருள்களை வாங்

கிக்கொண்டு கன்னிகையைக் கொடுத்தவர்களும், தாங்கள் பிறந்த குலத்திற்கு மேற்பட்ட குலத்திலாவது தாழ்ந்த குலத்திலாவது விவாகஞ் செய்துகொண்டவர்களும், நீரகத்திலழுந்தித் துன்பப்படுவார்களென்று வேதமுதலிய சாஸ்திரங்களெல்லா முறையிட்டுச்சொல்லும்.

உலகத்தில் வேதோக்தமாகச் சொல்லப்பட்ட விவாகங்கள் பிரமமணமென்றும்,தெய்வமணமென்றும், ஆரிஷமணமென்றும், பிரஜாபத்திய மணமென்றும், அசுரமணமென்றும், காந்தருவமணமென்றும், ராக்ஷதமணமென்றும். பைசாசமணமென்றும், எண்வகைப்படும் அவற்றுள் பிரமம், தெய்வம், ஆரிஷம், பிரஜாபத்தியம் என்று சொல்லப்பட்ட நான்கு மணங்களும், பிராமணர்களுக்குரியதாகும். அசுரமணமும், காந்தருவமணமும், இராக்ஷதமணமும், க்ஷத்திரியர்களுக் குரியதாகும்.

அசுரமணமானது வைசியர்களுக் குரியதாகும். அசுரமணம், காந்தருவமணமென்று சொல்லப்பட்ட மணங்க ளிரண்டும், சூத்திரர்களுக்குரியதாகுமென்று தருமசாஸ்திரங்களெடுத்துச்சொல்லும்.

மேற்சொலலிய இவற்றுள் நல்லொழுக்கங்க ளமைந்திராநின்ற பிரமசாரியைத் தானகவே அழைப்பித்து அவனுக்குத் தனது பெண்ணைச் சர்வாபரணங்களால் அலங்கரித்து அக்கினி சாக்ஷியாகத் தானஞ்செய்வது பிரமமணமென்றும், சோதிஷ்டோமாதி எக்கியத்தில் தனக்குப் புரோகிதனக விருப்பவனுக்குத் தன்பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பது தெய்வமண மென்றும், தான்செய்யவேண்டிய யாகாதி தருமத்துக்காக வரனிடத்தில் தகுதியான இரண்டு பசுவை வாங்கிக்கொண்டு, அல்லது அவ்விரண்டு பசு

வின்விலையாகிய பொருளை வாங்கிக்கொண்டு தன் பெண்ணைக் கலியாணஞ் செய்து கொடுப்பது ஆரிஷமணமென்றும், வரனது இனத்தார் வேண்டிக்கேட்க அதற்குள்பட்டு அவ்வரனுக்கு தருமங்களைச்செய்யுங்களென்று தன்பெண்ணைக் கொடுப்பது பிராஜாபத்தியமணமென்றும், பணங்களை வாங்கிக்கொண்டு தன்பெண்ணைக்கொடுப்பது அசுரமணமென்றும்,வதுவரனென்று சொல்லப்பட்ட மாதராடவரிருவரும்புணர்ச்சியின் ஆசையால் ஒருவருக்கொருவர் மனமொத்துக்கூடுதல் காந்தருவமணமென்றும், பெண்ணும்பெண்ணினத்தார்களு முடன்படாமல்வலிதிற்கொள்வது இராக்ஷதமணமென்றும், மதுமுதலிய லாகிரிவஸ்துக்களைப்புசித்து மயக்க மடைந்திருப்பவளும், நித்திரைசெய்துகொண் டிருப்பவளும், தன்வயதுக்கு மேற்பட்ட வயதினை யுடையவளும், என்று சொல்லப்பட்டவர்களை களவுப்புணர்ச்சியாகச் சேர்வது பைசாசமணமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

மேன்மையையுடைய பிராமணர்முதலிய நான்குவருணத்தாரும், தங்கள் தங்கள் மரபிற் பிறந்தபெண்களை மேற்சொல்லிய விவாகமுறைமைப்படி வதுவரர்கள் ஒருவருக்கொருவர் பாணிக்கிரஹணஞ் செய்துகொள்ளுதல் விதியாகும்.

பிராமணர்கள் க்ஷத்திரியப் பெண்களை விவாகஞ்செய்யுமிடத்துச் சத்துருக்களை வெல்லும் அம்பினைக் கையாற் பிடித்தல் விதியாகும், பிராமணராயினும், க்ஷத்திரியராயினும், வைசிய ஜாதிப்பெண்ணை விவாகஞ்செய்யுமிடத்து உழவுகோலைப்பிடித்தல் விதியாகும்.

பிராமணர், க்ஷத்திரியர், வைசியரென்று சொல்லப்பட்ட மூன்று வருணத்தவரும் சூத்திரஜாதிப்பெ

ண்ணை விதிப்படி விவாகஞ்செய்தால், அழகிய வஸ்திரங்களி னொருபக்கத்து நுனியைக் கையாற்பிடித்தலே சாஸ்திரங்களில் விதித்தமுறைமையாகும், மேற்சொல்லியவிவாகபேதங்களுள்நீதிவழுவில்லாத விவாகமுறைப்படி கலியாணஞ் 'செய்துகொண்ட அழகிய மாதர்கள்சத்புத்திரர்களைப்பெறுவார்கள். விவாகமுறையின்றிப் புணர்ச்சியை விரும்பிய மாதர் மிகுந்த தீமைகளைச் செய்கின்ற துற்புத்திரர்களைப் பெறுவார்களென்று மேலோர்கள் சொல்லுவார்கள்.

அஷ்டவிவாகங்களில் வேதவிதிப்படி வதுவரர்களுடைய மாதாபிதா பந்துவர்க்கங்கள் சம்மதியால் பாணிக்கிரஹண முதலியவும், மாங்கல்யதாரணமுஞ் செய்யப்படுவதேவிவாகம். அப்படிச்செய்யப்படாத மற்றவைகளை விவாகமென்று சொல்வதற்கு நியாயமில்லை. அரசர்களிஷ்டப்படி பலமாதர்களைப்புணரும்படிவிதித்ததற்குத் தக்கதாகச் சமாதானஞ்சொன்னதேயன்றி விவாகமென்று சொல்லுவது பொருந்தாது.

இதுவரையில் தூய்மையாகிய வேதங்களாலெடுத்துச் சொல்லப்பட்ட விவாகங்களின் பிரிவுகளை யின்பம்பெருகும்படி சொன்னோம். இனி, விதிவிலக்குகளிற் கெடாத விவாகத்திற்குரிய பொருத்தங்களை அன்புடனே சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

**விவாகபேதங்க ளுரைத்த வத்தியாயம்**

முற்றுப்பெற்றது.

இருபத்தெட்டாவது

## விவாகப் பொருத்தங்க ளுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? விவாகஞ்செய்வதற்குரிய *விளைமைபொருந்திய வதுவரர்களினுடைய ஜாதகங்களைக்கொண்டு விளங்காநின்ற ஆயுர்பாவ முதலிய துவாதசபாவ நிர்ணயங்களையும் பிரமாணமாகிய சோதிடசாஸ்திர முறைமைப்படிஆராய்ந்தறிந்து நிமித்தங்களையும், சகுனங்களையும் நன்றாகப்பார்த்து அதற்குமேல் அவர்கள் ஜன்மநக்ஷத்திரங்களினாலே தசவிதப்பொருத்தங்களும், நன்மையாக விருந்தால் கிரமப்படி விவாகஞ்செய்வது முறைமையாகும். தீமையாக விருந்தால் முறைமையன்றாகும்.

விவாகத்திற்குரிய வதுவின்நக்ஷத்திரமுதலாகக் கொண்டு தினப்பொருத்தம், கணப்பொருத்தம்,மாகேந்திரப்பொருத்தம், ஸ்ரீ தீர்க்கப்பொருத்தம், யோனிப்பொருத்தம், இராசிப்பொருத்தம், இராசி யதிபதிப் பொருத்தம்,வசியப்பொருத்தம், இரச்சுப்பொருத்தம், வேதைப்பொருத்தமென்றுசொல்லப்பட்ட தசவிதப் பொருத்தங்களின் றன்மைகளைத் தெளிவாக யாவருக்கும் விளங்கும்படி சொல்லுவோம் கேட்பாயாக.

### தினப்பொருத்தம்.

வதுநக்ஷத்திரமுதற்கொண்டு வரநக்ஷத்திரம்வரையிலெண்ணிக்கண்ட தொகையை ஒன்பதிற் கழித்து மிகுதியாகிய இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களாக விருந்தால் உத்தமமாகும். ஒன்று, மூன்று, ஐந்து, எழு, என்று

சொல்லப்பட்ட நக்ஷத்திரங்களாக விருந்தால் தீதாகும். ஒன்பதொன்பதாகக் கழிப்பதில் இரண்டாமொன்பதில் வருகின்ற எட்டா நக்ஷத்திரமும்,மூன்ருமொன்பதில் வருகின்ற வைநாசிகமாகிய நான்காநக்ஷத்திரமும், ஒன்பதாநக்ஷத்திரமும் தீதாகும். வதுவரர்களுடைய இராசிகளிரண்டு மொன்ருகில் நன்மையாகும்.

ஒன்பதிற்கழித்து வருகின்ற மிகுதி ஒன்ருகில், ஜன்மத்தாரை இரண்டாகில்,சம்பத்தாரைமூன்ருகில், விபத்தாரை நான்காகில், க்ஷேமத்தாரைஐந்தாகில், பிரத்யரத்தாரை ஆருகில்,சாதகத்தாரை ஏழாகில்,வதைத்தாரை எட்டாகில், மைத்திரத்தாரை ஒன்பதாகில், பரமமைத்திரத்தாரையென்றும், ஜன்மநக்ஷத்திர பாதந்தொடங்கி இருபத்திரண்டு அல்லது இருபத்துமூன்ருவது, நக்ஷத்திரங்களில் வருகின்ற எண்பத்தெட்டாம்பாத நின்ற நக்ஷத்திரமாகிய வைநாசிகத்தாரையென்றுஞ் சொல்லப்படும்,

வதுவரர்களுக்கு ஒருராசியாகவிருப்பதிலும் ஒருராசியிலடங்கிய இரண்டு நக்ஷத்திரங்களில் வரனுடைய நக்ஷத்திரம் முன்னும் வதுவினுடைய நட்சத்திரம் பின்னுமாகவிருந்தாலும், இரண்டுராசியிலும் பொருந்தியிருக்கின்ற நக்ஷத்திரங்களில் வரனுக்கு முதற்பாதமும், வதுவுக்கு நான்காம் பாதமுமாகவிருந்தாலும், வதுவுக்கு முதற்பாதமும், வரனுக்கு மூன்ரும் பாதமுமாக விருந்தாலும், வரனுக்கு முன்னிரண்டு பாதமும், வதுவுக்குப் பின்னிரண்டு பாதமுமாக விருந்தாலும் நன்மையாகும்.

மேற்சொல்லியமுறைமைப்படியில்லாமல்வேறுபட்டிருந்தால் கெடுதியாகும். இவைகளல்லாமல் ஒரு ராசியிலடங்கிய விரண்டு நக்ஷத்திரங்களில் கார்த்திகையும்,

பரணியும், பூசமும், ஆயிலியமும், அவிட்டமும்சதய முமாக விருந்தால் தீதாகும். கார்த்திகை, அசுவதி, சதயம், அஸ்தம், சுவாதி, பூராடம், மகம், ரோகணி, என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களில் வதுநக்ஷத்திரபாதமுந்தியிருக்கில் நன்மையாகும்.

வதுவரனிருவருக்கும், திருவாதிரை, விசாகம் ரோகணி, ரேவதி, மகம், உத்திரட்டாதி, திருவோணம் அஸ்தம் என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்கள் ஒரே நக்ஷத்திரமாகில் உத்தமாகும். உத்திரம், அசுவதி, கார்த்திகை, புனர்பூசம், பூசம், மிருகசீரிடம், பூரம், பூராடம், சித்திரை, அனுஷம், இந்த நக்ஷத்திரங்கள் ஒரே நக்ஷத்திரமாகில், மத்திமமாகும். சுவாதி, சதயம், பரணி, அவிட்டம், பூரட்டாதி, மூலம் என்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்கள் ஒரே நக்ஷத்திரமாகில் கெடுதியுண்டாகும்.

கணப்பொருத்தம்.

உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவாதிரை, ரோகணி, பரணி, பூரம், பூராடம், பூரட்டாதியென்னும் இந்த ஒன்பது நக்ஷத்திரங்களும் மனுஷியகணமாகும். மிருகசீரிடம், சுவாதி, புனர்பூசம், பூசம், அஸ்தம், ரேவதி, திருவோணம், அனுஷம் என்னும் இந்த ஒன்பது நக்ஷத்திரங்களும் தேவகணமாகும். கார்த்திகை, மகம், சதயம், மூலம், சித்திரை ஆயிலியம், விசாகம், அவிட்டம், கேட்டை என்னும், இந்த் ஒன்பது நக்ஷத்திரங்களும், இராக்ஷதகணமாகும்.

வதுவரனிருவருக்கும் ஒரேகணமாகில் உத்தமமாகும். மனுஷியகணமுந் தேவகணமுமாகில் மத்திமமாகும். இராக்ஷதகணமும், தேவகணமுமாகில் கெடுதியாகும். மனுஷியகணமும், இராக்ஷதகணமுமாகில்மர

ணமுண்டாகும். வதுவின் நக்ஷத்திரமுதல் பதினன்கு நக்ஷத்திரங்களுக்கு மேற்பட்டு வரநக்ஷத்திரமிருக்குமாகில், எல்லாக்கணமும் உத்தமமாகும். நன்மையைத் தருகின்ற கிரகமித்திரம், ஏகாதிபத்தியம், சமசத்தகமும் ஒத்திருந்தால் மிகுந்த ரச்சுப்பொருத்தம், வேதைப்பொருத்தம், கணப்பொருத்தம், இராசிப்பொருத்தம் இவைகளால் நேரிடுகின்ற தோஷங்களெல்லாம் நீங்கும்.

மாகேந்திரப்பொருத்தம் ஸ்ரீ தீர்க்கப்பொருத்தம்.

வதுவிநக்ஷத்திரமுதல் வரநக்ஷத்திரமானது ஒன்ருவது, நான்காவது, ஏழாவது, பத்தாவது, பதின்மூன்ருவது, பதினருவது, பத்தொன்பதாவது, இருபத்திரண்டாவது, இருபத்தைந்தாவது என்று சொல்லப்பட்ட நக்ஷத்திரங்களாகில், மாகேந்திரப்பொருத்தம் உத்தமமாகும். இந்தமுறைமை மாறியிருக்குமாகில்மத்திமமாகும். வதுநக்ஷத்திரமுதல் பதின்மூன்று நக்ஷத்திரங்களுக்குமேல் வரநக்ஷத்திரமிருக்குமாகில் வெற்றியைத்தருகின்ற ஸ்ரீ தீர்க்கப்பொருத்தம் உத்தமமாகும். சிலஜோதிட நூலோர் ஏழுநக்ஷத்திரத்துக்குமேற்பட்டிருந்தாலும் உத்தமமென்று சொல்லுவார்கள்.

யோனிப்பொருத்தம்,

அஸ்வதிநக்ஷத்திரம் ஆண்குதிரையாகும். பரணி நக்ஷத்திரம் ஆண்யானையாகும். கார்த்திகை நக்ஷத்திரம் பெண்ணுடாகும். ரோகணி நக்ஷத்திரம் விஷமுள்ள பாம்பாகும். மிருகசீரிடநக்ஷத்திரம் சாரைப்பாம்பாகும். திருவாதிரை நக்ஷத்திரம் பெண்ணுயாகும். புனர்பூசநக்ஷத்திரம் பெண்பூனையாகும். பூசநக்ஷத்திரம்ஆணுடாகும். ஆயிலியநக்ஷத்திரம் ஆண்பூனையாகும். மகநக்ஷத்திரம் ஆணெலியாகும். பூரநக்ஷத்திரம் பெண்ணெலி

யாகும். உத்திரநக்ஷத்திரம் விருஷபமாகும். அஸ்தநக்ஷத்திரம் பெண்ணெருமையாகும்.

சித்திரைநட்சத்திரம் ஆண்புலியாகும். சுவாதிநட்சத்திரம் ஆணெருமையாகும். விசாகநட்சத்திரம் பெண்புலியாகும். அனுஷநட்சத்திரம் பெண்மானாகும். கேட்டைநட்சத்திரம் ஆண்மானாகும். மூலநட்சத்திரம் ஆண்நாயாகும். பூராடநட்சத்திரம்ஆண்குரங்காகும். உத்திராட நக்ஷத்திரம் மலட்டுப்பசுவாகும். திருவோண நக்ஷத்திரம் பெண்குரங்காகும். அவிட்டநக்ஷத்திரம்பெண்சிங்கமாகும்.

சதயநக்ஷத்திரம் பெண்குதிரையாகும். பூரட்டாதி நக்ஷத்திரம் ஆண்சிங்கமாகும். உத்திரட்டாதி நக்ஷத்திரம் பாற்பசுவாகும். ரேவதி நட்சத்திரம் பெண்யானையாகும்.

இவற்றுள் யானைக்கு மனிதரும், குதிரைக்குநல்லபசுவும், எலிக்குப் பூனையும், குரங்குக்கு நாயும், பாம்பிற்கு ஆடும், மானுக்கும் எருமைக்கும் புலியும், பகையாகும்.

வதுநக்ஷத்திரயோனி வரநட்சத்திரயோனியிரண்டும் ஆண்யோனியாகில் பகையுண்டாகும். பெண்யோனியாகில் நன்மையாகும். வரனுக்கு ஆண்யோனியும், வதுவுக்குப் பெண்யோனியுமாகில் நன்மையுண்டாகும். வரனுக்குப் பெண்யோனியும், வதுவுக்கு ஆண்யோனியுமாகில் உலகத்தில் சில ஜோதிடர்கள் மத்திமமென்றும், பலஜோதிடர்கள் உத்தமமென்றுஞ் சொல்லுவார்கள்.

## இராசிப்பொருத்தம்.

இராசிப்பொருத்தம் வதுவினது சந்திரலக்கின முதல் வரனது சந்திரலக்கினமானது, எழானலும்,

ஏழுக்குமேலானாலும், உத்தமமாகும். பார்க்கப்படுகின்றவதுவினது ராசி இரண்டும், வரனதுராசி பன்னிரண்டாகவும், வதுவினது ராசிமூன்றும், வரனதுராசி பதினொன்றாகவும், வதுவினது ராசி நான்கும், வரனதுராசி பத்தாகவும், வதுவினதுராசி ஐந்தும், வரனதுராசி ஒன்பதாகவும், விளங்காநின்ற வதுவினது ராசி ஆறும், வரனதுராசி எட்டாகவு மிருக்கில் கெடுதியுண்டாகும். யாவரும் புகழும்படி விளங்காநின்றஇவ்வைந்தும், அந்தந்த முறையாகவே மாறியிருக்கில் உத்தமமாகும்.

## இராசி - அதிபதிப்பொருத்தம்.

மேஷராசி விருச்சிகராசி யிரண்டுக்கும் மகரராசி விருஷபராசி, கன்னியாராசி, துலாராசி, மிதுனராசி, இவ்வைந்துராசிகளும் உறவாகும். விருஷபராசி, துலாராசியிரண்டுக்கும் மிதுனராசி, விருச்சிகராசி, தனுராசி,மகரராசி, கும்பராசி, மீதுனராசி,மேஷராசி, இவ்வேழுராசிகளும்உறவாகும். மிதுனராசி,கன்னியாராசி இரண்டுக்கும் சிங்கராசி, மீனராசி, யல்லாத மேஷராசி, விருஷபராசி, கடகராசி,துலாராசி, விருச்சிகராசி, தனுராசி, மகரராசி, கும்பராசி, இவ்வெட்டு ராசிகளும் உறவாகும். கடகராசிக்கு விருஷபராசி, மிதுனராசி, தனுராசி, மீனராசி, கன்னியாராசி, இவ்வைந்து ராசிகளும் உறவாகும். சிங்கராசிக்கு மீனராசி, மேஷராசி யிவ்விரண்டு ராசிகளும் உறவாகும்.

தனுசுராசி மீனராசி யிரண்டுக்கும் கும்பராசி, விருஷபராசி, மிதுனராசி, கடகராசி, சிம்மராசி, கன்னியாராசி, துலாராசி, இவ்வேழுராசிகளும் உறவாகும். மகரராசி, கும்பராசி யிரண்டுக்கும் மிதுனராசி,கன்னியாராசி, தனுசுராசி, மீனராசி, விருஷபராசி, துலாராசி, இவ்வாறு ராசிகளும் உறவாகும். இவற்றுள்,வது

வினது ராசியதிபதிக்கும் வரனது ராசியதிபதிக்கும் பகையில்லாமல் உறவாக விருக்கில் உத்தமமாகும்.

வசியப்பொருத்தம்.

விவாகத்திற்குரிய வதுவுக்கு ஜன்மராசி மீனமாகில் வரனுக்கு ஜன்மராசி துலாமாக விருத்தலும், மேன்மைபொருந்திய வதுவுக்கு மிதுனராசியாகில் வரனுக்கு விருச்சிகராசியாக விருத்தலும், வதுவுக்குக் கும்பராசியாகில் வரனுக்குக் கடகராசியாகவிருத்தலும், வதுவுக்கு மேஷராசியாகில், வரனுக்குக் கன்னியாராசியாகவிருத்தலும்,வதுவுக்குவிருஷபராசியாகில்வரனுக்குத்தனுசுராசியாகவிருத்தலும், வதுவுக்கு மகரராசியாகில் வரனுக்குச் சிங்கராசியாக விருத்தலும், தீதாகும். இதுவரையிற் சொல்லிய முறையல்லாது வேறு எந்தவிதமாக விருந்தாலும் வசியப்பொருத்தம்உத்தமமாகும்.

இரச்சுப்பொருத்தம்.

இரச்சுப்பொருத்த மறிவதற்கு அர்த்தசந்திரனைப்போல வரிசையாக மூன்றுவரைகீறி, அம்மூன்றுவரைகளின் அடிமுதலாகக் குறுக்கே இடைவிட்டுநான்குவரைகீற விருபத்தேழு சந்திகளாகும், அவைகளில் அடிவரையின் முனையில் அசுவதிநக்ஷத்திரத்தைநாட்டி அதுமுதல் மேலேவலமாக ரேவதிவரையில்முறையாகவே அடைத்தால் சிரரச்சு, கண்டரச்சு,நாபிரச்சு,ஊருரச்சு, பாதரச்சுவென்று சொல்லப்பட்டஐந்துவிதமாக விளங்கும்.

அவற்றுள் வதுநட்சத்திரமும், வரநட்சத்திரமும், ஒருவரையிலிருந்தால் கெடுதியுண்டாகும். அப்படியிருப்பதில், சிரவிரச்சுவாகில் வதுவுக்கு மரணமுண்டாகும். கண்டரச்சுவாகில் வரனுக்கு மரணமுண்டாகும். நாபிரச்சுவாகில், அவ்விருவருக்கும் பிறக்கின்ற குழந்

தைகளுக்கு மரணமுண்டாகும். ஊருரச்சுவாகில், மல டாகும். பாதரச்சுவாகில், பொருள் நாசமாகும். இறங் குமுறையிலிருக்குமாகில், துக்கமுண்டாகும். ஏறுமு றையிலிருக்குமாகில், சிலநாள் மிகுந்த போகமுண்டா கும். இறங்குமுறையிலொன்றும், ஏறுமுறையிலொன் றுமாக மாறியிருக்குமாகில், மிகுந்த இன்பங்களையெ ல்லா மனுபவித்துப் பெருகி வாழ்வார்கள்.

| மிருகசீரிடம். | சித்திரை. | அவிட்டம். |
|---|---|---|
| ரோகணி——திரு | அஸ்த—சுவாதி | திருவோ——சதயம் |
| கார்த்திகை—புனர் | உத்தி-விசாகம் | உத்திரா———பூரட் |
| பரணி———பூசம் | பூரம்———அனு | பூராடம்—உத்திரட் |
| அசுவதி——ஆயிலி | மகம்———கேட் | மூல————ரேவதி |

வேதைப்பொருத்தம்.

வதுவுக்கு அசுவதிநக்ஷத்திரமாகில், வரனுக்குக் கேட்டைநட்சத்திரமாக விருத்தலும், வதுவுக்குப்பர ணிநட்சத்திரமாகில், வரனுக்கு அனுஷநட்சத்திரமாக விருத்தலும், வதுவுக்குக் கார்த்திகை நட்சத்திரமாகில் வரனுக்குப் விசாக நட்சத்திரமாகவிருத்தலும், வதுவு க்கு ரோகணி நட்சத்திரமாகில், வரனுக்குச் சுவாதி நட்சத்திரமாகவிருத்தலும், வதுவுக்குத் திருவாதிரை நட்சத்திரமாகில், வரனுக்குத் திருவோணநட்சத்திர மாக விருத்தலும் வதுவுக்குப் புனர்பூசநட்சத்திரமாகி ல், வரனுக்கு உத்திராட நட்சத்திரமாக விருத்தலும், வதுவுக்குப் பூசநட்சத்திரமாகில், வரனுக்குப் பூராட நட்சத்திரமாக விருத்தலும், வதுவுக்கு ஆயிலியநட்சத் திரமாகில், வரனுக்கு மூலநட்சத்திரமாக விருத்தலும், வதுவுக்கு மகநட்சத்திரமாகில், வரனுக்கு ரேவதிநட்ச த்திரமாக விருத்தலும், வதுவுக்குப் பூரநட்சத்திரமாகி ல், வரனுக்கு உத்திரட்டாதி நட்சத்திரமாக விருத்த

லும், வதுவுக்கு உத்திரநட்சத்திரமாகில், வரனுக்குப் பூரட்டாதி நட்சத்திரமாகவிருத்தலும், துன்பத்தைக் கொடுக்கின்ற வேதைக்கயிருகும்.

வதுவுக்கு அஸ்தநட்சத்திரமாகில், வரனுக்குச்சதயநட்சத்திரமாக விருத்தலும், மிருகசீரிடஞ் சித்திரையவிட்டமென்னு மூன்றுநட்சத்திரங்களும், ஒன்றுக்கொன்று வேதையாகுமென்று சோதிடநூல் வல்லவர்கள்சொல்லுவார்கள். நல்லறிவினையுடையவதுவரர்கள் நட்சத்திரங்கள் ஒன்றுக்கொன்று வேதையாயிருக்கில் தீங்குண்டாகும். வேதையில்லாதிருக்கில் விவாகஞ்செய்தால் இன்பங்களெல்லா மனுபவித்துவாழ்வார்கள்.

வதுவரர்களுக்குரிய தசவிதப்பொருத்தங்களிலும் தினப்பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப்பொருத்தம், இராசி மித்திரப்பொருத்தம், இரச்சுப்பொருத்தம் என்பனவாகிய ஐந்து பொருத்தங்கள் பிரதானமாகும். இவற்றுள்ளும், பிராமணர்களுக்குத் தினப்பொருத்தமும், க்ஷத்திரியர்களுக்குரியதாகச் சொல்லப்பட்ட கணப்பொருத்தமும்,வைசியர்களுக்கு இராசிமைத்திரப் பொருத்தமும், சூத்திரர்களுக்கு யோனிப்பொருத்தமும் சிரேஷ்டமாகும்.

நாடிப்பொருத்தம்.

அசுவதி, திருவாதிரை, புனர்பூசம்,உத்திரம்,அஸ்தம், கேட்டை, மூலம், சதயம், பூரட்டாதி இந்த ஒன்பது நட்சத்திரங்களும் ஏகநாடியாகும். பரணி, மிருகசீரிடம், பூசம், பூரம், சித்திரை, அனுஷம், பூராடம், அவிட்டம், உத்திரட்டாதி இந்த ஒன்பதுநட்சத்திரங்களும் மத்யேக நாடியாகும்.

கார்த்திகை, ரோகணி, ஆயிலியம், மகம், ஒளிபொருந்திய சுவாதி, விசாகம், உத்திராடம், திருவோ

ணம், ரேவதி இந்த ஒன்பது நட்சத்திரங்களும் பார்சு வேகநாடியாகும். வதுவினது நட்சத்திரமும், வரனது நட்சத்திரமும் ஒரேநாடியாக விருந்து அவ்விருவருக் கும் விதிப்படி முறையாக விவாகஞ்செய்யில் தீங்குண் டாகும்.

அசுவதி நட்சத்திரம் எட்டிமரம் வயிரமாகும். பர ணிநட்சத்திரம் நெல்லிமரம் வயிரமென்று சொல்லப் படும். கார்த்திகை நட்சத்திரம் அத்திமரம் பாலாகும். ரோகணிநட்சத்திரம், நாவல்மரம் பாலாகும். மிருடசீ ரிடநட்சத்திரம், கருங்காலிமரம் வயிரமென்று சொல் லப்படும். திருவாதிரை நட்சத்திரம் சண்பகமரம் பா லாகும். புனர்பூச நட்சத்திரம் புன்னைமரம் பாலாகும். பூச நட்சத்திரம் ஆலமரம் பாலாகும். ஆயிலிய நட்சத் திரம் வாகைமரம் வயிரமாகும். மகநட்சத்திரம் அரசம ரம் பாலாகும். பூரநட்சத்திரம் விளாமரம்வயிரமாகும். உத்திர நட்சத்திரம் பலாமரம் பாலாகும். அஸ்தநட்ச த்திரம், எருக்கமரம் பாலாகும். சித்திரை நட்சத்திரம் மாதுளைமரம் பாலாகும். சுவாதி நட்சத்திரம் வில்வ மரம் வயிரமாகும். விசாக நட்சத்திரம் மருதமரம் வயி ரமாகும். அனுஷ நட்சத்திரம் தாழைமரம் வயிரமாகு ம். கேட்டை நட்சத்திரம் மகிழமரம் பாலாகும். மூல நட்சத்திரம், மூங்கில்மரம் வயிரமாகும். பூராட நட்சத் திரம் மாமரம் பாலாகும். உத்திராடநட்சத்திரம் வஞ்சி மரம் பாலாகும். திருவோண நட்சத்திரம் புரசமரம் பாலாகும். அவிட்ட நட்சத்திரம் வன்னிமரம் வயிர மாகும். சதய நட்சத்திரம் மராமரம் வயிரமாகும். பூர ட்டாதி நட்சத்திரம் புளியமரம் வயிரமாகும். உத்திர ட்டாதி நட்சத்திரம் வேப்பமரம் வயிரமாகும். ரேவதி நட்சத்திரம் இலுப்பைமரம் பாலாகும். இதுவரையிற் சொல்லிய அசுவதிமுதல் ரேவதியந்தமாகிய நட்சத்தி ரங்களின் றன்மைகளைச் சொல்லுவோம்.

சொல்லப்பட்ட வரனது நட்சத்திரம் வயிரமும், வதுவினது நட்சத்திரம் பாலுமாக விருந்திடில் புத்திரப்பேறுண்டாகும். வரனது நட்சத்திரம் பாலும், வதுவினது நட்சத்திரம் வயிரமுமாகவிருந்திடில் புத்திரப்பேறில்லாத மலடாகும். வரன்வது வென்னும் இருவர் நட்சத்திரங்களும் வயிரமாக விருந்திடில்,பிறந்தகுழந்தைகள் நஷ்டமாகும். வதுவரனிருவர் நட்சத்திரங்களும் பாலாகவிருந்திடில் மிகுந்த வாழ்வுண்டாகும்.

அசுவதி, பரணி, கார்த்திகை, ரோகணி, மிருகசீரிடம் என்னும், ஐந்து நட்சத்திரங்களும் வல்லூறுகும். திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரமென்னும் ஆறுநட்சத்திரங்களும் ஆந்தையாகும் உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகமென்னும் ஐந்து நட்சத்திரங்களும் வலியனாகும். அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடமென்னும் ஐந்து நட்சத்திரங்களும் பிரியமிகுந்த கோழியாகும். திருவோணம், அவிட்டம். சதயம், பூரட்டாதி உத்திரட்டாதி, ரேவதி யென்னும் ஆறுநட்சத்திரங்களும் மயிலாகும். பட்டமயிலுக்கு வல்லூறும் ஆந்தையும் பகையாகும்.

கோழிக்கு வல்லூறும், ஆந்தையும் பகையாகுமென்றும், வலியனுக்கு ஆந்தைப்பகையாகு மென்றும், ஆந்தைக்கு வலியன் பகையாகுமென்றும், வல்லூறுக்கு ஆந்தையும், கோழியும், மயிலும் பகையாகுமென்றும், இவைகளிற் சொல்லாதொழிந்ததெல்லாம், உறவென்றும் ஜோதிடநூல்வல்லோர்கள் சொல்லுவார்கள்.

இதுவரையுங் கற்பிற்சிறந்த பெண்ணை விவாகஞ்செய்து கொள்வதற்குப் பார்க்கவேண்டிய தசவிதப்

பொருத்தங்களையும் கிரமமாகச் சொன்னோம். இனி அவ்வில்லற தருமங்களை முறையாகநடத்தி இம்மை மறுமை யென்று சொல்லப்பட்ட விருவகை இன்பங்களையு மடைவதற்குரிய விவாகவிதிகளுட் சிலவற்றைச்சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

**விவாகப்பொருத்தங்க ளுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.**

## இருபத்தொன்பதாவது

## விவாகமுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு உத்தராயண முத்தமமாகும். தக்ஷிணாயனமத்திமமாகும். இவ்விரண்டயனங்களுள்ளும், வருகின்ற ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி என்றுசொல்லப்பட்ட நான்கு மாதங்களுந் தீதாகும். சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை,பங்குனி யென்றுசொல்லப்பட்ட வெட்டுமாதங்களும், ஐஸ்வரியத்தையும், சந்தான முதலிய சகலபாக்கியங்களையும் தருவனவாகும். இவற்றுள் சித்திரை, ஆவணி, ஐப்பசியென்னு மூன்றுமாதங்களும் மத்திம பலனைத் தரும்.

விவாகமுகூர்த்தத்தைக் குருவானவர் அஸ்தமன நீங்கி ஒளிவளர்ந்து வருங்காலத்திற் செய்தால் வரனுக்குக் கெடுதியுண்டாகும். சுக்கிரன் அஸ்தமன நீங்கி ஒளிவளர்ந்து வருங்காலத்திற்செய்தால் வதுவுக்குக்கெடுதியுண்டாகும். சுக்கிரன் க்ஷீணத்தையடைந்து வருங்

காலத்திற் செய்தால் வரனுக்குக் கெடுதியுண்டாகும். குருக்ஷீணத்தை யடைந்து வருங்காலத்திற் செய்தால் வதுவுக்குக் கெடுதியுண்டாகும். அதோமுகநக்ஷத்திரங்களிற் செய்தால் மரணமுண்டாகும். திரியக்முகமென்றுசொல்லப்பட்ட நக்ஷத்திரங்களிற் செய்தால் சுரநோயுண்டாகும். ஊர்த்துவமுக நக்ஷத்திரங்களிற்செய்தால் எல்லா நன்மைகளையுந் தருமென்று மேலாகிய ஜோதிடநூற்புலவர்கள் சொல்லுவார்கள்.

விவாகமுகூர்த்தஞ்செய்வதற்கு, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்தம், ரேவதி, சுவாதி, ரோகணி, மகம், மிருகசீரிடம், அனுஷம், மூலம், என்று சொல்லப்பட்ட இந்தப் பதினொரு நக்ஷத்திரங்களும் உத்தமமாகும். மற்றைய நக்ஷத்திரங்களெல்லாந் தீதாகும். துதியை, திரிதியை, பஞ்சமி, சத்தமி, தசமி, ஏகாதசி, திரையோதசி யென்றுசொல்லப்பட்ட திதிகளுத்தமமாகும். பிரதமை,சஷ்டி,அஷ்டமி, துவாதசி, யென்னுந்திதிகள் மத்திமமாகும். இவற்றுட் சொல்லாதொழிந்ததிதிகளும், கிருஷ்ணபக்ஷத்தில்அஷ்டமிக்கு மேல் வருகின்ற எல்லாத் திதிகளுமரணத்தை யுண்டாக்கும்.

திங்கள், புதன், வியாழம், வெள்ளி யிந்த வாரங்களுத்தமமாகும். ஞாயிறு மத்திமமாகும். செவ்வாய், சனி யிந்தவாரங்கள் தீதாகும். மிதுனம், துலாம், தனுசு இந்த மூன்று லக்கினங்களு முத்தமமாகும். கடகம் கும்பம், கன்னி, விருஷபமென்றுசொல்லப்பட்ட நான்குலக்கினங்களு மத்திமமாகும். சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம், மேஷம், இவ்வைந்துலக்கினங்களுந் தீதாகும்.

உதயலக்கினத்தில், குரு, புதன், சுக்கிரனென்னுங் கிரகங்களிருந்தால் நன்மையுண்டாகும்.சூரியன்,

சந்திரன், இராகு, கேதுக்கள், சனி, செவ்வாயென்னுங்கிரகங்களிருந்தால் தீங்குண்டாகும். இரண்டாமிடத்திற் சுபக்கிரகங்களிருந்தால் நன்மையுண்டாகும். பாவக்கிரகங்களிருந்தால் தீங்குண்டாகும். மூன்றுமிடத்தி லெந்தக் கிரகங்களிருந்தாலும் நன்மையாகும். நான்காமிடத்திற் சுக்கிரன், குரு, புதனிவர்களிருக்க நன்மையாகும். சந்திரன், செவவாய், சூரியன், சனி, இராகு, கேதுக்களிருக்கத் தீதாகும். ஐந்தாமிடத்தில் சுபக்கிரகங்களிருக்க நன்மையுண்டாகும். பாவக்கிரகங்களிருக்கத் தீங்குண்டாகும்.

ஆறுமிடத்தில், சந்திரன், புதன், இராகு, கேதுக்களிருக்கத் தீங்குண்டாகும். மற்றைய கிரகங்க ளிருக்க நன்மையுண்டாகும். ஏழாமிடத்தி லெந்தக்கிரகங்களிருந்தாலுந் துன்பமுண்டாகும். எட்டாமிடத்தில் சந்திரன், சூரியன், அங்காரகனென்றுசொல்லப்பட்ட கிரகங்களிருந்தால் நன்மையாகும். மற்றையகிரகங்களிருந்தால் தீதாகும். ஒன்பதாமிடத்தில் சனி, அங்காரகன், இராகு, கேதுக்களிருக்கத் தீதாகும். மற்றைய கிரகங்களிருக்க நன்மையாகும். பத்தாமிடத்தி லெந்தக்கிரகங்களிருந்தாலும் பாவர்களாதலால் தீங்குண்டாகும். பதினோராமிடத்திலெந்தக்கிரகங்க ளிருந்தாலும் நல்லவர்களாதலால் நன்மையுண்டாகும். பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன், குரு, புத னிவர்களிருந்தால் நன்மையாகும். மற்றைய கிரகங்களிருந்தால் கெடுதியுண்டாகும்.

விவாகமுகூர்த்தஞ் செய்வதற்கு உதய லக்கினத்திற் குருவும், ஏழாமிடத்திற் சந்திரனும், எட்டாமிடத்திற் சுக்கிரனும், ஆறுமிடத்திற் சூரியனும், மூன்றுமிடத்திற் சனியுமிருந்தாலும், உதயலக்கினத்திற் குருவும், நான்காமிடத்திற் புதனும், பதினோராமிடத்திற்

சூரியனும், எட்டாமிடத்திற் பிரகாசியாநின்ற சுக்கிர னுமிருந்தாலும், உதயலக்கினத்திற் குருவும், நான்கா மிடத்திற் புதனும், சுக்கிரனும், ஆறாமிடத்திற் பாவக் கிரகங்களு மிருந்தாலும், உதயலக்கினத்திற் குருவும், எட்டாமிடத்திற் சுக்கிரனும், ஆறாமிடத்திற் சூரியனு மிருந்தாலும் நன்மை யுண்டாகும்.

விவாகமுகூர்த்தஞ் செய்வதற்கு உதயலக்கினத் திற் சுக்கிரனும், பதினோராமிடத்திற் குருவுமிருந்தா லும், பதினோராமிடத்திற் சந்திரன் உச்சம்பெற்றிருந் தாலும், உதயலக்கினத்திற் சுக்கிரனுங் குருவுமிருந்தா லும், ஒன்று, நான்கு, ஏழு, பத்தென்னுங் கேந்திரங்க ளிலும், ஐந்து, ஒன்பதென்னுந் திரிகோணங்களிலும், சுபக்கிரகங்களிருந்தாலும், உதயலக்கினத்திற் சுக்கிர னும், புதனும், பதினோராமிடத்தில் அங்காரகனும், பத்தாமிடத்திற் சூரியனும், ஐந்தாமிடத்திற் குருவுமி ருந்தாலும், உதயலக்கினத்திற் சுக்கிரனும், புதனும், குருவுமிருந்தாலும் நன்மையுண்டாகும். உதயலக்கின த்திற் புதனும், ஆறாமிடத்திற் சனியும், பதினோராமி டத்திற் செவ்வாயும், ஒன்பதாமிடத்திற் குருவும், பத் தாமிடத்திற் சூரியனுமிருந்தாலும், உதயலக்கினத்திற் புதனுங் குருவும், இரண்டாமிடத்திற் சந்திரனும், உப சயஸ்தானமாகிய, மூன்று, ஆறு, பத்து, பதினொன் றென்னுமிடங்களிற் பாபக்கிரகங்களிருந்தாலும், உத யலக்கினத்திற் புதனுஞ்சுக்கிரனுமிருந்தாலும் இரண் டாமிடத்திற் சுக்கிரனும், பன்னிரண்டாமிடத்திற் குருவும், எட்டாமிடத்திற் சூரியனுமிருந்தாலும்,உதய லக்கினத்திற் சுக்கிரனும், ஐந்தாமிடத்திற் புதனும், பதினோராமிடத்திற் சூரியனுமிருந்தாலும், நன்மை யுண்டாகும்.

விவாக முகூர்த்தஞ் செய்வதற்கு,ரித்தைதிதிகள் அமரபட்சம், சந்திரன் க்ஷீணமாயிருக்குங்காலம், குரு,

நீசமாயிருக்குங்காலம், ரிதுகாலங்களினந்தம்,வருஷாந்தம், அயனங்களினந்தம், விசேஷமிருந்த விஷுவத் புண்ணியகாலங்கள், ஷடசீதி புண்ணியகாலங்கள், சந்திரசூரியகிரகணகாலங்கள், சொல்லுகின்ற விதிபாத யோகம், உற்பாதங்கள், பூகம்பிதகாலங்கள், நவக்கிரகயுத்தகாலங்கள்,நவக்கிரகங்கள்,விடுதலாகியகாலங்கள், திக்காகங்கள், நிர்க்காதங்கள், ஆதானமென்று சொல்லுகின்ற காலங்கள், பிருஷ்டோதய லக்கினங்கள் இவைகளெல்லாந் தீதாகும்.

விவாகமுகூர்த்தஞ் செய்வதற்கு, கேதுவுடன் கூடியிருக்கும் நட்சத்திரங்கள், ஜன்மானுஜன்மந் திரிஜன்மநட்சத்திரங்கள், கன்மநட்சத்திரங்கள், மூன்றுநட்சத்திம், ஐந்தாநட்சத்திரம், ஏழாநட்சத்திரம், ஜன்மமாதம், ஜன்மவாரம், வைநாசிகநட்சத்திரம் இவைகளெல்லாந் தீதாகும். முதற்கருப்பத்திற்பிறந்த வதுவரர்களுக்குச் சொல்லப்பட்ட ஜன்மமாதம், ஜன்மநட்சத்திரம், ஜன்மவார மிவைகள் தீதாகும். மற்றையகருப்பத்திற் பிறந்த வதுவரர்களுக்கு நன்மையாகும்.

வதுவரர்களுக்கு மங்களஸ்நானஞ்செய்வித்தபின்பு, செய்யத்தக்க அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, சங்கற்பம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், நாந்தி, செய்யப்படுங் கோந்திரோச்சாரணம் கன்னிகாதானம், தீக்ஷாவஸ்திரதாரணம், அக்கினிப்பிரதிஷ்டை செய்யப்பட்ட பாதப்பிரக்ஷாளனம் மதுபர்க்கம், மாங்கலியதாரணம், முகாந்தம், பாணிக்கிரஹணம், சப்தபதிபூஜை, பிரதானஹோமம், பிரதக்ஷிணம், அம்மிமிதித்தல் லாஜஹோமஞ் ஜயாதிஹோமம், பிராயச்சித்தஹோமம், இரக்ஷாபந்தனம், ஆசீர்வாதம், சபாபூஜை இவைகளையெல்லாங் கிரமப்படி யின்பத்துடனே செய்தல், அன்றையதின மிரவில் பிரவேசஹோமம் ஸ்தாலீபாகம்,

அதற்குப்பின்பு அவுபாசனம், கந்தருவபூசையும் அன்புடனே செய்த மூன்றாந்தினத்தில் சதசும், நான்காந்தினத்தில் வசந்தபூஜையும், எட்டாவதுயாமத்தில் ஒப்பில்லாத சேஷவோமஞ்செய்தல், தாம்பூல சர்வணஞ்செய்தல், முளைப்பாலிகை விசர்ச்சனஞ்செய்தல், விஸ்தாரமாகிய இவைகளையெல்லாம் அவரவர்களுக்குரிய சூத்திரங்களிற் சொல்லிய விதிப்படி வரன்முறையாகச் செய்தொழுகவேண்டும்.

இதுவரையும் விவாகவிதியினைக் கிரமமாகச்சொன்னோம். இனி யவ்வில்வாழ்க்கைக்குரிய மாதர்களின் நல்லொழுக்கங்களைக் கிரமமாக விரித்துச் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

விவாக முரைத்த வத்தியாயம்.
முற்றுப்பெற்றது.

முப்பதாவது

# மாதரொழுக்க முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே ? மாதர்கள் சூரியோதயத்திற்குமுன் நித்திரைவிட்டெழுந்து, கணவனையுள்ளன்புடன்வணங்கி, நன்மையுண்டாகும்படி சவுசமுதலிய கிரியைகளைத் தருமநூலிற் சொல்லியவண்ண மினிதாகச்செய்து, கணவனுக் கின்பமுண்டாகப் பலவகைப்பட்ட பணிவிடைகளையு நன்மையுடனே செய்தல், யாவருந் தோத்திரஞ்செய்வதற்குரிய கற்பிற் சிறந்தமயில்போலுஞ் சாயலையுடைய மாதர்களதுசெய்கையாகும்.

கற்பிற்சிறந்தமாதர்கள், தங்கள் தங்கள் கணவர்களின் கட்டளையில்லாமல், யாதொருதெய்வங்களை வாழ்த்திவணங்குதலும், தெய்வத்தன்மைபொருந்திய கங்கைமுதலிய புண்ணியநதிகளில் ஸ்நானஞ்செய்ய விரும்புதலும், நன்மையைத்தரும் பலவகைப்பட்ட விரதங்களை யனுஷ்டித்தலும், திருவிழாமுதலிய சிறப்புக்களைப்பார்த்தலுமாகிய வினைகளையொருபோதுஞ்செய்யார்கள்,

தங்களை விவாகஞ் செய்துகொண்ட நாயகர்களது, பொருள்வருவாய்க்குத் தக்கபடி யில்வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாக்காரியங்களையு மன்புடனே நடத்துகின்ற நற்குண நற்செய்கைகளை யுடைய மங்கையர்களே! கற்பிற்சிறந்த மங்கையர்களாவார்கள்.

மேன்மை பொருந்தியதங்கள் கணவர்கள் புசித்த பின்பே தாங்களினிதாகப்புசித்தலும், கணவர்கள் யாதொருவருத்தமுமின்றி நித்திரைசெய்தபின்பு தாங்கள் நித்திரைசெய்தலும், கணவர்கள் நித்திரைவிட்டெழுந்திருப்பதன் முன்னமே தாங்கள் நித்திரைவிட்டெழுந்திருத்தலும், கெடுதியில்லாத கற்பினையுடைய மாதர்களது நற்செய்கைகளாகும்.

குற்றமில்லாத கற்பினையுடைய மாதர்கள், வயதின்முதிர்ந்து நற்குணமமைந்த பெரியோர்களின்துணையில்லாமல் யாதொரு விடத்திற்குந் தனித்துப் போகமாட்டார்கள். தாங்கள் வசிக்குமிடத்தைவிட்டு அன்னியருடைய வீட்டிற் பிரவேசியார்கள், பரியாசமானவார்த்தைகளைச் சொல்லமாட்டார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்கள், எப்பொழுது மன்புடனே கேட்பவர்களுடைய காதுக்கினிமையைத் தரத்தக்கதான நல்ல வார்த்தைகளையே தங்கள் நாவினுலெடு

த்துப் பேசுவார்கள். தாங்கள் வீட்டுக்கு வேண்டிய வெல்லாப் பொருள்களையும் கிரமப்படி சேகரித்துக் கொள்வார்கள். கூடியவரையில் தங்கள் பொருள்களை வீண் விஷயங்களிற் செலவிட் டழிக்கமாட்டார்கள்.

மாதர்கள், திருமகள் வசிக்கும் உலக்கையின்மீதும், உரலின்மீதும், முறத்தின்மீதும், வாயிற்படியின் மீதும், அம்மிக்கல்லின்மீதும் இருந்தால் செந்தாமரை மலரில் வசிக்குந் திருமகள்கடாக்ஷம் விலகுமென்று நினைத்து ஒருபோது முட்காரமாட்டார்கள்.

மாதர்கள், தங்கள் கணவர்கள் மிகவும் மனமகிழ்ச்சிகொண் டுவக்கும்படி ஆடையாபரண முதலியவற்றால் தங்களை யலங்கரித்துக் கொள்வார்கள். தங்கள் கணவர்கள் பிரிந்திருக்குங் காலத்திற் றங்களை யவ்வா றலங்கரித்துக்கொள்ளமாட்டார்கள்.

தங்கள் கணவர்களுடைய வயதானது குறையுமென்று பயந்து, அவர்களுடைய பெயர்களைத் தங்கள் வாக்கினாற் சொல்லமாட்டார்கள். நற்குணமமைந்த கணவர்களை யிகழ்ந்து அவர்கள்மேற் குற்றஞ்சொல்லி யலர் தூற்றுகின்ற துஷ்டப்பெண்களுடைய முகத்தையும் பார்க்கமாட்டார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்கள், மிகுந்தவழகைத் தரும் மஞ்சளைத் தேகமுழுமையும் பூசிக்கொள்வார்கள். தன்னையன்பின் மிகுதியாற்கலந்த நாயகனது மிச்சிலைக் கிடைத்தற்கரிய தேவாமிர்தமென வியந்து அன்புடனே புசிப்பார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்கள், தங்கள்கணவர்களுடைய மனோபீஷ்டங்களை அவரெடுத்துச்சொல்லுவதன்முன்னமே குறிப்பினாலறிந்து அவர் மனமுவக்கும்படி நட

ப்பார்கள். குற்றமற்ற தங்கள் கணவர்களுட்கார்ந்திருக்கும்போதல்லாமல் மற்றக்காலங்களி லவருக்கெதிரே யுட்கார்ந்திருக்கவுமாட்டார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்கள், தங்கள் கணவர்கள் மிகுந்தவழகில்லாதவரா யிருந்தாலும், தரித்திரத்தாற் பீடிக்கப்பட்டவரா யிருந்தாலும், நாளுக்குநாள் விருத்தியாகத்தக்க வியாதியையுடையவரா யிருந்தாலும், பலவீனராயிருந்தாலும், தகுதியற்ற மூப்பினரா யிருந்தாலும், அவர்களைத் தங்கள் வாக்கினல் யாதொரு பழுதுஞ்சொல்லாமல் அவரிஷ்டப்படி நடப்பார்கள்.

குற்றமற்ற கற்பிற்சிறந்த மாதர்கள், தங்கள் கணவர் தங்களைக் கோபத்தினற் பலவாறிகழ்ந்து பேசினலுந் தாங்களதற்கு எதிர்மொழியாக யாதொன்றுஞ்சொல்லமாட்டார்கள். தங்கள் தேகம் வருந்தும்படித் தங்களை யடித்தபோதிலும் தாஙகளவர்கண்மேற் கோபித்து அதனல்வருங் குற்றத்திற்காளாகமாட்டார்கள். தகாதகாரியங்களா யிருந்தபோதிலுந் தங்கள் கணவர்கள் செய்யென்று சொல்வார்களாயின் அவர்கள் சொல்லிமுடிப்பதின் முன்னமே மனமகிழ்ச்சியோடுசெய்துமுடித்தேனென்றுசொல்லி யவ்வாறேசெய்து முடிப்பார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்கள், கணவரது கட்டளைமீறி நடவாதிருத்தலாலே இஷ்டதேவதைகளை வழிபடுதலும், பற்பல தருமங்களைச் செய்தலும், தவங்களைச் செய்தலும், பல விரதங்களை யனுஷ்டித்தலும், எப்போதும் கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தலுமாகிய விந்தச் சற்கருமங்களை யெல்லாஞ்செய்த பலன்களை பெறுவார்களென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

கற்புடைய மாதர்கள், தங்கள் கணவரிட்ட கட்டளையின்படி அவர் நல்வழியிற் றேடும்பொருள்களை வியாதியஸ்தர், தரித்திரர், தொழிலாளர்கள், முற்றத் துறந்த பெரியோர்கள், விருந்தினர்கள், பிதூர்க்கள், தங்கள் குலதேவதைகள், உறவினர்கள், பசுக்கள் முதலானவர்களுக்கும் இயன்றவரையிற் பகுந்துகொடுத்துத் தாங்களு முபயோகித்துக் கொள்ளுவார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்களுக்குப் பொருந்திய நல்ல தவமாவதென்னவென்றால், தங்களை மணந்து புணர்ந்த கணவர்களிறப்பார்களாயின் அவர்களோடு தாங்களு முயிர்விடுதலும், கணவர்கள் சந்தோஷத்தை யடைந்தாற் றாங்களு மச்சந்தோஷத்தை யடைதலும், அவர்கள் துன்பத்தால் வருந்துவார்களாயின் றாங்களும் வருத்தத்தை யடைதலுமாம்.

கற்பினையுடைய மாதர்கள், போஜனங்களைப் புசிக்குங்காலத்திலும், தங்கள் நாயகர் தங்களை யழைப்பார்களாயின் உடனே போஜனத்தைவிட்டு அவர்களிடத்திற்கு வருவார்கள். தங்களைப் பெற்று வளர்த்த மாதா பிதாக்கள், தாங்களன்புடனே பெற்ற புத்திரர்களாகிய இவர்களிடத்திற் றாங்கள் கொண்டிருக்கு மன்பைப் பார்க்கிலுங் கணவரிடத்து மிகுந்த வுள்ளன்புடையவராயிருப்பார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்கள், பூப்படைந்து வீட்டினின்றும் நீங்கிப் புறத்தேவசிக்கின்ற மூன்று நாள்களிலும், தங்கள் கணவர் தங்கள் முகத்தைப் பார்க்கும்படி யெதிரில் வரமாட்டார்கள். வீட்டிற்குள் பிரவேசியார்கள். ஒருவேளை போஜனமேயன்றி மறுவேளை போஜனஞ் செய்யமாட்டார்கள். தங்கள் கணவரெதிரில் நின்று வார்த்தைசொல்லார்கள். தங்களையொத்த பூப்

படைந்த மாதர்களுடன் சேரமாட்டார்கள். கிரமப்படி குற்றமற்ற நான்காவது நாளில் சுததஜலத்தில் ஸ்நானஞ்செய்து எல்லாநன்மையு முண்டாகும்படி தங்கள் கணவரை யன்புடனே மனதில்தியானித்துக்கொண்டு சூரியபகவானைத் தரிசனஞ்செய்வார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்களின் பாதங்கள், இப்பூமியில் எவ்விடங்களிற் படுகின்றனவோ அவ்விடங்களே, பலவகைப்பட்ட திவ்யஸ்தலங்க ளெல்லாவற்றினும் விளங்கும் புண்ணியஸ்தலமாகுமென்று மேலோரெடுத்துச் சொல்லுவார்கள்.

தங்களுக்குரிய கணவரை வந்தனைவழிபாடுகள் செய்து வணங்குவதையே வுயர்ந்த விரதமாகக்கொள்ளாமல், தேவதாபூஜை முதலியவற்றைச் செய்யுமாதர்கள் கொடிய நரகவாதனையை யனுபவிப்பார்கள். தங்கள் கணவர்மேல் குற்றங்களைச்சொல்லிப் பலரறியத் தூற்றி, அவர்கள்மே லன்பில்லாதவராய்க் கோபித்தெதிர்த்துப்பேசும் மாதர்கள், மறுசனனத்தில் பெண்ணையாகப் பிறப்பார்கள்.

தங்களை மருவிச்சேர்ந்த கணவர் தங்களைக் கோபிப்பார்களாயின், அதுகாலை யவர்கட் கெதிரிலிருந்து உதாசீனமாகப் பேசுமாதர்கள் புலியாகப்பிறப்பார்கள். பிறபுருஷர்களி னுருவலக்ஷணங்களைக்கண்டு வியந்து பேசுமாதர்கள் பைசாசமாகப் பிறப்பார்கள். தங்கள் கணவர் பசியுடனிருக்க அவர் பசியைத்தணிக்காமல் போஜனஞ்செய்யுமாதர்கள் பன்றியாகப்பிறப்பார்கள்.

தங்களை மணந்த கணவிறப்பாராயின் றங்களுயிரையு முடனேவிடும்படி நினைக்குமாதர்களே புண்ணியசாலிகளாவார். அவ்வா றிறந்தகணவரைத் தகனஞ்செய்யு மக்கினியி லவர்மீதிருக்கு மன்பின் மிகுதியி

ளூலே விழுந்துயிரைவிடு மாதர்கள், தங்கள் கணவர்க ளுடனே சுவர்க்கலோகத்தில் விளங்கி வாழ்வார்கள்.

கற்பிற்சிறந்த மாதர்கள், தங்கள் கணவரிறப்பா ராயி னவர்களுடனன்பின்மிகுதியினு லக்கினியிற்குதி த்துத் தங்களுயிரையும் விடுவார்களாயின், அக்கணவர் மகாபாவிகளா யிருந்தபோதிலும், அவர்களை இயமன் வருத்தாமல் விட்டுவிடுவான். தங்கள் கணவருடனே கூடத் தங்களுயிரையும் விட்டுவிடுமாதர்கள், தங்கள் கணவருடனே சேர்ந்து தேவருலகத்தில் நீடூழிகாலம் போகபாக்கியங்களை அனுபவித்து வாழ்வார்கள்.

அழகிய பொன்னுபரணமனைத்து மொருங்கே யிழந்த கைம்பெண்கள், தங்கள் கூந்தலைத் தங்களுக் குள்ள வழகுகெடும்படி யுடனே மழித்துவிடாமல் கூந் தலை முன்போலவே முடித்திருப்பார்களாயின் அவர்க ளுடைய கணவரை இயமதூதர்கள் பாசக்கயிற்றினு லே கட்டி வருத்துவார்களென்று மேலோர்கள் சொல் லுவார்கள்.

மாதர்கள் தங்கள் கணவரிறப்பாராயின் பகற்கால த்தில் ஒரேவேளை போஜனஞ்செய்து தாம்பூலதாரண த்தையும், சுகமான படுக்கையையும் நீக்கித் தரையிலே படுத்து நித்திரைசெய்து பலவகைப்பட்ட விரதங்க ளையும் அன்புடனே யனுஷ்டிக்கவேண்டும்.

தரித்துக்கொண்டிருந்தஆபரணங்களையிழந்த கை ம்பெண்கள் சகல நன்மைகளு முண்டாகும்படி தங்க ளிஷ்டதேவதைகளை வழிபட்டருச்சிப்பதுமன்றித்தே கத்தைவிட்டு உயிர்நீங்காதிருக்கும்பொருட்டுக்கிழங்கு, பச்சிலை, சருகுமுதலியவற்றையாகாரமாகக்கொள்வது கிரமமாகும்.

தாமணிந்துள்ள சர்வாபரணங்களையு மிழந்த கைம்பெண்கள் மேற்சொல்லியபடி வேதங்களிற் கூறும் மேன்மைபொருந்திய விரதங்களை யனுஷ்டித்து வருவதுமன்றி உயர்ந்த தவங்களையுஞ் செய்வாராயின், பெருமகிழ்ச்சியுடனே தங்கள் கணவர்கள் வசிக்குமிடத்திற் சேர்ந்து அவருடனே தாங்களும்மகத்தாகிய போகங்களை யனுபவிப்பார்கள்.

இதுவரையும் கிரகஸ்தாச்சிரமத்தை நடத்துவதற்குச் சுதந்தரமாகிய கற்பிலக்கணங்க ளமைந்துள்ள மாதர்களினது நல்லொழுக்கங்களிற் சிறிது சொன்னோம். இனி அம்மாதர்களுடனே சேர்ந்து இம்மையின்பமு மறுமையின்பமும், அடையும் பொருட்டுச் செய்யப்பட்ட கிரகஸ்தாச்சிரம தருமங்களிற் சிறிது சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

**மாதரொழுக்க முரைத்த வத்தியாயம்**
முற்றுப்பெற்றது.

## முப்பத்தோன்றவது
## கிரகாச்சிரமவிதி யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், தங்கள் தங்கள் பத்தினியுடனே மணமொத்திருந்து, தருமசாஸ்திரங்களில்விதித்த தருமங்களைச் செய்வதற்குவேண்டிய திரவிய சம்பாதனத்திற்குரிய நல்வழிகளிலே முயன்று மிகுந்த பொருள்களைச் சம்பாதித்தல்வேண்டும். தெய்வங்களை வணங்

கல்வேண்டும். தருமசாஸ்திரங்களைக் கற்றலும், சந்தேக விபரீதமறப் பெரியோர்களிடத்திற் கேட்டலும் வேண்டும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், உலகாசாரத் தோடொத்து நடத்தலும், தீங்கான காரியங்களைச் செய்யாதொழித்தலும், நல்லொழுக்கந் தவறாது நடத்தலும், தருமங்களைச் செய்தலும், இகழ்ந்துபேசத்தக்க காரியங்களைச் செய்யாதிருத்தலும், தாமிருக்குமூரிலுள்ளவர்கள் கொண்டாடும்படி சற்கருமங்களைச்செய்தின்பத்துடனே வாழ்தலும், தங்கள் தங்கள் குலமுறைமையைத் தவறாது காத்தலும், சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் வேண்டும்.

இல்லறதருமத்திலிருப்பவர்கள் எந்நாளும் விருந்தினரோடு புசித்தலும், புத்திரரைவிரும்பிப் புணர்ச்சிசெய்யவேண்டிய காலத்தில் மனைவியுடனே சந்தோஷமாகப் புணர்தலும், தன்னுடனே பிறந்த சகோதரிகளையும், புத்திரிகளையும், விசுவாசத்துடனே யுபசரித்தலும்வேண்டும்.

இல்லறதருமத்தி லிருப்பவர்கள், பிரமசாரிகளும் வானப்பிரஸ்தர்களும், சந்நியாசிகளும், ஆகியவிவர்களிருத்தற் கிடமும், பிணிநேர்ந்த காலத்தில் மருந்தும், பசிப்பிணிதீர உணவுமுதலியவற்றையுங் கொடுத்துதவி,நோய், பசிமுதலியவற்றா லவர்களொழுக்கங்களுக்கிடையூறுகள் வாராதபடி பாதுகாத்தல்வேண்டும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், துறவறத்தார்களுக்கும், யாசகர்களுக்கும், உணவுமுதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். பிதுரர்களுக்கு, ஜலதர்ப்பணமுதலியவற்றை யன்புடனே செய்து, அவர்களை நல்லவுலகமடைவிக்கவேண்டும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள் தருமஞ்செய்யுங்காலத்தில், எவ்வகையான துயரநேரிட்டாலும் பயந்துவிடாமல் அத்தருமத்தை யினிதாகச் செய்யவேண்டும். வேதங்களேவும், பசுக்களேயும், தேவர்களேயும், அரசர்களேயும், ஆசிரியரையும், இகழாமல் நடக்கவேண்டும்.

தேவர்கள், தென்புலத்தார்கள், முனிவர்கள், பூதங்கள், அதிதிகள் ஆகிய இவர்கள் திருப்தியடையவும், தாஞ்செய்த பாவங்கணீங்கவும், தருமசாஸ்திர விதிப்படி பஞ்சமகாவெக்ஞத்தைப் பிரதிதினமுஞ் செய்ய வேண்டியது.

கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள், மாதப்பிறப்புகள், சஷ்டிதிதி, அஷ்டமிதிதி, சதுர்த்தசிதிதி, அமாவாசை, பௌர்ணமிமுதலிய புண்ணிய தினங்களில், தீயினல் புழுக்கிய புழுங்கலரிசியன்னம் புசித்தலேயும், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதலேயும் நீக்கல்வேண்டும். சரீரத்திற்பொருந்திய மயிர்களே க்ஷவரஞ்செய்துகொள்ளாதிருத்தல்வேண்டும். யாதானுமொன்றைத் தொட்டுக்கிள்ளினுங் குற்றமடைவார்களென்று வேதமுதலிய நூல்களிற் சொல்லப்படும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், நீரில் ஸ்நானஞ்செய்தல், திரிகால சந்தியாவந்தனஞ் செய்தல், காயத்திரி மந்திரஜபஞ்செய்தல், அக்கினிகாரியங்கள் செய்தல், வேதாத்தியயனஞ்செய்தல், தேவதார்ச்சனே செய்தல், வைஸ்வதேவபூத பலிகருமஞ்செய்தல், அதிதிபூஜைசெய்தல், தென்புலத்தார்களுக்குஜலதர்ப்பண முதலியவை செய்தல், என்றுசொல்லப்பட்ட இவ்வொன்பது காரியங்களேயும் பிரதிதினமுஞ்செய்யவேண்டியது முறைமையாகும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், உயர்வுபொருந்தியதாயும், தந்தையும், ஆசாரியரும், மனைவியும், புத்திரனும், விருந்தினரும், இரவும்பகலு மிடைவிடாது வழிபடுவோனும், இன்பத்தைக் கொடுக்கின்ற வேதவிதிப்படி யமைந்துள்ள அக்கினியும், அதிதிகளும், என்றுசொல்லப்பட்ட இவ்வொன்பதின்மரையும் பிரதிதினமு மனமகிழ்ச்சியுடனே பாதுகாத்தல்வேண்டும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், புதிதாகவந்த விருந்தினரைக் கண்டவுடன், அருமைபாராட்டுதல் இனிமையாகிய சொற்களைச் சொல்லுதல், சந்தோஷமாகப்பார்த்தல், மனமகிழ்ச்சியுடன்வருகவென்றுசொல்லுதல், இருக்கைவிட்டெழுதல், அவர் மனமகிழும்படிபேசுதல், அவர்முன்பு அருகிலிருக்குதல், அவர் போவரெனிற் பின்றொடர்ந்துபோகுதல், உபசாரவார்த்தைகள் சொல்லுதலுமாகிய இவ்வொன்பது செய்கையும் வணக்கமுடன் செய்யவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள்,தன்மனையில் வந்தவர்களுக்கு, ஆசனங்கொடுத்தல், கால்கழுவநீர்கொடுத்தல், தம்மாலியன்ற வினிய வுணவளித்தல், பாய்கொடுத்தல், இருப்பதிற்கிடங்கொடுத்தல், தாகத்திற்குச் சாப்பிடுதற்கு நல்லநீர்கொடுத்தல், இராக்காலமாகிலவரிருக்குமிடத்தில் தீபம்வைத்தல், எண்ணெய்கொடுத்தல், தாம்பூலங்கொடுத்தல் என்னு மிவ்வொன்பது காரியங்களையும்செய்தற்குரியமுறைமையென்றுவேத முதலிய நூல்கள் சொல்லும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள், தன்மனைவியையும் தன்னிடத்தில் பிறர்வைத்த அடைக்கலப்பொ

ருளையும், தன்குலாசாரத்தையும், அடைக்கலமாகத் தன்னை யடைந்தவரையும், சீதனமாகவந்தபொருள்களையும், முன்னோர்கள் வைப்பாகிய பொருளையும், புத்திரனையும், அந்தப் புத்திரனிருக்கும்போது சொல்லுகின்ற இவைகளையெல்லாம் துன்பத்தா லுயிர்போகும்படியான காலநேரிடினும், அன்னியரிடத்துக் கொடாதிருத்தல் வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

விளங்காநின்றபூமியிலுள்ளவர்கள், குளிர்ச்சிபொருந்திய ஜலத்தில் ஸ்நானஞ்செய்யுங்காலத்திலும், நல்ல கருமங்களை செய்யுங்காலத்திலும், தாகத்திற்கு நீரருந்துங்காலத்திலும், மாதரைப் புணர்ந்த காலத்திலும் வீதிகளிற் போய்வந்தகாலத்திலும், வஸ்திர முடுத்திக்கொண்ட காலத்திலும், நித்திரைவிட்டெழுந்த காலத்திலும், தும்மியகாலத்திலும், சுத்தமல்லாத பொருள்களைத் தீண்டியகாலத்திலும் விதிப்படி நன்மைபொருந்திய ஆசமனஞ்செய்தால் பரிசுத்தமடைவார்கள்.

இதுவரையில், கற்பினையுடைய மனைவியோடு மகிழ்ந்துசெய்தொழுகும் கிரகாச்சிரம தருமத்தைச் சொன்னோம். இனிஒப்பில்லாத தருமசாஸ்திரங்களிற் சொல்லாநின்ற நல்லொழுக்கத்தைச் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

**கிரகாச்சிரம முரைத்த வத்தியாயம்**

முற்றுப்பெற்றது.

## முப்பத்திரண்டாவது
## நல்லொழுக்க முறைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? பன்னிரண்டுமாசப்பிறப்புகள், அஷ்டமிதிதி சந்திர சூரியகிரகணங்கள், பௌர்ணமி, அமாவாசை, பிதுர்க்களைக்குறித்து தர்ப்பணமுதலிய செய்யப்படும் புண்ணியகாலங்கள், விரததினங்கள், தனக்குப்பொருத்தமில்லாத நக்ஷத்திரங்கள், விதிபாதயோகம், மகநக்ஷத்திரம், மூலநக்ஷத்திரம், முதலியவைகளை யொழித்துநின்ற தினங்களில் தன்மனைவியுடன்மிருந்த வின்பமுண்டாகும்படி புணர்ச்சிசெய்தல் விதியாகும்.

போஜனஞ்செய்யுங்காலத்தில், பூமியில் ஜலத்தினாலே மண்டிலமாகவளைத்து, அதன்மேல் போஜனபாத்திரத்தை வைத்தருந்தல் வேண்டும். அம்மண்டிலமானது, பிராமணர்களுக்கு நாற்கோணமாகவும், க்ஷத்திரியர்களுக்கு முக்கோணமாகவும், வைசியர்களுக்கு வட்டமாகவும், சூத்திரர்களுக்கு ஜலத்தைத் தெளிப்பதாகவும் செய்வதுரியதாகும். இவையன்றிப் போஜனபாத்திரத்தை மடியில்வைத்துண்பதும், கையிலேந்தியன்னம்புசித்தலும், கட்டில்முதலிய ஆசனங்களிலிருந்து புசித்தலும் தீமையைத்தரும்.

மாதர்களுடனே புணர்ச்சி செய்தலையும், தன்வீட்டிலுள்ள குற்றங்களையும், அவமதிப்பான காரியங்களையும் வஞ்சகத்தையும், தன்னுயுளையும், தான் பிறந்த நக்ஷத்திரத்தையும், ஆசிரியனு லுபதேசித்த மந்திரத்தையும், தன்மனைவியினது நற்குணங்களையும், தன்னிடத்

துள்ள மேலாகிய செல்வங்களையும், பிராணன் போகு ம்படியான துன்பமுண்டான காலத்திலும், மேற்சொ ல்லிய ஒன்பதையும், அன்னியருக்குச் சொல்லாதிருத் தல் வேண்டுமென்று மேலோர்கள் சொல்லுவார்கள்.

ஒருவரிடத்துத் தான்வாங்கிய கடனும், அந்தக் கடனைக் கொடுத்தலும்,பலவாகிய பொருள்களைக்கொ ள்ளுதலும், அப்பொருள்களை இலாபத்துடன் விற்ற லும், தனக்குண்டாகிய நோயும், அன்னியர்கள் நற்கு ணங்களும், தன்பெண்ணை விவாகஞ்செய்துகொடுத்த லும், பழமையாகிய தன்னொழுக்கமும், தான்செய்த பாவங்களும், என்றுசொல்லப்பட்ட இவ்வொன்பது காரியங்களையும், பலருக்கு மறையாமற்சொல்லுதல் தருமசாஸ்திர சம்மதமென்று பெரியோர்கள் சொல் லுவார்கள்.

உண்மைபேசுதல், ஒருவர் பொருளை யுபகரியா திருத்தல், கோபமில்லாதிருத்தல், ஆசாரமாயிருத்தல், ஒருயிரையுங் கொல்லாதிருத்தல், அந்தக்கரணங்களை யடக்குதல் பெரியோர்களை யடுத்தல், தம்மாலியன்ற நன்மைகளை மனம்வாக்குக் காயங்களால் பிறருக்குச் செய்தல், இவைகளெல்லாம் யாவருக்கும்நன்மைதருவ தாகும்.

தேவாலயங்கள், அரசர்கள், பிராமணர்கள், அபி ஷேகத்திற்குரிய திருமஞ்சனக்குடங்கள். வித்வான் கள், துறவிகள், குலத்திலுயர்ந்தோர்கள், பசுக்கள், அரசவிருக்ஷங்கள், நாற்சந்திகள், தேவாராதனையைக் குறித்த நெய்க்குடங்கள், தயிர்க்குடங்கள், நைவேத்தி யத்திற்குரிய திருவமுது, இவைகளெல்லாம் நடக்கும் போது வழியிலெதிர்ப்படுமாகில், அவைகளை யன்புட னே வலஞ்செய்து செல்லுதல் முறையாகும்.

குழந்தைகள், கர்ப்பிணிகள், பிணியாளர்கள்,கணவன்வீட்டிலிருந்து தன்வீட்டிற்கு வந்தபெண்கள்,ஆகியவிவர்கள் போஜனஞ்செய்தபின்பேனும் அதிதிகளுக்குப் போஜனஞ்செய்விக்கலாம். பிதுரர்களுக்குச் சிரார்த்தஞ் செய்யுங்காலத்திலும், அவுஷதங்களிலும், பிராணஹானி நேரிடாமல் பிழைக்கும்படியான காலத்திலும், யாகத்திலும், புலாலுண்ணுதல் விதியாகும். மற்ற எக்காலத்திலும், புலால் உண்ணலாகாது.

பிராமணர்கள்,க்ஷத்திரியர்கள், வைசியர்கள், என்னுமூன்று வருணத்தார்களும் பகற்காலத்திலும், இராக்காலத்திலும் வைசுவதேவ பூதபலிகரணஞ் செய்தல் விதியாகும்.

நாற்சந்தி முச்சந்திகளி லிருக்கின்ற மரங்கள் இடுகாட்டிலடுக்கி யிருக்கும் விறகுகள், யாகஞ்செய்யுமிடத்திலிருக்கும் யூபஸ்தம்பங்கள், என்னுமிவைகளைத் தீண்டுதல்தீதாகும். விஷப்பற்களையுடைய பாம்புமுதலாகிய விஷமுள்ளஜெந்துக்கள், புலிகள், யானைகள், கொம்புகளையுடைய மிருகங்கள், எதிர்காற்று, பனி, வெய்யில், இவைகளுக்கு விலகிநடத்தல்முறையாகும்.

தேவர்கள், ஆசாரியர், பெரியோர்கள், பசுக்கள், பிராமணர்கள், இவர்களைப் பூசித்தலும், தேவர்கள், முனிவர்கள், கற்பினையுடையமாதர்கள், அரசர்கள், இவர்களை யிகழாதிருத்தலும், தேவர்கள், பெரியோர்கள், பிர்மதேஜஸையுடைய பிராமணர்கள், இவர்களுடைய நிழலைக்கடந்து போகாமலும், தேவர்கள், துறவிகள், பிதுர்க்கள், இவர்களுக்கு அருத்திய சேஷமுண்ணுதலாகிய விவைகளெல்லாமிருந்த நன்மையாகும்.

அன்னமுதலியவற்றைக் கையினாலே பரிமாறுதலும்,நீரில் ஸ்நானஞ்செய்தபிறகு உடம்பைக்கையினாற்

றுடைத்தலும், காரணமின்றி யுடம்பிலே அடிக்கடி கையினாலே தட்டுதலும், இரண்டு கையினாலுந் தலையைச்சொரிதலும், உள்ளங்கையி லன்னத்தை யேற்றுண்ணுதலும், கையினாலே ஜலத்தைமுகந்து குடித்தலுமாகிய வினைகளெல்லா தீமையைத் தருவனவாகும்.

பசுவையேனும், எருதையேனும், வாகனமாகக் கொள்ளுதல், பகைவரை விரும்புதல், தண்ணீர்குடித்துக்கொண்டிருக்கும் பசுவையோட்டுதல், எச்சிற்கையுடனே அக்கினியையும், பிராமணர்களையும், பசுக்களையுந்தீண்டுதல், மனிதரைப்பாடுதல், தன்னைப்புகழ்தல், பசுவின்கன்றைத் தாண்டிப் போகுதல் என்று சொல்லப்பட்ட வினைகளெல்லாம் தீமையைத்தருவனவாகும்.

அன்னியர் பொருள்களை யபகரித்தல், பெரியோர்களெதிரிற் காலைநீட்டுதல், அன்னியர்குற்றங்களை யெடுத்துப்பேசுதல், ஒருவருக்கும் பிரியமில்லாதவார்த்தை சொல்லுதல், அன்னியருடையமனைவியைவிரும்புதல், பிரவாகமாகிய வெள்ளத்தினெதிரே நீந்திச்செல்லுதல், அன்னியர்கள்வீட்டிலிருக்கும் வஸ்திரங்களை யணிதல், அன்னியர்மேலே ஜலந்தெரிக்கும்படி தலைமயிரை யுதறுதல், அன்னியருடைய போஜனபாத்திரத்திலுண்ணுதல், பெருமூச்சுவிடுதல், பகற்காலத்தில் நித்திரைசெய்தல், அன்னியர்களுக்குத்துன்பஞ்செய்தல், பொய்பேசுதல் அறிவில்லாதவரோடு சிநேகித்தல், அன்னியருக்கு வானத்திற்றோன்றுகின்றஇந்திரதனுசைச்காட்டுதல், இவைகளெல்ல மிகுந்த தீமையைத்தருவனவாகும்,

ஆடையில்லாமல் நித்திரை செய்தல், துஷ்டமிருகங்களை வாகனமாகவேறுதல், ஒருவர் நித்திரைசெய்

யும்போதெழுப்புதல், கோட்சொல்லுதல்: சூதாடுவத ஞலும் தூதுசொல்லுவதனுலும் பொருள் தேடுதல், நித்திரைசெய்யுமாதரைப் புணர்தல், காலை நேரத்தி லும் மாலைநேரத்திலும் நித்திரைசெய்தல், வீட்டுக் குவிலக்காயுள்ள மாதரைத் தொடுதல் இவைகளெல் லாந் தீமையையுண்டாக்கும்.

உருவத்திஞலும், கல்வியிஞலும், செல்வத்திஞ லும், குலத்திஞலும் தாழ்ந்தவர்களையிகழ்ந்துபேசுதல், உடைந்த போஜனபாத்திரத்திற் சாப்பிடுதல், போஜ னஞ்செய்த பாத்திரத்திற் கைகழுவுதல், படுக்கையி லிருந்துகொண்டு தாகத்துக்கு நீரருந்துதல், போஜன ஞ்செய்தல், மந்திரஜெபஞ்செய்தல், சூதாடுதல், காலை நேரத்தில் வெய்யிலிலிருத்தல் இவைகளெல்லாந்தீமை யையுண்டாக்கும்.

சொல்லப்பட்ட மயிர்களையும், எலும்புகளையும், மலமூத்திரங்களையும், சாம்பல்களையும், அசுத்தமான ஜலத்திஞலே நனைந்தவிடங்களையும், முட்களையும், உ திரத்தையும், கோழையையும், உமியையும், மிதிக்குத லும், காலிஞலேகாலைமிதித்தலும், பெண்களை யவமா னஞ்செய்தலும், சுடுகாட்டுப்புகை தன்மேற் பொருந் தும்படி சமீபத்திற்போதலும் ஆகிய வினைகளெல் லாந் தீமையையுண்டாக்கும்.

நீரினிடத்துத் தன்னிழலைப்பார்க்குதல்,உடுத்திய ஆடைநீங்கிய மாதர்களுருவங்களைப் பார்க்குதல், மல மூத்திரங்களைப் பார்க்குதல், கிரகண காலங்களிலும் உதிக்கின்ற காலங்களிலும் அஸ்தமன காலங்களிலும் ஜலத்தினிடத்திலும் சூரியனைப் பார்க்குதல், என்று சொல்லப்பட்ட வினைகள் தீமையையுண்டாக்கும்.

ஜாதியாசாரஞ் சமயாசாரந் தவறினவனும், அன் னியருடைய பொருள்களை யபகரிக்கின்றவனும், பயி

த்தியமுடையவனும், பொய்பேசுகின்றவனும், பலர்களோடு பகையுடையவனும், கிரமமல்லாத செலவுசெய்பவனும், உபயோகமில்லாத காரியங்களைச் செய்பவனும், நல்லோர்களைத் தூஷிக்கின்ற மதமுடையவனும், கட்குடியனும், தரித்திரனும், வஞ்சனையுடையவனும், துன்பஞ் செய்வோனும், கீழ்மகனும், பழிச்சொற்களையுடையவனும் ஆகிய விவர்களுடனே சிநேகஞ்செய்தால் மிகுந்த தீமையையுண்டாக்கும்.

சோம்பலாகத்திரிதல், இராக்காலத்திலே தயிருண்ணுதல், பொய்பேசுதல், பெண்ணைக்கொடுத்த மாமனார்வீட்டிற் பலநாளிருந்துண்ணுதல், யாதொருகாரணமுமில்லாமல் கைகளையுதறுதல், தலையையாட்டுதல், உதிர்ந்த செத்தைகளைக் கிள்ளுதல் என்றுசொல்லப்பட்ட இவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.

நெருப்பை வாயினலூதல், நின்றுகொண்டுஆசமனஞ்செய்தல், அக்பையினலே பரிமாருமல் கையினலே பரிமாறிய உப்பு, நெய், ஜலம், அன்னம், கறிகள், பால், என்னுமிவைகளை யுண்ணுதல், இரும்புக்கரண்டியாற் பரிமாறுதல், அப்படிப்பரிமாறிய அன்னங்கறிமுதலியவற்றை இனிதாகச் சாப்பிடுதல் ஆகியவிவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.

மனைவியோடிருந்து சாப்பிடுதல், மனைவிசாப்பிடுவதைப் பார்க்குதல், வழித்துணையில்லாமலே தனிமையாகப்போகுதல், இருந்த ஆசனத்தைக்காலினலே தள்ளுதல், நல்லவழியல்லாதவழிகளிற்போகுதல், மலையுச்சியிலு மரத்தினுனியிலுமேறுதல், கொலைசெய்தல் என்னு மிவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.

தகுதியான போஜனபாத்திரத்திற்கு மேலாகவுயர்ந்த ஆசனத்திலிருந்து புசித்தல்; முகம், கை, கால், இவைகளை ஜலத்தினலே சுத்தஞ்செய்யாம லினிதாக

ப்புசித்தல், மிகுந்த கவலையுடனே புசித்தல், நின்று கொண்டு தண்ணீரைக்குடித்தல், வஸ்திரமில்லாமல் நீராடுதல் என்று சொல்லப்பட்ட இவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.

தான்செய்த தவத்தையுந் தானத்தையும் பிறரறியச்சொல்லுதல், நடக்கும்போது தலைமயிரை விரித்துலர்த்துதல், ஆசிரியனெதிரிலே குலாவிக்கொண்டிருத்தல், படுத்துக்கொண்டிருததல், அன்னமுதலிய பழயவுணவுகளைப்புசித்தல், பாழ்வீட்டில் வசித்தல்,உதட்டைக்கையாற் கசக்குதல் என்று சொல்லப்பட்ட விவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.

சந்திரன், சூரியன், அக்கினி, ஜலம், காற்று பெரியோர்களென்னு மிவைகளுக் கெதிரிற் காறிக் கோழையை யுமிழ்தல், மலவிசர்க்கஞ் சலவிசர்க்கஞ் செய்தல், மூக்குநீரைச் சிந்துதல் என்று சொல்லப்பட்ட விவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.

அடிக்கடி மூக்கையுறிஞ்சுதல், பற்களைக்கடித்தல், கோபித்தல், இறைந்துசிரித்தல், ஐம்பொறிகளைத்தொடுதல், பலத்த வோசையுடனே அபானவாயுவை விடுதல், மீசையைக்கடித்தல், நகத்தைக்கடித்தல், கண்மயிரைப்பறித்தல் என்று சொல்லப்பட்டவிவைகளெல்லாந் தீமையையுண்டாக்கும்.

இதுவரையில் மனிதர்களுக்குவேண்டிய நல்லொழுக்கங்கள் சிறிதுசொன்னோம். இனி இல்லற நடத்துகையில் ஐந்து பாவங்களையும் போக்குதற்கு தருமநூல்களின் விதிப்படி நடத்தவேண்டிய பஞ்சமகாவெக்ஞங்களைச் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

**நல்லொழுக்க முரைத்த வத்தியாயம்.**
முற்றுப்பெற்றது.

## முப்பத்துமூன்றவது

# பஞ்சமகாவெக்கிய முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? நெல்முதலிய வற்றை அம்மி, எந்திர முதலியவற்றில் அரைக்குதல், உரலிலு முலக்கையிலுங் குற்றுதல், குடத்தினிடத்தில் குளிர்ந்தஜலத்தைக் கொண்டுவருதல், நெருப்பினிடத்தில் விறகையெரிக்குதல், அரிவாட்கள் முதலியவற்றால் போஜனத்திற்குரிய பதார்த்தங்களை நறுக்குதல் என்று சொல்லப்பட்ட விவ்வைந்தினுலும் ஐந்து கொலையுண்டாகிறது. அவ்வைந்து பாவங்களையு முறையே போக்குவதற்காக வேதவிதிப்படி கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள் தினந்தோறும் ஐந்துமகாவெக்கியங்களைச் செய்யவேண்டும். அவ்வெக்கியங்களைத் தனித்தனி கிரமமாகச் சொல்லுவோம்.

அருமையாகிய வேதமோதுவது பிரமவெக்கியமாகும். ஜலதருப்பணத்தினு லாவது, அன்னத்திலு லாவது பிதுர்க்களைக்குறித்துத் திருப்திசெய்வது பிதுரெக்கியமாகும். தேவதைகளைக்குறித்து அக்கினியினிடத்தில் விதிப்படி ஓமஞ்செய்வது தேவயெக்கியமாகும். வாயசபலிமுதலானவை வைப்பது பூதவெக்கியமாகும். அதிதிகளுக்கு மனமகிழ்ச்சியுடனே சாப்பாடுபோடுவது மானுடவெக்கியமாகும் என்று சொல்லப்பட்ட விவ்வைந்தினுட் சேர்ந்ததான பிதுரெக்கியத்தை அன்னத்தினுலாவது, சக்திக்குத்தக்கபடி ஜலதருப்பணத்தினுலாவது, பாலினுலாவது, கிழங்கினுலாவது, பழத்தினுலாவது, பிதுர்க்களின் பிரீதியின்

பொருட்டு நிந்தையில்லாமற் செய்து, ஒரு பிராமண னைப் புசிப்பித்தல் முறைமையாகும்.

முனிவர்களும், பிதுர்க்களும், தேவர்களும், பூத ங்களும், அதிதிகளும், ஆகியவிவர்களெல்லாஞ் சொல் லுகின்ற கிரகஸ்தாச்சிரமத்தை யின்பத்துடனே பொ ருந்தியிருப்பவர்க ளிடத்தினின்றும் மிகுந்த திருப்தி யை அடையவிரும்புவார்கள். ஆதலால்,வேதங்களிற் கூறியபடி அவர்களுக்கிதமாகச் செய்வது கடமையா கும்.

வேதாத்தியயனஞ் செய்வதினாலே முனிவர்களை யும், ஓமஞ்செய்வதினாலே விண்ணுலகத்தில் விளங்கா நின்ற தேவர்களையும், சிரார்த்தஞ்செய்வதினாலே பிது ர்களையும், போஜனஞ் செய்விப்பதினாலே அதிதிகளை யும், விளங்காநின்றபலிபோடுவதினாலே பூதங்களையுந் திருப்தியடையும்படி செய்யவேண்டியது.

தேவர்களைக்குறித்து அக்கினியினிடத்தில் அன் புடனே செய்யப்படுகிற ஓமங்கள் சூரியனையடை யும். அச்சூரியனாலே மழையுண்டாகும். விரும்பப்படு கிற அம்மழையினாலே பலவாகிய தானியங்களுண்டா கும். அதனாலே ஜீவகோடிகள் விருத்தியடையுமெ ன்று வேதங்க ளெடுத்துரைக்கும்.

இதுவரையும் கிரகஸ்தாச்சிரமத்திலிருப்பவர்கள் அன்றன்று செய்த பாவங்களைப் போக்குவதாகிய பஞ் சமகாவெக்கியத்தைச் சொன்னோம். இனி அமாவா சை முதலாகிய தொண்ணூற்ற்று சிரார்த்தங்களையும் நன்மையுடனே சொல்லுவோமென்று காளத்தி மகா முனிவர் கூறுகின்றார்.

**பஞ்சமகா வேக்கிய முறைத்த வத்தியாயம்**
*முற்றுப்பெற்றது.*

## முப்பத்துநான்காவது

# அமாமுதலிய சிரார்த்தங்க ளுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? பெருமையிருந்த அமாவாசைதினத்தில் பிண்டப்பிரதானத்துடனே பிதுர் எக்கியஞ்செய்தபின்பு அந்தத்தினத்தில் செய்யப்படுகிற சிரார்த்தத்தை அவரவர்கள் சூத்திரவிதிப்படி அன்னத்தினுற் செய்யவேண்டும். விசுவே தேவர்களுக்காக இரண்டுபேர்களையும், பிதுர்த்தேவர்களுக்காக மூன்றுபேர்களையும் புசிப்பித்தல்வேண்டும்.

மேற்சொல்லிய அந்த விசுவேதேவர்களுக்கு ஒருவரையும் பிதுர்களுக்கு ஒருவரையுமாவது செவ்வையாகப் புசிப்பித்தல்வேண்டும். இந்தப்படி செய்வதனுலேபிதுர்களுக்குப்பரலோகத்திலேதிருப்தியும்,தனக்கு இகலோகத்திலே வமிசவிர்த்தியும், ஐசுவரியவிருத்தியுமுண்டாகும்.

சித்திரை மாதமுதல் பங்குனிமாதம் வரையிலுள்ள ஒரு வருஷத்தில் வருவதாகிய அமாவாசை பன்னிரண்டும், மன்வாதிபதினன்கும், யுகாதி நான்கும், மாதப்பிறப்புப் பன்னிரண்டும், வைதிருதி நாமயோகம் பதின்மூன்றும், விதிபாத நாமயோகம்பதின்மூன்றும், மகாலயம் பதினறும், அஷ்டகை பன்னிரண்டும். இத்தன்மையாகிய சிரார்த்தங்கள் தொண்ணூற்றுறையும், விதிப்படி செய்வதனுலே பிரமாவும், இந்திரனும், உருத்திரனும், சூரியனும், வாயுவும், அக்கினியும், அச்சுவினி தேவர்களும், விசுவேதேவர்களும், பிதுர்த்தேவர்களும், முனிசிரேஷ்டர்களும், அஷ்டவசுக்களும், பூமியிலுள்ள மனிதர்களும், விலங்கின்

கூட்டங்களும், பறவைக்கூட்டங்களும், சர்ப்பமுதல் ஊர்வனவாகிய ஜெந்துக்களும், நீர்வாழ்வன வாகிய ஜெந்துக்களும், மற்றுள்ளபூதங்களும், இன்னும் பலர் களும் இன்பத்துடனே மகிழ்ச்சியடைவார்கள்.

அனுஷநக்ஷத்திரம்; விசாகநக்ஷத்திரம்,சுவாதிநக்ஷத்திரம் இவைகள் அமாவாசைதினத்தில் சேருகிறகாலத்தில் செய்யப்படுகின்ற சிரார்த்தமானது பிதுர்களுக்கு எட்டுவருஷந் திருத்தியுண்டாக்கும். புனர்பூசநக்ஷத்திரம், திருவாதிரைநக்ஷத்திரம், பூசநக்ஷத்திரம் இவைகள் பொருந்திய அமாவாசைதினத்தில் செய்யப்படுகின்ற சிரார்த்தமானது பிதுர்த்தேவர்களுக்குப் பன்னிரண்டுவருஷம் திருப்தியையுண்டாக்கும்.

சதயநக்ஷத்திரம், பூரட்டாதிநக்ஷத்திரம் இவைகள் பொருந்திய அமாவாசை தினத்தில் செய்யப்படுகிற சிரார்த்தத்தினாலே எட்டுவருஷம்வரையில் பிதுர்த்தேவர்கள் இன்பமடைவார்களென்று வேதங்களெல்லாம் சொல்லும்.

மாசி மாதத்து அமாவாசை தினத்தில் சதயநக்ஷத்திரங் கூடினால் அந்தக்காலமானது பிதுர்த்தேவர்களுக்கு மிகுந்த திருப்தியை உண்டாக்கும், அவிட்டநக்ஷத்திரம் சேர்ந்து அப்போது செய்கின்ற சிரார்த்தத்தினாலே பிதுர்த்தேவர்கள் பதினாயிரவருஷம் வரையிலும், இன்பமடைவார்கள். அந்த மேன்மை பொருந்திய அமாவாசை தினத்தில் பூரட்டாதி நக்ஷத்திரம்சேர்ந்ததாகில் அந்தக்காலமானது தேவர்களுக்குங்கிடைப்பதற்கு அரியகாலமாகும். அந்தக்காலத்தில் ஸ்மிருதிகளிற்சொல்லப்பட்ட விதிப்படி பக்தியுடனே செய்தால் பலபலயுகங்கள் வரையில் பிதுர்த்தேவர்கள் இன்பத்தை யடைவார்கள்.

இதுவரையும், விசுவாசத்துடனே செய்யப்படுகின்ற, அமாவாசைமுதலாகிய ஷண்ணவதி சிரார்த்தங்களைச் சொன்னோம். இனி இன்பமுறுதற் கேதுவாகிய சிரார்த்தபேதங்களைச் சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

அமாமுதலிய சிரார்த்தங்களுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

## முப்பத்தைந்தாவது
## சிரார்த்தபேதங்க ளுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? அருமையாகிய குழந்தைபிறந்தகாலத்தில், உடுத்தியிருக்கும் ஆடையுடனே ஜலத்தில் ஸ்நானஞ்செய்து ஜாதகன்மக்கிரியை உறுதியாகச்செய்து அப்பியோதய சிரார்த்தத்தை வேதவிதிவழுவாமல் செய்யவேண்டும். அப்படிச்செய்யப்படுகின்ற சிரார்த்தத்தில் தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும்,வேதநூலாராய்ந்தறிந்ததகுதியான பிராமணர்களை யிரட்டையாகவேமுறைப்படிவரித்து அவர்களைப் பிரதக்ஷிணவரிசையாக மிகவும் பூசித்து மகிழ்ச்சியுடனே புசிப்பித்தல் வேண்டும்.

சொல்லப்பட்ட கிழக்குமுகமாகவேனும், வடக்குமுகமாகவேனும், நேராகவிருந்துகொண்டு, இலந்தை கூடின வெள்ளியதயிர், அக்ஷதைகளினாலே செய்த பிண்டங்களைத் தேவதீர்த்தத்தினால் அல்லது பிரமதீர்த்தத்தினால் இரண்டு தீர்த்தங்களில் ஒன்றினாலேதகுந்

தபடி கொடுக்கவேண்டும். இந்தச்சிரார்த்தத்தினாலே, நாந்தீமுகமாய்ப் பிரகாசிக்கின்ற பிதுர்க்கணமானது, திருப்தியடையுமென்று அரியவேதங்க ளெடுத்துச் சொல்லுகின்ற முறைமையினாலே கிரமமாகப்பிறந்த புத்திரன் புத்திரிகளுடைய முகதரிசனகாலத்திலும், நாமகரணஞ்செய்கின்ற காலத்திலும், சவுளக்கிரியை செய்கின்ற காலத்திலும், சீமந்தஞ் செய்கின்ற காலத்திலும், வேதவிதிப்படி புத்திரன் புத்திரிகளுக்கு விவாகஞ்செய்கின்ற காலத்திலும், கிரகப்பிரவேசகாலத்திலும், இவ்விடத்துச் சொல்லாதொழிந்த மற்றுமுள்ள பலசுபகரும காலங்களிலும் வேதவிதிதவறாமல் நாந்திசிரார்த்தத்தை அவசியஞ் செய்யவேண்டும்.

சுபகருமகாலங்களிற் செய்கின்ற சிரார்த்தத்திற்கு, விசுவேதேவர், பிதுர்வருக்கம், மாதா வருக்கம், மாதாமகர்வருக்கம் என்று சொல்லப்பட்ட விவைகளுக்குத் தனித்தனியிரட்டையாகவே பிராமணரை வணங்கிவரித்தல் வேண்டும்.

இறந்துபோனவருடைய தேகத்தைத் தண்ணீரிலே ஸ்நானஞ்செய்வித்து, புஷ்ப முதலியவைகளினாலே யலங்காரஞ் செய்து, வேதவிதிப்படி தகனஞ்செய்த பின்பு பந்துக்க ளெல்லாரும் வஸ்திரத்துடனே ஸ்நானஞ்செய்து தெற்குமுகமாயிருந்துகொண்டு ஜலத்தை யிரண்டு கைகளினாலேயு மெடுத்து, இது இன்னானுக்கென்று தர்ப்பணமாக விடல்வேண்டும். பின்பு பசுக்கள் போகும்போதேனும், நக்ஷத்திரங்கள் காணப்படும்போதேனும், கிரகத்தினுள்ளே பிரவேசித்துத் தரையிலாவது, புல் முதலானவைகளின் மேலாவது படுத்துக்கொள்ளல் வேண்டும். பகற்காலத்தில் ஒரே தடவை போஜனஞ் செய்தல்வேண்டும்.

இறந்தவனுக்குத் தினந்தோறுந் தரையில் பிண்டம்போடல்வேண்டும். அந்தத்தினங்களில் பந்துக்களுக்கு இனிதான போஜனஞ்செய்வித்தல் வேண்டும். முதனாள், மூன்றாநாள், ஏழாநாள், ஒன்பதாநாள், இந்நாட்களில் வஸ்திரதானஞ்செய்து, ஊருக்குவெளியில் சத்தஜலத்தில் ஸ்நானஞ்செய்து வேதவிதிப்படி எள்ளுந் தண்ணீரும்விடல்வேண்டும்.

நான்காந்தினத்தில், அஸ்திசஞ்சயனஞ் செய்யவேண்டும். தீட்டையுடைய பத்து நாட்களிலும், ஞாதிகளாயுள்ளவர் ஒருவரிடத்தில் தானம் வாங்குதலும், யாகங்கள் செய்தலும், வேதாத்தியயனஞ் செய்தலும், வேறுகருமங்கள் செய்தலுமாகாது. அவர்களுடைய அன்னமுதலியவற்றைப்பிறர்கள்புசித்தலுமாகாது. இவ்வகையாக வாசூசமிருந்து, அவ்வாசூசங் கழியுங்காலமாகிய கடைநாளில், ஒரு பிராமணனை விதிப்படி வரித்து போஜனாதிகள் செய்வித்து, அந்தப்பிராமணன் புசித்த பாத்திரத்தின் சமீபத்தில் தருப்பைகளைப் பரப்பி, இறந்தவனுக்குப் பிண்டம் போட்டு, ஆதியேகோத்திஷ்ட சிரார்த்தத்தைச் செய்து முடித்தல் வேண்டும்.

அதன்பின்பு யாவர்களும், தங்கள் தங்கள் வருணங்களுக்குரிய வைதிககருமங்களையும், ஜீவனத்திற்குரிய கருமங்களைஞ்செய்து வாழலாம். கர்த்தாவானவன் மாதந்தோறு மிறந்ததிதிகளிலே, ஏகோத்திஷ்ட விதியினாலே மாசிகஞ்செய்துவரவேண்டும். அதில் ஒரு பவித்திரத்தோடு ஒரு அர்க்கியமே கொடுக்கவேண்டும். பிராமணர்கள் புசித்தபின்பு அப்பிரேதனுக்கு ஒரே பிண்டம் போடவேண்டும். அந்தத்தினத்தில் வேறொருகாரியங்கள்செய்தால் தீங்குண்டாகுமென்று மேலான வேதங்கள்சொல்லும் இந்தப்படி வருஷமுடிவு வரைக்

கும்ஏகோத்திஷ்டவிதியால் சிரார்த்தஞ் செய்து பின்பு சபிண்டீகரணத்தை விதிப்படி செய்யவேண்டும்.

அச்சபிண்டீகரணத்தை, வருஷமுடிவிலாகிலும், ஆறுமாதத்திலாகிலும், பன்னிரண்டாந்தினத்திலாகிலும், முன்சொல்லப்பட்ட ஏகோத்திஷ்ட விதியினாலேயே செய்யவேண்டும். அதில் சொல்லப்படுகின்ற நான்கு பாத்திரத்தில் எள்ளும், வாசனை வஸ்துவுங்கலந்து நீரினாலே நிறைத்து பிதுர்க்களுக்காக மூன்று அர்க்கிய பாத்திரமும், பிரேதனுக்காக ஒரு அர்க்கிய பாத்திரமும் தனித்தனி வைத்து, பிரேத பாத்திரத்திலிருக்கின்ற ஜலத்தை அவரவர் சூத்திர விதிப்படி பிதுர்ப்பாத்திரங்கள் மூன்றிலுங் கலக்கவேண்டும்.

இந்தப்படி அர்க்கியசம் போஜனஞ் செய்வதனாலே சொல்லப்பட்ட அந்தப் பிரேதன் பிதுர்த்துவத்தை அடைய அவன் முதலான பிதுர்க்களை பார்வண முதலானசிரார்த்தவிதிகளினாலே அர்ச்சிக்கவேண்டும.

இறந்தவனுக்குக் கருமஞ்செய்யவேண்டிய கர்த்தாக்களாவோர் புத்திரன், பவுத்திரன், புத்திரனுடைய பவுத்திரன், சகோதரன், அவனுடைய சந்ததிகள், சபிண்ட சந்ததிகள். இவர்களு முந்தினவர் காணும்படி இல்லாதபோது பிந்தினவர்கள் முறையே சிறந்த கர்த்தாக்களாவார்கள்.

விளங்காநின்ற, இந்தக்கிரியைகளில், பூருவங்களென்றும், மத்திமங்களென்றும், உத்தரங்களென்றும் மூன்று விதமாகும். அவற்றுள், தகனமுதற்கொண்டு தண்ணீரைத்தீண்டுமளவிலுள்ளவைகள் பூருவக்கிரியைகளாகும். மாதந்தோறுஞ் செய்யத்தக்க மாசிகங்கள் செய்தல் மத்திமக்கிரியைகளாகும். பிரேதன் பிதுர்க்களிற் கலக்கத்தக்கதான சபிண்டீ கரணத்திற்

குப் பின்பு செய்யப்படுவனவாகிய பிதுர்க்கிரியைக ளெல்லாம் உத்தரகிரியைகளாகும்.

தந்தை தாய்களுடையசபிண்டர்களாலேயும்,சமா னோதகர்களாலேயும், முதன்மையான சகாத்தியாயி முதலானவர்களினாலேயும், பூருவக்கிரியைகள் செய் யத்தகும். அதற்குமேற் சொல்லுகின்ற உத்தரகிரியை களைப் புத்திரன் முதலானவர்களாலேயே செவ்வை யாகச் செய்யவேண்டியது முறைமையாகும்.

இதுவரையும், சிரார்த்தபேதங்களை யொருவகை சொன்னோம். இனி வேதவிதிப்படிசெய்யப்படுகின்ற சிரார்த்தத்திற்கு உபயோகமாகக் கொள்வனவாகிய சிற்சிலதிரவியங்களை யெடுத்துச்சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

**சிரார்த்தபேதங்க ளுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.**

## முப்பத்தாறவது
# சிரார்த்ததிரவிய முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? கடலை, பெரும் பயறு, காராமணிப்பயறு. துவரை, வெண்கடுகு, வெங் காயம், வெள்ளைப்பூண்டு, முள்ளங்கி, வாழைப்பூ, அத் திக்காய், முருங்கைக்காய், சுரைக்காய், பீர்க்கங்காய், பூசினிக்காய், கத்தரிக்காய் இவைகளெல்லாஞ் சிரார்த் தத்திற்கு ஆகாதனவாகும்.

கன்றுகளை யூட்டச்செய்து கறவாது, கைவலங்க றந்த பால், எருமையின்பால், ஒற்றைக்குளம்புள்ளமிரு கங்களின்பால், மானின்பால், ஒட்டகத்தின்பால், ஆட் டின்பால், இவைகளெல்லாஞ் சிரார்த்தத்திற்கு ஆகாதனவாகும்.

அழகுபொருந்திய செந்நெல்லும்,கருஞ்சாமையும், வெண்சாமையும், யவதானியமும், நெல்லரிசியும், உழுந்தும், கோதுமையும், சிறுபயறும், மஞ்சளும், கடுகும், சீரகமும், எள்ளும், மிளகும், சர்க்கரையும், தேனும், வெல்லமும், சிகைக்காயும் சிரார்த்தத்திற்கு உரியனவாகும்.

பசுவின் பாலும், பசுவினெய்யும், பசுவின் தயிரும், நல்லெண்ணெயும், பாகற்காயும், புடலங்காயும், வழுதுணங்காயும், அவரைக்காயும், மாங்காயும்,வாழைக்காயும், பலாக்காயும், வெள்ளரிக்காயும், கக்கரிக்காயும், மாம்பழமும், பலாப்பழமும் சிரார்த்தத்திற்கு உரியனவாகும்.

வாழையிலையும், வாழைத்தண்டும், வாழைப்பழமும், இஞ்சியும், எலுமிச்சம் பழமும், கருவேப்பிலையும், சேப்பங்கிழங்கு முதலிய கிழங்குகளும், நல்ல சேப்பந்தண்டுகளும், சேம்பிலைகளும் சிரார்த்தத்திற்கு உரியனவாகும்.

நன்மை மிகுந்த காரையிலையும், முன்னியிலையும், முசுட்டையிலையும், சிறந்த பிரண்டையும், செழுமையுள்ள கீரையும், கீரைத்தண்டுகளும், பிரசீரந்திகங்களென்கிற ஒருவகைக் காட்டுத்தானியமும், காலசாகமென்கிற ஒருவகைக் கீரையும், மலையகத்தையும் சிரார்த்தத்திற்கு உரியனவாகும்.

இதுவரையும் செய்யத்தக்க சிரார்த்தத்திற்குரிய விளங்காநின்ற திரவியங்களைச் சொன்னோம். இனி

வேதத்திற் சொல்லியபடி சிரார்த்தத்தில் முறைமை யாக வரிக்கத்தக்கவர்களைச் சொல்லுவோமென்று கா ளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

சிரார்த்தத்திரவிய முரைத்த வத்தியாயம்.
முற்றுப்பெற்றது.

## முப்பத்தேழாவது
## சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவரை யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? சிரார்த்தத்தில் வரிக்கத்தகாதாராகிய திருடன்,நபுஞ்சகன்,செவிடன், குலஞ்சமயமுதலிய வொழுக்கந்தவறினோன்,குருடன், ஊமன், கணவனிருக்கச் சோரபுருஷனுக்குப் பிற ந்தவன், கைம்பெண் வயிற்றிற் பிறந்தவன், மதிமயக் கந்தருகின்ற கட்குடியன், வைத்தியஞ்செய்கிறவன், விபசாரியின் கணவன் இவர்களும்; குருத் துரோகி யானவன், கப்பலேறிச் சஞ்சரிப்பவன் வியாபாரமே தொழிலாகச்செய்பவன், கிராமப்புரோகிதஞ் செய்ப வன், சேவகாவிர்த்தி செய்பவன் இவர்களும்; மிருநத அழகுபொருந்திய கோயிற்பூஜை செய்கிறவன்,சூதை விரும்பியாடுவோன், மேன்மைபொருந்திய கூத்தாடு கிறவன், ஒற்றைக்கண் குருடாயுள்ளவன், சொத்தைப் பல்லுடையவன், சொத்தை நகமுள்ளவன் இவர்களு ம்; வேதங்களைத் தூஷிப்பவன், வீட்டைக்கொளுத்தி னவன், மரணத்தைத் தருகின்ற விஷமிட்டவன், பயி த்தியமுள்ளவன், கொலைசெய்பவன், யானைக்காலன்,

கன்னிகைப்பெண்ணைக்கெடுத்தவன், கண்டமாலைவியாதியுள்ளவன், இவர்களும்; நாய்வளர்த்து விளையாடுபவன், குதிரை, ஒட்டகம், விருஷபம், இவைகளைப்பழக்குகிறவன், கூர்மையாகிய அம்புகள், வில்லுகள் முதலியவற்றைச் செய்பவன் இவர்களும்; யாவராலும்மதிக்கப்படுகின்ற உச்சிட்ட கணபதியைப் பூசிப்பவன் ஊர்கள்தோறும் பிக்ஷையெடுத்துப்பிழைப்பவன், திலமர்த்தனஞ்செய்பவன், எருமை, ஆடு, இவற்றைவிற்று ஜீவிக்கின்றவன், ஏவற்றொழில் செய்பவன் இவர்களும்; குஷ்டநோயுள்ளவன், குன்மநோயுள்ளவன், க்ஷயரோகமுள்ளவன், வட்டியினாலே பிழைப்பவன், வேதங்களை யோதாதவன், ஔபாசனத்தைவிட்டவன் இவர்களும்; உலகத்தில் இப்படிப்பட்டவர்களை யெல்லாம் நீக்குதல் செய்து, யாவராலுங் கொண்டாடப்படுகின்ற வேதங்களைத் குற்றந்தீர அத்தியயனஞ் செய்தவரும்; பூமியிலுள்ளவர்கள் மகிழ்கின்ற ஆறங்கங்களையுணர்ந்தவரும், வேதத்தின் ஞானபாகை யுணர்ந்தவரும், வேத உபாங்கங்களாகிய ஸ்மிருதிகளையறிந்து தேர்ந்தவரும், வேதங்களின் பொருள்களைவுணர்ந்தவரும், வேதங்களிலுள்ள மேலான பொருள்களை யெடுத்துரைப்பவரும், வேதங்களிற் கூறியபடி நல்லொழுக்க முள்ளவரும், வேதங்களை அத்தியயனஞ்செய்தவர் வமிசத்திற் பிறந்தவரும், அக்கினி ஹோத்திரஞ் செய்பவரும், மாதா பிதாக்களைப் பூசிப்பவரும், நல்லவமிசத்திற்பிறந்த பரிசுத்தமுள்ளவரும், பிரமசரியாச்சிரமமுடையவரும், ஆசாரியராயுள்ளவரும், பிரம விவாகஞ்செய்து பிறந்தவரும், பஞ்சாக்கினி யுபாசனை செய்பவரும், சிரார்த்தகர்த்தாவின் தாயைப்பெற்றவரும், தாயின் சகோதரரும், தாயின் சகோதரி புத்திரரும், சகோதரியின் புத்திரரும், புத்திரியின் புத்திரரும், மனைவியைப் பெற்றவரும், மருமகனுமாகிய இவர்களும்; சிரார்த்தத்தில்

வரிக்கத்தக்கவ ராவார்கள். இவர்களுள் மூன்றுபேர் களை மிகவும் வணங்கி நன்மைபொருந்திய சிரார்த்தத்தில் வரித்துப்பூசித்தல் முறைமையாகும்.

இதுவரையும் சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவரைச் சொன்னோம். இனி அன்புடனே திதியிலே செய்யத்தக்க பார்வணசிரார்த்தவிதிகளில் தெரிந்தவரையிற் சிறிது சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

**சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவரை யுரைத்த வத்தியாயம்**

*முற்றுப்பெற்றது.*

## முப்பத்தெட்டாவது
## பார்வணசிரார்த்தமுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? சூரியனுதித்தது முதல் ஆறுநாழிகைவரையிலுள்ள காலம் பிராதக்காலமாகும். அதற்குமேல் ஆறுநாழிகைவரையிலுள்ள காலம் சங்கவகாலமாகும். அதற்குமேல் ஆறுநாழிகை வரையிலுள்ள காலம் மத்தியான காலமாகுமென்று வேதங்களையுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். மேற்சொல்லியமத்தியானகாலத்திற்குமேற்பொருந்திய ஆறுநாழிகைவரையிலுள்ள காலம் சாயன்ன காலமாகும். மேற்சொல்லிய பிராதக்காலத்திலும், இராக்காலத்திலும் இரண்டு சந்தியாகாலங்களிலும், சிரார்த்தஞ் செய்தால் பிதுர்க்கள் திருப்தியடையார்கள் செய்தவையனைத்தும் நிஷ்பலமாகும்.

தேவர்களைக் குறித்துச் செய்யப்பட்ட காரியங்களிலும் பிதுர்களை குறித்துச் செய்யப்பட்ட காரியம் பிரதானமாயினும், அந்தப் பிதுர்களைக் குறித்துச் செய்யப்பட்ட காரியங்களை இராக்ஷதர்கள் சீக்கிரத்தில் அழித்துப்போடுவார்கள். ஆதலால் அந்தப் பிதுர்களைக் காப்பாற்றுகிறவர்களான விசுவேதேவர்களை ஆசையுடனே முதலில் ஆவாகனஞ் செய்யவேண்டும். அதன்பின்பு பிதுர்களையும்,அதன்பின்பு விஷ்ணுவையும் கிரமமாகவரித்து அன்புடனே சிரார்த்தஞ்செய்ய வேண்டும்.

பரிசுத்தமாகிய ஆரணியங்கள், திருக்கோயில்கள், புண்ணிய நதிதீரங்கள், மலைகள், தன்னுடையகிருகம் ஜனசஞ்சாரமில்லாத விடங்கள் இவைகளில் ஒன்றில் பசுவின் சாணத்தால் மெழுகிய விடத்தில் சிரார்த்தத்திற்கு வரித்த பிராமணர்கள் ஸ்நானஞ்செய்து வந்த பின்பு தேவர்களுக்குக் கிழக்குமுகமாகவும், பிதுர்களுக்கு வடக்குமுகமாகவும் ஆசனம்போட்டு தேவாசனத்தில் இரண்டு தருப்பத்தையும், பிதுராசனத்தில் மூன்று தருப்பத்தாற்செய்த புக்கினத்தையும் விளங்கப்போட்டு மேற்சொல்லிய பிராமணர்களை அவ்வாசனங்களில் இருக்கச்செய்து சந்தனம் புஷ்பமுதலானவைகளால் விசுவேதேவப்பிராமணர்களை முதலிற்பூசித்து அவர்களின் வலதுகையில் பவுத்திரத்தைவைத்து எள்ளுடன்சேர்ந்த ஜலத்தை அர்க்கியமாகக்கொடுத்து அவர்களிடத்தில் அனுமதிபெற்றுக்கொண்டு அவர்களின் முன்பாக அக்கினியை வளர்த்து அக்கினி, சோமன், இயமன் இவர்களுக்கு முன்னம் தனித்தனியாக அன்னத்தினலே விதிப்படி ஓமஞ்செய்த பின்பு பிதுர்களுக்கு ஓமஞ்செய்யவேண்டும். பிரமசாரி மனைவியில்லாத கிருகஸ்தன் இவர்கள் சிரார்த்தஞ்செய்தால்

வரிக்கப்பட்ட பிராமணர்கள் கையில் அன்னத்தை ஓம ஞ்செய்யவேண்டும்.

சிரார்த்தத்தில் வரிக்கப்பட்ட தேவர்களும், பிது ர்களும் உலகமானது செழிக்கவேண்டுமென்றுகோ ருகின்றவர்களாதலினால் அவர்களை ஆவாகனஞ்செய் யப்பட்ட பிராமணர்களது கையில் ஓமஞ்செய்வது அக்கினியிற் செய்வது போலவேயாகும்.

அக்கினியின் தென்புறத்தில் பிதுர்களின் பொ ருட்டு அன்னஹோமஞ்செய்து, பிண்டப்பிரதானஞ் செய்யும் பூமியில் தென்புறத்தில் நுனியிருக்கும்படி சேர்த்துவைக்கப்பட்ட தர்ப்பையின் மூன்றிடத்தில் எள்ளுஞ்ஜலமும் பிதுர்கள் திருப்தியடையும்படி கை ம்மறித்துவிடல்வேண்டும்.

பின்பு அந்த ஓமஞ்செய்துமிருந்த அன்னத்தை மூன்று பிண்டமாகச்செய்து கைம்மறித்துத் தான் தெற்குமுகமாகவிருந்து முன்பு எள்ளும் ஜலமும் விட்டவிடத்தில் பிதுர்களைத் தியானித்துக்கொண்டு பிண்டம்வைத்து அப்பிண்டங்களின்மேல் மறுபடியும் எள்ளும் ஜலமும் விடல்வேண்டும்.

இந்தப்பிரகாரம் அவரவர்களுக்குரியதான சூத்தி ரங்களிற் சொல்லியவிதிப்படி பிண்டம் வைத்தபின்பு அந்தப் பிண்டமிருந்தபாத்திரத்திலும், தன்கையிலும், இருந்த அன்னங்களைக் கிரமப்படி யெடுத்து தங்கள் தங்களுடைய பிதுர், பிதாமஹர், பிரபிதாமஹர்களைக் குறித்து வைக்கப்பட்டிருக்கிற அந்த மூன்று பிண்ட ங்களினோர் பக்கத்தில் பிரபிதாமஹரின்சொந்தமாகிய பிதுரர், பிதாமஹர், பிரபிதாமஹர் முதலிய லேபபா கிகளான பிதுர்களுக்குஅன்புடனேபோடவேண்டும்.

அதன்பின்பு வடக்குமுகமாகத் திரும்பி, ஆசமனஞ்செய்து மூன்றுதரம் பிராணயாமனஞ் செய்து, பின்பு தெற்குமுகமாயிருந்து. வசந்த ருதுமுதலிய ஆறுருதுக்களையும், பிதுர்களையும், மந்திரத்துடனே நமஸ்கரிக்கவேண்டும்.

முன்பு எள்ளும் ஜலமுமாகவிட்டு மிருந்த ஜலத்தை, தொன்னையுடன் பின்பும் கைம்மறித்தலாக, பூமியில் ஜலம் விழும்படி, மூன்று பிண்டங்களையுந் தனித்தனியே சுற்றி, அந்த மூன்றுபிண்டங்களிலுஞ்சிறிது அன்னமெடுத்து. தான் தனித்தனி முகந்துபோட்டு விடல் வேண்டும்.

அந்தப் பிண்டங்களினின்றும் மறுபடியும் சிறிது சிறிதெடுத்து, அந்தப் பிதுர்ப்பிராமணர்கள் புசிக்குங்காலத்தில், அவர்கள் இலையில் முறையாகமுன்னம் புசிக்கும்படி வைத்தல்வேண்டும்.

தகப்பனிருக்கும்போது தான் தாயாருக்குச் சிரார்த்தஞ்செய்தல், பிதாமஹர், பிரபிதாமஹர், பிரப்பிரபிதாமஹ ரென்னுமிவர்களை ஆவாகனஞ்செய்யவேண்டும். அல்லது பிதுர் ஸ்தானத்தில்ஜீவித்திருக்கிறதன் தகப்பனையும், பிதாமஹர் பிரபிதாமஹர்,இவர்கள்ஸ்தானத்தில் பிராமணர்களையும் வரித்து சிரார்த்தஞ்செய்யலாம். இந்தப்பிரகாரஞ்செய்தால் அப்போது மேற்சொல்லியபிதாமஹருக்கும், பிரபிதாமஹருக்கும், இரண்டு பிண்டம் வைக்கவேண்டுமென்று வேதங்களிற் சொல்லப்படும். ஒருவனுக்குப் பாட்டன் ஜீவனோடிருக்கும்போது தகப்பனிறந்துபோனால் பிதாவுக்கும், பிரபிதாமஹருக்கும், பிரப்பிரபிதாமஹருக்கும், சிரார்த்தஞ் செய்தல்வேண்டும். அல்லது ஜீவனோடிருக்கும் பிதாமஹரை பிதாமஹஸ்தானத்திலும், பிதுர்பிரபிதா

மஹரின் ஸ்தானத்தில் பிராமணர்களையும் வரித்துச் சிரார்த்தஞ் செய்யவேண்டும்.

மேற்சொல்லியபடி பிதுர்ப் பிராமணர்களுக்குப் பிண்டசேஷத்தை முறையாகப்பரிமாறும்போது, வரிக்கப்பட்ட பிராமணர்களின்கையில் எள்ளும் ஜலமும் விட்டு அவர்களைப் பார்த்து பிதுர்களின்பொருட்டு திருப்தி யுண்டாகத்தக்கதென்று சொல்லிப் பரிமாற வேண்டியது.

அதன்பின்பு கர்த்தாவானவன் அன்னங்கறிமுதலியவைகளை வைத்திருக்கும் பாத்திரத்தை ஒரு கையி லெடுத்து மற்றொரு கையால் மூடிக்கொண்டுவந்து பிதுர்களைத தியானித்து அந்தப் பிராமணர்களின்சமீபத்தில் வைத்து, வடைமுதலியபலகாரங்களையும்,மதுரமாகிய பாயசம், பழங்கள், கிழங்குகள், நெய், தேன், தயிர், கறிகள் முதலியவைகளையும் உபபாத்திரத்தும், ஒன்றோடொன்று சேராது முந்திப் பரிமாறியபின்பு, அன்னத்தையும் பரிமாறி, அந்தப் பிராமணர்கள் சாப்பிடும்படி இனிய உபசாரஞ்செய்து, பதார்த்தங்களின் குணங்களைத் தனித்தனி சொல்லி, அந்தப் பிராமணர்களுக்கு இன்னின்ன பதார்த்தங்களில் பிரிய மென்பதை யறிந்து அவைகளைப் பரிமாறி திருப்தி யுண்டாகும்படி புசிப்பித்தல் வேண்டும்.

கிலேசத்துடனே * கண்ணீர் விடுதல், சிந்திய அன்னத்தைக் காலினாலே மிதித்தல், உள்ளன்பில்லா

* கண்ணீருடன் சிரார்த்தஞ்செய்தால் பிரேதங்களையும், அன்னத்தைக் காலால் மிதித்துக்கொண்டு செய்தால் இராக்ஷதர்களையும், அன்னத்தைத் தூவிப் பரிமாறினால் பாபிகளையும், கோபத்துடன் செய்தால் சத்துருக்களையும், பொய்சொல்லிக்கொண்டுசெய்தால் நாய்களையும் அந்த சிரார்த்தபலன் அடைகின்றது.

மல் அன்னத்தைத் தூவிப் பரிமாறுதல், கோபித்துக் கொள்ளுதல், பொய்வார்த்தை பேசுதல், இவைகளில் லாமல் அன்புடனே பரிமாறல் வேண்டும். சிரார்த்தத் தில் வரிக்கப்பட்டிருக்கின்ற பிராமணர்கள் குறை சொல்லாமல் மௌனமாகப் புசித்தல் வேண்டும்.

சிறப்புப் பொருந்திய. வீடுமுழுதும் எள்ளிறைத் தல் வேண்டும். பிராமணர்கள் புசிக்கும்போது நாய், பன்றி, கோழி, பேடியாயுள்ளவர்கள், சண்டாளர், பூப்புடையமகளிர், சூத்திரர் பாராதிருத்தல் வேண் டும். அக்கினி கோத்திரமுதலிய ஓமம், கோதானம், சு வர்னதானம் பிராமண சந்தர்ப்பனை, தரிசபௌர்ன மாசமுதலிய தெய்வகாரியம், சிரார்த்தம் இவைகளை மேற்சொல்லிய நாய்முதலியவர்கள் பார்த்தால் பயனி ல்லாதனவாய்ப்போம்.

சிரார்த்தப்பிராமணர்கள் போஜனஞ் செய்கின்ற காலத்தில் அதிதியாகிய பிராமணன், பிரமசாரி இவர் கள் வந்தால், அவர்களனுமதிபெற்றுகொண்டு போஜ னஞ்செய்விக்கலாம். சிரார்த்தப் பிராமணர்கள் திருப் தியாகப் புசித்தபின்பு அவர்களுக்குப் பரிமாறின எல் லாப் பதார்த்தங்களிலும் கொஞ்சங் கொஞ்சமெடுத்து ஒரு கவள அன்னத்திற்சேர்த்து அவர்களுக்கெதிரில் மந்திரத்துடன் பூமியில் தருப்பையின்மேல் வைத்தல் வேண்டும். அதற்கு விகரமென்று பெயராகும். இவ் வாறு செய்வதனாலே தன் குலத்திற் பிறந்த யாவருக் குந் திருப்தியுண்டாகும். அந்த விகரவன்னத்தையெ டுத்து நற்குணமுள்ளவர்களுக்குச் சந்தோஷமாகப் ப குந்துகொடுக்கவேண்டும்.

சிரார்த்தத்தில் வரித்த பிராமணர்கள் புசிக்குங் காலத்தில், வேதங்கள், ஸ்மிருதிகள், புராணமுதலிய

வைகளை அன்புண்டாகப் படிப்பித்தல் வேண்டும். அந்தச் சிரார்த்தத்தில் புசித்த பிராமணர்கள் புணர்ச்சி முதலியவைகளைச் செய்யாதொழித்தல் வேண்டும். மேற்சொல்லிய சிரார்த்தஞ்செய்த சேஷத்தைச் சூத்திரர் முதலானவர்களுக்குப் போட்டால் மிகுந்த தீங்குண்டாகும்.

ஏகாத சிரார்த்த காரியத்தில் சுவரிதமென்றும், கோஷ்டியென்னுஞ் சிரார்த்தத்தில் சுசுருதமென்றும் நாந்தீசிரார்த்தத்தில் சம்பந்தமென்றும், தேவசிரார்த்தத்தில் ருசிதமென்றும், பிரதிவசனத்தை திருப்திக்காகச் சொல்லவேண்டும்.

சிரார்த்த கர்த்தாவானவன் தெற்குமுகமாய் நின்றுகொண்டு அந்தப்பிராமணர்களைவணங்கி சுவாமிகளே என்குலத்தில் நல்ல உதாரத்துவமும், வேதங்களையோதலும், பலவாகிய எச்கியயாகங்களைச் செய்தலும், பல பொருள்களும் சொல்லுகின்ற பெரியோர்களிடத்தில் அன்பும், புத்திரர் பௌத்திரர்முதலான சந்ததிகளும், அதிகமாகப் பெருகவேண்டுமென்று பிரார்த்தித்து தோத்திரஞ்செய்து கேட்டபின்பு முன் வைத்திருக்கின்ற மூன்று பிண்டத்திலும், அந்தப் பிராமணர்களிடத்திலும், ஆவாகனஞ் செய்யப்பட்டிருக்கின்ற பிதுர்க்களை எதாஸ்தானத்துக்குச்செல்லும்படி பிரார்த்தித்து அந்தப்பிண்டங்களை அக்கினியிலாவது, பசுவுக்காவது, ஜலத்திலாவது போட்டுவிடலாம். சிரார்த்த பிராமணர்கள் புசித்த உச்சிட்டத்தை யவர்களை யனுப்பிய பின்பு சுத்திசெய்யவேண்டும்.

பின்பு கர்த்தாவானவன் தன் கால் கைகளைச் சுத்திசெய்துகொண்டு ஆசமனஞ்செய்து சொந்தமாகிய பங்காளிகள், தாய்வழி யுறவான பந்துக்கள், இவர்க

ளைப் புசிக்கச்செய்து பிரதிதினமுஞ் செய்யப்பட்ட நித்தியகர்மமான வைசுவதேவம், அதிதிபோஜனம் இவைகளை வேதவிதிப்படி மனமகிழ்ச்சியுடனே செய்யவேண்டும்.

செந்நெல்லரிசி, எள்ளு, கிழங்கு, உழுந்து, பழம், ஜலம் இவைகளினால் வேதவிதிப்படி சிரார்த்தஞ்செய்தால் பிதுர்களுக்கு ஒரு மாதம்வரையில் திருப்தியுண்டாகும். பசுவின்பால், பசுவின்தயிர், பசுவின்நெய் இவைகளால்சிரார்த்தஞ்செய்தால் பிதுர்களுக்கு ஒரு வருஷம் வரையிலும் திருப்தியுண்டாகும்.

இதுவரையும் தருமசாஸ்திரமுறைப்படி பார்வண சிரார்த்தவிதிகளில் ஒருவகையாகச் சில சில வெடுத்துச்சொன்னோம். இனி கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள் செய்யப்படுகின்ற மஹாளயசிரார்த்த விதிகளிற் சிறிது சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

பார்வண சிரார்த்தமுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

## முப்பத்தோன்பதாவது
## மஹாளயவிதியுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? பலபல வளப்பங்களும் பொருந்தி விளங்காநின்ற வருஷருதுவில், புரட்டாசி மாசக் கிருஷ்ணபக்ஷத்தில், திரையோதசி திதியில், அபரான்னகாலத்தில் மதுரமிகுந்த பாயசம்,

நெய், தேன் இவைகளுடனே அவரவர்கள் சூத்திர விதிப்படி செய்கின்றசிரார்த்தத்திலேலே பிதுர்க்களுக்கு அதிக திருப்தியுண்டாகும். கிருஷ்ணபக்ஷத் தசமி திதி, ஏகாதசிதிதி, துவாதசிதிதி, அமாவாசை இவைகள் நன்மையைத் தருவனவாகும்.

துதியைமுதலான இரட்டைத்திதிகளிலும், பரணிமுதலான இரட்டை நக்ஷத்திரங்களிலும், மஹாளயசிரார்த்தஞ் செய்பவர்கள் பல பலவான சர்வாபீஷ்டங்களையு மடைந்து சகல மேன்மைகளுடனே விளங்குவார்கள்.

பிரதமை முதலாகச் சொல்லப்பட்ட ஒற்றைத் திதிகளிலும், மஹாளய சிரார்த்தஞ் செய்பவர்கள் புத்திரபௌத்திராதி சந்ததிகளையும், கல்விப்பொருள்களையும் பெறுவார்கள்.

சிரார்த்தங்கள் செய்வதற்கு சுக்கிலபக்ஷத்தைப் பார்க்கிலும் கிருஷ்ணபக்ஷமே சிறந்திருப்பதுபோல முற்பகலைப் பார்க்கிலும், பிற்பகலே சிறந்தனவாகும்.

எக்காலத்துந் தாழ்வில்லாது பிரகாசிக்கின்ற உபவீதத்தையிடப்புறமணிந்துகொண்டும்,வலது கை மறித்தும், வலதுகையில் பவித்திரத்துடனும், பிதுர் சிரார்த்தத்தைச் சாந்த குணத்துடனே செய்யவேண்டும்.

பெரியோர்களால் ஆராய்ந்தறிந்த ஏமந்தருது, கிரீஷ்மருது வருஷருதுவென்று சொல்லப்பட்ட காலங்களில், சுதந்தரமாகச் செய்கின்ற பஞ்சமஹாஎக்ஞத்துக்குப்பின்பு அதிற்சேர்ந்ததான பிதுர்சிரார்த்தத்தைச் செய்யவேண்டும்.

பிதுர் சிரார்த்தத்தில் ஓமஞ் செய்வதற்குவீட்டக்கினி தீதாகும். ஆதலால் பத்தினியுள்ள கிரகஸ்தர்கள்,

வைதிக அக்கினியிலும், பத்தினி யில்லாதவர்கள் பிராமணர்கள் கையிலும், ஊரன் முறையாகச்செய்யவேண்டும்.

ஆகிதாக்கினியுள்ள கிரகஸ்தர்கள், மாத சிரார்த்தத்தை கிருஷ்ணபக்ஷத்தில் அமாவாசைதவிரமற்றைத் திதிகளில் செய்யக்கூடாதென்று ஸ்மிருதிகளிற் சொல்லப்படும்.

இறந்தவர்களுக்குச் செய்யவேண்டிய சிரார்த்தத்தை மாத்திரம் நடுவிலே வருகின்ற இறந்த திதியில் செய்தல் முறையென்று, ஸ்மிருதிகளிற் சொல்லப்படும். சக்தியில்லாதவர்கள் ஸ்நானஞ்செய்து, பிதுர்களைக்குறித்து முறைபிசகாமல் ஜலத்தினாலே தர்ப்பணஞ்செய்தால் நித்திய சிரார்த்தஞ்செய்த பலனை யடைவார்கள்.

பிதுர்களை வசுதேவதைகளாகவும், பிதாமஹர்களை ருத்திர தேவதைகளாயும் பிரபிதாமஹர்களை ஆதித்திய தேவதைகளாகவும், வேதங்கள் சொல்லுகின்றபடியால் விதிப்படி இவர்களை அத்தேவதைகளாகவே தியானிக்கவேண்டும்.

கிரகஸ்தாச்சிரமத்திலிருந்து வாழ்பவர்கள் விகசமென்று சொல்லப்பட்ட சிரார்த்தத்தின் சேஷமும் அமிர்தமென்று சொல்லப்பட்ட எக்ஞத்தின் சேஷமுமாகிய இவ்விரண்டையும் மகிழ்ந்து எப்போதும் புசித்தல்வேண்டும்.

கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர்கள் மஹாளயசிரார்த்தத்தில் பிதுர், பிதாமஹர், பிரபிதாமஹருக்கும், அன்புமிகுந்தமாது, பிதாமஹீ, பிரபிதாமஹிக்கும் அத்தை, அவள் கணவன், அவள் புதல்வனென்பவருக்கும், அம்மான், அவன்மனைவி, அவன் புத்திரனுக்கும், தாயி

ன் சகோதரி, அவள் கணவன், அவள் புத்திரனுக்கும், தனது சகோதரி, அவள் கணவன், அவள் புத்திரனுக்கும், மனைவியைப்பெற்ற மாமன், அவன் மனைவி, அவன் புத்திரனுக்கும், மேற்சொல்லிய எழு வர்க்கத்துக்கும் பிராமணர்களை அவரவர்களுக்குரியதாக வகுத்துள்ள சூத்திரவிதிப்படி வரித்து ஆவாகனஞ்செய்து பூஜித்து ஒழுங்குடனே மஹாளய சிரார்த்தஞ்செய்தல் அருமையாகிய வேதசம்மதமாகும்.

இதுவரையும் பிதுர்வர்க்கம், மாதுர்வர்க்கம், அத்தைவர்க்கம், அம்மான்வர்க்கம், தாயின் சகோதரிவர்க்கம், சகோதரிவர்க்கம், மாமன்வர்க்கம் என்று சொல்லப்பட்ட எழுவர்க்கங்களும் களிப்படையும்படி மஹாளய விதிகளிற் சிலவற்றைச் சொன்னோம். இனி வேதங்களிற் சொல்லியபடி, சாப்பிடத்தகாத பதார்த்தங்களைச் சிறிது சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

மஹாளயவிதி யுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

நாற்பதாவது

## உண்ணத்தகாதவை யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? பரிசுத்தமாகிய ஆகாரத்தினாலே சித்தசுத்தியுண்டாகும். அந்தச் சித்தசுத்தியினாலே உண்மைஞானமுண்டாகும். அந்த ஞானத்தினாலே ஜனனமரணத்தை விளைவிக்கின்ற காம முதலிய வினைத்தொடர்புகள் நீங்குமென்று வேதங்க

ள்சொல்லுகின்றபடியால், அந்த வேதங்களால் நிஷேதிக்கப்பட்ட பதார்த்தங்களையெல்லாஞ் சாப்பிடாதொழித்தல் வேண்டும்.

முள்ளங்கி, மரத்திலுண்டான பிசின், வெங்காயம், உள்ளிப்பூண்டு, பனைமரத்தி லுண்டாகிய கள், தென்னைமரத்தி லுண்டாகிய கள், அபின், கஞ்சா, பூமி சம்பந்தமில்லாத மழைச்சலம், காய்ச்சுப்பு, பசளைக்கீரை, மீனிற்பொருந்திய நெய், பிண்ணாக்கு, இவைகளை யுண்ணுதல் தீதாகும்.

வழுதுணைக்காய், அத்திக்காய், பீர்க்கங்காய், செம்முருங்கைக்காய், கோவைக்காய், கொம்மட்டிக்காய், தேற்றாங்காய் என்று சொல்லும், பூமியிலேயுண்டாகிய இவைகளையுண்ணுதல் தீதாகும்.

கன்றில்லாத பசுவின்பால், கன்றுபோட்டுப் பத்துநாளாகாத பசுவின்பால்; சினையாகிய பசுவின்பால், ஒட்டகத்தின்பால்,கழுதையின்பால், குதிரையின்பால், மானின்பால், ஒற்றைக்குளம்புள்ளமிருகங்களின்பால், ஆட்டின்பால், இவைகளையுண்ணுதல் தீதாகும்

அசுத்தம்பொருந்திய பூமியிலுண்டான பதார்த்தங்கள், முதனாள் சமைத்த அன்னம், கோழி, பூனை, நாய், பல்லி, காக்கை, பாம்பு, குரங்கு இவைகள் வாய் வைத்த பொருள்கள், இவைகளை யுண்ணுதல் தீதாகுமென்று வேதங்கள் சொல்லும்.

தேவதைகளைக்குறித்துச்செய்யாமல்,தன்னிஷ்டத்திற்காகச்செய்த எள்ளன்னம், பாயசம்,வடை, இவைகளை யுண்ணுதலும், பகற்காலத்திலே வெண்ணெயும், இராக்காலத்தில் தயிரும், ஒழியாதுண்ணுதலும், தீதாகுமென்று அரிய வேதங்கள் சொல்லும்.

பன்றி, செம்மறியாடு, வெள்ளாடு, மான், எருமை, பசு, குதிரை, ஐந்துநகமுள்ள மிருகங்கள் இவைகளை க்கொன்று தின்றல் தீதாகுமென்று அரிய வேதங்கள் சொல்லும்.

ஒட்டகம், முயல், உடும்பு, தவளை, ஆமை, முதலை, கீரிப்பிள்ளை, நாய், பூனை, கோழி, புறா, நாரைப்பக்ஷி, சராரிப்பக்ஷி, ஊர்க்குருவி இவைகளின் தசைகளை யுண்ணுதல் மிகுந்த தீதாகும்.

பாம்பு, கிளி, காக்கை, நீர்க்காக்கை, வல்லூறு, அன்னம், விச்சுளிப்பறவை, நாகணவாய்ப்புள், குயில், கொக்கு, வெண்ணாரைப்பக்ஷி, கழுகு, கவுதாரி இவைகளின் தசைகளையுண்ணுதல் தீதாகும்.

கரிக்குருவி, சக்கரவாகப்புள், மரங்கொத்திப்பறவை, மற்றும் பலபலவகை மிருகங்கள், மற்றுமுண்டான பலபல பறவைகள், பலபலவான மீன்கள், இவைகளின் தசைகளை யுண்ணுதல் தீதாகுமென்று வேதங்கள் சொல்லும்.

புளிப்பேறிய வெண்டயிர், அதன் வெண்ணெய், நல்லஜலத்தினாலே புளிப்புள்ள பழங்கள், கிழங்குகள், புஷ்பங்கள், இவ்விதமாகிய ஊறுகாயென்று சொல்லப்பட்ட இவைகளையுண்ணுதல் நன்மையென்று வேதங்கள் சொல்லும்.

அரிசிமா, கோதுமைமா, வெண்ணெய் சம்பந்தமாகிய பலகாரங்கள், அக்கினியிலே ஓமஞ்செய்துமிகுந்த சேஷங்கள் இவைகளெல்லாம், பழமையாயிருந்தாலும் உண்ணுதல் விதியாகும்.

பிதுர்களுக்கும், தேவர்களுக்கும், உரியதாக விளங்காநின்ற புகழையுடைய, பசுக்கள், பறவைகள், மீன்

கள், முதலானவைகளை, மிகுந்த அன்போடு மகிழ்ந்து கொல்லுதலும்,உண்ணுதலு மாகுமென்று வேதங்கள் நன்மையாக வெடுத்துச்சொல்லும்.

ஒருவனுக்கு உயிர்நீங்கி மரண முண்டாகாமல், பிழைப்புண்டாக்குங் காலத்திலும், வருத்தப்படுகின்ற மாதாபிதாக்களை காப்பாற்றுங் காலத்திலும், மருந்திலும், தெளிவில்லாத ஆபத்துக் காலத்திலும், தேவதைகளைக் குறித்துச் செய்கின்ற எக்ஞத்திலும், மாமிசங்களை யுண்ணலாகுமென்று, மேலாகிய வேதங்க ளினிதாக வெடுத்துச் சொல்லும்.

நல்லயாகங்களுக் குரித்தாகக் கொண்டாடப்பட்ட கொடிகள், மரங்கள், நல்லபசுக்கள், மிருகங்கள், பறவைகள், இவைகளெல்லாம் மேலான நற்கதியடையுமென்று அரிய வேதங்கள்சொல்லும்.

ஜீவர்களைப் பிடிக்காமலும், கட்டாமலும், அவைகளுக்குத் துன்பமிகும்படிசெய்யாமலும், அவைகளைக் கொல்லாமலும், மகிழ்ச்சியடைந்து ஜீவகாருண்ணியத்துட னிருப்பவர்கள் பலபலஜீவர்களுந் துதிக்கப்பட்ட நேயமுடையவராகி உலகமெல்லாம் புகழும்படி பலவாகிய சுகங்களை யடைவார்கள்.

இதுவரையும்பூமியிலுள்ளவர்கள் உண்ணத்தகாத பதார்த்தங்களைச் சொன்னோம். இனி ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட பலவிதமான திரவியசுத்தியைச் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

உண்ணத்தகாதவையுரைத்த வத்தியாயம்

முற்றுப்பெற்றது.

## நாற்பத்தோன்றாவது
## திரவியசுத்தியுரைத்த
## வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? தங்கப்பாத்திரம் வெள்ளிப் பாத்திரம், சங்கம், பலவித ரத்தினம் இவைகளைப் பரிசுத்தமான ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும். இவைகள் அழுக்கடைந்திருந்தாலும், உயர்ந்த சாம்பலாற்றேய்த்து ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும்.

பொன் பாத்திரம், வெள்ளிப்பாத்திர மிவைகள் நெய் முதலிய வழுவழுப்புடையதா யிருந்தால் விரும்புகின்ற அக்கினியிற் காய்ச்சுதலினாலே, உயர்ந்த சுத்தியுண்டாகும். தாம்பிரப்பாத்திரம், புளியினாற்றேய்த்து ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும்.

பித்தளையினாலாகிய பாத்திரம், வெண்கலத்தினாலாகிய பாத்திரம், இவைகளை எத்தன்மையுடையவரும் விளங்காநின்ற சாம்பலைக்கொண்டு நன்றாகத்தேய்த்து ஜலத்தைவிட்டுக் கழுவச் சுத்தியுண்டாகும்.

இரும்பினாலாகிய பாத்திரம், ஈயத்தினாலாகிய பாத்திரம், இவைகளை நல்ல சாணத்தினாலே அழுக்கு நீங்கும்படி தேய்த்து நல்லஜலத்தினாலேகழுவச் சுத்தியுண்டாகும்.

கற்பாத்திரத்தைச் சாம்பலினாலே தேய்த்தும், யாகபாத்திரத்தைச் செவ்வையாகக் கையால் துடைத்தும், மரப்பாத்திரத்தைச் சீவியும், நல்லஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும்.

யாகத்துக்கு ஓமஞ்செய்கின்ற சுருக்குஎன்னுநெய்த்துடுப்பையும், சுருவமென்னு நெய்த்துடுப்பையும், வெந்நீரினாலே கழுவச் சுத்தியுண்டாகும். பொருந்திய யூபஸ்தம்பத்தையும், தானியங்களைச் சேர்க்கின்ற, உரலையும், உலக்கையையும், முறத்தையும்.வண்டிகளையும், ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும்.

மண் பாத்திரத்தை முழுகும்படியான நெருப்பிலிட்டுச் சூளைபோடுதலினாலே சுத்தியுண்டாகும்.இரத்தம், கோழை, எச்சில், மலம்,மூத்திரம், துர்க்கந்தமுள்ளவைகள், இவைகள் பட்ட மண் பாத்திரம், நெருப்பிலிட்டுச் சூளைபோடினுஞ் சுத்தமுண்டாகாது.

வெண்கலப்பாத்திரத்தை, வீட்டுக்கு விலக்காயுள்ளவர் தொடப்பட்டால், மண்ணினாற்றேய்த்துச் ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும். நெய், எண்ணெய் இவைகளைப் பறவைகள் தொடப்பட்டால் இரண்டு தருப்பத்தால் அவைகளில் ஒரு துளியெடுத்தெறிவதனாலே சுத்தியுண்டாகும்.

தயிர், வெல்லம், பால், அரிசி,தானியங்கள்,இவைகளில், பறவைகள், வாய்வைக்கப்பட்டால்,வாய்வைத்த அவ்விடத்தில், சிறிது எடுத்தெரிந்து, தருப்பத்தால் ஜலத்தைத் தெளிப்பதனாலே சுத்தி யுண்டாகும்.

அசைக்கப்பட்ட ஒரு ஆட்சுமைக்கு அதிகமாகப் பிரகாசிக்கின்ற அரிசிமுதலியவைகளை சண்டாளர் தொடப்பட்டால் தருப்பத்தால் ஜலத்தைத் தெளிப்பதனாலே சுத்தியுண்டாகும்.

ஒரு ஆட்சுமையிற்குறைந்த அரிசியை சண்டாளர்முதலிய இழிஞர்கள்தொடப்பட்டால் ஜலத்தினாலே பரிசுத்தமுண்டாகக் கழுவி நீர் சுவரும்படி யுலர்த்தலினாலே சுத்தியுண்டாகும்.

அன்னத்தில், புழுக்கள், வண்டுகள், நகம், மயிர்கள் இருந்தால் அவ்வன்னத்தை நீக்கிவிடுதலே தருமமாகும். மாவினாற் செய்யப்பட்ட பலகாரங்கள், விலைக்குவாங்கினால் நெய் புரோக்ஷித்தலினாலே சுத்தியுண்டாகும்.

உடுத்திய வஸ்திரத்தைச் சண்டாளர் தொடப்பட்டால், ஜலத்திலே நனைத்துத் தோய்த்தலினாலே சுத்தியுண்டாகும். புதுவஸ்திரங்களையும், புதுவஸ்திர மூட்டையையும், இழிகுலத்தார் தொடப்பட்டால் தருப்பத்தாற் றெளிக்கப்படுகின்ற ஜலத்தினாலே சுத்தியுண்டாகும்.

ஆட்டுமயிரினாலாகிய கம்பளங்கள், சாலுவைகள், பட்டுகள் இவைகளை உழுமண்ணிட்டுத் தோய்த்து ஜலத்திலே அலம்புவதனாலே சுத்தியுண்டாகும். யானைத்தந்தம், மான்முதலிய மிருகங்களின் கொம்புகள், வெண்கடுகுப் பொடியினாற் றேய்த்து ஜலத்தினாலே கழுவச் சுத்தியுண்டாகும்.

மரத்தின் றோலினாலாகிய மரவுரியும், புலித்தோலும், மான்றோலும்: புற்களும், வைக்கோல்களும், பழங்களும், கிழங்குகளும், காய்களும், படுக்கையும், அசுத்தப்பட்டால், ஜலப்புரோக்ஷணத்தினாலே சுத்தியுண்டாகும்.

வீடுமுதலியவற்றிற்கு, சண்டாளர்முதலியவரால் அசுத்தமுண்டானால் ஒப்பறவிளக்குதல், மெழுகுதல், கோமூத்திரந் தெளித்தல், பசுவை ஒருநாள் வசிக்கும்படி செய்தலுமாகிய இவைகளாலே மிகுந்தசுத்தியுண்டாகும்.

இந்திரியம், மலம், மூத்திரம், இரத்தம், வெயர்வை, கண்களிலுண்டாகிய பூளை, செவிகளிலுண்டா

கிய குரும்பி, நகங்களிலுந் தேகங்களிலுமுண்டாகிய அழுக்கு, சுவர்த்தண்ணீர் இவைகள் சரீரத்திறபட்டால், மண்ணுற்றேய்த்து ஜலத்தினுலே கழுவச்சுத்தியுண்டாகும்.

கையில் யாதொரு பொருளைவைத்திருக்கும்போது, தன் சரீரத்தில், உச்சிஷ்ட சம்பந்த முண்டானல் அந்தப் பொருளைக் கீழேவையாமல் வைத்துக்கொண்டு, ஆசமனஞ்செய்தால் அந்தப் பொருளுடன்பரிசுத்தனுகிருன்.

அருவருப்பினுலே வாந்தி செய்தால், ஆசமனஞ்செய்வதனுலே சுத்தியுண்டாகும். மாதருடன் புணர்ச்சிசெய்தால், ஸ்நானஞ் செய்தலினுலே பரிசுத்தனுகிருன்.

விற்பனைக்காக கடையிற் பரப்பப்பட்ட சிறந்த வஸ்துக்கள் எப்போதுஞ் சுத்தமுள்ளனவாகும். சூரியகிரணம், காற்று, நெருப்பு, நிழல், தூளி,ஜலத்திவலை, ஈ, குதிரை, பசு இவைகள் மேலே படுகிறதினுலே அசுத்தமுண்டாகாது.

கட்டில், பீடம், தர்ப்பை, மாதர்களின்முகம், பல்லக்கு, கறந்தபால், பறவைகளுண்ட பழம் இவைகளெல்லாம் எப்போதுஞ் சுத்தமுள்ளனவாகும்.

ஆடுகளுக்கும், குதிரைகளுக்கும், முகம் சுத்தமுள்ளனவாகும். பசுக்களுக்குப் பின்புறஞ் சுத்தமுள்ளனவாகும்.நல்ல நதிகள் பெருகுவதனுலே சுத்தமுண்டாகும்.

திருவிழாக் காலங்களிலும், நல்ல தீர்த்தயாத்திரைகளிலும், ஆபத்துக்காலங்களிலும், சண்டாளர்கள் மேலேபடுவதனுலே அசுத்தமுண்டாகாது.

இதுவரையும் பல பலவான திரவியங்களின் சுத்திகளைச் சொன்னோம். இனிச் சொல்லப்படுகின்ற வேதங்களின் முறையாகத் தெரிந்தபடியே பிறப்பின் தீட்டுகளையும், இறப்பின் தீட்டுகளையும் சிறிது வகுத்துச் சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர்கூறுகின்றார்.

திரவியசுத்தியுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

நாற்பத்திரண்டாவது

## சூதகாசௌச முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? பிறப்பின் தீட்டும், இறப்பின் தீட்டும், பிராமணர்களுக்குப் பத்துநாளும், க்ஷத்திரியர்களுக்குப் பன்னிரண்டுநாளும், வைசியருக்குப் பதினைந்துநாளும், சூத்திரருக்கு முப்பது நாளும் என்று ஸ்மிருதிகளையெல்லாம் ஆராய்ந்தறிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வாழ்கின்ற மனிதர்களுக்குள்தான் முதல் முன் பேழு தலைமுறைவரையிலுள்ள ஞாதியர்கள் சபிண்டரென்றும், அந்த ஏழு தலைமுறைக்குமேல் பதினன்கு தலைமுறைவரையிலுமுள்ள ஞாதியர்கள் சோதகரென்றும், அந்தப் பதினன்குதலைமுறைக்குமேல் இருபத்தொரு தலைமுறைவரையிற்பொருந்திய ஞாதியர்கள் சகோத்திரரென்றும் சொல்லப்படுவார்கள்.

பிறப்பின் தீட்டுகள், சபிண்டர்களுக்குப் பத்து நாள் வரையிலும், சோதகர்களுக்கு மூன்று நாள்வரையிலும் சகோத்திரர்களுக்கு ஸ்நானஞ் செய்கிறவரையிலும் உண்டாகும். இந்தக் காலங்களில் இவர்கள் தெய்வபூஜை, சந்தியாவந்தனம், ஔபாசனுதி, ஓமங்கள் ஸ்ரௌதஸ்மார்த்த கருமங்கள், வேதாத்தியயனம் இவைகளைச் செய்தல், அன்னியர்களை யுண்பித்தல், அன்னியர்களைத் தீண்டுதலுமாகிய இவைகளெல்லாந் தீதாகும்.

சூரியாஸ்தமனத்திற்குப் பின்பு பதினெட்டே முக்கால் நாழிகைக்குள்ளாக மாதவிடாயாதல், குழந்தை பிறத்தலாதல், இறத்தலாதல் நேரிடுமாகில் அவ்விரவோடு சேர்ந்த முதனாளாதியாகவும், அந்தப் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குமேலாகில் மறுநாளாதியாகவும் கொள்ளவேண்டியது.

சபிண்டஞாதிகளுக்கு இறப்புத் தீட்டுப்போலப் பிறப்பிலுந் தீட்டுண்டாகும். பிறப்பில் தாய் தந்தையென்னு மிருவர்க்கு மாத்திரம் அதிகத்தீட்டாகும். அதிலுந் தாய்க்குமாத்திரம் அதிகத் தீட்டுண்டு. தகப்பனுக்குப் பதினென்றாந்தினத்தில் ஸ்நானத்துடன் தீட்டு நீங்கும்.

சபிண்ட ஞாதிகளுக்குள் ஒருத்தி குழந்தையைப் பெற்றநாள்முதல் ஒன்பது நாளைக்குள் வேறு ஒருத்தி குழந்தையைப்பெற்றால் முன்புபெற்றவளுக்குப்பத்தா நாளில் பின்பு பெற்றவள் தீட்டும் போகும். பத்தாவது நாளில் ஒருத்தி குழந்தையைப் பெற்றால் பன்னிரண்டாநாளில் இருவர் தீட்டும் போகும். மூன்றுமாத முதல் ஆறுமாதம் வரையில் கர்ப்பஞ் சேதப்பட்டால் மாதம் ஒன்றுக்கு ஒருநாளாக ஒத்தமாதமெத்தனையோ

அத்தனை நாள்வரையில் பெற்றவளுக்குத் தீட்டுண்டெ ன்று சொல்லப்படும். தகப்பனுக்கு ஸ்நானஞ்செய் கிறவரையில் தீட்டுண்டென்று சொல்லப்படும்.

ஏழாவது மாதமுதல் பிறந்த பிள்ளைக்கு, பெற்ற தாய், தகப்பன், சபிண்டஞாதிகள் இவர்களுக்கு பத்து நாள்வரையில் தீட்டாகும். பிறந்த பிள்ளை ஆணுகில் தாய் தீட்டினின்று நீங்கியநாள் முதல் இருபதுநாள் வரையிலும் பிறந்த குழந்தை பெண்ணுகில் முப்பது நாள்வரையிலும் பாண்டந் தொடலாகாது.

பிறந்த குழந்தை பெண்ணுகில், அதன் தமயன், பின்னோதரன், பெரியதகப்பன், சிறியதகப்பன்,அவர் கள் புதல்வர்கள், பாட்டன், அவன்சகோதரர்கள் இவ ர்களுக்கு நான்குநாள் வரையில், தீட்டாகும். அந்தக் குழந்தை யிறந்தால், பத்துநாள் வரையில் தீட்டாகும். அதற்குமேல் அதிக்கிராந்தமாகிய தீட்டில்லை. பிதா மாத்திரம் பதினென்றுநாள் ஸ்நானஞ்செய்தல் விதி யாகும்.

கர்ப்பவதியான பெண், அவள் தகப்பன் வீட்டி லேனும், வேறிடத்திலேனும், குழதையை பெற்றால், அந்தப் பெண்ணினுடைய மாதா, பிதா க்களுக்கு மூன் றுநாள் வரையில் தீட்டுண்டென்று சொல்லப்படும்.

கர்ப்பவதியான பெண், தன் சகோதரன், சிறிய தகப்பன் முதலாகிய பந்துக்கள் வீட்டிலேனும், வேறு இடங்களிலேனும் குழந்தையைப் பெற்றால், அவர்க ளுக்கெல்லாம் ஒரு நாள் தீட்டுண்டென்று சொல்லு வார்கள்.

பிறந்த குழந்தை, பத்துநாளைக்குள், இறந்தால், அது ஆண்குழந்தை யானுலும், பெண்குழந்தை யானு

லும், அக்குழந்தையின் பிறப்பின் தீட்டைச் சபிண்ட ஞாதிகள், பத்துநாளில் நிவர்த்தி செய்துகொள்ளுவார்கள். பத்தாநாளில், அந்தக்குழந்தை யிறந்தால், தகப்பனுக்கு மாத்திரம் அதற்குமேல் இரண்டுநாள் தீட்டாகும். அந்தப்பத்தாநாளில், நான்காவது யாமமுதல் இரவிற்பொருந்திய நான்காவது யாமத்துக்குள், அந்தக் குழந்தை யிறந்தால் தகப்பனுக்குத்தீட்டு மூன்றுநாளாகுமென்று சொல்லப்படும். சபிண்ட ஞாதிகளுக்குச் சொல்லுமிடத்தில் தீட்டில்லை.

குழந்தை பிறந்த பதினொன்றுநாள் முதல், ஆறு மாதத்துக்குள், மேற்சொல்லிய குழந்தை விதிப்படி யிறந்தால், அந்தக்குழந்தையின் சகோதரன் பின்னோதரன், தாய், தகப்பன், இவர்களுக்குப் பத்துநாள்வரையில் தீட்டாகும். அந்தக் குழந்தையின் தகப்பனுக்குச் சொந்தமான சபிண்டஞாதிகளுக்குச் சொல்லுகின்ற ஸ்நானமாத்திரமுண்டு.

ஏழாமாதமுதல் இருபத்துநான்கு மாதத்துக்குள்ளாகக் குழநதையிறந்தால், அந்தக் குழந்தையின் சகோதரன், பின்னோதரன், தாய், தகப்பன் இவர்களுக்குத் தீட்டுப் பத்துநாளாகும். சபிண்டஞாதிகளுக்குத் தீட்டு ஒருநாளாகும்.

இருபத்தைந்தாமாதமுதல், ஆறுவருஷத்துக்குள் யிறந்தகுழந்தைக்குச் சகோதரன், பின்னோதரன், தாய், தகப்பன், இவர்களுக்குத்தீட்டுப் பத்துநாளாகும். சபிண்டஞாதிகளுக்குத் தீட்டு மூன்றுநாளாகும்.

இருபத்துநான்கு மாதத்துக்கு முன், குழந்தை யிறந்தால், பூமியிலே புதைக்க வேண்டும். அந்த குழந்தைக்குத் தகனமுமில்லை, சஞ்சயனமுமில்லை, தர்ப்பணமுமில்லை, மேற்குறித்த இருபத்துநான்கு மாதத்தி

ற்கு மேற்பட்டிறந்தால், தகனஞ்செய்தல் விதியென்று தருமசாஸ்திரங்களிற் சொல்லும்.

ஏழுவருஷ முதற்கொண்டு, எத்தனைவருஷமானாலும், உபநயனமாகி யிறந்தாலும், உபநயனமாகா திறந்தாலும், சகோதரன், பின்னோதரன், தாய், தகப்பன், முதலிய சபிண்டஞாதிகளுக் குத் தீட்டைச்சொல்லுமிடத்தில் பத்துநாளாகும். கிரமப்படி அதிக்கிராந்தமான தீட்டுமுண்டாகும். உபநயன சமஸ்காரமில்லாமலிறந்தவனுக்குத் தாய், தகப்பன், தமயன், பின்னோதரன் என்று சொல்லப்பட்ட இவர்களுக்கேயல்லாமல், சபிண்டஞாதிகளுக்குச் சொல்லுமிடத்தில், அதிக்கிராந்த ஆசௌமேயில்லை.

பிறந்த குழந்தை பெண்ணாகில், பதினொன்றாநாள் முதல் இருபத்துநான்கு மாதத்திற்குள் இறந்தால், தகப்பனது மூன்றுதலைமுறைவரையிலுள்ள ஞாதிகளுக்கு ஸ்நானமாத்திர முண்டென்று ஸ்மிருதிகளுணர்ந்த வல்லோர்கள் சொல்லுவார்கள்.

இருபத்தைந்தாமாதமுதல், ஆறும்வருஷமுடிவுவரையில் பெண்குழந்தை யிறந்தால் தகப்பனைச்சேர்ந்த சபிண்டதாயாதிகளுக்கு ஒருநாள் தீட்டென்று சொல்லுவார்கள்.

ஏழுவருஷமுதற்கொண்டு கன்னிகாதான காலத்துக்குளிறந்தால், சபிண்டஞாதிகளுக்குவிதிக்கப்பட்ட தீட்டு மூன்றுநாளாகும். தாய், தகப்பன், சகோதரன், பின்னோதரன், இவர்களுக்குத் தீட்டுப் பத்துநாளாகுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

தன்னாசிரியன் இறந்தால், மாணாக்கனுக்குத்தீட்டு மூன்றுநாளும். அவ்வாசிரியன் புத்திரனிறந்தாலும், அவ்வாசிரியன் மனைவி யிறந்தாலும், தீட்டு ஒருநாளா

குமென்று ஸ்மிருதிகளெல்லாங் கற்றுணர்ந்த வல்லவர்கள் சொல்லுவார்கள்.

விவாகஞ் செய்துகொண்ட கிரகஸ்தனாகிய ஒருவனுக்கு தாயுடன் பிறந்த அம்மான்,அம்மான் மனைவி, தாயைப்பெற்றபாட்டி,பாட்டன்,பெண்ணைக்கொடுத்த மாமனார்,மாமியார்,தாயுடன் பிறந்த சிறியதாய்,பெரிய தாய், தகப்பனுடன் பிறந்த அத்தை, தன்னுடன் பிறந்த தங்கை, தமக்கை, உபநயனஞ் செய்துகொண்ட சகோதரி புத்திரனாகிய மருமான், புத்திரியின் புத்திரனாகிய பேரன், தன்புத்திரி, தான்முதல் ஏழு தலைமுறைக்கு முற்பட்ட ஞாதியாயுள்ளவர், உபநயனமாகிய சமானோதகன் என்று சொல்லப்படுகின்ற இவர்கள் இறப்பிலும், சமானோதகனது பிறப்பிலும், மூன்று நாள் தீட்டுண்டென்று சொல்லப்படும். தன் மனைவி சந்ததியில்லாமலிறந்தால், தன் மாமனார், மாமியாரிவர்களிறப்பில், ஒரு நாள் தீட்டுண்டாகும்.

சகோதரி புத்திரனாகிய மூன்று வருடத்துக்குட்பட்ட மருமான், புத்திரியின், புத்திரனாகிய மூன்று வயதுக்குட்பட்ட பேரன் இவர்களிறப்பிலும், மூன்று வயதுக்குமேல் உபநயனமில்லாத சமானோதகனிறப்பிலும், ஸ்நானத்துடன் தீட்டு நீங்கும். மூன்று வயதுக்குமேல் உபநயனமில்லாத பேரன், மருமான், இறக்கில் ஒன்றரை நாள் வரையில் தீட்டுண்டென்று தருமசாஸ்திரங்கள் சொல்லும். அம்மான் புத்திரன், அம்மான் புத்திரி, மாதுர்சோதரியின் புத்திரன், மாதுர்சோதரியின் புத்திரி, அத்தையின் புத்திரன், அத்தையின் புத்திரி, தன்சகோதரியின் புத்திரி, விவாகமாகியிருக்கிற சகோதரன் புத்திரி, தாயின் சக்களத்தி புத்திரி, இவர்களிறப்பில் ஒன்றரை நாள்வரையில் தீட்டுண்டாகும்.

விவாகஞ்செய்துகொண்ட ஒரு பெண்ணுக்குத் தாய், தகப்பன், சகோதரன், சகோதரி, மருமான் புத்திரி, தௌத்திரன், இவர்களிறப்பில் மூன்று நாள் தீட்டுண்டாகும். மாதா மகன், மாதாமகி, அம்மான், அம்மான் புத்திரன், அம்மான் புத்திரி, சகோதரன் புத்திரி, சகோதரியின் புத்திரி, பவுத்திரி, தௌத்திரி, மாதுர் சோதரி, அவள் புத்திரன், புத்திரி, பிதுர் சோதரி, அவள் புத்திரன், புத்திரி, பிதா மகன், பிதா மகி, பிதாவின் சகோதரன், அவனுடைய புத்திரன், புத்திரி, இவர்களிறப்பில் ஒன்றரைநாள் வரையில் தீட்டுண்டாகும்.

மேற்சொல்லப்பட்டவர்களில், புருஷன் விதிப்படி உபநயனமாகியும், விவாகமாகியும், இருந்தால்ஒன்றரை நாள் தீட்டுண்டாகுமென்றும், அப்படி யில்லாவிட்டால் ஸ்நானஞ் செய்கிறவரையில்தீட்டுண்டென்றும், தரும சாஸ்திரங்களை ஆராய்ந்தறிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சக்களத்தியின்புத்திரி மரணத்தில், சக்களத்திக்கு ஒரு நாள் தீட்டுண்டாகும். சக்களத்தி மரணத்தில் சக்களத்தி புத்திரிக்கு ஒரு நாள் தீட்டுண்டாகும்.

பத்துநாள் மரணத்தீட்டை, பத்துநாளைக்குமேல் மூன்று மாதத்திற்குள் கேட்டால் மூன்றுநாள் தீட்டுண்டாகும். ஆறுமாதத்திற்குள் கேட்டால் ஒன்றரை நாள் தீட்டுண்டாகும். பன்னிரண்டு மாதத்திற்குள் கேட்டால் ஒருநாள் தீட்டுண்டாகும். அதற்குமேற் கேட்டால் ஸ்நானஞ்செய்கிற வரையில் தீட்டாகும்.

இந்தப்பிரகாரம், மூன்றுநாள் தீட்டை பத்துநாளைக்குள் கேட்டால், ஒருநாள் தீட்டாகும். அதற்குமேற்கேட்டால் ஸ்நானஞ் செய்கிறவரையில் தீட்டாகும்

ஒன்றரைநாள் தீட்டைப் பத்து நாளைக்குள்ளே, பகலிற்கேட்டால், அந்தப்பகல் வரையிலுந் தீட்டாகும். இரவிற் கேட்டால், சூரியோதயமாகுங் காலம்வரையிலுந் தீட்டாகும். அதற்குமேற் கேட்டால் ஸ்நானஞ் செய்கிறவரையில் தீட்டாகும்.

பத்துநாளிறப்புத் தீட்டின் மத்தியில் மற்றொரு பத்துநாளிறப்புத் தீட்டு வந்தால், முந்தியபத்துநாள் தீட்டுடனே பிந்திய தீட்டும் நிவிர்த்தியாகும். மரணத் தீட்டின் மத்தியில் ஜனனத்தீட்டுவந்தால், முந்திய மரணத்தீட்டுடனே பிந்திய ஜனனத்தீட்டும் நிவிர்த்தியாகும். ஜனனத்தீட்டின் மத்தியில் மரணத்தீட்டு வந்தால், முந்திய ஜனனத்தீட்டு பிந்திய மரணத்தீட்டுடனே நிவிர்த்தியாகும்.

பெற்றதாயிறந்த பத்துநாளைக்குள், தகப்பனிறந்தால், பிந்தியிறந்த தகப்பனுக்குரிய பத்துநாள் தீட்டுடனே, முந்தியிறந்த தாய் தீட்டும் நிவிர்த்தியாகும். தகப்பனிறந்தபத்துநாள் மத்தியில், தாயிறந்தால், தகப்பனுக்குரிய பத்துநாள் தீட்டிற்குமேல், தாய்க்கு ஒன்றரைநாள் தீட்டுண்டாகும்.

அனுகிதாக்கினியான ஒருவனுக்கு, மரணநாள் முதலாககொண்டும் விளங்கானின்ற ஆகிதாக்கினியான ஒருவனுக்கு, சமஸ்காரநாள் முதலாகக்கொண்டும், தீட்டுநாட்களை முறையாகக்கொள்ளல்வேண்டுமென்று வேதங்களின் பொருள்களையுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

அனுகிதாக்கினி, ஆகிதாக்கினியென்று சொல்லப்பட்ட இருவருக்கும் முன்பு விதிதவறுகச்செய்த கிர்த்தியங்களை யொழித்து, பத்துநாளைக்குள் விதிப்படிசெய்த கிர்த்தியங்களைப் பத்துநாளைக்குமேல்கேட்

ஞாதிகள், மறுபடியும் இதற்காக முறையாகத் தீட்டைக்கொள்ளுதல் விதியன்று, நீரில் ஸ்நானஞ்செய்தலே விதியாகும்.

விதிப்படி சமஸ்காரமடையாத ஆகிதாக்கினிவிஷயத்தில், அந்தப் பத்துநாளைக்குள், விதிப்படி சமஸ்காரம் நடந்தால், இன்பத்தையுடைய புத்திரர், சபிண்டஞாதிகள் இவர்களுக்குப் பத்துநாளோடு தீட்டு நிவிர்த்தியாகும். முன்பு செய்யத்தக்க கிர்த்தியாரம்பமுதற் சொல்லப்பட்ட பத்துநாளில்லை.

பத்துநாளைக்குள் விதிப்படி கிர்த்தியஞ்செய்யாவிட்டால், அதன் பின்பு அந்தவிதிப்படி கிர்த்தியங்களைத் தொடங்குவது முதல் பத்துநாள் வரையில்,மேற்சொன்னவர்களுக்குத்தீட்டுண்டாகும். அந்தப்பத்துநாளிறவில் நாலாவது யாமத்தில், மற்றொரு பத்துநாள் தீட்டு வந்தால், மறுபடியும் மூன்றுநாள்வரையில்,மேற்சொன்ன புத்திரர், சபிண்டஞாதிகள், இவர்களுக்குத் தீட்டுண்டாகும்.

முதலில் ஒருவன் ஒரு தீட்டை, அடைந்திருக்கையில், மறுபடியும் அவனுக்கு அதைப்பார்க்கிலும்மற்றொரு தீட்டு வந்தால், முன்வந்திருக்கிற தீட்டானது பின்வந்திருக்கிற தீட்டோடு நிவிர்த்தியாகும். பிறப்புத்தீட்டு நடுவில், தனக்குப் புத்திரன், புத்திரி பிறந்தால், முன்வந்திருக்கிற தீட்டானது, தனக்குரிய தீட்டோடு நிவிர்த்தியாகும்.

தாய், தகப்பனிறந்தபத்துநாளைக்குள், சஞ்சயனம் செய்தபின்பு கேட்டபுத்திரர்களுக்கும், ஒருவருஷம் வரையிலுங் கேட்ட புத்திரர்களுக்கும், அதற்குமேற் கேட்ட ஜேஷ்ட புத்திரனுக்கும், பத்துநாள் தீட்டுண்டாகும். மற்றுமுள்ள சபிண்டர்களுக்கு மூன்றுநாள்

வரையில் தீட்டுண்டாகும். இந்தசஞ்சயனகிர்த்தியஞ் செய்யாதிருந்தால்எல்லாருக்கும்பத்துநாள் தீட்டாகும்.

தன் தாயின் சக்களத்தியாகியதாய், விதிப்படி கிர்த்தியங்களைச் செய்யப்பட்டிறந்த செய்தியைப் பத்து நாளைக்குமேல் ஒரு வருஷம் வரையிலும் கேட்டால் பத்துநாள் தீட்டாகும். அதற்குமேல்மூன்றுநாள் வரையில் தீட்டாகும். கிர்த்தியங்கள் செய்யாதிருந்தால்,கிர்த்தியஞ் செய்யத்தொடங்குநாள்முதல் பத்துநாள்வரையில் தீட்டுண்டாகும்.

சகோதரனிறந்ததைப் பத்துநாளைக்குமேல் ஆறு மாதம்வரையில் கேட்டால், மூன்றுநாள் தீட்டென்று சொல்லப்படும். ஒரு வருஷம்வரையில் கேட்டால் ஒன்றரைநாள் தீட்டுண்டாகும். அதற்குமேற் கேட்டால், ஸ்நானஞ்செய்கிறவரையில் தீட்டாகும். கிர்த்தியங்கள் செய்யாதிருந்தால் ஆறு மாதத்திற்குள் கேட்டால் பத்துநாள் வரையிலும், ஒரு வருஷத்திற்குள் கேட்டால், மூன்றுநாள்வரையிலும், அதற்குமேல் கேட்டால் ஒரு நாள் வரையிலும், கிர்த்தியஞ்செய்யத் தொடங்குதல் முதல் தீட்டாகும்.

சக்களத்தியுஞ் சக்களத்தியுமாகிய ஒருவருக்கொருவரும், கணவனுமனைவியுமாகிய ஒருவருக்கொருவரும் மரணத்தைப்பத்துநாளைக்குள் கேட்டால் பத்துநாள் தீட்டும், அதற்குமேல் ஒருவருஷம் வரையிற் கேட்டால் மூன்றுநாள் தீட்டுமுண்டாகும். முன்புசொல்லிய மரணத்தைக்குறித்துக் கிர்த்தியஞ் செய்யாதிருந்தால், கிர்த்தியஞ் செய்யத்தொடங்கிய காலமுதல் பத்துநாள் வரையில் தீட்டுண்டென்றுசொல்லப்படும்.

ஒருவனுக்குண்டாகிய மரணத்தீட்டு மத்தியில், தாய், தகப்பனிறந்தாலும், தனக்குப்புத்திரி, புத்திரன்

பிறந்தாலும், முன்னுண்டாகிய தீட்டோடு நிவிர்த்தியாகாது. அதற்குப்பின் தனக்குவிதித்த நாளுடன்நிவிர்த்தியாகும். மூன்றுநாள் தீட்டுள்ள ஞாதிகளுக்கும், மேற்சொல்லியபடியே யாகுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

சொல்லுகின்ற முதலிற்பொருந்திய தீட்டுமத்தியில், கணவனிறந்தால் அவன் மனைவிக்கும், மனைவியிறந்தால் அவள்கணவனுக்கும் உண்டாகிய தீட்டானது, முதற்பொருந்திய தீட்டோடு நிவிர்த்தியாகாமல், தத்தமக்கு விதித்தநாளில், நிவிர்த்தியாகுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

ஒருவன், தன்னைப்பெற்ற தாய்தகப்பனல்லாத,மற்றையோர் விஷயத்தில் கிர்த்தியஞ்செய்து,அதன்பின்பும், அப்படிப்பட்ட கிர்த்தியம் ஞாதிகளுக்குச் செய்தால், முன்தீட்டோடு இந்தத்தீட்டும் நிவிர்த்தியாகும்.

சந்திராயணமுதலாகச் சொல்லப்பட்ட விரதங்கள், அக்கினிவளர்க்கின்ற யாகங்கள், இவைகளைச்செய்துகொண்டிருக்கு மத்தியில், மரணத்தீட்டு வந்தால், உடனே ஜலத்தில் ஸ்நானஞ்செய்து, அந்த விரத முதலியவைகளை முடித்து, அதன்பின்பு, பத்துநாள்தீட்டில், முன்சென்ற நாட்களை நீக்கி பாக்கியிருக்குநாள் வரையில், தீட்டுக்காத்தல் வேதவிதியாகும்.

விரதாதிகள் மத்தியில், வந்து பொருந்துகின்ற மரணத்தீட்டானது, அந்த விரத முடிவுக்குட் படுமாகில், அந்த விரதமுடிந்த பின்பு, அதிக்கிராந்தமாகிய தீட்டு ஒருநாளாகும். காக்கப்படுகின்ற தீட்டுக்காகஅதிக்கிராந்தமாகிய தீட்டில்லை. தெரிந்துகொள்ளு மிடத்தில் ஸ்நானமாத்திரமாகும்.

ஏகபுத்திரனாகிய ஒருவன் யாகஞ் செய்துகொண்டிருக்குமத்தியில், அவன் தாய்தகப்ப னிறந்தால், உடனே யாகத்திற்குரிய பொருள்களை, யாகசாலையிற்றானே வைத்து, வெளியேவந்து ஸ்நானஞ்செய்து, தகனசமஸ்காரஞ்செய்து,அதன்பின்பு யாகத்திற்செய்யவேண்டியவைகளை யெல்லாஞ் செய்துமுடித்து,அதன்பின்பு உதகதானாதிகளை செய்வது வேதவிதியாகும்.

சிரார்த்தத்தில் பிதுர்வருணஞ்செய்த பின்பு பிறப்புத்தீட்டுவந்தால், ஜலத்தில் ஸ்நானஞ்செய்து மேற்சொல்லிய சிரார்த்தஞ் செய்யலாம். அந்தச் சிரார்த்தத்திற்குத் தீட்டில்லாதவர்கள் பரிமாறவேண்டும். இப்படிச்செய்வது தருமசாஸ்திர விதியாகும்.

விவாகம், திருவிழா, இவைகளில் நாந்திசெய்த பின்பு தீட்டைக் கேட்கில் தீட்டில்லை. நாந்திசெய்வதில் பிதுர்வருணஞ் செய்வதற்குமுன் கேட்டால், அந்தக் கிரியைகளைக் கிரமமாகச் செய்யலாகாதென்று, பலபலவாகிய தருமசாஸ்திரங்கள் சொல்லும்.

தத்தபுத்திரனாகிய ஒருவன், ஜனகதாய் தகப்பன் மரணத்தில், மூன்றுநாள்வரையில் தீட்டுக்கொள்ளல் வேண்டும். மேற்சொல்லிய இருவர் மரணத்தை, மூன்றுநாளைக்குமேற் கேட்கில், வேதவிதிப்படி அதிக்கிராந்தமாகிய தீட்டுண்டாகும். இந்தப்பிரகாரமே அந்த தத்தபுத்திரன் மரணத்தில் ஜனகதாய் தகப்பனுக்கு தீட்டுண்டென்று மேலோர்கள் சொல்லுவார்கள்.

விவாகஞ் செய்துகொண்ட மனைவியின் தாய்வழி வருக்கத்தில் உண்டாகிய தீட்டுகள் கணவனுக்கில்லை. கணவனுடைய அம்மான், மாதாமகன், சகோதரி புத்திரி, தாய்சோதரி, தகப்பன் சோதரி, சகோ

தரி முதலானவர்களாலுண்டாகுந் தீட்டுகள் மனைவிக்குண்டென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

தீட்டையுடையவர்களன்னத்தைத் தீட்டென்று தெரிந்து புசித்தோர்கள் தீட்டின் முடிவுநாள் வரையில் அந்தத்தீட்டை யடைவார்கள். தெரியாமற்புசித்தவர்கள், புசித்தவன்னஞ் சீரணமாகும் வரையில் தீட்டையடைவார்கள். ஆபத்து காலத்திற் புசித்தவர்களுக்கு ஒருநாள் வரையில் தீட்டுண்டாகும். தீட்டினாட்களைக் குறைத்தலும் வளர்த்தலும் தீதென்று வேதங்கள் சொல்லும்.

சங்கரஜாதியார்களாலே பிறந்தவர்களுக்கும், கர்ப்பத்தை யழித்தவர்களுக்கும், கழுத்திற்சுருக்கிட்டுக்கொண்டிறந்தவர்களுக்கும், விஷத்தைப்புசித்திறந்தவர்களுக்கும், அங்கங்களையுடைய வேதவிரோதமாகச் சந்நியாசத் தன்மையடைந்த பெண்களுக்கும், தர்ப்பணஞ் செய்யவேண்டியதில்லையென்று வேதங்கள் சொல்லும்.

புலியினாலும்,பாம்பினாலும்,விஷத்தினாலும், இடியினாலும், மின்னலினாலும், ஆயுதங்களினாலும், ஜலத்தினாலும், அக்கினியினாலும், இறந்தால், ஒரு வருஷத்திற்கு மேலாவது, ஆறுமாதத்திற்கு மேலாவது, கிர்த்தியங்களைச் செய்து தீட்டைமுடித்தல் விதியென்று தருமசாஸ்திரங்களிற் சொல்லப்படும்.

ஒவ்வொருவருக்கும் பொருந்திய தீட்டு நிவிர்த்தியாகுந் தினத்தில், சூரியோதயமாகி ஆறுநாழிகைக்கு மேலுண்டாகிய சங்கவகாலத்தில், ஸ்நானஞ் செய்து, பிராமணர்கள், நல்லஜலத்தையும், க்ஷத்திரியர்கள், வாகனத்தையும், வைசியர்கள் குறடாவையும், சூத்திரர்கள் தடியையுந் தொடல்வேண்டியது.

இதுவரையில் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்று சொல்லப்பட்ட நான்கு வருணத்தினர்களுக்கும், பிறப்பிறப்பின் றீட்டுகளைச் சொன்னோம். இனி வானப்பிரஸ்த ஆச்சிரமவிதிகளைச் சொல்லுவோமென்று காளத்தி மகாமுனிவர் கூறுகின்றார்.

சூதகாசௌசமுரைத்த வத்தியாயம்
முற்றுப்பெற்றது.

நாற்பத்துமூன்றாவது
## வானப்பிரஸ்தவிதி யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? கிரகஸ்தாச்சிரமத்தி விருப்பவன், தருமசாஸ்திரங்களிற் சொல்லிய விதிதவறாமல், தருமங்களை யெல்லாஞ் செய்து, விரதங்களை யெல்லாமனுஷ்டித்து, தீயனவற்றை யெல்லாம் ஒழித்துப் பரிசுத்தமுடையவனாகிப் பஞ்சேந்திரியங்களையுமடக்கிக்கொண்டு, தபோவனத்திற் செலத்தக்க வானப்பிரஸ்த ஆத்சிரமத்தையடைதல்வேண்டும்.

ஐம்பது வயத்துக்குமேல், சரீரத்தில், நரையையும், திரையையும், கிழத்தன்மையையு மடைந்து, தன் புத்திரனானவன் புத்திரர்களைப் பெற்றபின்பு, பலவாகிய போகங்களை யெல்லாமொழித்து, தன் மனைவியை தன் புத்திரனிடத்தில் ஒப்புவித்ததாவது கூடவர இஷ்டமிருந்தால்இட்டுக்கொண்டாவதுஉத்தராணமாதமும், பூருவபக்ஷமும், சுபர்கள் வாரமும், நல்லநக்ஷத்திரமும் பொருந்திய லக்கினத்தில், சுருக்கு, சருவ

முதலாகப் பொருந்திய அக்கினி ஹோத்திரத்தையும், ஓமபாத்திரங்களையு மெடுத்துகொண்டு ஊரிலிருந்து வனத்தில் பிரவேசிக்க வேண்டும்.

மயிர், ஜடை, தாடி, மீசை, நகம், இவைகளை வளர்க்க வேண்டும். மரவுரியையாவது, மான்றோலையாவது, தருப்பை முதலியவற்றையாவது தரிக்கவேண்டும். சருகுகள், இலைகள், காய்கள், கிழங்குகள், பழங்கள், இவைகளைச் சாப்பிடவேண்டும். வெய்யில், பனி, குளிர், காற்று, மழை, உஷ்ணம், இவைகளைப் பொறுக்க வேண்டும். பலவாகிய ஆன்மாக்களிடத்திலும், ஜீவகாருண்ய மிருக்கவேண்டும். தனக்கியன்றவரையில், பலி, பிக்ஷை இவைகளைக் கொடுக்கவேண்டும். கிழங்குகள், காய்கள், பழங்கள், ஜலமுதலியவைகளாலே சுதந்தரமாகத் தன்னிடத்தில் வந்தவர்களை உபசரிக்கவேண்டும்.

வேதங்களை அத்தியயனஞ் செய்யவேண்டும். சத்தஸ்பரிசரூபசகந்த மென்னும் ஐந்து புலன்களையும், ஐந்து பொறிகளின் வழிச்செல்லா நடக்கவேண்டும். கோபத்தையும், மோகத்தையும், மயக்கத்தையும், ஒழிக்கவேண்டும். உபநிடதத்தின் மெய்ப்பொருள்களையுணரவேண்டும். சற்குருஉபதேசித்த முறைப்படி நடக்கவேண்டும்.

வேனிற்காலத்தில், பஞ்சாக்கினி மத்தியிலிருந்துகொண்டும், கார் காலத்தில் வெறு வெளியிடத்திலிருந்து கொண்டும், பனிக்காலத்தில் குளிர்ச்சியைத்தரத்தக்க யீரவுடையைத் தரித்துக்கொண்டும் தவத்தைச் செய்யவேண்டும்.

திரிகாலங்களிலும் ஸ்நானஞ் செய்யவேண்டும். முனிவர்களுக்கும், தேவர்களுக்கும், பிதுர்களுக்கும்,

தர்ப்பணஞ்செய்யவேண்டும். அன்னம், பசியகாய்கள், கனிகள், கிழங்குகள் இவைகளினாலே நியதியாகப்பஞ்ச மஹா வெக்ஞியஞ்செய்யவேண்டும்.

எப்போதும், அக்கினி ஹோத்திரம், தரிசம், பௌர்ணமாசம் முதன்மையாகிய இவைகளை விடாமல், தன் சக்திக்குத் தக்கபடி முயற்சியுடனே செய்யவேண்டும்.* கிருச்சிரம், சாந்திராயணம் பிராஜபத்தியம், இவைகளை மாதந்தோறுஞ் சேய்யவேண்டும்.

நக்ஷத்திரயாகம், சாதுர்மாசியம், ஆக்கிரயணம், உத்தராயணம், தக்ஷிணாயணம் என்று சொல்லப்படுகின்ற இவைகளை, உதிர்ந்த நெற்களைப் பொறுக்கிச்சேர்த்து அதனாலே வேதவிதிப்படி செய்யவேண்டும்.

சரத்ருதுவென்றும், வசந்தருதுவென்றும் சொல்லப்பட்டகாலங்களில், காட்டிலுண்டானதாயும், கார்நெல், சம்பாநெல்லென்று சொல்லுகின்ற தானியங்களைத் தானகவே பொறுக்கிக்கொண்டு வந்து குத்தி, அந்த அரிசியினாலே, காக்கப்படுகின்ற * சரு வென்பதையும் † புரோடாசமென்பதையுஞ் செய்யவேண்டும்.

மேற்சொல்லிய புரோடாசம், சரு இவைகளால் தேவர்களுக்கு ஓமஞ்செய்து மிகுதியைப் புசிக்கவேண்டும். தனக்கு உப்பு வேண்டுமானால் உவர்மண்ணாலே தானகவே காய்ச்சிக்கொள்ளவேண்டும்.

---

* சரு என்பது=வறுத்த அரிசியினாலே உப்பில்லாமற் சமைத்த வன்னம்.

† புரோடாசம் என்பது=ஓமத்திற்காக மாவினால் உப்பில்லாமல் தட்டிச் சுடப்பட்ட அடை.

தானியங்களைப் பாகஞ்செய்து விளங்காநின்ற கடவுளுக்கு நைவேத்தியஞ்செய்து பதினாறுகவளவன்னம் புசித்தல் முறைமையாகும்.

தானம்வாங்குதல், இரண்டாந்தரம் அன்னம் புசித்தல், ஈயினாற்கட்டப்பட்ட தேன், பூமியிலும், மரங்களிலும் உண்டாகிய காளான், கள், அழிஞ்சிற்பழம், கஞ்சா, மாமிசம், இவைகளை யுண்ணுதல், மாதர்களுடனே புணர்ச்சிசெய்தல் இவைகளெல்லாந் தீதாகும்.

தனக்குபயோகமான ஆகாரத்துக்கு வேண்டும் பொருள்களைத் தினந்தோறுமாவது, ஒருமாதத்திற்காவது, ஆறுமாதத்திற்காவது, ஒருவருஷத்திற்காவது, சம்பாதித்துக்கொள்ளல்வேண்டும்.

ஜலங்களிலும், நிலங்களிலுமுண்டாகிய புஷ்பங்கள், கிழங்குகள், காய்கள், இலைகள், கனிகள், மரங்களிலுண்டான மதுரமாகிய தேன், இவைகளெல்லாம் புசிப்பதற் குபயோகமாகும். காய் கனி முதலியவற்றை அக்கினியிற் பாகஞ்செய்தாவது வேறு எவ்விதத்தினாலாவது புசிக்கலாம்.

சொல்லப்பட்ட கிழங்குகள், பசியகாய்கள் முதலானவைகள் அகப்படாவிட்டால், வானப்பிரஸ்தாச்சிரம பிராமணரிடத்திலும், வனவாசஞ்செய்கின்ற கிரகஸ்தாச்சிரமத்தோ ரிடத்திலும், தவத்திற்கு இடையூறுநேரிடாமல், பாசகஞ்செய்து கொள்ளலாமென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். அவர்களுமில்லாதிருந்தால் கிராமங்களிற்சென்று இரண்டுகையிலாவது, மரப்பாத்திரத்திலாவது, தொன்னையிலாவது, எட்டுக்கவளவன்னம் வாங்கிப் பொசிக்கவேண்டும்.

உயிர்க்கொலை செய்யாமை, உண்மை பேசுதல், பிறர்கள் பொருள்களை அபகரிக்க நினையாமை, அன்

னிய மாதர் போகங்களைக் கனவிலும்விரும்பாமை,பல வாகிய உயிர்களையுந் தன்னுயிர்போ லெண்ணுதல், புத்திரமித்திர களத்திராதிகளிடத்தும் பகைவரிடத்துஞ் சமபாவனை வைத்தல், பகைவர் முதலானவர்களாலே தனக்கு நேரிடுகிற துன்பங்களைச் சகித்தல், பாசபந்த நீங்குதலே மோக்ஷத்திற்கேதுவென்றெண்ணல், அமிர்தத்துக்குச் சமானமாயிருந்தாலும் அளவறிந்துண்ணல் சரீரத்தைச் சுத்திசெய்தலென்னும்இப்பத்துமாகிய இயமநெறிவழுவாது நின்றும், பிறவித் துன்பமற முத்தியுண்மை யெதுவென்று சுத்தமனத்தனாயுணர்தல், பெற்ற பொருள்களைக்கொண்டு மகிழ்தல், வேதங்களிற் கூறிய கருமங்களை விடாதனுஷ்டித்தல், தருமவழியிற் றேடிய பொருள்களை நல்லொழுக்க முள்ளவர்களுக் கன்போடு கொடுத்தல், தேவாராதனைசெய்தல், வேதாந்தசிரவணஞ்செய்தல், வைதிகநெறிக்கும் இலௌகிக நெறிக்கும் விரோதமான கருமங்களில் நாணமடைதல், வைதிக கருமங்களிற் சிரத்தை யுண்டாதல், சற்குரு வுபதேசப்படி யன்போடுசெபித்தல், சாந்திராயணங் கிருச்சிரமுதலிய விரதங்களைவழுவாதனுஷ்டித்தல் என்று சொல்லப்பட்ட இப்பத்துமாகிய நியமநெறி வழுவாதுநின்றும், இரண்டு துடைக்கும்முழங்காலுக்கு நடுவே இரண்டுள்ளங்காலையுஞ் சேர்த்திருத்தலாகிய சுவஸ்திகாசனமும், சகனப்பக்கத்தி லிருகாற்பரட்டையு மாறவைத்திருத்தலாகிய கோமுகாசனமும், இரண்டு துடைமேலு மிரண்டுள்ளங்காலையு மாறித் தோன்றவைத்து அவ்விருகாற் பெருவிரல்களைக் கைகளால் மாறிப் பிடித்திருத்தலாகிய பத்மாசனமும், வலத்துடைமே லிடக்காற் பரட்டைச் சேர்த்திருத்தலாகிய வீராசனமும், இரண்டுகாற்பரட்டையு மிரண்டு அண்டத்தின்கீழ் மாறிவைத்து, இரண்டு முழங்காலின்மேல் விரல்களைவிரித் திரண்டுகைகளையும் வைத்து

நாசியைப்பார்த்திருத்தலாகிய சிங்காசனமும், இருகாற் பரட்டையும் அண்டங்களின் கீழ்வைத்து இருதுடையிலு மிருகையூன்றி யிருத்தலாகிய பத்திராசனமும், இடக்காற் பரட்டை அண்டத்தின் கீழ் வைத்து அதன்கீழ் வலக்கால் பரட்டை ஒட்டவைத் திருத்தலாகிய முத்தாசனமும், முழங்கை யிரண்டும் நாபிப்புறத்திலமுந்த நிலத்திற் கையூன்றி அடிமுதற் சிரம்வரையில் நிலத்திலுறு து மேலெழும்பி யிருத்தலாகிய மயூராசனமும், எவ்விதத்திற் சுகமுந் தைரியமு முண்டாகுமோ அவ்விதமாக இருப்பதாகிய மேலான சுகாசனமும் ஆகிய இவ்வொன்பதாசனத்தையும், வரன்முறையாகத் தெரிந்து செய்தும், இடைகலையினாலே பிராணவாயுவை ஆக்ருஷணஞ்செய்து பதினாறுமாத்திரை வரையில் நிறைத்து, அகாரத்தியானஞ்செய்து, அந்தப் பிராணவாயுவை முறையாக, அறுபத்துநான்கு மாத்திரை வரையில் சமப்படுத்தி யடக்கி, சுதந்தரமாகப் பலநலங்களையு மடையும்பொருட்டு, உகாரத்தியானஞ்செய்து, அதன்பின்பு அந்தப் பிராணவாயுவை, பிங்கலைநாடி வழியாகவே முப்பத்திரண்டு மாத்திரைவரையில் விடுத்து, மகாரத்தியானஞ்செய்தல் முதலாகச்சற்குருவா லுபதேசிக்கப்பட்ட பிராணயாம முறைமைகளையெல்லாஞ் செய்தும், பஞ்சேந்திரியங்களை பேரறிவினாலே அடக்கிவசப்படுத்திக்கொண்டு, பிரபஞ்சங்களையெல்லாம், எவ்விடங்களிலும் பூரணமாக நிறைந்துள்ள பரப்பிரம சொரூபமாகவே சுழற்சி யடையாம லுணரும்படியான பிரத்தியாகார நெறியில் நின்றும், பாதமுதல் முழங்கால் வரையிலும், பிருதிவியின் பாகமெனவும், அதற்குமேல் குதத்தின் வரையிலும், அப்புவின்பாக மெனவும், அதற்குமேல் இதயம் வரையிலும் தேயுவின்பாகமெனவும், அதற்குமேல் கழுத்தின்வரையிலும் வாயுவின்பாகமெனவும், அதற்குமேல் சிரசுவ

மையிலும் ஆகாயத்தின் பாகமெனவும் வேதங்களை யுணர்ந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

மேற்சொல்லிய இந்தப் பஞ்சபூத ஸ்தானங்களில் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்று சொல்லப்பட்டவர்களை மேற்சொல்லிய முறைப்படியே தனித்தனி அந்தந்த ஸ்தானங்களில் பாவிக்கின்ற தாரணையை வரன்முறையாகவே செய்தும், சமயாதீதப் பொருளாகியும், அழிவில்லாததாகியும், எவ்விடங்களிலும் பிரகாசிக்கின்ற பரிபூரணமாகியும், எக்காலத்துஞ் சுயம்பிரகாசமாகியும்,விளங்காநின்ற பிரமத்தை இரண்டறத்தியாயனஞ் செய்தும், சரீரம், ஜீவன், அந்தக்கரணங்கள், பஞ்சபூதங்கள், பஞ்சேந்திரியங்கள், ஐம்புலன்கள், மாயை தொடர்ச்சி பொருந்திய இவைகளை நானென்று சொல்லுகின்ற பொய்யுணர்ச்சியை யொழித்து, திடஞானத்துடனே தன்னையறிந்து,தேஜோமயத்திலொன்றாகப்பொருந்துகின்ற எண்ணமாகிய சமாதியை யடைந்தும், விசேஷமாகிய தவஞ்செய்யவேண்டும், நல்ல மோட்சத்தையடையும் பொருட்டு முறைபிசகாமற்செய்து, இன்பத்துடனே சகல ஆசைகளு நீங்கியபின்பு, எவற்றையு முற்றத்துறந்து ஏகாங்கியாகிச் சந்நியாசம் பெற்றுக்கொள்ளுதல் வரன்முறையாகும்.

இதுவரையில், வானப்பிரஸ்தாச்சிரம விதிகளிற் சிலவற்றைச் சொன்னோம். இனி சந்நியாச ஆச்சிரம விதியைச்சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

**வானப்பிரஸ்தவிதி யுரைத்த வத்தியாயம்**

*முற்றுப்பெற்றது.*

## நாற்பத்துநான்காவது
# சந்நியாசவிதி யுரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே? வானப்பிரஸ்தாச்சிரமத்திலிருப்பவன், எழுபத்தைந்து வயது சென்றபின்பு, அறம்பொருளின்பகளுக்காக வேண்டிய சகல பிரயத்னங்களையு நீக்கி, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், என்னும் ஆறுபகையுமில்லாமல், எவ்வுயிர்களிடத்திலும் அன்புள்ளவனகைச் சந்நியாச வாச்சிரமத்தைப் பொருந்தல் முறைமையாகும்.

பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், என்றுசொல்லப்பட்டமூன்றாச்சிரமங்களிலுமிருந்து, முனிவர்கள், பிதுர்க்கள், தேவர்கள், என்றுசொல்லப்பட்ட மூவர்களுக்கு முறையே, வேதங்களை யோதுதல், பிள்ளைகளைப்பெறுதல், எக்கியங்கள் செய்தல், என்னு மூன்று நியதிகளையுஞ் செய்யாமல், சந்நியாசம் பெற்றுக்கொள்பவர்கள் நரகத்தை யடைவார்கள்.

வேதங்களை யோதுதல், பிள்ளைகளைப்பெறுதல், எக்கியங்களைச் செய்தல், ஹோமஞ்செய்தல், பலியிடுதல், விரதங்களை அனுஷ்டித்தல், முதலியவற்றை யெல்லாஞ்செய்து, சந்நியாசம் பெற்றுக்கொள்ளுதல் முறைமையாகும்.

பிராஜாபத்திய இஷ்டியை நியதியாகச்செய்து, அக்கினியை ஆத்மசமாரோபணஞ் செய்துகொண்டு, கிரகஸ்தாச்சிரமத்தி லிருந்தே சந்நியாசம் பெற்றுக் கொள்ளலாகும்.

சந்நியாசம்பெற்றுக்கொள்வோர், தாடி, நகம், மீசை, தலைமயிர், இவைகளையெல்லாமழித்து,காவிநனைத்த வஸ்திரம், கமண்டலம், தண்டம், பவித்திரம்,கோவணம், இவைகளையெல்லாந் தரித்துக்கொண்டு, பிரமஞான நிஷ்டைசெய்யவேண்டும்.

வீட்டிலில்லாமலும், அக்கினியிற் பாகஞ் செய்யாமலும், பூமியிலுள்ள வுயிர்களுக்குத் தீங்குசெய்யாமலும், என்று மோரிடத்திலேயே நிலைபெற்றில்லாமலும், நகரங்களில், ஐந்திராத்திரியும், கிராமங்களில், ஓரிராத்திரியும் வசிக்கவேண்டும்.

பகை, உறவு, வெறுப்பு, விருப்பு இவைகளில்லாமலும், ஒருவரால் கொடுக்கப்பட்டாலும் விஷயபோகங்களிலே விருப்பமில்லாமலும், ஒருவருக்குத் தீங்கு செய்யாமலும், மௌனவிரதத்துடனே ஏகாங்கியாயிருக்கவேண்டும்.

உலகவிவகாரமாகிய வீண்வார்த்தைகளையும். அறம்பொருளின்பங்களைக்குறித்த விஷயசம்பந்தமாகிய வார்த்தைகளையும், பொய்வார்த்தைகளையும் பேசாமல் யாதொரு விஷயங்களிலு மயங்காமல், அறிவுடனே பிரமசிந்தனை செய்யவேண்டும்.

தனக்குப்பிறர்கள் துன்பஞ்செய்தாலும், தான் இன்பமேசெய்யவேண்டும். மனசுக்குத் துன்பத்தை விளைவிக்கின்ற, நோய்கள் தீரவேண்டுமென்று மருந்துசாப்பிடாதிருக்கவேண்டும், கெடுதி நேரிட்டகாலங்களிலும் மெய்யேபேசவேண்டுமென்று வேதங்கள் சொல்லும்.

பொன், வெள்ளி, தாம்பிரம், வெண்கலமுதலிய உலோகங்களினாலே செய்யப்பட்டிருக்கிற பாத்திரங்

களை நீக்கி, இலை, மண், மரம், மூங்கில், தேங்காய், சுரைக்காய் இவைகளாலே செய்யப்பட்டிருக்கிறபாத்திரங்களை வைத்துக்கொள்ளல் வேண்டும்.

அந்தப்பாத்திரங்களை மண்ணினாலுஞ் சலத்தினாலுஞ் சுத்திசெய்து, விதிப்படி பிக்ஷைவாங்கி, ஒருவேளை புசித்தல்வேண்டும்.. பிக்ஷை யகப்படாவிட்டால், மிகுந்த துக்கமும், அகப்பட்டால் மனமகிழ்ச்சியுமில்லாமல் பிரமத்தியானஞ் செய்யவேண்டும்.

ஜாதி, குலம், நன்மை, ஆசாரம், இவைகளிற் சிறந்தோர்கள் வீட்டில் காலங்களையறிந்து பிக்ஷைக்குப் போகவேண்டும். ஜலத்தை அதிலுள்ள குற்றங்கள் நீங்கும்படி வடிகட்டிக்கொண்டு சாப்பிடவேண்டும். பூமியிலுள்ள சிற்றுயிர்கள் துன்பமுறாமல் நடத்தல் வேண்டும்.

ஒருவீட்டில் பிரமசாரி, வானப்பிரஸ்தன், இவர்கள் பிக்ஷைக்காக வந்திருக்கின்ற காலங்களிலும், நாய், பக்ஷி, இவைகள், அன்னம் புசித்துக்கொண்டிருக்கும்போதும், தான் பிக்ஷைக்குப் போகுதல் தீதாகுமென்று அரியவேதங்கள் சொல்லும்.

ஜோதிஷசாஸ்திரம், நிமித்தசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், பக்ஷி சாஸ்திரம், சரசாஸ்திரம் இவைகளைச் சொல்லியும், மந்திரம், வசியம், வயித்தியம், இரசவாதம், ஜாலம், இவைகளைச் செய்தும், பிக்ஷைசம்பாதித்தல் தீதாகுமென்று வேதங்களெல்லாஞ் சொல்லும்.

தன்னை யொருவர் பூசித்துப் பிக்ஷைமுதலியவைகளைக் கொடுத்தால், தான் அதைத்தடுக்காமல், அந்தப் பூசையில் விருப்பங்கொண்டால் மோக்ஷமடையுஞ்சமயமா யிருந்தாலும், அதனாலே பூமியினிடத்தில் மறுபிறப்பை யடைவார்களென்று வேதங்கள் சொல்லும்.

பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்தல், இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம், ஈரிசை, அசூசை, இடம்பம், தர்ப்பம், அகங்காரமென்னும் இவைகளை யொழித்தல், ஜீவஹிம்சை செய்யாமை, ஆகாரங்களை அற்பமாகப்புசித்தல், எகாந்தத்தி லுயர்வுபொருந்த வசித்தல் இவை முதலியவெல்லாம் மோக்ஷத்தை யடைவதற்கு அடையாளமாகும்.

பரமாத்மாவானவர் திருவருளுடனே பலவாகிய ஜீவர்களிடத்திலு நிறைந்து, சுகதுக்கங்களைக் கொடுத்தருள்வதையும், உண்மைஞானத்தினு லுண்டாகும் மேலான மோக்ஷ வின்பத்தையும் ஆலோசித்துணர்ந்தொழுக வேண்டும்.

இரவிலும் பகலிலும் தனக்குத் தெரியாமல், ஜெந்துக்களிறந்து போகிறதினு லுண்டாகிய பாவம் நீங்குவதற்காக, ஜலத்திலே ஸ்நானஞ்செய்த பின்பு, பிராணயாமத்தை அன்புடனே ஆறுமுறை செய்யவேண்டும்.

பிராமணர்கள் வியாகிருதிபொருந்தியகாயத்திரி, பிரணவம், இவைகளோடு கூடி விளங்காநின்றபிராணயாமத்தை, வேத விதிதவறாமல் மூன்றுதரஞ் செய்தாலும், அதுவே மேலாகிய தபசுக்குச் சமானமென்று அரியவேதங்கள் சொல்லும்.

இந்திரிய நிக்கிரகத்தினலே விஷய சம்பந்தமுதலிய சுகங்களையும், பரமாத்மாவினிடத்திற் செய்யப்படுகின்ற பக்தியினலே பிராரத்தகருமங்களையும், பிரமத்தியானத்தினலே காமக் குரோதமுதலிய பகைகளையும், பிரமானந்தமடையும்பொருட்டு நீக்கவேண்டும்.

நித்தியகர்மானுஷ்டானஞ் செய்வதாலும், உயிர்க்கொலை செய்யாமையினாலும், கொலைமுதலிய பாவங்களை நீக்குகின்ற சாந்திராயணாதி தவஞ் செய்வதாலும், இந்திரியங்களுக்குப் பொருந்திய பலவாகிய விஷயப்பற்றுக்களை நீக்குதலாலும், மோக்ஷம் எளிதிலுண்டாகுமென்று வேதங்கள் சொல்லும்.

பிரமத்தியானத்தினாலே பல பலவாகிய சமுசார பந்தங்களிலும், கொஞ்சங் கொஞ்சமாக விருப்பத்தையொழித்து, கருமயோகம், அல்லது ஞானயோகம் என்னும் யோகங்களினாலே, பிறவித்துன்பம் நீங்கிப் பிரமசாயுச்சியத்தையடைய வேண்டும்.

கருமயோகஞ் செய்வோர்கள் பிராரப்தகரும முழுது நீங்கியவுடன், மோக்ஷத்தையடைவார்கள். ஞானயோகஞ் செய்வோர்கள், மோக்ஷத்தைத் தமக்கிஷ்டமானபோது அடைவார்களென்று வேதங்கள் சொல்லும்.

வேதாந்தத்தை, அதன்பொருள்தெரியாமலோதுகின்றவர்களும், அதன்பொருளைத்தெரிந்தோதுகின்றவர்களும், பாவங்களெல்லா நீங்கிப் பேரின்ப மோக்ஷத்தை யடைவதற்கேதுவாகிய ஆத்மசுத்தியைப்பெறுவார்கள்.

வேதங்களில் முடிவாகிய உபநிடத மஹாவாக்கியயார்த்தத்தை, சற்குரு கிருபையினாலே கொஞ்சமேனுஞ் சந்தேக விபரீதமில்லாமல் நன்குணர்ந்து, அகங்காரமமகாரங்கள் நீங்கி, ஞானமயமாகியபிரமநிஷ்டையினாலே மோக்ஷத்தை யடைவார்கள்.

சந்நியாசிகளுக்குரிய பொதுவான தருமங்களைச் சொன்னோம். இந்தச்சந்நியாசிகளிலே குடீசகன், பகூ

தகன், அம்ஸன், பரமஅம்ஸன் என்று சொல்லுகின்ற நான்கு வகையினராகும். இந்த நால்வருடைய தருமங்களிற் சிறிது சொல்லுவோம்.

குடீசக னென்பவன் வேதவிதிப்படி சந்நியாசஞ் செய்துகொண்டபின்பு சிகை, எக்ஞோபவீதம், காவிவஸ்திரம், திரிதண்டம், கமண்டலம் இவைகளைத் தரித்தல், தேகமுழுவதிலும் விபூதி யுத்தூளனஞ்செய்தல், திரிபுண்டரந் தரித்தல், காயத்திரிமந்திரஞ் செபித்தல், தேவாராதனை யன்புடனே செய்தல், தன்னுடைய வீட்டிலாவது, உறவினர்கள் வீட்டிலாவது, அன்னப்பிக்ஷைவாங்கிப்புசித்தலுமாகிய இவைகள்முறைமையாகும்.

அன்பினையுடைய பகூதகனென்பவன் உறவினர்கள், புத்திரர்கள் முதலானவர்களை விட்டு நீங்கி, திரிதண்டம், கமண்டலம், சிகை, எக்ஞோபவீதம், யோகபட்டம், குடை, ஊசி, கோவணம்,குளிர்தாங்குமாடைபட்டிழையினுகிய ஜெபக்கயிறு, உத்தரியம், மான்றோல், பாதுகை, சிறிய அரிவாள், இவைகளையுடையவனுதல், சரீரமுழுதும் விபூதியுத்தூளனஞ்செய்தல், திரிபுண்டரந்தரித்தல், காலங்கள்தோறும் சாவித்திரிமந்திரஞ்செபித்தல், கடவுளுடையதிருவடிகளைத்தியானித்தல், ஏழுகிருகத்தில் அன்னபிக்ஷை வாங்கிப் புசித்தலுமாகிய இவைகள் முறைமையாகும்.

அம்ஸனென்பவன் பிக்ஷைப்பாத்திரம், கோவணம், வஸ்திரம், மேற்போர்வை, மூங்கிற்றண்டம், கமண்டலம் இவைகளைக் கொள்ளுதல், சிரச்சிகை மழித்தல், சரீரத்தில் விபூதி யுத்தூளனஞ் செய்தல், திரிபுண்டரந் தரித்தல், சந்தியாகாலங்களில் சாவித்திரி மந்திரஞ் செபித்தல், ஆத்மவிசாரஞ்செய்தல், எட்டுக்கவள

அன்னம் புசித்தல், தீர்த்தயாத்திரை செய்தல், சாந்திராயணங் கிருச்சிரமுதலிய விரதங்களையெல்லாம் விதிவழுவாமலனுஷ்டித்தல், ஒரு ஊரில் ஒரு தினம் வாசஞ்செய்தலன்றி அதிகமான தினங்களிராமல் சஞ்சாரஞ்செய்தல், பரம்பொருளைத் துதித்து வணங்குதலுமாகிய இவைகளெல்லா முரியதாகும்.

பரம அம்ஸனென்பவன், சிகையுடனேதலைமயிர் முழுது மழித்தல், தரித்துக்கொண்டிருந்த எக்ஞோபவீதத்தை யொழித்தல், நித்திய கருமானுஷ்டானஞ் செய்யாமல் விடுத்தல், வெண்ணிறம்பொருந்திய கோவணம், குமிழ்பாதரக்ஷை, குடை, கூரியவாள், வஸ்திரம், மூங்கிற்றண்டம், கமண்டலம், மான்றோல், ஊசி, ஜெபமாலிகை, யோகப்பட்டம் இவைகளையெல்லாங் கொள்ளுதல், விபூதியைச் சரிரமுழுவதும் உத்தூளனஞ்செய்தல், பிரணவமந்திரத்தால் திரிபுண்டரந்தரித்தல், அன்னபிக்ஷைவாங்கி யுண்ணுதல், சற்குருதரிசனஞ்செய்தல், பிரணவமஹாமந்திரஞ் ஜெபித்தல் இவைகளெல்லா முரிமையாகும்.

இதுவரையும் வேதங்களிற் சொல்லிய சந்நியாச ஆச்சிரமவிதிகளிலே சிலவற்றைச்சொன்னோம். இனி கருமபலங்களிலே சிறிது சொல்லுவோமென்று காளத்திமகாமுனிவர் கூறுகின்றார்.

சந்நியாசவிதி யுரைத்த வத்தியாயம் முற்றுப்பெற்றது.

நாற்பத்தைந்தாவது

# கருமபல முரைத்த வத்தியாயம்.

கேளும் சுவிரத மகாராஜனே ? பூமியிலுள்ளவர்கள் பாவமுள்ள செய்கைகளிலே பிரவேசிக்காமைக்கும், பாவங்களுக்குப் பிராயச்சித்தங்களை அனுஷ்டிக்க வேண்டியதற்கும், பாவங்களி னியற்கைகளையெல்லாந் தெரிந்துகொள்ள வேண்டியதற்கும், நன்மைகளை யடையவேண்டியதற்கும், கருமபலங்களை வேதங்கள் முறையாகச் சொல்லும்.

பஞ்சமகா பூதங்களுடைய தன்மாத்திரைகளினுலுண்டாகிய சரீரத்தை, பூதாத்மாவென்றும், அந்தப் பூதாத்மாவைக்கொண்டு சுபாசுப கருமங்களை நடத்திவைக்கிறவனை ஜீவாத்மாவென்றும், ஜனனகாலத்தில் கூடவே தோன்றிய மகத்தத்துவத்தை அந்தராத்மாவென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

கண்களுக்குப் புலப்படாமல் அகங்கார விந்திரிய முதலிய சொரூபமாக விருத்தியடைந்திருக்கின்றமகத்தத்துவத்தின் றன்மையினுலே, பற்பல ஜனனங்கள் தோறும், இன்ப துன்பங்களை, ஜீவாத்மாவானவன் அனுபவிக்கிருனென்று வேதங்கள் சொல்லும்.

அந்தராத்மா, ஜீவாத்மாவென்று சொல்லப்படுகின்ற இருவரும், பஞ்சபூதசரீரத்துடன் சேர்ந்தவர்களாகிப்பலவாகிய உயிர்களிடத்திலும்,அந்தரியாமியாக வசிக்கின்ற பரமாத்மாவை யனுசரித்து, அந்தப் பரமாத்மாவின் இச்சானுகுணமாகவே நடக்கின்றார்கள்.

பரமாத்மாவின் சரீரத்தினின்றும், கணக்கில்லாதனவாகத் தோன்றி வெளிப்பட்டுத்தேவர்,மக்கள் முத

லிய பலபலவாகிய உருவங்களைத்தரித்து மனம், வாக்கு, காயங்களென்னுந் திரிகரணங்களை மாறுபடுதலில்லாத சுபாசுப கருமங்களிலே ஏவுகின்றன.

பாவஞ்செய்தவர்களுக்கு இறந்தபின்னும், யமயாதனைகளை அனுபவிப்பதற் குபயோகமாக பஞ்சதன் மாத்திரைகளாலே வேறொரு யாதனு சரீரம் உண்டாகிறது. அந்தச் சரீரமானது அசுபகருமங்களுக்குப் பயன்களான யமயாதனைகளை அனுபவித்தபின்பு அந்தச்சரீரத்திற்கு ஆதாரமான மேலாகிய பஞ்சதன்மாத்திரைகளும், அதனதனுற்பத்தி ஸ்தானங்களைச் சேர்த்து ஐக்கியமாகின்றன.

பஞ்சவிஷயப் பற்றினாலுண்டாகிய துன்பங்கள் பலவற்றையுங் கொடுக்கின்றதா யிருக்கின்ற யமயாதனைகளை அந்தச் சீவன் அனுபவித்து விட்ட பின்பு, பாவங்கள் சிறிதுமில்லாதவனாகி அந்தராத்மா, பரமாத்மாவென்று சொல்லப்பட்ட இவர்களையே யடைகின்றானென்று மேலோர்கள் சொல்லுவார்கள்.

அந்தச் சீவன் புண்ணியத்தைச் செய்திருந்தால், அந்தப் பஞ்சதன்மாத்திரைகளாலே நல்ல ஸ்தூலமான போகசரீரமெடுத்துச் சுவர்க்கலோகத்தில்சுகங்களை யனுபவிப்பன். பாவத்தைச் செய்திருந்தால் மேற்சொல்லிய சூக்குமமாகிய யாதனுசரீரமெடுத்து யமயாதனைகளை அனுபவிப்பவன் என்றுவேதங்கள் சொல்லும்.

கருமமானது நினைக்கப்படுகின்ற மனம், வாக்கு, காயம் என்னும் இம்மூன்றினாலு முண்டாகின்றது. அது புண்ணிய கருமமென்றும், பாவகருமமென்றும், இரண்டு வகையாகும். அவைகளினாலே தேவர்முதல் தாவரமீறாகிய பேதவுருவங்களையுடைய உத்தம, மத்

திம, அதமகதிகளுண்டாகும். இவை முதலியவற்றிற் கெல்லாம் மனதையே பிரதானமென்று மேலோர்கள் சொல்லுவார்கள்.

பிறர்களுடைய பொருள்களை அபகரிக்க வேண்டுமென்று நினைத்தல், பிரமஹத்தி முதலாகிய ஜீவஹிம்சை செய்யவேண்டுமென்று விரும்புதல், தேகத்தையே ஆத்மாவென்று அதனிடத்தில் அபிமானம் வைத்தல், இந்த மூன்றும் மனதினாற் செய்யப்படும் அசுபகருமங்களாகும் இவை யொழிந்த வெல்லாம் அதனுடைய சுபகருமங்களாகுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

பிறர்களைக் கொடுமையாகப் பேசுதல், பொய் சொல்லுதல், கோட் சொல்லுதல், நீதியல்லாத காரியம் பேசுதல், இந்த நான்கும் வாக்கினாற் செய்யப்படும் அசுபகருமங்களாகும். இவை யொழிந்த வெல்லாம் அதனுடைய சுபகருமங்களாகு மென்று வேதங்கள் சொல்லும்.

பிறர்களுடைய பொருள்களை அபகரித்தல், யாக முதலிய காரியத்தல்லாமல் ஜீவஹிம்சைசெய்தல்,பிறர் மனைவியரைப் புணர்தல், இம்மூன்றும், சரீரத்தினாற் செய்யப்படும் அசுபகருமங்களாகும். இவை யொழிந்த வெல்லாம் அதனுடையசுபகருமங்களாகு மென்று,பெரியோர்கள் சொல்லுவார்கள்.

புண்ணிய பாவமென்று சொல்லப்பட்ட பலன்களை,இப்பிறப்பிலாவது,மேல்எய்துகின்ற மறுபிறப்பிலாவது,மனதினாற்செய்தவைகளை மனதினாலும்,வாக்கினாற் செய்தவைகளை வாக்கினாலும், காணப்பட்ட காயத்தினாற் செய்தவைகளைக் காயத்தினாலும்அனுபவிப்பார்கள்.

மனதினற் பாவகருமங்களைச் செய்தால், இழிவாகிய ஜனனத்தையும், வாக்கினற் பாவகருமங்களைச் செய்தால், மிருகம், பக்ஷி முதலாகிய ஜனனத்தையும், சரீரத்தினற் பாவகருமங்களைச் செய்தால், தாவரமுதலாகிய ஜனனத்தையும் அடைவார்கள். மனம்வாக்குக் காயமென்னு மூன்றையும், பாவகருமங்களைச் செய்யவொட்டாமல் அடக்கி, சுபகருமங்களைச் செய்தால், மோக்ஷத்தை யடைவார்கள்.

சத்துவ குணத்தினலே, ஞானமும், தமோ குணத்தினலே அஞ்ஞானமும், இரஜோ குணத்தினலே இராகத்துவேஷாதிகளும், சம்பவிப்பதனலே சத்துவகுணமுள்ளவர்கள் தேவத் தன்மையையும், இரஜோ குணமுள்ளவர்கள் மனுஷத் தன்மையையும், தமோ குணமுள்ளவர்கள் மிருகத் தன்மையையும் அடைவார்கள்.

சத்துவகுணம், இரஜோகுணம், தமோகுணம், என்று சொல்லப்பட்ட மூன்று குணங்களினலும்,உத்தமமாகவும், மத்திமமாகவும், அதமமாகவுந் தோன்றுகின்ற மூன்றுகதிகளும், காலம், தேசம், கருமம், இவைகளின் பேதத்தினலே, சத்துவ குணத்தில், உத்தமகதி, மத்திமகதி, அதமகதியும், இரஜோகுணத்தில் உத்தமகதி, மத்திமகதி, அதமகதியும், தமோ குணத்தில் உத்தமகதி, மத்திமகதி, அதமகதியுமாக வரன்முறையே உண்டாகும்.

முக்குணங்களுக்குள், எந்தக் குணத்திற்குச் சுவாதீனப்பட்ட வெண்ணத்தினலே, எந்தெந்த ஸ்நானதானதிகருமங்களைச் செய்தாலும், நீக்கமற்றஅந்தக் குணத்துக்குத் தகுதியுடையதான சரீரமெடுத்து, அந்தந்த ஸ்நான தானதி கருமபலன்களை யனுபவிப்பார்கள்.

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வருணத்தார்களும், தங்கள்தங்களுக்குரிய விதிப்படி தருமானுஷ்டானங்களைச்செய்யாவிட்டால் மறுபிறப்பில் கொள்ளிவாய்ப் பைசாச முதலிய பலவகையான பிரேதகணங்களுமாகி துன்பமடைந்துமெலிவார்கள்.

வேதங்களிற் சொல்லப்பட்ட வைதிககருமங்களையனுஷ்டியாதவர்களும், சற்குருவை மதியாதவர்களும், சாஸ்திரவிதியை அதிக்கிரமித்தவர்களும், தருமங்களையறியாதவர்களும், தகுதியல்லாதகாலத்தில்வேதங்களையோதுகின்றவர்களும்,பிறர்களுடைய குற்றங்களையெடுத்துபேசுவோர்களும், அற்பாயுளையடைவார்களென்று வேதங்கள் சொல்லும்.

மலசலவிசர்க்கஞ் செய்து சவுசஞ் செய்வதற்கு முன்னும், போஜனஞ்செய்து கை வாய் முதலியவை சுத்திசெய்வதற்கு முன்னும், பேசுவோர்களும், வழியிலும், புண்ணிய தீர்த்தக்கரையிலும், தேவாலயம், பசு, அக்கினி, சந்திரன், சூரியன், பிராமணர் என்னுமிவர்களுக்கெதிரிலு மிருந்து மலசலவிசர்க்கஞ்செய்தோர்களும் அற்பாயுளை யடைவார்கள்.

வேதசம்பந்தமான கருமங்களைக் குலஞ் சமயமுதலிய வொழுக்கத்திற் றவறினவர்களுக்குச் செய்வோர்களும், தகுதியுடையவர்களுக்கு நன்மையுடனே செய்யாதவர்களும், சண்டாளர் முதலானவரிடத்தில் தானம்வாங்கினவர்களும், யாகம், தானம், திருவிழா, விவாகம் இவைகளைத் தடுத்தவர்களும், ஆசாரமில்லாதவர்களுமாகிய விவர்கள் பிரேதகணத்திற்பிறந்து துன்பமடைவார்கள்.

பிரமஹத்திமுதலாகிய ஜீவஹிம்சை செய்தவர்கள் அனேககாலம் கோரநரகங்களை யனுபவித்துப் பின்பு

கழுதை, ஒட்டகம், பன்றி, நாய்முதலாகிய ஜனனங்களை யெடுத்து வருந்துவார்களென்றும், ஜீவர்களுக்குத் துன்பத்தை விளைவித்தோர்கள் பூனையாகப்பிறந்து திரிவார்களென்றும், வேதங்கள் சொல்லும்.

உலகத்தில் பொய் சொன்னவர்களும், பொய் சொல்லச் சொன்னவர்களும், புழுவாயும், பாம்பாயும், பிசாசாயும் பிறந்து துன்பமடைவார்கள். சுராபானஞ் செய்தவர்களும், அதைவிலைசெய்தவர்களும், மலத்தை யுண்டு பிழைக்குஞ்செந்துவாயும், உலண்டுப்பூச்சியாயும், விட்டிற்பூச்சியாயும் தோன்றித் துன்பமடைந்து திரிவார்கள்.

சற்குருவை யவமானஞ் செய்தவர்களும், குருமனைவியைப் புணர்ந்த பாவிகளும், புலியாயும், கழுகாயும், ஊர்ப்பன்றியாயும் பிறந்து பல துன்பங்களையடைவார்கள். சுவர்ணத்தைக் திருடினவர்கள் சிலந்திப் பூச்சியாயும், கரட்டோணையும், பிசாசாயும் பிறந்து துன்பமடைந்து மெலிவார்கள்.

தேவதார்ச்சனை செய்து புசியாதவரும், இன்பமுண்டாக அடுத்தவர்களுக்கு அன்னங்கொடாமற்புசித்தவரும், பொருளை விரும்பிக்கிழவனுக்குப் பெண் கொடுத்தவரும், சண்டாளமாதைப் புணர்ந்தவரும் ஆகிய இவர்கள் பிரேதமயமாகிய பேய்க் கூட்டத்தில் ஜனித்துவருவார்கள்.

தேவதைகளின் பொருளையும், ஒருவர் அடைக்கலமாகவைத்தபொருளையும், பிராமணர்களின் பொருளையும், ஒருவருக்குத் தானமாகக் கொடுத்த பொருளையும் அபகரித்தவர்கள் பேயாகப் பிறப்பார்கள். முனிவர்கள் வசிக்கின்ற திருமடத்திலுள்ள பொருளையும், சீதனங்கொடுத்த பொருளையும், தருமசத்திரத்தின்

பொருளையும் அழித்தவர்கள் பிரமராக்ஷதர்களாகப் பிறப்பார்கள்.

தேவர்கள் நிழலையும், தேவாலயத்தினிழலையும், அழகு பொருந்திய கோபுரத்தினிழலையும், பொருந் தத்தாண்டி மிதித்தவர்கள் நொண்டியாகப் பிறந்து நோயடைவார்கள். தேவதைகளுக்கேத்திய தீபவெளிச்சத்தால் தன்காரியங்களைச் செய்தவர்கள் கண்களில் நோயுண்டாகி துன்பமடைவார்கள்.

தேவாலயங்களைக் கண்டும் வணங்காதவர்கள்கண் குருடராகப் பிறப்பார்கள். நன்மைகளைத் தருகின்ற தியானத்தை அலக்ஷியமாகச் செய்தவர்கள் செவிடராகப்பிறப்பார்கள். குரு, சகோதரர், மாதா, பிதா இவர்களை ஆதரிக்காதவர்கள், கை கால், முதலிய அங்கக் குறையவும், நேத்திரமுதலிய இந்திரிய குறைவுள்ளவருமாகப் பிறப்பார்கள்.

சேர்ந்திருக்கின்ற கணவனுக்கும் மனைவிக்கும் கலகமுண்டு பண்ணினவர்கள் குரூபியாகப்பிறப்பார்கள். வருத்தப்படுகின்றவர்களில் ஒருவருக்காவது ஒன்றையுங்கொடாத லோபிகள் தரித்திரராகப் பிறப்பார்கள். கன்னிகாதானத்துக்குத் தீங்குசெய்தவர்கள் பெண்களையே பெறுவார்கள். சுற்றத்தார்கள் பசித்திருக்கத் தாம்மாத்திரம் புசித்தவர்கள் நாயாகப் பிறப்பார்கள்.

உபகாரஞ்செய்தவர்களுக்கு அபகாரஞ்செய்தவர்கள் சுவாசகாச நோயுள்ளவராகப் பிறப்பார்கள். கொடுக்கிறேனென்று சொல்லிக் கொடாதவர்கள், செந்நாயாகப் பிறப்பார்கள். கொடிய வஞ்சனை செய்தோர்கள் கோட்டானாகப்பிறப்பார்கள். ஒருவர் செய்த நன்மை

யை மறந்தவர்கள் காட்டீயாகப் பிறந்து திரிவார்கள். உண்ணத்தகாத வுணவை யுண்டவர்கள் மலத்திற்பொருந்திய புழுவாகப் பிறப்பார்கள்.

சூரியசந்திர கிரஹணகாலங்களிலேபுசித்தவர்கள் யானையாகப் பிறப்பார்கள். பஞ்சமகா யெக்கியஞ்செய்யாமற் புசித்தவர்கள் வேடராகப்பிறப்பார்கள் சிரார்த்தத்தில்புசித்தவர்கள் கரியகாக்கையாகப் பிறப்பார்கள். ஏகோதிஷ்டத்திற் புசித்தவர்கள் நாயாகப் 'பிறப்பார்கள். சிறுவர்களுக்குக் கொடாமற் புசித்தவர்கள் பசியினாலே தளர்வடைவார்கள்.

தயிரைத் திருடினோர் கொக்காகவும், நெய்யைத் திருடினோர் அணிலாகவும், பாலைத் திருடினோர் காக்கையாகவும், எண்ணெயைத் திருடினோர் வெளவாலாகவும், தேனைத் திருடினோர் வாற்கொசுகாகவும், வெல்லத்தைத் திருடினோர் வாக்குதமென்று சொல்லப்பட்ட பக்ஷியாகவும், உப்பைத் திருடினோர் சுவர்க்கோழியாகவும், தானியங்களைத் திருடினோர் பெருச்சாளியாகவும், கோதுமையரிசியைத் திருடினோர் சல்லியமிருகமாகவும், மா முதலிய பலவகையான அன்னங்களைத் திருடினோர் பன்றியாகவும் பிறப்பார்கள்.

இலை காய் இவைகளைத்திருடினோர் மயிலாகவும், கிழங்கு பழமிவைகளைத் திருடினோர் குரங்காகவும், இரசவர்க்கங்களைத் திருடினோர் நாயாகவும், இரத்தினங்களைத் திருடினோர் குஷ்டநோயாளியாகவும், புஸ்தகத்தைத் திருடினோர் ஊமையாகவும், மாமிசத்தைத் திருடினோர் கழுகாகவும், சாலுவையைத் திருடினோர் தவளையாகவும், பட்டைத்திருடினோர் ஊர்க்குருவியாகவும், நூல்வஸ்திரத்தைத் திருடினோர் கிரவுஞ்ச பக்ஷியாகவும், வாசனை வஸ்துக்களைத் திருடினோர் மூஞ்சூருகவும் பிறப்பார்கள்.

குதிரையைத்திருடினோர் புலியாகவும்,யானையைத் திருடினோர் செந்நாயாகவும், வண்டிமுதலியவாகனங் களைத் திருடினோர் ஒட்டகமாகவும், பசுவைத் திருடி னோர் உடும்பாகவும், பெண்களைத் திருடினோர் கரடி யாகவும், ஜலத்தைத் திருடினோர் நீர்க்காக்கையாகவும், நெருப்பைத் திருடினோர் நாரையாகவும், முறந்துடை ப்ப மிவைகளைத் திருடினோர் குளவியாகவும் பிறப் பார்கள்,

நல்லொழுக்கமில்லாமல், பாவகருமங்களைச் செய் தால், நரகத்திலழுந்தி மிகுந்த துன்பமடைந்துதாழ்ந்த ஜனனங்களை யடைந்து திரிவார்கள்.

பெரியோர்களாலெடுத்துச்சொல்லப்பட்ட சதுர் விதவருணாச்சிரமங்களுக்குரிய விதியாகிய ஒழுங்குதவ றுமல் நடந்தால், குற்றமற்ற உண்மைஞானமுண்டா கும். அந்த ஞானத்தினாலே,பிறவித்துன்பத்துக்கேது வாகிய அஞ்ஞானமானது நீங்கும். அது நீங்கவே,பாச பந்தங்கள் அழிவடையும். அதன்பின்பு, அழிவில்லாத மோக்ஷத்தை யடைவார்கள்.

இந்த விசுவப்பிரம புராணத்தை எழுதினவர்க ளும், எழுதச்சொன்னவர்களும், பாராட்டி வாசிப்பவர் களும், வாசிக்கச்சொன்னவர்களும், பொருள் விரித் துச் சொல்பவர்களும், அன்புடனே கேட்பவர்களுமா கிய இவர்கள், கற்புநலமிகுந்த மனைவியும், புத்திரர்க ளும், தீர்க்காயுளும், விசேஷமான ஐஸ்வரியங்களும், பொருந்திப் பலவித நன்மைகளுடனே வாழ்ந்திருந்து மேலான புருஷார்த்தமாகிய நான்குபிரயோசனங்களை யுஞ் செவ்வையாக அனுபவிப்பார்கள்.

விசுவப்பிரம்ம புராணத்தை எழுதிமைக்காப்பி ட்டுக் கயிறுசார்த்தி, அலங்கரிக்கப்பட்ட பீடத்தில்

வைத்துப் பூஜைசெய்கின்றவர்கள் வீட்டில் நோய்கள், பூதப்பிரேத பைசாசங்கள், கொடியதரித்திரம், இவைகளணுகாமல் நீங்கிப்போகும். இலட்சுமியானவள் எந்நாளுநீங்காம லின்பத்துடனே பொருந்திவாழ்ந்திருப்பாள்.

ஆகாயத்திலுள்ள மழைமேகங்கள் வாழக்கடவது. பெருமை பொருந்திய வேதங்கள் வாழக்கடவது. வைதிகப் பிராமணர்கள் வாழக்கடவர்கள். புகழையுடைய யாகங்கள் வாழக்கடவது. பசுக்கூட்டங்கள் வாழக்கடவது. நல்ல நீதி வழுவாமல் அரசாக்ஷி செய்கின்ற அரசர்கள் வாழக்கடவர்கள். நன்மைபொருந்திய தருமங்கள் வாழக்கடவது. பலவாகிய ஜீவகோடிகள் வாழக்கடவது. விபூதி ருத்திராக்ஷங்களும் வாழக்கடவது. இந்தப் புராணமும் வாழக்கடவது. உலகத்திற்குமுதற் கடவுளாகிய விசுவேசுவரனுடைய பொற்றாமரை மலர்போன்ற திருவடிகளுக்குத் திருத்தொண்டு செய்கின்ற மெய்யடியார்கள் வாழக்கடவர்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

**கருமபலமுரைத்த வத்தியாயம்**
முற்றுப்பெற்றது.

கணபதி துணை.

# நித்தியகன்மச் சுருக்கம்.

## ஸ்நானம்.

சூரிய உதயத்துக்குமுன்னே நித்திரை விட்டெழுந்து, மலசலவிசர்க்கமும், சவுசமும், தந்தசுத்தியும் விதிப்படிசெய்து, நதிமுதலிய ஸ்நான கட்டத்தையடைந்து, உத்தரீயத்தை இடையிலே தரித்து சிகையை முடித்து, நதியிலேயாயின் அதற்கெதிர்முகமாக நின்றும், தடாக முதலியவற்றிலேயாயின் கிழக்குமுகமாகவேனும் வடக்குமுகமாகவேனு நின்றும், தேகமெல்லாம் பரிசுத்தமாகநனையும்படி நீராடி, ஆசமனம், ப்ராணயாமம், சங்கற்பம், மார்ஜனம் இவைகளை முறையே செய்து, ஸ்நானமந்திரசுலோகத்தைச்சொல்லி ஸ்நானஞ்செய்து "ததங்க சூர்யார்க்ய ப்ரதானங் கரிஷ்யே" என்று ஜலத்தைத் தொட்டு, இரண்டுகையினுலு நிரம்ப ஜலத்தை யள்ளி அர்க்ய மந்திரத்தைச் சொல்லி, சூரியனுக் கெதிரில் மூன்றுதரம் அர்க்யங்கொடுத்து, ஆசமனஞ்செய்து கரையில்வந்து, உலர்ந்த வஸ்திரத்தால் ஈரத்தைத் துவட்டி மடியுடுத்திக்கொண்டு, ஸ்வஸ்திகாசனமாகவிருந்து, விபூதியைக் கையில்வைத்து, ஜலம் விட்டுக் குழைத்து, விபூதிதாரணமந்திரத்தைச் சொல்லி தரித்துக்கொண்டு, ஆசமனஞ் செய்யவும்.

சௌரமான முடையவர்கள் அச்சுதாதி ஆசமனத்தையும்; சாந்த்ரமானமுடையவர்கள் கேசவாதி ஆசமனத்தையுஞ் செய்யவேண்டும்.

## ஆசமனம்.

வலக்கை விரல்களை நீட்டிச்சேர்த்து தர்சனிவிரலை மடக்கிக் கொஞ்சங் குவித்துக்கொண்டு, உழுந்தமிழ்ந்து ஜலம்விட்டு உட்கொள்ளுவது.

## சௌரமான ஆசமனமந்திரம் தந்திரம்.

அச்சுதாயநம ஃ அனந்தாயநம ஃ கோவிந்தாயநம: என்று மூன்று நாமத்தையுஞ் சொல்லி மூன்றுதரம் ஆசமனஞ்செய்து.

| தொடுமந்திரம். | | தொடுமிடம். |
|---|---|---|
| | அங்குஷ்ட விரனுனியால் | |
| கேசவாயநம ஃ | என்று | வலக்கன்னத்தையும் |
| நாராயணாயநம ஃ | என்று | இடக்கன்னத்தையும் |
| | அநாமிகை விரல்னுனியால் | |
| மாதவாயநம ஃ | என்று | வலக்கண்ணையும் |
| கோவிந்தாயநம ஃ | என்று | இடக்கண்ணையும் |
| | தர்ஜனி விரனுனியால் | |
| விஷ்ணவேநம : | என்று | வலமூக்கடியையும் |
| மதுசூதனாயநம ஃ | என்று | இடமூக்கடியையும் |
| | கனிஷ்டை விரனுனியால் | |
| த்ரிவிக்ரமாயநம ஃ | என்று | வலச்செவியையும் |
| வாமனாயநம ஃ | என்று | இடச்செவியையும் |
| | மத்யமை விரனுனியால் | |
| ஸ்ரீதராயநம ஃ | என்று | வலப்புஜத்தையும் |
| ஹ்ருஷிகேசாயநம ஃ | என்று | இடப்புஜத்தையும் |
| | கையைக் குவித்து | |
| பத்மநாபாயநம ஃ | என்று | ஹ்ருதயத்தையும் |
| | கையைவிரித்து | |
| தாமோதராயநம ஃ | என்று | சிரசையுமுறையே தொடவும். |

---

அங்குஷ்டம்——பெருவிரல்.
தர்ஜனி——ஆள்காட்டிவிரல்.
மத்திமை——நடுவிரல்.
அநாமிகை——மோதிரவிரல்.
கனிஷ்டை——சுண்டுவிரல்.

## சாந்த்ரமான ஆசமன மந்த்ரம், தந்த்ரம்.

கேசவாய ஸ்வாஹா, நாராயணாய ஸ்வாஹா, மாதவாய ஸ்வாஹா என்று மூன்று நாமத்தையுஞ் சொல்லி மூன்றுதரம் ஆசமனஞ்செய்து, கோவிந்தாயநம: என்று கையலம்பி,

| தொடுமந்த்ரம். | | தொடுமிடம். |
|---|---|---|
| | | அங்குஷ்ட விரனுனியால் |
| விஷ்ணவேநம: | என்று | வலக்கன்னத்தையும் |
| மதுஸூதனாயநம: | என்று | இடக்கன்னத்தையும் |
| த்ரிவிக்ரமாயநம: | என்று | தாழ்வாயையும் |
| வாமனாயநம: | என்று | இடக்கரமேந்தி வலக்கரத்தாலும் |
| ஸ்ரீதராயநம: | என்று | வலக்கரமேந்தி இடக்கரத்தாலும் |
| ஹ்ருஷீகேஸாயநம: | என்று | நடுமூவிரல்களால் வலமுழங்காலையும் |
| பத்மநாபாயநம: | என்று | இடமுழங்காலையும் |
| தாமோதராயநம: | என்று | சிரசையும் |
| சங்கர்ஷணாயநம: | என்று | வாயையும் |
| வாசுதேவாயநம: | என்று | தர்ச்சனி யங்குஷ்டத்தால்வலமூக்கடியையும் |
| ப்ரத்யும்நாயநம: | என்று | இடமூக்கடியையும் |
| அநிருத்தாயநம: | என்று | அனாமிகை யங்குஷ்டத்தால், வலக்கண்ணையும் |
| புருஷோத்தமாயநம: | என்று | இடக்கண்ணையும் |
| அதோக்ஷஜாயநம: | என்று | வலச்செவியையும் |
| நாரஸிம்ஹாயநம: | என்று | இடச்செவியையும் |
| அச்சுதாயநம: | என்று | கனிஷ்டையங்குஷ்டத்தால், நாபியையும் |

ஜனார்த்தநாயநம: என்று கைவிரித்து ஹ்ருதயத்தையும்
உபேந்ராயநம: என்று ஐந்துவிரலுங்கூட்டி வலப்புஜத்தையும்
ஹரயேநம: என்று இடப்புஜத்தையும் முறையேதொட்டு
ஸ்ரீகிருஷ்ணாயநம: என்று சிரசை வலமாகச் சுற்றி அஞ்சலிசெய்யவும்

## ப்ராணாயாம மந்திரம்.

ஓம் ப்ரணவஸ்ய பரப்ரஹ்மருஷி: பரமாத்மா தேவதா தேவி காயத்ரிச்சந்த: ப்ராணாயாமே விநி யோக:

ஓம்பூ: ஓம்புவ: ஓகும்சுவ: ஓம்மஹ: ஓம்ஜந: ஓம்தப: ஓகும்சத்யம், ஓம்தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ரசோத யாத் ஓமாபோஜ்யோதி ரஸோ அம்ருதம் ப்ரஹ்ம பூர் புவஸ் ஸுவரோம்.

## தந்திரம்.

ஓம் ப்ரணவஸ்ய என்று இரண்டு கைகளையுஞ் சேர்த்து அஞ்சலிசெய்து, பரப்ரஹ்மருஷி என்று சிர சிலும், பரமாத்மா தேவதா என்று முகத்திலும், தேவி காயத்ரீச்சந்த: என்று வலச்செவியிலும், வலக்கையை வைத்து, ப்ராணாயாமே விநியோக: என்று இரண்டு கையாலும், ஹ்ருதயத்தைத்தொட்டு,

பின்பு வலக்கை அங்குஷ்ட விரனுனியால் வல நாசியையும், அநாமிகை விரனுனியால் இட நாசியையும், மத்யமை விரலைமடக்கி தர்சனி விர னுனியால் நாசிநுனியையும், தொட்டுக் கொண்டு ஓம் பூ, முதல் ப்ரசோதயாத் வரையிற்சொல்லி கையை,

யெடுத்து வலக்கரத்தால் வலக்காதைமூடி ஓமா போஜ்யோதிமுதல் ஸுவரோம்வரையிற் சொல்லி கையையெடுக்கவும்.

## சங்கற்பம்.

மமோபாத்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம், வர்த்தமான வ்யவஹாரிக சௌரமானேன, சம்வத்சரே, அயனே, ருதௌ, மாசே, பக்ஷே, திதௌ வாசரே சுபநக்ஷத்ரே சுபயோகே சுபகரணே, ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் சுபதிதௌ, கோத்ரஸ்ய, நாதேயஸ்ய, மம, அஸ்மாகம் சஹகும்பானாம், க்ஷேமஸ்தைரிய விஜயவீர்ய ஆயுராரோக்ய ஐஸ்வரியாபி விர்த்யர்ததம், சதுர்வித பல புருஷார்த்த சித்யர்த்தம், சமஸ்தபாபக்ஷயார்த்தம், ஸ்நானமகங்கரிஷ்யே

சங்கற்பத்தில், சௌரமானமுடையவர்கள், சௌரமானேன என்றும், சாந்த்ரமானமுடையவர்கள், சாந்தரமானேன என்றுஞ் சொல்லிக்கொள்ளவேண்டும். அன்றைய தேதிக்குடைய அயனம், சம்வத்ஸரம், மாசம், பக்ஷம், திதி, வாரம், கோத்ரம், நாமதேயம் முதலியவைகளைச் சொல்லிக்கொள்ளவும்.

## தந்திரம்.

வலத்துடைமேல் இடக்கையைவைத்து அதன்மேல் வலக்கை அங்குஷ்டவிரலில் உபவீதத்தை மாட்டிவைத்துக்கொண்டு, மமோபாத்தமுதல் கரிஷ்யே வரையிற் சொல்லிக் கையையெடுத்து வலக்கை அனாமிகை விரலால் ஜலத்தைத்தொடவும்.

## மார்ஜனமந்திரம்.

ஓம் ஆபோஹிஷ்டா மயோபுவ:, ஸ்தான ஊர்ஜே ததாதன மஹேறணாய ஸக்ஷஸே, யோவஸ்ஸிவதமோ ரஸ:, தஸ்யபாஜயதேஹன:, உஸதீரிவமாதர: தஸ்மா அரங்கமாமவ: யஸ்யக்ஷயாயஜின்வத:, ஆபோஜனயதாசன:.

### தந்திரம்.

இந்த மந்திர ஆரம்பமுதல் முடிவுவரையில் அநாமிகை விரலுனியால், சிரசில் ஜலம்படும்படி மார்ஜனஞ் செய்யவும்.

### ஸ்நான சுலோகம்.

கங்கேசயமுனேசைவ கோதாவரிசரஸ்வதி
நர்மதாசிந்துகாவேரி ஜலேஸ்மின்சந்நிதிம்குரு

### அர்க்யசுலோகம்.

திவாகரநமஸ்துப்யம் பாபாக்ஞானப்ரணாசன [தே.
த்ரயீமயார்க்கவிஸ்வாத்மன் கிரஹாணார்க்யநமோஸ்து

பத்மினிசாயாசமேத ஸ்ரீசூர்யநாராயண பரப்ரஹ்மணேநம:, இதமர்க்யம் சமர்ப்பயாமி.

### விபூதிதாரணமந்திரம்.

த்ரியம்பகம்யஜாமஹே சுகந்திம்புஷ்டிவர்த்தனம் [த்.
உர்வாருகமிவபந்தனான் ம்ருத்யோர்முக்ஷீயமாம்ருதாத்.

ஸ்நானம் சம்பூர்ணம்.

## ப்ராதக்கால ஸந்தியாவந்தனம்.

சுத்தி செய்யப்பட்ட ஸ்தலத்தில், ப்ராதக்கால சந்தியை கிழக்குமுகமாகவும், மாத்யான சந்தியையும் சாயங்கால சந்தியையும் வடக்குமுகமாகவும், ஸ்வஸ்திகாசனமாக இருந்து செய்யவேண்டும்.

### சரீரசுத்தி மந்திரம்.

அபவித்ர: பவித்ரோவா சர்வாவஸ்தாங்கதோபிவா யஸ்மரேத் விஸ்வகர்மாணம் சபாஹ்யாப்யந்தரஸ்சுசி:.

## தந்திரம்.

என்று மந்திரத்தைச்சொல்லி வலக்கை அனுமிகை விரனுனியால் சிரசில் ஜலம் படும்படி புரோக்ஷிக்கவும்.

## ஆசமன மந்திரம் தந்திரம்.

அச்சுதாயநம: அனந்தாயநம: கோவிந்தாயநம: என்று மூன்று நாமத்தையுஞ் சொல்லி மூன்றுதரம் ஆசமனஞ்செய்து.

| தொடுமந்திரம். | | தொடுமிடம். |
|---|---|---|
| | அங்குஷ்ட விரனுனியால் | |
| கேசவாயநம: | என்று | வலக்கன்னத்தையும் |
| நாராயணாயநம: | என்று | இடக்கன்னத்தையும் |
| | அநாமிகை விரல்னுனியால் | |
| மாதவாயநம: | என்று | வலக்கண்ணையும் |
| கோவிந்தாயநம: | என்று | இடக்கண்ணையும் |
| | தர்ஜனி விரனுனியால் | |
| விஷ்ணவேநம: | என்று | வலமூக்கடியையும் |
| மதுசூதனாயநம: | என்று | இடமூக்கடியையும் |
| | கனிஷ்டை விரனுனியால் | |
| த்ரிவிக்ரமாயநம: | என்று | வலச்செவியையும் |
| வாமனாயநம: | என்று | இடச்செவியையும் |
| | மத்யமை விரனுனியால் | |
| ஸ்ரீதராயநம: | என்று | வலப்புஜத்தையும் |
| ஹ்ருஷிகேசாயநம: | என்று | இடப்புஜத்தையும் |
| | கையைக் குவித்து | |
| பத்மநாபாயநம: | என்று | ஹ்ருதயத்தையும் |
| | கையைவிரித்து | |
| தாமோதராயநம: | என்று | சிரசையுமுறையே தொடவும். |

## ப்ராணாயாம மந்திரம்.

ஓம்பூ: ஓம்புவ: ஓம்ஸுவ: ஓம்மஹ: ஓம்ஜந:ஓம்தப: ஓம்ஸத்யம் ஓம் தத்ஸ விதுர்வரேணியம்பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ரசோதயாத்,ஓமாபோஜ்யோதி ரஸோ அமிர்தம் ப்ரஹ்மபூர் புவஸ்ஸுவரோம்

## தந்திரம்.

வலக்கை அங்குஷ்ட விரலுனியால் வலநாசியையும், அநுமிகை விரலுனியால் இடநாசியையும், மத்யமை விரலைமடக்கி தர்ஜனிவிரலுனியால் நாசிநுனியையும் தொட்டுக்கொண்டு, ஓம்பூ: முதல் ப்ரசோதயாத் வரையிற்சொல்லி வலக்கரத்தால் வலக்காதை மூடி ஓமாபோஜ்யோதிமுதல் ஸுவரோம் வரையிற் சொல்லிக் கையை யெடுக்கவும்.

## சங்கற்பம்.

மமோபாத்த ஸமஸ்ததுரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வரப்ரீத்யர்த்தம், ப்ராதஸ்ஸந்த்யாமுபாஸிஷ்யே.

## தந்திரம்.

வலத்துடைமேல் இடக்கையை வைத்து அதன்மேல் வலக்கை அங்குஷ்ட விரலில் உபவீதத்தைமாட்டிவைத்துக்கொண்டு,மமோபாத்தமுதல்உபாஸிஷ்யே வரையிற்சொல்லிக் கையையெடுத்து வலக்கை அநுமிகை விரலால் ஜலத்தைத் தொடவும்.

## மார்ஜன மந்திரம்.

ஓம் ஆபோஹிஷ்டாமயோபுவ:, தாநஊர்ஜேததாதந, மஹேரணாயசக்ஷஸே, யோவஸ்ஸிவதமோரஸ:, தஸ்யபாஜயதேஹந:, உஸதீரிவமாதர:, தஸ்மா அரங்கமாமவ:, யஸ்யக்ஷயாயஜின்வத, ஆபோஜநயதாசந:.

## தந்திரம்.

இந்த மந்திரம் ஆரம்பமுதல் முடிவுவரையில் வலக்கை அனுமிகை விரனுனியால் சிரசில் ஜலம்படும்படி புரோக்ஷிக்கவும்.

## ஆபோசன மந்திரம்.

ஸூர்யூஸ்ச, மாமன்யுஸ்ச, மன்யுபதயஸ்ச, மன்யுக்ருதேப்யஃ, பாபேப்யோ, ரக்ஷந்தாம், யத்ராத்ரியா, பாபமகாரிஷம், மனசா, வாசா, ஹஸ்தாப்யாம், பத்ப்யா முதரேணசிஸ்னு, ராத்ரிஸ்ததவலும்பது,யத்கிஞ்சதுரிதம்மயி, இதமஹம், மாமம்ருதயோனௌ,ஸூர்யோஜோதிஷி, ஜுஹோமிஸ்வாஹா.

## தந்திரம்.

வலக்கை விரல்களை நீட்டிச்சேர்த்து, தர்ஜனிவிரலை மடக்கிக் கொஞ்சங் குவித்துக்கொண்டு, ஒரு உத்ரணி ஜலத்தைவிட்டு, ஸூர்யஸ்சவென்னு மந்திரமுழுவதுஞ்சொல்லியபின்பு உட்கொள்ளவும்.

ஆசமனம் முன்போலச் செய்யவும்.

## அர்க்ய மந்திரம்.

ஓம் பூர்புவஸஸுவஃ, ஓம் தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோதேவஸ்யதீமஹி, தியோயோனஃ ப்ரசோதயாத்.

## தந்திரம்.

இரண்டு கையையுஞ் சேர்த்து ஜலத்தையள்ளி, ஹ்ருதயத்துக்கு நேராக வைத்துக்கொண்டு, ஓம்பூர்முதல் ப்ரசோதயாத் வரையிற்சொல்லி, நான்குதரம் அர்க்யம் விடவும்.

## ப்ரதக்ஷணம்.

அஸாவாதித்யோப்ரஹ்மா என்று, வலக்கரத்தில் ஜலத்தையெடுத்து சுற்றிலும் ஜலம்விழும்படி வலமாகச் சிரசைச்சுற்றி மிகுதி ஜலத்துடன் விடவும்.

ஆசமனம் முன்போலச் செய்யவும்.

## தர்ப்பண மந்திரம்.

சந்தியாந்தர்ப்பயாமி காயத்ரீந்தர்ப்பயாமி
ப்ராம்ஹீந்தர்ப்பயாமி நிம்ருஜீம்தர்ப்பயாமி

## தந்திரம்.

இரண்டு கைவிரல்களையு நீட்டி ஜலத்தில் வைத்துக்கொண்டு ஜலத்தையள்ளித் தனித்தனியே தர்ப்பணஞ்செய்யவும்.

## கரநியாச மந்திரம்.

தத்ஸவிதுரங்குஷ்டாப்யாம்நமஃ
வரேணியம்தர்சனீப்யாம்நமஃ
பர்கோதேவஸ்யமத்யமாப்யாம்நமஃ
தீமஹிஅநாமிகாப்யாம்நமஃ
தியோயோனஃகனிஷ்டிகாப்யாம்நமஃ
ப்ரசோதயாத்கரதலகரப்ருஷ்டாப்யாம்நமஃ

## தந்திரம்.

தத்ஸ-என்று இரண்டு கைகளின் தர்ஜனி விரனுனியால் அந்தந்த அங்குஷ்ட விரலடியிலிருந்து நுனிவரையில் தடவவும்.

வரேணீய-என்று இரண்டு அங்குஷ்ட விரனுனியால் தர்ஜனி விரலடியிலிருந்து தடவவும்.

பர்கோ-என்று முன்போல மத்யமை விரலடியிலிருந்து தடவவும்.

தீமஹி என்று முன்போல் அனுமிகை விரலடியி லிருந்து தடவவும்.

தியோ என்று முன்போல கனிஷ்டைவிரலடியி லிருந்து தடவவும்.

ப்ரசோதயாத் என்று இடக்கையில் வலக்கையம், வலக்கையி லிடக்கையும்வைத்து, பின்பு இடக்கையின் பின்பக்கத்தை வலக்கையாலும், வலக்கையின் பின்பக கதகை யிடக்கையாலும், அடியிலிருந்து தடவவும்

## அங்கந்யாச மந்திரம்.

தத்ஸவிதுஃ ப்ரஹ்மாத்மனே ஹ்ருதயாயநமஃ
வரேணியம் விஷ்ணுவாத்மனே சிரசேஸ்வாஹா
பர்கோதேவஸ்யருத்ராத் மனேசிகாயைவெளஷட்
தீமஹிசத்யாத்மனே ஸ்ரோத்ராயகவசாயஹும்
தியோயோனஃ க்ஞானாத்மனே நேத்ராப்யாம்வஷட்
ப்ரசோதயாத் சர்வாத்மனே அஸ்த்ராயபட்
ஓம்பூர்புவஸ்ஸுவரோமிதி திக்பந்தஃ.

## தந்திரம்.

தத்ஸ என்று வலக்கைவிரல்களை நீட்டி ஹ்ருதயத்தைத் தொடவும்.

வரேணிய என்று முன்போல சிரசைத் தொடவும்.

பர்கோ என்று முன்போல சிகையைத்தொடவும்.

தீமஹி என்று வலக்கையா லிடப் புஜத்தையும், இடக்கையால் வலப்புஜத்தையுந் தொடவும்.

தியோ என்று முன்போல் நேத்திரங்களைத்தொடவும்.

ப்ரசோதயாத் என்று வலக்கையால் சிரசை வலமாகச் சுற்றி இடக்கைமேல் வலக்கையை வைத்து எடுத்துவிடவும்.

## தியானம்.

முக்தாவித்ருமஹேமநீல தவளச்சாயைர் முகை ஸ்த்ரீக்ஷணைர், யுக்தாமிந்துநிபத்தரத்நமகுடாம்தத் வார்த்தவர்ணாத்மிகாம், காயத்ரீம்வரதாபயாங்குசகசாஸ்ஸுப்ரம்கபாலங்கதாம்,சங்கம் சக்ரமதாரவிந்தயுகளம் ஹஸ்தைர்வஹந்தீம்பஜே.

## காயத்ரீஜபமந்திரம்.

ஓம்தத்ஸவிதுர்வரேணியம்
பர்கோதேவஸ்ய தீமஹி
தியோயோநஃப்ரசோதயாத்.

## தந்திரம்.

வலக்கைஅங்குஷ்டவிரல் அடியிறைக்குச்சரியாக உபவீதத்தின் முடிச்சைவைத்து, கையை உத்தரீயத்தால்மூடி ப்ராதக்காலத்தில், நாபிக்கு நேராகவும், மத்யானகாலத்தில் ஹ்ருதயத்துக்கு நேராகவும், சாயங்காலத்தில் நாசிக்கு நேராகவும், வைத்துக் கொண்டு ஷெ மந்திரத்தை. நூற்றெட்டுத்தரம்,அல்லது,பத்துத்தரமாவது ஜபம் செய்யவும்.

## சூர்யோபஸ்தானமந்திரம்.

மித்ரஸ்யச்சர்ஷணி த்ருதஸ்ரவோ,தேவஸ்யசானஸிம், சத்யம் சித்ரஸ்ரவஸ்தமம், மித்ரோஜனியாதயதிப்ரஜானன் மித்ரோ, தாதாரப்ருதிவீ முதத்யாம், மித்ரஃக்ருஷ்டீரநிமிஷாபிசஷ்டே, சத்யாயஹவ்யம், க்ருதவத்விதேமப்ரசமித்ரமர்தோ,அஸ்து,ப்ரயஸ்வான்யஸ்த, ஆதித்யசிக்ஷதிவ்ரதேன, நஹன்யதே, நஜீயதே த்வோ, தோனைநமஹோ, அஸ்நோதயந்தி தோந்தூராத்.

## தந்திரம்.

எழுந்து கிழக்குமுகமாக நின்று, ஓம்மித்ரஸ்யமுதல், தூராத்வரையிற் சொல்லி,நமஸ்காரஞ்செய்யவும்.

### அபிவாதனம்.

சதுஸ்ஸாகரபர்யந்தம் தேவப்ராமணேப்யஸ்ஸு-பம்பவது, ப்ரவரான்விதః கோத்ரః ஸூத்ரః சாகாத்யாயி சர்மநாமா, அஹம்போ, அபிவாதயே.

### தந்திரம்.

அபிவாதனம் சொல்லும்போது, இரண்டுகைகளையும் இரண்டு காதில் வைத்துக்கொண்டு, அவரவர்கள் ப்ரவரம், கோத்திரம், ஸூத்திரம், சாகை, சர்மநாமம், இவைகளைச் சொல்லிக் கொள்ளவும்.

ப்ராதக்கால ஸந்தியாவந்தனம் சம்பூர்ணம்.

## மாத்யான்ஹிக ஸந்தியாவந்தனம்.

சரீரசுத்தி, ஆசமனம், ப்ராணாயாமம், ப்ராதக்காலம் போலச்செய்யவும்.

### சங்கற்பம்.

மமோ பாத்தசமஸ்ததுரிதக்ஷய த்வாரா ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம், மாத்யான்ஹிக சந்தியாமுபாஸிஷ்யே.

தந்திரம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.
மார்ஜனம், ப்ராதக்காலம்போலச்செய்யவும்.

### ஆபோசனமந்திரம்.

ஆபஃபுனந்துப்ருதிவீம், ப்ருதிவீபூதாபுநாதுமாம், புனந்துப்ரஹ்மணஸ், ப்பதிர்ப்ரம்ஹபூதா, புநாதுமாம் யதுச்சிஷ்டமபோஜ்யம், யத்வாதுஸ்சரிதம்மம, ஸர்வம் புனந்து மாமாபோ, ஸதாஞ்சபரதிக்ரஹக்ஸ்வாஹா.

*தந்திரம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.*
*ஆசமனம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.*

## அர்க்கியமந்திரம்.

*ஹம்ஸஸ்-சிஷத், த்வஸ-ரந்தரிக்ஷஸத், ஹோதா வேதிஷததி, திர்துரோணஸத்,ந்ருஷத்வரஸத்ருதஸத் வ்யோமஸதப்ஜாகோஜா, ருதஜா, அத்ரிஜா, ருதம்ப்ருஹத்.*

*ஓம்பூர்புவஸ்ஸுவஃஓம் தத்ஸவிதுர்வரேணியம்,பர்கோதேவஸ்ய தீமஹீ, தியோயோனஃப்ரசோதயாத்.*

## தந்திரம்.

*இரண்டு கையையுஞ் சேர்த்து ஜலத்தையள்ளி ஹ்ருதயத்துக்கு நேராக வைத்துக்கொண்டு ஹம்ஸ முதல் ப்ருஹத்வரையிலுஞ்சொல்லி ஒரு அர்க்யமும் ஓம்பூர் முதல் ப்ரசோதயாத் வரையிலுஞ்சொல்லி இரண்டு அர்க்யமும் விடவும்.*

*ப்ரதக்ஷணம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.*
*ஆசமனம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.*

## தர்ப்பணமந்திரம்.

*சந்தியாந்தர்ப்பயாமி சாவித்ரீந்தர்ப்பயாமி*
*ரௌத்ரீந்தர்ப்பயாமி நிம்ருஜீம்தர்ப்பயாமி*

*தந்திரம் ப்ராதக்காலம்போலச் செய்யவும்.*

*கரநியாசம், அங்கநியாசம், தியானம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.*

## காயத்ரீ ஜபம்.

*ப்ராதக்காலத்தில் விவரித்தபடி செய்யவும்.*

## சூர்யோபஸ்தான மந்திரம்.

*ஓம் ஆசத்யேனரஜசா வர்த்தமானோ நிவேசயன்ன மிருதம் மர்த்தியஞ்ச ஹிரண்யயேனசவிதாரதேனு ஆதேவோயாதி புவனுவிபஸ்யன்.*

உத்வயந் தமஸஸ்பரி பஸ்யந்தோ ஜ்யோதிருத்த ரம். தேவந்தேவத்ரா சூர்யமகன், மகன்மஜ்யோ திருத் தமம். உதுத்யம். ஜாதவேதஸம்தேவம் வகந்திகேதவஃ திருசேஸவிஸ்வாய சூர்யம்.

சித்ரந்தேவாணு முதகாதனீகம் சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்னேஃ ஆப்ராத்யாவாப்ருதிவி அந்தரிக்ஷ கும் சூர்யஆத்மா ஜெகதஸ்தஸ்துஷச்ச.

தச்சக்ஷுர்தேவஹிதம் புரஸ்தாச்சுக்ரமுச்சரத் பஸ் யேமசரத்ஸ்ஸதம் ஜீவேம சரதஸ்ஸதம் நந்தாம சரதஸ் ஸதம் மோதாம சரதஸ்ஸதம் பவாம சரசஸ்ஸதம் ஸ்ரு ணவாம சரதஸ்ஸதம். ப்ரப்ரவாம சரதஸ்ஸதம் அஜீதா ஸ்யாம சரதஸ்ஸதம் ஜ்யோக்ச சூர்யந்திருசேய உத கான் மஹதோர்ணவாத் விப்ராஜமான சரீரஸ்ய மத்தி யாத்ஸமா விருஷபோலோகிதா க்ஷசூர்யோபிபஸ்யன் மணசாபுணது.

தந்திரம் ப்ராதக்காலம்போலச் செய்யவும்.
அபிவாதனம் ப்ராதக்காலம்போலச்செய்யவும்.

மாத்யான்ஹிக ஸந்தியாவந்தனம்
சம்பூர்ணம்.

# சாயங்கால ஸந்தியாவந்தனம்.

சரீரசுத்தி, ஆசமனம், ப்ராணாயாமம், ப்ராதக்கா லம்போலச்செய்யவும்.

## சங்கற்பம்.

மமோபாத்தசமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமே ஸ்வர ப்ரீத்யர்த்தம், சாயஞ்சந்தியா முபாஸிஷ்யே.
மார்ஜனம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.

## ஆபோசனமந்திரம்.

அக்கினிஸ்ச. மாமன்யுஸ்ச, மன்யுபதயஸ்ச, மன்யுக்ருதேப்யஃ, பாபேப்யோ, ரக்ஷந்தாம், யதஹ்னாபாபமகாரிஷம், மனசா, வாசா, ஹஸ்தாப்யாம் பத்ப்யாமுதரேணிஶிஸ்னா, அஹஸ்ததவலும்பது, யத்கிஞ்ச துரிதம்மயி, இதமஹம், மாமம்ருதயோனௌ, ஸத்யேஜ்யோதிஷி, ஜுஹோமி, ஸ்வாஹா.

தந்திரம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.
ஆசமனம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.

## அர்க்யமந்திரம்.

ஓம்பூர்புவஸ்ஸுவஃ தத்ஸவிதுர்வ ரேணியம், பர்கோதேவஸ்ய தீமஹி, தியோயோனஃப்ரசோதயாத்.

தந்திரம், ப்ராதக்காலம்போல மூன்றுதரம் அர்க்யம் விடவும்.

ப்ரதக்ஷணம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.
ஆசமனம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.

## தர்ப்பணமந்திரம்.

சந்தியாந்தர்ப்பயாமி, சரஸ்வதீம்தர்ப்பயாமி.
வைஷ்ணவீம்தர்ப்பயாமி, நிம்ருஜீம்தர்ப்பயாமி,

தந்திரம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.
கரநியாசம், அங்கநியாசம், தியானம்.
ப்ராதக்காலம்போலச் செய்யவும்.

## காயத்ரீஜபம்.

ப்ராதக்காலத்தில் விவரித்தபடி செய்யவும்.

## சூர்யோபஸ்தான மந்திரம்.

இமம்மேவருணஸ்ருதி, ஹவமத்யாசம் ருடய, த்வாமவஸ்யுராசகே, தத்வாயாமி, ப்ரம்மணுவந்தமான

ஸ்ததாஸாஸ்தேயஜமானோ,ஹவிர்பிঃ, அஹேடமானோ வருணே, அபோத்யுருஸசும்சமானঃ, ஆயுப்ரமோஷீঃ, யஸ்ச்சித்திதேவிஸோயதா, ப்ரதேவவருணவ்ருதம், விணீமசித்யவித்யவி.

உ. யத்கிஞ்சேதம் வருணதெய்வ்யேஜனபித்ரோ ஹம், மனுஷியாஸ்சராமஸி, அஜித்தியத்தவதர்மாயு, யோபிமமானஸ்தஸ்மா. தேனஸோ, தேவரீரிஷঃ, கித வாஸோ,'யத்திரிரிபுர்னதிவி, யதவாகாசத்ய, முதயன் ன, வித்மசர்வாதா, விஷயஸிதிரேவ தேவாதா தேஸ் யாமவருண ப்ரியஸঃ.

தந்திரம், ப்ரதக்காலம்போலச் செய்யவும்.

அபிவாதனம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.

சாயங்கால ஸந்தியாவந்தனம் சம்பூர்ணம்..

# யக்ஞோபவீததாரணம்.

விதிப்படி ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து, ஸ்வ ஸ்திகாசனமாகவிருந்து, ஆசமனம், ப்ராணாயாமம்,சங் கற்பம் இவைகளைச் செய்துகொண்டு, யக்ஞோபவீ தத்தைப் பிரித்து, இரண்டு முழங்காலிலு மாட்டிஒன் றை யெடுத்து வலக்கைமேலும் இடக்கை கீழுமாகமா ட்டி வைத்துக்கொண்டு, யக்ஞோப வீதமென்னு மந் திரத்தைச்சொல்லி, இரண்டு கைகளாலும்இடதுதோ ள்மேல்வைத்து வலதுகைக்குள்ளே தரித்து, ஆசமன ஞ்செய்து பின்பு ஒன்றையாவது' இரண்டையாவது, எடுத்து முன்போல மந்திரஞ்சொல்லித் தனித்தனி தரித்துக்கொள்ளவும், பின்பு உபவீதத்தின் முடிச்சை வலக்கை அங்குஷ்ட விரலடி யிறைக்குச் சரியாக வை த்துக்கொண்டு, கையை உத்தரீயத்தால் மூடி, நூற்

றெட்டுத் தரமாவது, பத்துத்தரமாவது, இருபத்தைந் துதரமாவது, காயத்ரீ மந்திர ஜபஞ்செய்து, வலக்கை யில் ஜலத்தையெடுத்து, தத்ஸ ப்ரஹ்மார்ப்பணமஸ்து என்று, அங்குஷ்ட விரலில், உபவீதத்தை மாட்டிக் கொண்டு, பூமியில் ஜலத்தை விடவும், பின்பு பழய உப வீதத்தையெடுத்து ஜலத்திலே போட்டு விடவும்.

ஆசமனம், ப்ராணாயாமம் ப்ராதக்காலம்போலச செய்யவும்

### சங்கற்பம்.

மமோபாத்தசமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமே ஸ்வர ப்ரீத்யர்த்தம், ஸ்ரௌதஸ்மார்த்த நித்யகர்மானு ஷ்டான யோக்யதா சித்யர்த்தம் நூதனயக்ஞோபவீத தாரணங்கரிஷ்யே.

தந்திரம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.

### யக்ஞோபவீதமந்திரம்.

யக்ஞோபவீதம் பரமம்பவிதரம்
ப்ரஜாபதேயத் ஸஹஜம்புரஸ்தா
தாயுஷ்யமக்ரியம் ப்ரதிமுஞ்சசுப்ரம்
யக்ஞோபவீதம் பலமஸ்துதேஜஃ

### காயத்ரிஜபமந்திரம்.

ஓம் தத்ஸவிதுர்வரேணியம்
பர்கோதேவஸ்யதீமஹி
தியோயோனஃ ப்ரசோதயாத்.

யக்ஞோபவீததாரணம் சம்பூர்ணம்.

# அமாவாஸ்யை தர்ப்பணம்.

ஆசமனஞ் செய்து, பவித்ரதாரணங் கிர்த்வாவென்று, வலக்கை அணுமிகை விரலில் பவித்திரந்தரித்து, ஆசனேவினியோகஃவென்று, இரண்டு கட்டைப் புல்லைக் காலின்கீழிட்டு, ப்ராணாயாமமுஞ் சஙகற்பமுஞ் செய்து, அணுமிகைவிரலில்வைத்திருந்த விரண்டுகட்டைத் தர்ப்பத்தை விசர்சனஞ்செய்து, நுனியுள்ள,மூன்று,அல்லது, ஐந்து, அல்லது, ஏழு தர்ப்பையைச்சேர்த்து நுனியில் பவித்திரம்போல முடிந்து, அடி தர்ப்பை யெத்தனையோ அத்தனைகட்டைத் தர்ப்பத்தை பூமியில், கிழக்கு,மேற்கில்போட்டு, அடி கூர்ச்சத்தை, அதன்மேலே தெற்குநுனியாக வைத்து, எள்ளைக் கையிலெடுத்துக்கொண்டு, அஸ்மது, கோத்ரான் சர்மணஃ, வசுருத்ரா தித்யஸ்வரூபான்,பித்ரு பிதாமஹ பிரபிதாமஹாஞும். அஸ்மது, மாதுஃ பிதாமஹி பிரபிதாமஹீஞ மாவாஹயாமி யென்று கூர்ச்சத்தில் ஆவாஹனமும்அடியில் விவரித்தபடி தர்ப்பணமுஞ்செய்து, உபவீதத்தை கிரமமாகத் தரித்து எழுந்து மூன்றுபிரதக்ஷிணஞ்செய்து, நமஸ்கரித்து, உபவீதத்தைப் பிராசீனவீதமாகத் தரித்து, இடக்கால் மண்டிபோட்டு வர்க்கத்வயப்பித்ரூன் கூர்ச்சத்தம் பாத்யதாஸ்தானம் ப்ரதிஷ்டாப்யாமி என்று, கூர்ச்சமுடிச்சை யவிழ்த்து ஜலம்விட்டுக் கீழேபோட்டு பவித்ர விசர்ச்சனஞ் செய்து ஆசமனஞ் செய்யவும்.

ஆசமனம், ப்ராணாயாமம், ப்ராதக்காலம்போலச் செய்யவும்.

### சங்கற்பம்.

மமோபாத்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வரப்ரீத்யர்தம், சிவசம்போராக்ஞா,ப்ரவர்த்தமானஸ்ய, ஆத்

யப்ரஹ்மணஃ, த்விதீயபரார்த்தே, ஸ்வேதவராஹகல்பே, வைவஸ்வதமன்வந்தரே, கலியுகே ப்ரதம பாதே, ஜம்பூத்வீபே, பரதவருஷே, பரதக்கண்டே,சகாப்தே, மேரோஃ, தக்ஷிணதிக்பாகே, சமஸ்ததேவ ப்ராஹ்மண சந்நிதௌ, அஸ்மின், வர்த்தமான வ்யவஹாரிக,சௌரமானேன பிரபவாதி சஷ்டிசம்வத்ஸராணும்,மத்யே, சம்வத்ஸரே, அயனே, ருதௌ, மாசே,பக்ஷே,திதௌ வாசரே, நக்ஷத்ரே, யோகே, கரணே, எவங்குணவிசேஷண விசிஷ்டாயாம். புண்யதிதௌ என்று (ப்ராசீனவீதி) உபவீதத்தை யிடப்புறந் தரித்துக்கொண்டு, அஸ்மது, கோத்ராணும், வசுருத்ராதித்யஸ்வரூபாணும் பித்ருபிதாமஹப்ரபிதா மஹாணும், மாதுஃபிதாமஹி பிரபிதாமஹீணும், அக்ஷயத்ருப்தியர்த்தம். அமாவாஸ்யை புண்யகாலே, சத்யஸ்தில தர்ப்பணரூபேண கரிஷ்யே.

## தர்பபணம்.

அஸ்மது,கோத்ரான்சர்மணஃவசுரூபான்பித்ருன், ஸ்வதாநமஸ் தர்ப்பயாமி, என்று மூன்றுதரஞ்சொல்லி மூன்றுதரம், எள்ளுஞ் ஜலமுங் கூர்ச்சத்தின் முடிச்சின்மேல் வலக்கைமறித்து அங்குஷ்டவிரல்வழியால் விடவும்.

கோத்ரான்சர்மணஃ ருத்ரரூபான் பிதாமஹான், ஸ்வதாநமஸ் தர்ப்பயாமி என்று, முன்போல மூன்றுதரம் விடவும்.

கோதரான்சர்மணஃஆதித்யரூபான்பிரபிதாமஹான், ஸ்வதாநமஸ் தர்ப்பயாமி, என்று முன்போல மூன்றுதரம் விடவும்.

கோத்ரஃ நாம்னீஃ மாத்ருஃ ஸ்வதாநமஸ் தர்ப்பயாமி, என்று முன்போல மூன்றுதரம் விடவும்.

கோத்ராঃநாம்னீঃபிதாமஹீ, ஸ்வதாநமஸ் தர்ப்பயாமி, என்று முன்போல மூன்றுதரம் விடவும்.

கோத்ராঃ நாம்னீঃ பிரபிதாமஹீ, ஸ்வதாநமஸ்தர்ப்பயாமி, என்று முன்போல மூன்றுதரம் விடவும்.

(இந்தப் பிரகாரம், பித்ருமாத்ரு வமிசத்துக்கு முறையே தர்ப்பணஞ்செய்து.)

க்ஞாதாக்ஞாதபித்ரூன்ஸ்வதாநமஸ்தர்ப்பயாமி.
ஸ்வாமீந்தர்ப்பயாமி, சகீந்தர்ப்பயாமி.
குரூன்ஸ்தர்ப்பயாமி ஆசார்யான், ஸ்தர்ப்பயாமி.
சர்வான்காருண்யபித்ரூன்ஸ்வதாநமஸ்தர்ப்பயாமி.

என்று இவைகளுக்கு தனித்தனி ஒவ்வொருதரம் தர்ப்பணஞ் செய்யவும்.

அமாவாஸ்யை தர்ப்பணஞ் சம்பூர்ணம்.

## போஜனம்.

இரண்டுவஸ்திரந் தரித்துக்கொண்டு வெளிச்சமுடையதாயும் பந்திக்கு உரியரல்லாதவர் புகப்பெறாததாயும் மெழுகப்பட்டதாயு முள்ளவிடத்தில், கிழக்குமுகமாகவேனும் வடக்குமுகமாகவேனும் ஸ்வஸ்திகாசனமாக விருந்து ஜலத்தினாலே சதுரமாக மண்டிலங்கோட்டி அதன்மேலே ஜலத்தினாற் கழுவிய இலையைப்போட்டு, வலப்பக்கத்தில் ஜலபாத்திரத்தை வைத்து இரும்பல்லாத கரண்டியால், இலையின் இடப்புறத்தில் லவணமும், வலப்புறத்தில் கறிகளையும், நடுவில் அன்னத்தையும், ஒன்றோடொன்று கலவாமற் படைத்து, நெய்வார்த்தபின்பு, இலையை இடக்கைஅநாமிகைவிரலால் தொட்டுக்கொண்டு, வலக்கரத்தில் ஜல

த்தை விட்டு புரோக்ஷண மந்திரத்தைச் சொல்லிஅன் னமுதலியவற்றில் புரோக்ஷித்து, முன்போலஜலத்தை பரிஷேசன மந்திரத்தைச் சொல்லி பரிஷேசனஞ்செ ய்து, முன்போல ஜலத்தை விட்டுக்கொண்டு ஆபோ ஜன மந்திரத்தைச்சொல்லி ஆபோஜனஞ்செய்து,வல க்கை அனுமிகை மத்யமை அங்குஷ்டமென்னும்மூன் று விரல்களாலும், அன்னத்தை நெய்யுடன்பிசைந்து, சிறிதுசிறிதாக வெடுத்து, ப்ராணாகுதி மந்திரத்தைச் சொல்லி பல்லிற்படாமல் ப்ராணாகுதி செய்து, வலக் கையால் அன்னத்தைத் தொட்டுக்கொண்டு, இடக்கை விரலையெடுத்து ஜலத்தினாலே யலம்பி, ஆத்ம மந்தி ரத்தைச் சொல்லி ஹ்ருதயத்தைத்தொட்டு, பின்புபரு ப்பு நெய்யோடும் குழம்போடும் ரசத்தோடும் மோரோ டும், தனித்தனி பிசைந்து புசித்து, வெந்நீரேனும்தண் ணீரேனும் பானம்பண்ணிய பின்பு வலக்கரத்தில் ஜல த்தை விட்டுக்கொண்டு, உத்தரா போஜன மந்திரத் தைச் சொல்லி, உத்தராபோஜனஞ் செய்து, மிகுதி ஜலத்தை அங்குஷ்ட விரனுனியால் இலையில்விடுத்து, வெளியில்வந்து கையலம்பி, எட்டுத்தரம் இடப்புறத் திலே வாய்கொப்பளித்து வாயையும் கையையும் கால் களையும் சுத்திசெய்து, ஆசமனஞ் செய்யவேண்டும்.

### புரோக்ஷண மந்திரம்.

ஓம் பூர்புவஸ்ஸுவ: ஓம் தத்ஸவிதுர்வரேணியம், பர்கோதேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோதயாத்.

### பரிஷேசனமந்திரம்

தேவஸ்ய த்வா ஸவிது: ப்ரஸவே ... ஸத்யந்த்வர்த்தேன பரிஷிஞ் சாமி.

### ஆபோஜன மந்திரம்.

அமிர்தமஸ்து அமுர்தோபஸ்தரணமஸி.

### ப்ராணாஹுதிமந்திரம்.

*ப்ராணாயஸ்வாஹா, அபாநாயஸ்வாஹா, வ்யாநாய ஸ்வாஹா, உதாநாயஸ்வாஹா, சமாநாயஸ்வாஹா, ப்ரஹ்மணேஸ்வாஹா.*

### ஆத்ம மந்திரம்.

*ஆத்மனிம ஆத்மாம்ருதத்வாய.*

### உத்தராபோஜன மந்திரம்.

*அமிர்தாபிதானமஸி.*

### இராத்திரி பரிஷேசன மந்திரம்.

*அருதந்த்வாசத்யேனபரிஷிஞ்சாமி.*

*போஜனம் சம்பூரணம்.*

### நித்தியகன்மச்சுருக்கம்

*முற்றுப்பெற்றது.*

# பிரதிதினமும் நடக்கப்பட்ட ஓரைகள்.

காலை, மாலை—6-மணிமுதல் ஒவ்வொரு மணிக்கும் ஒவ்வொரு ஓரையாகக்கொள்க.

| வாரம். | காலம். | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞா ... | பகல் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி |
| | இரவு | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத |
| திங் ... | பகல் | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி |
| | இரவு | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு |
| சேவ்... | பகல் | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் |
| | இரவு | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் |
| புத ... | பகல் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் |
| | இரவு | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி |
| வியா... | பகல் | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத |
| | இரவு | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி |
| வெ ... | பகல் | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு |
| | இரவு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் |
| சனி ... | பகல் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் |
| | இரவு | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் |

# கௌரி பஞ்சாங்கம்.

காலை, மாலை—6-மணிமுதல் ஒன்றரை ஒன்றரை மணியாக பார்த்துக்கொள்ளவும்.

| வாரம். | காலம். | 7½ | 9 | 10½ | 12 | 1½ | 3 | 4½ | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞா ... | பகல் | உத்தி | லாபம் | விஷம் | அமிர்த | சுபம் | தனம் | அமிர்த | ரோகம் |
| | இரவு | தனம் | சுகம் | சோரம் | விஷம் | கலகம் | அமிர்த | லாபம் | ரோகம் |
| திங் ... | பகல் | அமிர்த | விஷம் | உத்தி | லாபம் | சோரம் | சுகம் | லாபம் | தனம் |
| | இரவு | ரோகம் | லாபம் | உத்தி | தனம் | ரோகம் | அமிர்த | விஷம் | சோரம் |
| செ ... | பகல் | ரோகம் | உத்தி | சோரம் | லாபம் | அமிர்த | உத்தி | விஷம் | தனம் |
| | இரவு | சோரம் | உத்தி | விஷம் | லாபம் | சோரம் | தனம் | சுகம் | அமிர்த |
| புத ... | பகல் | விஷம் | அமிர்த | சுகம் | உத்தி | சோரம் | லாபம் | தனம் | அமிர்த |
| | இரவு | லாபம் | ரோகம் | விஷம் | உத்தி | சுகம் | அமிர்த | தனம் | லாபம் |
| வியா... | பகல் | உத்தி | விஷம் | சோரம் | லாபம் | அமிர்த | ரோரம் | கலகம் | சோரம் |
| | இரவு | சுகம் | ரோகம் | கலகம் | லாபம் | உத்தி | சோரம் | தனம் | உத்தி |
| வெ ... | பகல் | ரோகம் | சோரம் | அமிர்த | விஷம் | லாபம் | சுகம் | தனம் | அமிர்த |
| | இரவு | அமிர்த | சோரம் | விஷம் | லாபம் | சுகம் | தனம் | உத்தி | ரோகம் |
| சனி ... | பகல் | விஷம் | அமிர்த | ரோகம் | விஷம் | சுகம் | லாபம் | தனம் | லாபம் |
| | இரவு | விஷம் | உத்தி | சுகம் | அமிர்த | கலகம் | ரோகம் | அமிர்த | லாபம் |

# விளம்பரம்.

புஸ்தகம் வேண்டியவர்கள் சென்னை, சிந்தாத்திரிப்பேட்டை, வேதகிரிமேஸ்திரி வீதி, நெ. 5/10 விசுவகுலோத்தாரண அச்சுக்கூடத்தி லும்,

சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, தங்க வியாபாரம், காளிகாம்பாள் தேவஸ்தான தர்ம கர்த்தர் பிரம்மஸ்ரீ, சந்திரய்யபத்தரிடத்திலும்,

சென்னை, முத்தியாலுபேட்டை, தம்பு செட்டி வீதி, காளிகாம்பாள் தேவஸ்தான சபைத் தலைவர் பிரம்மஸ்ரீ, குருவாபத்தரிடத்திலும்,

சென்னை, சூளை, சத்தன நாய்க்கன் தெருவு, அங்காளம்மன் கோயில் தர்மகர்த்தர் பிரம்மஸ்ரீ, குழந்தை ஆசாரியிடத்திலும்,

சென்னை, எழும்பூர் ரோட்டு, பிரம்மஸ்ரீ, வாழ்வரச ஆசாரியிடத்திலும்,

சென்னை, சேப்பாக்கம், அருணாச லாசாரி வீதி, வெள்ளி வேலைசெய்யும் பிரம்மஸ்ரீ, முத்தாசாரியிடத்திலும், விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

புஸ்தகம்—1-க்கு விலை அணா 8.

12 புஸ்தகம் ஒரே தடவையில் வாங்குவோருக்கு ஒரு புஸ்தகம் இனாமாகக் கொடுக்கப்படும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.